www.padippakam.com

# புதுவசந்தம்

## 2012



மனித இருப்பும் மனித அடையாளமும்

மானிட இருப்பை அச்சுறுத்தும் இலாப வேட்கை

போரும் அரசியலும்

நண்பர்களும் எதிரிகளும்: உலக அரசியலின் திசைவழிகளும் தமிழ் மக்களின் எதிர்காலமும்

மானுடம் வென்றதம்மா

தேசிய கலை இலக்கியப் பேரவை

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# புதுவசந்தம்

தேசியகலை இலக்கியப் பேரவையின்
மாநாட்டு மலர்
16-06-2012

கட்டுரைகள்


சி. சிவசேகரம் 12
சி. தில்லைநாதன் 16
தே. ஞாலசீர்த்தி மீநிலங்கோ 18
ந. இரவீந்திரன் 26
செல்லையா கிருஷ்ணராசா 31
ஜெ. அரங்கராஜ் 43
சி.கா. செந்திவேல் 46
கருணாகரன் 49
ஊர்சுற்றி 52
ஜெ. சற்குருநாதன் 54
சை. கிங்ஸ்லி கோமஸ் 56
யாதவன் 58
நித்தி 60


கவிதைகள்


இதயராசன் 62
கருணாகரன் 63
ஆதித்தன் 64
கருணாகரன் 65
கிருஷ்ணப்பிரியன் 66
தவ சஜிதரன் 67
நிலா 68
மார்ஸ் பிரபாகர் 69
சி. சிவசேகரம் 70
சி. சிவசேகரம் 71
மீநிலங்கோ 72
மீநிலங்கோ 73
சி. சிவசேகரம் 74
அழ பகிரதன் 75
சந்திரலேகா கிங்ஸ்லி 76





சிறுகதைகள்


இதயராசன் 78
மு. மயூரன் 81
தமிழ்மகன் 85
திக்குவலை கமால் 87
ராஜாராஜி 91
தணிகையன் 92



படிப்பகம்

www.padippakam.com



# புதுவசந்தம்

தேசியகலை இலக்கியப் பேரவையின்
மாநாட்டு மலர்

பெயர் : புதுவசந்தம்

பதிப்பு : 16-06-2012

வெளியீடு : தேசிய கலை இலக்கியப் பேரவை

அச்சு : குமரன் பதிப்பகம்

விலை : 100/=

# PUTHUVASATHAM

congress souvenir of
dhesiya kalai ilakkiyap peravai

Name : PUTHUVASATHAM

Edition : 16-04-2012

Published : Dhesiya kalai ilakkiyap peravai

Printers : Kumaran Printers

Price : 100/-

## *அட்டைப்பட விளக்கம்!*

அட்டைப்படம் திருக்கோணமலையில் உள்ள "சல்லி" கிராமத்தில் திரு.வி.விமலாதித்தனால் படம் பிடிக்கப்பட்டது. மனித இருப்பை பல் வகைக் காரணிகள் அழிக்க முயற்சிக்கும் நிகழ்ச்சியை இப் படம் காட்டுகிறது. பசுமையைத் தேடி நிற்கும் மரமும் அதன் ஒரு மூலையில் எதிர்கால சந்ததியின் இருப்பின் தவிப்பும் எதிர்காலச் சந்ததியைக் கைகொடுத்து அதன் இருப்பினைக் காக்கும் நிகழ்கால மனித உருவமும் இயற்கையாக இந்தப் படத்தில் இருப்பவை. இங்கே காணப்படும் மரத்தில் ஒட்டி இருக்கும் பன்னல்கள் போல் எங்கள் கால யந்திரத்தில் மனிதத்தை முழுமையாக குடிக்கும் முயற்சியில் பெரு நிறுவனங்கள் இருக்கின்றன.

இன்று பசுமைப் புரட்சி, காடு வளர்ப்பு என்று பெரு நிறுவனங்கள் பேசி வருவது வியப்புக்குரியது. இதே நிறுவனங்களின் வளர்ச்சிக்கே அன்று மரங்கள் இல்லாமல் செய்யப்பட்டது. எங்கள் வளங்கள் தொகையாக அழிக்கப்பட்டது.

இன்று எல்லா சமூக அக்கறைகளும் பெரு நிறுவனங்களின் ஒரு விளம்பர உத்திக்காகவே பாவிக்கப்பட்டு வருகிறது. மக்களிடம் ஒரு விழிப்புணர்வு தேவை.

எங்கள் மனித குல இருப்பை எதிர்காலத்தின் தேவை கருதி நாமே பாதுகாக்க வேண்டும். இதுவே எங்கள் தேசிய கலை இலக்கியப்பேரவையின் மாநாட்டின் பிரதான கருத்தியல்.



படிப்பகம்

www.padippakam.com

# நினைவு கூரலும் கௌரவமும்

தேசிய கலை இலக்கியப் பேரவையின் தோற்றத்திற்கும் அதன் பன்முக வளர்ச்சிகளுக்கும் முன்னின்று தமது ஆற்றல்களை வழங்கிவந்த முன்னோடிகள் சிலர் இன்று நம்மிடையே இல்லை. அத்தகையோரது இழப்பின் சோகமும் இடைவெளியின் தாக்கமும் நமது உணர்வுகளில் ஒன்றியுள்ளது. அவர்கள் நம்முடன் இணைந்து நின்று முன்சென்ற திசையும் பயணித்த பாதையும் தொடரும் நமது கலை இலக்கியப் பயணத்திற்குப் பலம் சேர்த்து நிற்கின்றன.

பேராசிரியர் க. கைலாசபதி
இ. முருகையன்
மாவை வரோதயன்
கே. ஏ. சுப்பிரமணியம்
சில்லையூர் செல்வராசன்
முருகு கந்தராசா
நவிண்டி சிவராசா
செல்வ பத்மநாதன்
கே. டானியல்
கி. சிவஞானம்
கு. சிவராசா
வீ. எம். குகராஜா
எஸ். ஜெயக்குமார்
சி. பற்குணம்
சி. நவரத்தினம்
எம். சந்திரகுமார்
சு. நாகேந்திரம்

ஆகியோரை உயர்ந்த கௌரவத்துடன் நினைவு கூர்ந்து கொள்கிறோம். அத்துடன் தேசிய கலை இலக்கியப் பேரவை அதன் சஞ்சிகையான தாயகம் ஆகியவற்றின் இலட்சியங்களுடன் இணைந்து தமது எழுத்துகளாலும் கலை இலக்கிய முயற்சிகளாலும் பங்களிப்பு செய்து மறைந்தவர்களான

சுபத்திரன்
சுபைர் இளங்கீரன்
கே. கணேஷ்
யோ. பெனடிக்ற்பாலன்
இ. சிவானந்தன்
சாருமதி
செ. யோகநாதன்

மற்றும் மறைந்த கலை இலக்கிய ஆர்வலர்கள் அனைவரையும் தேசிய கலை இலக்கியப் பேரவை இம் மாநாட்டின் போது நினைவு கூர்ந்து கொள்கிறது. அத்தோடு போரில் தங்கள் உயிர்களை நீத்தோருக்கும் தனது அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்கிறது.

***தேசிய கலை இலக்கியப் பேரவை***
***மாநாட்டு தயாரிப்புக் குழு***
***16-06-2012***



படிப்பகம்

www.padippakam.com

தேசிய கலை இலக்கியப் பேரவை

# தேசிய கலை இலக்கியப் பேரவை கீதம்

ஆற்றுங் கலைகளெழுத்து அறிவியல் ஆதிய அத்தனையும்
வேற்றுமையின்றி இவ் வையத்து மாந்தர்க்குச் சேர்க்கும் பணி பலவும்
ஆற்றிடவேயிந்த ஈழ நன் நாட்டினில் வாய்ந்த நற் பேரவையாம்
போற்றுவோம் தேசிய கலை இலக்கியப் பேரவைப் பேரினை நாம்

மாந்தர் தமக்கிடை சாதி மத மொழி பால் இன வேற்றுமையால்
மாந்தரை மாந்தர் அடக்கியொடுக்கி இம் மாநிலம் தேய்ந்ததனால்
தேர்ந்த அறிவுடன் மாந்தர் சமத்துவம் வேண்டிடும் நற்பணிக்காய்
சேர் புதிய சனநாயக நன்னெறி பூத்திடக் காரியங்கள்

- ஆற்றிடவே

பண்டு இருந்தவை என்னும் பெயரினில் ஓதிடும் பேதைமைகள்
உண்மை என மனம் எண்ணிக் குழப்பிடும் வேளைகளில் அறிவாற்
கண்ணிற் தெரிவதன் காதில் விழுவதன் உண்மை தெளிவதனால்
மண்ணிற் புதிய நல் வாழ்வு மலர்ந்திட ஆன பணிபலவும்

- ஆற்றிடவே

நல்ல கதை கவி கட்டுரை நாடகங் காவியமும் இசையும்
வல்லவர் மானுடர் ஏற்றம் அடைந்திடத் தந்து மகிழ்ந்திடுமின்
சொல்லுந்திறமை பயில்வள மண்ணென வாலிபர்காள் இணைமின்
கல்வி கலை தொழில் தாயகத்தே தழைத் தோங்கி நலன் மிகவும்

- ஆற்றிடவே



படிப்பகம்

www.padippakam.com

# மீண்டும் உங்களுடன்

### வரலாற்றுப் பின்புலம்

2012இல் தனது 39வது ஆண்டை நிறைவாக்கும் தேசிய கலை இலக்கியப் பேரவை இதுவரை ஆற்றியுள்ள பணிகள் காத்திரமானவை. முதன்மையாகப், பேரவையின் கலை இலக்கியக் கொள்கையே, பல சவால்கட்கும் நெருக்கடிகட்கும் சமூகத் துன்ப துயர்கட்கும் (போரின்போதும் போர் முடிந்தும்) தொடரும் மனித அவலங்கட்கும் உயிரிழப்புக்கட்கும் நடுவே எதிர்நீச்சலிட்டுப் பேரவை தனது பணிகளை முன்னெடுக்க இயலுமாக்கியது. மற்றது, பொருள், புகழ், பட்டம் பதவி என்பன மீதான நாட்டத்தையும் தனிமனிதச் சாதனைப் புலம்பலையும் கடந்து சமூக அக்கறையுடனும் அடக்கத்துடனும் சுயநலமின்றி அக் கொள்கையை அமைப்பு முறையில் முன்னெடுத்தோரின் அர்ப்பணிப்பு மிக்க கூட்டு உழைப்பு. மக்கள் கலை இலக்கியக் கோட்பாட்டை உயர்த்திப் பிடித்துப் பேரவை ஆற்றிய பணிகளையும் பங்களிப்புகளையும் இங்கு சுருக்கமாக நினைவுகூரல் தகும்.

வர்க்கச் சமூகத்தில் இலக்கிய நோக்கும் போக்கும் வர்க்க அடையாளத்துடனேயே இருப்பதால் கலை இலக்கியவாதிகள் தத்தமது வர்க்க நிலைப்பாடுகட்கமையவே செயற்படுவர். எனவே எக் கலை இலக்கியக் கோட்பாடும் அதை முன்னெடுக்கும் அமைப்பும் தன் சமூகச் சூழலை உள்வாங்கியே உருவாகிறது. தேசிய கலை இலக்கியப் பேரவைக்கு ஒரு வரலாற்று அடிப்படையும் வர்க்கச் சார்பும் உண்டு.

இலங்கையில் 1940களிலும் 1950களிலும் பொதுவுடைமை இயக்கத்தின் ஆழமான செல்வாக்கால் உருவான இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தைச் கட்டியெழுப்பிய கலை இலக்கியவாதிகள் அதற்கான முற்போக்குக் கலை இலக்கியக் கொள்கையை வகுத்து வழிநடத்தக் கடுமையாக உழைத்தனர். ஈழத்து இலக்கியப் பரப்பிற் கடும் பணியாற்றிய அச் சங்கம் சமூக அக்கறையும் வர்க்க முனைப்பும் கொண்ட எழுத்தாளர் பலரை உருவாக்கியதுடன் தேசிய கலை இலக்கியத்தின் முக்கியத்துவத்தை முன்னிறுத்தி ஈழத்து இலக்கியத்தின் தனித்துவத்தை நிலைநிறுத்தி விதேசிய இலக்கியச் சீரழிவை எதிர்ப்பதிலும் பாரிய வரலாற்றுப் பணியை ஆற்றியது. எனினும், 1960களின் முற்கூற்றில் இலங்கைப் பொதுவுடைமை இயக்கத்தில் நிகழ்ந்த ஆழமான அரசியல் தத்துவார்த்த விவாதங்களாற் பொதுவுடைமை இயக்கம் 1964ல் பிளவடைந்ததையொட்டிச் செயலிழந்த முற்போக்கு எழுத்தாளர் சங்கம் பின்னர் திசைமாறத் தொடங்கி விரைவில் முற்றுமுழுதாய்ச் சீரழிந்தது.

அதன் தலைமைப் பொறுப்பில் இருந்த சிலர் பிளவின் போது சமாதானப் பாராளுமன்றப் பாதையைத் தேர்ந்தோரை அணைந்தனர். மாறாகக், கவிஞர் பசுபதி, பேராசிரியர் கைலாசபதி, சுபைர் இளங்கீரன், என்.கே. ரகுநாதன், கே. டானியல், எச்.எம்.பி. முகைதீன், சில்லையூர் செல்வராசன், செ. கணேசலிங்கன், நீர்வை பொன்னையன், கவிஞர் சுபத்திரன், இளைய பத்மநாதன், இ. சிவானந்தன், கே. தங்கவடிவேல், இ. முருகையன் ஆகியோர் உட்பட்ட பெரும்பாலோர் புரட்சிகர வர்க்கப் போராட்டத்தை வலியுறுத்திய அணியில் இணைந்து கலை இலக்கியப் பணியாற்றினர்.

1964-1972 காலத்தில் தேசிய, சர்வதேசிய மட்டங்களிற் போல் இலங்கையின் பல பகுதிகளிலும் பலவகைப் போராட்டங்கட்கான சூழல்கள் தோன்றின. பாராளுமன்றச் சந்தர்ப்பவாத அரசியலிற் தம்மை இழந்த இடதுசாரிகள் சிறீ லங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து சந்தர்ப்பவாத அரசியலில் இறங்கினர். புரட்சிகரக் கோட்பாட்டை ஏற்றோர் மாக்சிச-லெனினிச வழிநின்ற பொதுவுடைமைக் கட்சியின் வழிகாட்டலில் போராட்டங்கள் வழித் தமது அரசியல், தத்துவார்த்தக் கொள்கைகளை விருத்தி செய்தனர். அம் முயற்சிகள் கலை இலக்கியப் பரப்பிற் பெரும் தாக்கமேற்படுத்தின.

அதன் தொடர்ச்சியாக, 'வசந்தம்' எனும் கலை இலக்கிய ஏடு 1964இன் பிற்கூற்றில் தொடக்கப்பட்டது. இளம் படைப்பாளிகளான செ. யோகநாதன், இ.செ. கந்தசாமி, நீர்வை பொன்னையன், யோ. பெனடிக்ற் பாலன், ச. முத்துலிங்கம், செல்வ. பத்மநாதன், அ. கந்தசாமி போன்றோர் அதனை முன்னின்று வெளியிட்டனர். அதற்கு ஆதரவாக முற்குறிப்பிட்ட நாடறிந்த எழுத்தாளர்கள் ஆக்கங்களை வழங்கி உறுதுணை செய்தனர். நிதிவளமின்றி வசந்தம் ஒரு வருடத்தில் நின்றுபோயினும் அதனால் ஊக்கம் பெற்ற படைப்பாளிகள் கலை இலக்கிய அமைப்பு எதுவுமின்றித் தம் கலை இலக்கிய முயற்சிகளை முன்னெடுத்தனர்.

1964க்குப் பின், வடக்கிலும் தெற்கிலும் மலையகத்திலும் அரசியல் தொழிற்சங்க வெகுஜனப் போராட்டங்கள் அரசியற் பரிமாணங் கொண்டு வேகமடைந்தன. வடக்கில், 1966 ஒக்டோபர் 21 எழுச்சி, சாதிய-தீண்டாமை அமைப்புக்கு எதிரான புரட்சிகரப் போராட்டக் களத்தை திறந்து ஒரு வரலாற்றுத் திருப்பு முனையாகியது. பல்வேறு களங்களிற் போராட்டங்கள் முன்னேறிய அக் காலத்தில், வடக்கில், வேலைநிறுத்தப் போராட்டங்களுடன் அரசாங்கத்தின் மக்கள் விரோத நிலைப்பாடுகளையும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தையும் எதிர்க்கும் இயக்கங்களும்



படிப்பகம்

www.padippakam.com

முன்னெடுக்கப்பட்டன. மலையகம் முன்கண்டிராத தொழிற்சங்கப் போராட்டங்கள் வர்க்க உணர்வின் உச்ச நிலையிற் பரவின. ஆண்களும் பெண்களுமாகத் தோட்டத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தப் போராட்டங்களில் தமது வர்க்க உணர்வை வெளிப்படுத்தினர்.

மேற்கூறிய இயக்கங்களும் போராட்டங்களும் சமூக மாற்றத்தை வேண்டிநின்ற கலை இலக்கியவாதிகளுக்கு மக்கள் கலை இலக்கியக் கோட்பாட்டு அடிப்படையிற் புதிய அனுபவங்களை வழங்கின. அப் பின்புலத்தில் வளமிக்க ஆக்க இலக்கியங்கள் பிறந்தன. கவிதைகள், பாடல்கள், சிறுகதைகள், நாவல்கள் என்பனவற்றுடன் புதிய புதிய நாடக வடிவப் பரிசோதனைகளும் வெற்றிபெற்றன.

"எச்சாமம் வந்து எதிரி நுழைந்தாலும் / நிச்சாமக் கண்கள் நெருப்பெறிந்து நீறாக்கும் / குச்சுக் குடிசைக்குள் கொலுவிருக்கும் கோபத்தை / மெச்சுகிறேன்" எனும் கவிஞர் சுபத்திரனதும், "ஆற்றல் மிகு கரங்களிலே ஆயுதங்கள் ஏந்துவதே / மாற்றத்திற்கான வழி, மாற்றுவழி ஏதுமில்லை" எனும் கவிஞர் கணேசவேலினதும், "மாவிட்டபுரத்திலோர் மந்தி / மடைச் சேட்டை புரியுது / வாசலில் குந்தி" எனும் கவிஞர் வில்வராசனதும் வரிகள் போன்றவை மக்கள் போராட்டத்திற்கு வேகமளித்தன. சி. மௌனகுரு, சில்லையூர் செல்வராசன், சாருமதி, சிவானந்தன், புதுவை இரத்தினதுரை, முருகையன், முருகு கந்தராசா, முருகு இரத்தினம், தில்லை முகிலன், பூமகன் ஆகியோரது கவிதைகளும் வீச்சுடன் அமைந்தன. அவ்வாறே, மலையக மக்களின் வர்க்க உணர்வைக் கூறுங் கவிதைகளும் பிறந்தன. பாடல்களும், போராட்டத் தீ - 1, 2 எனும் நூல்களும் உருப்பெற்றன. எம். முத்துவேல், பி. மரியதாஸ், ஆர். இராமலிங்கம் போன்ற கவிஞர்கள் கனதியான கவிதைகளைப் படைத்தனர்.

என்.கே. ரகுநாதன், கே. டானியல், பெனடிக்ற் பாலன், செ. யோகநாதன், நா. யோகேந்திரநாதன், நந்தினி சேவியர், இராஜ தருமராஜா போன்றோர் கருத்தாழமும் கலையுணர்வும் மிக்க சிறுகதைகளைப் படைத்தனர். இளங்கீரனின் "நீதியே நீ கேள்", நாவல்களில் கணேசலிங்கனின் "செவ்வானம்", பெனடிக்ற் பாலனின் மலையகஞ் சார்ந்த "சொந்தக்காரன்" போன்றவை முக்கியமானவை. பலவாறான விமர்சனங்களை எதிர்நோக்கினும், டானியலின் "பஞ்சமர்" சாதி ஒடுக்குமுறையின் பல பரிமாணங்களை வெளிக்கொணர்ந்த முக்கிய நாவலாகும்.

மேற்கூறியவாறான ஆக்கங்கள் மக்களது வர்க்க, சமூகப் பிரச்சினைகளையும் போராட்ட நியாயங்களையும் ஆற்றல்களையும் பிரதிபலித்ததுடன் மக்கள் இலக்கியத்திற்கான வலுவான அடிப்படைகளையுங் கொண்டிருந்தன. அவை பற்றிய ஆய்வுகளும் விமர்சனங்களும் முன்னரே வெளிவந்துள்ள போதும் அவற்றின் வரலாற்று முக்கியத்துவங் கருதி அவை தொடர்ந்தும் ஆக்கபூர்வமாக ஆராயப்பட வேண்டும்.

ஆக்க இலக்கியங்கள் போன்று விமர்சனமும் கலை இலக்கியத் துறையின் கவனத்திற்குரிய பகுதியாக அன்று செழுமை பெற்றது. க. கைலாசபதி விமர்சனத் துறையில் உயர்ந்து நின்றார்.

அப்போதைய போர்க்குணமிக்க நாடகங்களை மக்கள் பெரிதும் வரவேற்றனர். அவை மக்கள் கலை இலக்கிய கோட்பாட்டுக்கமையத் தரமான நாடகங்களை ஆக்க வழிகாட்டின. 1969இல் மட்டக்களப்பு நாடகசபா தயாரித்து, சி. மௌனகுரு நெறியாண்ட "சங்காரம்" பெரு வரவேற்புப் பெற்றது. அடுத்து என்.கே. ரகுநாதனின் "கந்தன் கருணை" சுவடியை இளைய பத்மநாதனின் நெறியாள்கையில் காத்தவராயன் கூத்துப் பாணியில் அம்பலத்தாடிகள் வடக்கில் மேடையேற்றினர். "கந்தன் கருணை" 1969 முதல் 1974 வரை கொழும்பிலும் வடக்கிலும் ஐம்பது முறைகட்கும் மேல் மேடையேறியது. சாதியமைப்பை அம்பலமாக்கி ஒடுக்குமுறைக்கெதிரான போராட்ட நியாயங்களை வலியுறுத்திய அந்த மக்கள் கலைவடிவ நாடகத்தின் வெற்றி, ஒரு கூட்டு முயற்சியின் விளைவாகும். அடுத்து, மட்டுவில் மோகனதாஸ் கலைக் கழகத்தின் "குடி நிலம்", "புதிய வாழ்வு", முருகையனின் "கடூழியம்", பண்டத்தரிப்பு காலையடி மறுமலர்ச்சி மன்றத்தின் "காகிதப் புலிகள்", மாவை நித்தியானந்தனின் "ஐயா எலக்சன் கேட்கிறார்" போன்ற நாடகங்கள் ஆழமான கருத்துக்களை மக்களிடம் கொண்டு சென்றன. பின்னர், புதிய நாடக உத்திகளைப் பாவித்துக் "கந்தன் கருணை"யைப் பல்வேறு நாடக அமைப்புக்கள் மேடையேற்றின. சி. மௌனகுரு, இளைய பத்மநாதன், தாசீசியஸ், முருகையன் போன்றோர் புதிய உத்திகளில் தமது ஆற்றல்களைப் பிறருடன் பகிர்ந்தமை முக்கியமானதாகும்.

அக்காலச் சித்திர ஓவிய முயற்சிகளில், தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்க மாநாட்டிற்கான சித்திரக் கண்காட்சி முக்கியமானது. அற்றைவரையான சாதிய ஒடுக்கு முறையையும் சாதிய-தீண்டாமைக் கொடுமைகளையும் உயிர்ப்புடன் காட்டிய சித்திரங்களும் ஓவியங்களும் திரட்டப்பட்டுக் கண்காட்சியில் வைக்கப்பட்டன. 1969ல் வடக்கின் பல பகுதிகளிலும் நடத்திய இக் கண்காட்சியை மறைந்த பேராசிரியர் சரச்சந்திர பின்னர் கொழும்பிற் திறந்துவைத்தார். பெருந்தொகையான தென் இலங்கை மக்கள் உணர்வுமிகுதியுடன் கண்காட்சியைப் பார்வையிட்டதால் அதை மேலும் இரண்டு நாட்கள் நீடிக்க வேண்டியதாயிற்று. கண்காட்சியை நடத்துவதிற் பேராசிரியர் க. கைலாசபதி முன்னின்று உழைத்தார். கண்காட்சிக்கான சித்திரங்களை வரைவதிலும் பெறுவதிலும் என்.கே. ரகுநாதன், கே. தங்கவடிவேல், கே. டானியல் போன்றோர் ஊக்கத்துடன் செயற்பட்டனர்.

இவ்வாறு 1964-1972 காலப் போராட்டங்களும் அவற்றின் வளமான அனுபவங்களும் ஒரு பரந்த மக்கள் இலக்கியக் கோட்பாட்டுத் தளத்தை விரிவுபடுத்தி செழுமையாக்கின. 1970ல் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் வரவும் 1971 ஏப்பிரல் கிளர்ச்சியையொட்டிய அரச அடக்குமுறைகளும் புரட்சிகர இயக்கத்திற்குக் கடும் பின்னிடைவுகளை ஏற்படுத்தின. இத் தேக்கத்திலிருந்து மீள இரண்டு மூன்று ஆண்டுகள் சென்றன. மறுபுறம், முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தை அண்டியோர் மக்கள் இலக்கியக் கோட்பாட்டைப் புறக்கணித்து எங்கும் சமரச மார்க்கத்தைப் பின்பற்றி, இலக்கியத்திலும் அரசியலிலும் வெகுஜன மார்க்கத்தை மறுத்தனர். இச் சூழலில் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தை அண்டித் தன்னை மீளமைக்க முயன்ற முற்போக்கு எழுத்தாளர் சங்கம், அரசாங்கத்தை ஆதரித்ததே ஒழியக், கலை இலக்கியத் துறையில் சமூகப் பயனுற எதையுமே செய்யவில்லை.

## தோற்றமும் வளர்ச்சியும்

மேற்கூறிய அரசியல், கலை இலக்கிய வரலாற்றுப் போக்கிற் கிட்டிய அனுபவங்களும் பட்டறிவும் ஒரு கலை இலக்கிய அமைப்புக்கான தேவையை வலியுறுத்தின. தேசிய ரீதியில் மக்கள் இலக்கியக் கோட்பாட்டை வகுத்து, அதனை ஒரு கலை இலக்கிய அமைப்பினூடு முன்னெடுக்க முடிவானது. அதற்கான ஆக்கமான கருத்துக்களும் ஆலோசனைகளும் பல கலை இலக்கிய மட்டங்களிலும் பெறப்பட்டு விவாதிக்கப்பட்டன. நாட்டின் சமூக அமைப்பும் அதனை



படிப்பகம்

www.padippakam.com

எதிர்நோக்கும் அடிப்படை முரண்பாடும் எவை, மக்கள் என்போர் யார், மக்கள் இலக்கியத்தின் அடிப்படைகள் எவை, அவற்றை முன்னெடுக்கும் வழிவகைகள் எத்தகையன என்று கூட்டாகவும் தனியாகவும் பல்வேறு நிலைகளில் விவாதிக்கப்பட்டது. கே.ஏ. சுப்பிரமணியம், க. தணிகாசலம், க. கைலாசபதி, சி.கா. செந்திவேல், க. குணேந்திரராசா, என்.கே. ரகுநாதன், கி. சிவஞானம், இ. செல்வநாயகம், அ. இராஜலிங்கம், வை. வன்னியசிங்கம், இளைய பத்மநாதன், க. சிவம், கே. டானியல், நந்தினி சேவியர், சி. நவரத்தினம், த. குணரத்தினம், க. தர்மகுலசிங்கம், க. தங்கராசா, கே. இரத்தினம், கு. சிவராசா, முருகு கந்தராசா, குட்டிக்கிளி, நந்தினி சேவியர் ஆகியோர் பெரும் பங்களித்தனர். கூட்டான கலந்துரையாடல்களின் பயனாகத் தேசிய கலை இலக்கியப் பேரவை 1973 டிசெம்பர் இறுதியில் நிறுவப்பட்டது. க. தணிகாசலத்தையும் க. குணேந்திரராசாவையும் இணைச் செயலாளர்களாகயும் கி. சிவஞானத்தைப் பொருளாளராகவுங் கொண்ட பொதுச் சபையும் செயற்குழுவும் தெரிவாயின.

தேசிய கலை இலக்கியப் பேரவை யாழ்ப்பாணத்திற் தோன்றியபோதும், அதன் இலக்கியக் கோட்பாடும் கொள்கையும் நிறுவன அமைப்பும் முழு நாடுந் தழுவி வகுக்கப்பட்டன. அதன் கலை இலக்கியக் கொள்கை, “சமுதாயத்தை விளக்குவது அதனை மாற்றியமைப்பதற்கே” என்னும் மாக்சியக் கோட்பாட்டின் அடிப்படையிலானது. சமூக மாற்றத்திற்கான கலை இலக்கியத்தை மக்களுடன் இணைக்கும் மக்கள் கலை இலக்கியக் கோட்பாட்டைத் தனது பயண இலக்கான “புதிய ஜனநாயகம், புதிய வாழ்வு, புதிய பண்பாடு” என்னும் இலக்கிய முழக்கமாக முழு நாட்டிற்கும் உரியதாக்கியதால் பேரவை கொழும்பிலும் மலையகத்திலும் பிற பகுதிகளிலும் விரிவு பெற்று இயங்கியது.

பேரவை தன் முதற் செயற்பாடாகத் “தாயகம்” என்னும் கலை இலக்கியச் சஞ்சிகையை வெளியிட முடிவெடுத்தது. பொறுப்பாசிரியராகவும் வெளியீட்டாளராகவும் க. தணிகாசலம் பொறுப்பேற்றார். அதன் முதல் இதழ், பேரவையின் இணை அமைப்பான அம்பலத்தாடிகளின் 1974 புதுவருடக் கலை விழாவின் போது நெல்லியடியில் வெளியானது. சஞ்சிகையின் முதற் பிரதியை வெளியிட்ட பேராசிரியர் கைலாசபதி முக்கியமான இலக்கிய வழிகாட்டல் உரை ஒன்றை நிகழ்த்தினார். கலை விழாவிலும் தாயகம் வெளியீட்டு நிகழ்விலும் பேராசிரியர் கைலாசபதி, கே. டானியல், என்.கே. ரகுநாதன், பேராசிரியர் அ. சண்முகதாஸ், சில்லையூர் செல்வராசன், புதுவை இரத்தினதுரை, இளைய பத்மநாதன், கே.ஏ. சுப்பிரமணியம் உட்பட்ட படைப்பாளிகள் மிகு உற்சாகத்துடன் இணைந்திருந்தனர். எட்டு இதழ்கள் வெளிவந்த பின், நிதி நெருக்கடியால் தாயகம் நின்று போனதெனினும், வெளியான எட்டும் காத்திரமான படைப்புகளைத் தாங்கியிருந்தன. முதலாம் இதழின் ஆசிரியத் தலையங்கம் மக்கள் இலக்கியக் கோட்பாட்டையும் அதன் செல்நெறியினையும் கோடிட்டுக் காட்டியமை முக்கியமானது. பேரவை தனது நடைமுறையில் அவ்வப்போது இழைத்த தவறுகள் தாயகத்திலும் பிரதிபலித்தன. எனினுந் தவறுகள் அடையாளங் காணப்பட்டுத் திருத்திப்பட்டமை முக்கியமானது.

திருகோணமலையில் 1974 ஜூனில் நடந்த எழுத்தாளர் மாநாடு மிக முக்கியமானது. பேரவை உட்பட நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த ஐந்து கலை இலக்கிய அமைப்புகள் இணைந்து அதை நடத்தின. அந்த இரண்டு நாள் மாநாடு மக்கள் இலக்கியக் கோட்பாட்டை வற்புறுத்தி உயர்த்திச் சமூக மாற்றத்தை முன்னிறுத்தாத சந்தர்ப்பவாத வர்க்க-சமரச நழுவல் இலக்கியப் போக்கை எதிர்த்து நின்றது. குறிப்பாக, முற்போக்கு எழுத்தாளர் சங்கம் ஐக்கிய முன்னணி ஆட்சியின் நிழலில் தன்னை மீள நிலைநிறுத்த எடுத்த முயற்சியை மாநாடு அம்பலமாக்கியது. சமூக மாற்றத்திற்கும் சமூக நீதிக்குமான போராட்ட இலக்கியப் பாதையில் அணிதிரளுமாறு எழுத்தாளர்கட்கு அறைகூவியது. மாநாட்டை வெற்றிகரமாக நடாத்தச் சில்லையூர் செல்வராசன், என்.கே. ரகுநாதன், கே. டானியல், க. தணிகாசலம் ஆகியோர் பெரும் பங்காற்றினர்.

தாயகம் தற்காலிகமாக நின்றுபோயினும் பேரவை தனது பரந்த கலை இலக்கியச் செயற்பாடுகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்து இலக்கியக் கருத்தரங்குகயையும் பயிற்சிப் பட்டறைகளையும் நாடகச் செயற்பாடுகளையும் மேற் கொண்டது. பேரவையின் சார்பிற் புதுவருட, பொங்கல் விழாக்களும் நடந்தன. பேரவை கிராமங்களில் நடத்திய இலக்கியக் கருத்தரங்குகளும் கவியரங்குகளும் மக்கள் மத்தியிற் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின. புதுவை இரத்தினதுரை, க. தணிகாசலம், முருகு கந்தராசா, க. தர்மகுலசிங்கம், நந்தினி சேவியர் ஆகியோர் கவியரங்குகளில் பங்கேற்றனர்.

கொழும்பில் 1975ல் தேசிய கலை இலக்கியப் பேரவையை நிறுவி நடத்துவதில் முதன்மைப் பணியாற்றிய இளைய பத்மநாதனுக்குச் சோ. தேவராஜா, சிறிபாலன், அ. சந்திரகாசன் ஆகியோர் பலவாறு துணைநின்றனர். கவிதை, சிறுகதை, நாடக அரங்கப் பயிற்சி வகுப்புக்களும் பட்டறைகளும் நடைபெற்றன.

மலையகத்தில் டொக்டர் தம்பிராஜா, த. இராஜேந்திரம் ஆகியோரின் தொடக்கப் பணிகளையடுத்து, எண்பதுகளில், பேரவைக்கு புதிய உத்வேகம் ஊட்டுவதில் க. தணிகாசலம், சோ. தேவராஜா, ந. இரவீந்திரன், கே. நடனசபாபதி, சி. நவரத்தினம், இ. செல்வநாயகம், கா. மகாதேவன், அ. சந்திரகாசன், கா. கதிர்காமநாதன், வை. வன்னியசிங்கம், கா. பஞ்சலிங்கம், இ. தம்பையா, டொன் பொஸ்கோ, க. தயாளன், சி. இராஜேந்திரன், ந. ஆனந்தராசா, குமார் ஆகியோர் பெரும் பங்காற்றினர். கவிஞர் முருகையனும் பேராசிரியர் சிவசேகரமும் பேரவையுடன் இணைந்து செயற்பட்டனர். க. தணிகாசலம், கே.ஏ. சுப்பிரமணியம், ந. இரவீந்திரன், இ. முருகையன், சோ. தேவராஜா, ம. சண்முகலிங்கம் ஆகியோரை ஆசிரியர் குழுவிற் கொண்டு தாயகம் புதுப் பொலிவுடன் மீண்டும் வெளியானது.

தாயகம் நாட்டின் பல்வேறு பகுதிகட்கும் சென்றது. பேரவை உறுப்பினர்கள் அதைக் கிராம, நகர மக்களிடையே கொண்டுசென்றனர். எண்பதுகளின் நடுக்கூற்றில் 3500 பிரதிகள் விற்பனையானமை தேசிய கலை இலக்கியப் பேரவையின் மக்கள் இலக்கிய நிலைப்பாடு சரியானதென உறுதிப்படுத்தியது. தாயகத்தின் தொடர் வளர்ச்சிக்குப் பாதகமாக அமைந்த யாழ்ப்பாணப் போர்ச் சூழலில், காகிதத் தட்டுப்பாடு, அதிகாரக் கெடுபிடிகள் என்பனவற்றின் நடுவிலும் தாயகம் விடாது வெளிவந்தது. 2003இல் சஞ்சிகையின் பக்கப் பரப்பைக் கூட்டி மேலும் பொலிவுடன் வெளியிட முடிவானது. சஞ்சிகையின் முன், பின் அட்டைகளைச் சமூகச்சார்பான கருத்துக்களைக் கூறும் ஓவியங்களும் புகைப்படங்களும் அலங்கரித்தன. உலக இலக்கியத்தின் பயனுள்ள கூறுகளைத் தமிழில் வழங்கும் தமிழாக்க முயற்சிகளை முன்னெடுப்பதிலும் பன்முகப்பட்ட ஆக்கங்களின் பெறுமதியிலும் தமிழாக்கச் செய்நேர்த்தியிலும் தாயகம் சிறப்பாகப் பங்காற்றி வந்துள்ளது.

மும்மாத இதழாகத் தாயகம் வரத் தொடங்கிய பின், பழைய, புதிய படைப்பாளிகளும் தமது ஆக்கங்களை உற்சாகத்துடன் வழங்கி வந்தனர். இன்றுவரை, இலங்கையில் இலக்கியத்



படிப்பகம்

www.padippakam.com

தரத்தில் அதியுயர்ந்த தமிழ்ச் சஞ்சிகையாகவும் இலக்கியக் கொள்கையில் விட்டுக் கொடுப்பற்ற ஏடாகவும் தாயகம் உள்ள போதும் கடந்த மூவாண்டுகளின் மாறிய சூழ்நிலை தாயகத்தின் விநியோகத்திற்கும் அதைக் குறித்த காலத்திற் கொண்டுவருவதற்கும் இடையூறுகளை ஏற்படுத்தியுள்ளது. இக்குறையைச் செம்மைப் படுத்த விரைவில் நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன.

எண்பதுகளிற் பேரவை யாழ்ப்பாணம், கொழும்பு, மலையகப் பிரதேசங்களில் இலக்கியக் கருத்தரங்குகளையும் விமர்சன அரங்குகளையும் வெளியீட்டு நிகழ்வுகளையும் நடத்திவந்தது. யாழ்ப்பாணத்திலும் மலையகத்திலும் இசைப்பாடல்கள் ஆக்கப்பெற்றன. தாயகத்தில் வந்த 12 கவிதைகள் பிரபல இசையமைப்பாளர் எம். கண்ணனின் இசையில் எஸ். ஜெயக்குமார், வீ. திவ்வியராஜா, எஸ்.ரி. கலாலக்ஷ்மி, பாலச்சந்திரன் ஆகியோரைக் கொண்ட இசைக் குழுவினால் பல கிராமங்களிலும் நகரங்களிலும் பாடப்பட்டுப் "புதுவரலாறும் நாமே படைப்போம்" என்னும் ஒலிப் பேழையாக 1986ன் நெருக்கடியான சூழலில் சுய முயற்சியால் வெளியிடப்பட்டது. அதையடுத்துக் "குன்றத்துக் குமுறல்" மலையகக் கவிதைத் தொகுதியின் கவிதைகள் வீ. திவ்வியராஜாவின் முயற்சியால் தமிழ்நாட்டில் இசையமைக்கப்பட்டுக் "குன்றத்துக் குமுறல்" இசை ஒலிப் பேழையாக வெளிவந்தன.

1994ல் அமைதி பற்றிய ஏற்பட்ட நம்பிக்கைகள் தகர்ந்த சூழலில் கூட்டு முயற்சியும் அவையோர் ஆதரவும் வேண்டிய நிகழ்ச்சிகளை நடத்துவதில் இடையூறுகள் இருந்தன. அதைவிட, இந்தியக் கலைஞர்களைப் பெருந்தொகையிற் கொண்டுவந்து விழாக்களை நடத்தும் போக்கும் கீழ்த்தரமான ரசனையை ஊக்குவிக்கும் இசை-நடன நிகழ்ச்சிகளும் பரவலாயின. பெருமுதலாளிகளும் பிற்போக்கு ஊடகங்களும் அவற்றை ஆதரித்து வருகின்றனர். தொலைக்காட்சியும் பண்பாட்டுச் சீரழிவுக்கு மேலும் உடந்தையாயிருந்து வருகிறது. இச் சூழலிற், குழந்தை சண்முகலிங்கத்தின் "எந்தையும் தாயும்", "மனத்தவம்", மஹாகவியின் "கோடை" ஆகிய நாடகங்களைப் பேரவை தயாரித்து மேடையேற்றியது. குழந்தை சண்முகலிங்கத்தின் "பஞ்சவர்ண நரியார்" நாடகத்தைக் கொழும்பில் மேடையேற்ற உறுதுணையாயிருந்ததுடன் "பாட்டும் கூத்தும்" என்ற தலைப்பில் ஐந்து சிறுவர் நாடகங்களைக் கொழும்பில் மேடையேற்றியது. தமிழ்ச் சிறுவர் நாடக வரலாற்றில் முதன்முறையாகத் தயாரிப்பு, நெறிப்படுத்தல், மேடையமைப்பு, இசை ஆகிய அனைத்திலும் மூத்த கலைஞர்களும் இளையவர்களும் சேர்ந்து செயற்பட்டனர். ஒவ்வொரு நாடகமும் ஐநூறுக்கும் மேற்பட்ட அவையோரின் பாராட்டைப் பெற்றது. அவற்றிற் சில பாடசாலைகளில் தொடர்ந்தும் மேடையேறி வருகின்றன. பேரவையின் நூல் வெளியீடுகளின் போது கவிதா நிகழ்வுகளும் இடம்பெறுகின்றன. இவ்வாறு இசை, நாடகம் ஆகிய துறைகளில் தேசிய கலை இலக்கியப் பேரவை இயன்றளவுக்குப் புதிய கலைஞர்களின் வளர்ச்சியை ஊக்குவித்து வந்துள்ளது.

ஈழத்து இலக்கியப் பரப்பில் பேரவை மிக ஆழத் தடம்பதித்த பணி, நூல் வெளியீடாகும். எண்பதுகளின் முற்பகுதியில் "பாரதி பன்முகப் பார்வை" எனும் நூலுடன் தன் வெளியீட்டுப் பயணத்தைத் தொடங்கிய பேரவை இன்று நூற்றுக்கும் மேலான தரமான நூல்களை வெளியிட்டுள்ளது. இலங்கையில் ஒரு இலக்கிய அமைப்பு தனித்து இத்தனை நூல்களை வெளியிட்டமையினும் முக்கியமானது நூல்களின் சிறப்பியல்புகளாகும். நூலுருப் பெறும் ஆக்கத்தின் தரம், பன்மைப்பட்ட இலக்கியக் கூறுகளை உள்ளடக்கல், நாட்டின் அனைத்துப் பிரதேசங்களையும் அடையாளப்படுத்தல் என்பன மிகு கவனிப்புக்குட்பட்டன. சிறுகதை, நாவல், கவிதை, நாடகம், தமிழாக்கம், திறனாய்வு, சமூகவியற் கட்டுரைகள் என அவற்றின் உள்ளடக்கம் பரந்துள்ளது. 1990களில் இலங்கையின் நெருக்கடிச் சூழலிற் பேரவையின் பல நூல்களைத் தமிழகத்திற் பதிப்பித்ததால் ஈழத்துப் படைப்பாளிகள் தமிழகக் கலை இலக்கியப் பரப்பில் அறிமுகமாயினர். நூல் வெளியீட்டில் சோ. தேவராஜா அவர்களது பங்கு மெச்சத்தக்கதாகும். தமிழ்நாட்டில் நூல்களைப் பதிப்பிக்க உதவிய சவுத் விஷன் நிறுவனப் பணிப்பாளர் எம். பாலாஜியின் ஆதரவு நன்றியுடன் நினைவுகூரப் படுகிறது. நூல் வெளியீட்டோடு நில்லாது வாசகர்களடையே அவற்றைக் கொண்டு செல்லத் தமிழ் நூல் வெளியீட்டு விநியோக அமையம் ஒன்றும் நிறுவப்பட்டது.

1990களின் பிற்கூற்றிற் பேரவையின் மாதமொரு நூல் வெளியீட்டுக்குப் புரவலர்கள் உதவிவந்தபோதும் நூல் விற்பனை தொடர்ச்சியான சரிவைக் கண்டுள்ளது. மின் ஊடக ஆக்கிரமிப்பும் உலகமயமாக்கலின் சீரழிவும் வாசிப்புப் பழக்கத்தை 1990களிலிருந்து சிதைத்துள்ளமை ஒரு முக்கிய காரணமாகும். பாடசாலைகளிலும் வாசிப்புப் பழக்கம் வளர இயலாதபடி மாணவர்கள் மீதான பயனற்ற சுமை கூடி வந்துள்ளது. எனவே வாசிப்பை மீள நிலைநிறுத்தும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய தேவையை உணர்ந்து, வாசகர் வட்டங்கள் ஊடாகவும் குழுக்களாகச் சந்தித்துக் கலந்துரையாடியும் வாசிப்பையும் வாசித்தன பற்றிக் கலந்துரையாடுவதையும் ஊக்குவிக்கப் பேரவை எடுத்துவந்த முயற்சிகள் 2008க்குப் பின்பான சூழலில் வெல்லவில்லை. எனினும், பேரவையின் ஊக்குவிப்புடன் செயற்படும் சமூக விஞ்ஞானக் கல்வி வட்டம் கொழும்பில் வாசிப்பு, கலந்துரையாடல், பாடசாலைகளிற் பயிற்சிப் பட்டறைகள் என்பவற்றை ஊக்கத்துடன் முன்னெடுக்கிறது. இவ்வாறான முயற்சிகள் பிற மாவட்டங்களிலும் தொடக்கப்பட்டுள்ளன

தொண்ணூறுகளின் அவலச் சூழலின் நடுவே பேரவையின் கலை இலக்கியப் பயணம் தொடர்ந்தது. அச் சூழலிற், பேரவை தமிழகக் கலை இலக்கிய அறிஞர்களான பாரதியியல் ஆய்வாளர் பெ.சு. மணியும் மறைந்த கலை இலக்கியவாதி கோமல் சுவாமிநாதனையும் அழைத்து யாழ்ப்பாணம் உட்பட்ட பல பகுதிகளிலும் இலக்கிய நிகழ்ச்சிகளிற் கலந்து கொள்ளச் செய்தமை பேரவையின் பணிகட்கு உரமிட்டது. பேரவையும் கோமல் சுவாமிநாதனின் "சுபமங்களா" சஞ்சிகையும் இணைந்து ஈழத்து எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் ஒரு குறுநாவல் போட்டியை நடத்திப் பரிசு களை வழங்கியதும் குறிப்பிடத்தக்கதாகும்.

## இடரான சூழலில் தொடரும் பணிகள்

1990கள் தொட்டுத் தேசிய கலை இலக்கியப் பேரவை தனது பணியினை யாழ்ப்பாணம், கொழும்பு, மலையகம், வவுனியா ஆகிய பகுதிகளில் விரிவுபடுத்தி முன்னெடுத்து வந்துள்ளது. போர்ச் சூழலும் நிதி நெருக்கடியும் யாழ்ப்பாணத்திற் பேரவையின் பணிகளை முடக்கவில்லை. அதன் செயற்பாடுகட்கு உறுதுணையாயிருந்த ஏ.ஜே. கனகரத்னா 2006ஆம் ஆண்டு இயற்கையெய்தினார். பேராசிரியர் நா. சுப்பிரமணியன் 1990களில் புலம்பெயர்ந்தார். இருவரதும் பணிகளை இவ் வேளை நன்றியுடன் நினைவு கூருகிறோம். பேரவைக்குப் பேரிடியாக 2009ம் ஆண்டில் கவிஞர் முருகையனும் மறு ஆண்டிற் கொழும்பிற் பேரவையின் பலவேறு பணிகளையும் அயரா ஊக்கத்துடன் மேற்கொண்டு வந்த மாவை வரோதயனும் மறைந்தனர். கவிஞர்



படிப்பகம்

www.padippakam.com

முருகையனின் மறைவையடுத்துப் பேராசிரியர் சி. தில்லைநாதன் பேரவையின் தலைவராயிருந்து வழிநடத்தி வருகிறார். குழந்தை ம. சண்முகலிங்கம், பேராசிரியர் அ. சண்முகதாஸ், கல்வயல் வே. குமாரசாமி, கவிஞர் சோ. பத்மநாதன் ஆகியோரது ஈடுபாடு மிக்க ஆதரவின் தொடர்ச்சியும் பேரவைக்கு உறுதுணையாயிருந்து வருகிறது.

மலையகச் சூழலில் புதிய மலையகம் சஞ்சிகையைக் கொண்டு வருவது இயலுமாயிருந போதும், விற்பனை, விநியோகச் சிக்கல்கள் தொடர்ச்சியான வெளியீட்டுக்குத் தடையாகின. மலையகத்தின் படித்த நடுத்தர வர்க்கத்தின் எழுச்சி மலையகத் தமிழரின் சமூக மேம்பாட்டுக்கு உதவவில்லை. சுய முன்னேற்றம், தவறான விழுமியங்கள், சமூக அக்கறையின்மை என்பன பலரையும் பீடித்துள்ளன. என்.ஜி.ஓக்களின் குறுக்கீடு செயலூக்கமிக்க பலரை உதிரிகளாய்ச் சீரழித்துள்ளது. இவற்றின் மத்தியிலும் மலையகத்திற் பேரவையின் செயற்பாடுகள் ஊக்கத்துடன் தொடருகின்றன. ராகலை பன்னீரின் "புதிய தலைமுறை" கவிதைத் தொகுப்பை அடுத்து நீண்ட இடைவெளியின் பின் நீண்டகாலமாக வழக்கு விசாரணையின்றிச் சிறையிலுள்ள மலையகப் படைப்பாளிகளது அண்மைக் காலக் கவிதைகள் மலையகக் கவிதை எட்டக் கூடிய போர்க்குணமுள்ள இலக்கிய உச்சங்களைச் சுட்டுகின்றன. அவர்களில் ஒருவரான கிருஷ்ணபிரியனின் "வேரின் பிரசவங்கள்" கவிதைத் தொகுதி வெளியீடும், "காலம் மாறுது" பாடல்கள் இறுவெட்டின் வரவும் தெம்புட்டுவன. மலையகத்தில் ஹற்றன், ராகலை, இரத்தினபுரி, மாத்தளைப் பிரதேசங்களிற் கலை இலக்கிய நிகழ்வுகளும் கலந்துரையாடல்களும் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றன.

வவுனியாவில் நிலவுகிற நெருக்கடியான சூழலின் நடுவிலும் பேரவையின் செயற்பாடுகள் தளராமல் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. வாசிப்பையும் இளம் படைப்பாளிகளை ஊக்குவிக்கும் விதமான நிகழ்வுகளும் கலந்துரையாடல்களும் தொடர்கின்றன.

### சாதித்தனவும் சாதிக்க வேண்டியனவும்

தேசிய கலை இலக்கியப் பேரவையின் தொடக்கக் காலப் பணிகள் முற்போக்கு இலக்கிய இயக்கம் செய்த் தவறிய பணிகளைப் புது வீச்சுடன் ஒரு இலக்கிய இயக்கமாக வளர்த்தெடுப்பதாய் அமைந்தன. பழமைவாதத்திற்கும் பிற்போக்குச் சிந்தனைக்கும் -குறிப்பாகச் சாதியத்துக்கும்- எதிரான போராட்டங்கள் அதற்கு வலுவுட்டின. சமூக நீதிக்கும் விடுதலைக்கும் சமுதாயத்தை மாற்றுவதற்குமான இலக்கியத்தை வலியுறுத்தித் தூய இலக்கியம், தூய அழகியல் எனும் பொய்மைகளை முறியடித்து இலக்கியம் என்பது மக்களுக்கானதே என்பதைப் படைப்பியல், விமர்சனத் தளங்களில் நிலைநாட்டுவதிற் பேரவை இலங்கையில் முதன்மையான பங்களித்ததுள்ளது.

எழுபதுகளிற் கூர்மைபெற்று எண்பதுகளிற் போராகிய பேரினவாத ஒடுக்குமுறையினூடும் ஏகாதிபத்திய உலக மயமாக்கலால் நாட்டின் பொருளாதாரமும் பண்பாடும் சமூக உறவுகளும் பாரிய சீரழிவை எதிர்நோக்கியுள்ள பின்னைய ஆண்டுகளிலும் தேசிய கலை இலக்கியப் பேரவை புதிய சவால்களை எதிர்நோக்கியது. குறுகிய தேசியவாதச் சிந்தனைகட்கெதிராகவும் ஆயுதக் கலாச்சாரத்துக்கும் சனநாயக மறுப்புக்கும் அது இன்றுவரை முகங்கொடுக்க வேண்டியுள்ளது. பழமைவாதம், சாதியம், ஆணாதிக்கம் ஆகியவற்றுக்கு எதிராகவும் தொடர்ந்து போராட வேண்டியுள்ளது.

இலங்கைச் சூழலில் ஏகாதிபத்திய எதிர்ப்பு, மக்கள் அரசியல், மக்கள் போராட்டம், சோஷலிசம் என்பனவற்றை மறுதலிக்க அறிமுகமான பின்நவீனத்துவத்தை, வெகுஜன அமைப்புக்களின் நலிவையொட்டி எழுந்த என்.ஜி.ஓக்கள், தீவிரமாக முன்னெடுத்தன. போலி இடதுசாரிகள் சிலர் பின்நவீனத்துவ மிரட்டலின் முன்பும் குறுகிய தேசியத்தின் முன்பும் மண்டியிட்ட சூழலிற் பின்நவீனத்துவத்தை இலங்கைத் தமிழ்ச் சூழலின் கலை இலக்கியப் பரப்பில் முற்றாக முறியடித்ததில் தேசிய கலை இலக்கியப் பேரவையின் சாதனை முக்கியமானது.

ஏகாதிபத்திய உலகமயமாதற் கருத்தியலையும் அதை ஒட்டிய பண்பாட்டுச் சீரழிவுகளையும் படைப்பிலக்கியத் தளத்திலும் சமூக ஆய்வுத் தளத்திலும் கல்வியியலிலும் எதிர்த்துப் போராடுவதிலும் பசப்பான பெண்ணியத்திற்கு மாறாக வர்க்கச் சிந்தனை வழிப்பட்ட பெண் விடுதலையையும் தலித்தியம் எனும் வரட்டுச் சாதியச் சிந்தனைக்கு மாறாகச் சாதிய எதிர்ப்பு, சாதி ஒழிப்பு எனும் மக்கள் போராட்டச் சிந்தனையை முன்நிறுத்துவதிலும் உலகமயமாதலை மறுத்து ஏகாதிபத்திய எதிர்ப்பு, சுயநிர்ணயம், சகல ஒடுக்குமுறைகட்கும் எதிரான விடுதலைப் போராட்டங்கள் என்பனவற்றை வலியுறுத்துவதிலும் பேரவை பெரும் பங்காற்றிவந்துள்ளது.

அதன் பயனாகப், பேரவயின் பணிகளைத் தொடர்ந்தும் முன்னெடுக்க வல்ல ஒரு இளந் தலைமுறைப் படைப்பாளிகளும் விமர்சகர்களும் செற்பாட்டாளர்ளும் உருவாகியுள்ளனர். சமூக விஞ்ஞான வட்டத்தினர் கொழும்பில் முழுமதி நாட்களில் நடத்திவரும் "பாடிப்பறை" நிகழ்ச்சியும் வாராந்தக் கலந்துரையாடல்களும் மலையகத்திலும் வவுனியாவிலும் யாழ்ப்பாணத்திலும் நடைபெறும் கலந்துரையாடல் நிகழ்வுகளும் இத் தொடர்பிற் குறிப்பாக மெச்ச வேண்டியன.

### செயற்குரிய பணிகள்

- ஏகாதிபத்திய உலகமயமாதல் தொடர்கிறது. போர் நின்றும் தேசிய இனப் பிரச்சனை மோசமாகியுள்ளது. மக்கள் மீது பாரிய பொருளாதாரச் சுமைகள் குவிகின்றன. எனவே பேரவை, ஏகாதிபத்திய எதிர்ப்பு, பேரினவாத எதிர்ப்பு, போர் நிறுத்தம், தேசிய இனப் பிரச்சனைக்குத் தீர்வு என்பனவற்றை அழுத்தித் தன் பணிகளை முன்னெடுக்க வேண்டியுள்ளது.
- சாதிய உற்பத்தி உறவுகளையும் வெளிவெளியான சாதியத் தீண்டாமையையும் போராடி விழுத்தியபோதும் சாதியச் சிந்தனை சமூகத்தில் தொடர்கிறது. அது தேசிய இன விடுதலை, ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்களைப் பலவீனப்படுத்துவது. எனவே தலைமறைவாயுள்ள சாதியத்தை அம்பலப்படுத்திச் சாதிவெறியர்களைத் தனிமைப்படுத்துவது முக்கியமான பணியாகிறது.
- மரபின் பேராலும் பழைமைவாதச் சிந்தனையின் மூலமும் ஆணாதிக்கம் தொடர்கிறது. பெண்ணுரிமையை வர்க்கச் சார்பற்றதாக்க முயலும் என்.ஜி.ஓ. பெண்ணியத்துக்கு மாறாக எல்லா விடுதலைப் போராட்டங்களினதும் ஆண் பெண் சமத்துவத்தை அடிப்படை நிபந்தனையாக்கிக் கலை இலக்கிய பண்பாட்டுத் தளங்களில் பெண் விடுதலைச் சிந்தனைகளைக் முன்னெடுக்க வேண்டும்.
- வர்க்கம், வர்க்கப் போராட்டம் என்பவற்றை மறுக்கும் பின்நவீனத்துவச் சிந்தனைகள் தோற்றபோதும் கருத்தியல் மட்டத்தில் விதேசிய என்.ஜி.ஓக்களின் நிதி ஆதரவிற்



படிப்பகம்

பல்வேறு தளங்களில் முன்னெடுக்கப்படுகின்றன. அதற்கெதிரான முயற்சிகள் பண்பாட்டு, கருத்தியல் தளங்களில் விடாது முன்னெடுக்கப்பட வேண்டும்.

- உலகமயமாக்கலின் விளைவான கல்வி, பண்பாட்டுச் சீரழிவுகளால் தமிழ்ப் பேசும் மூன்று தேசிய இனங்களதும் கலை இலக்கியத் துறைகள் தேங்கியுள்ளன. பழைமையின் பேராலும் நவீனத்துவத்தின் பேராலும் மேலும் பண்பாட்டுச் சீரழிவுகள் தொடர்கின்றன. அவற்றை எதிர்த்துப் போராடத் தரமான ரசனை, நல்ல வாசிப்புப் பழக்கங்கள், கூட்டு முயற்சியின் அடிப்படையில் கலை இலக்கிய ஆக்கப் பணிகள் என்பன முன்னிலும் அவசியமாயுள்ளன. அவை இளைய தலைமுறையினர் நடுவே தீவிரமாக முன்னெடுக்கப்பட வேண்டும்.
- ஏகாதிபத்தியமும் பிற்போக்குவாதிகளும் 20 ஆண்டுகள் முன்பு சொன்னது போல சோஷலிஸம் சாகவில்லை, வர்க்கப் போராட்டம் ஓயவில்லை. மாறாக அவை ஏகாதிபத்தியத்திற்கும் பிற்போக்குச் சக்திகட்கும் பதிலடி கொடுத்துப் பல்வேறு அளவுகளில் வென்றும் வருகின்றன. நம் மக்களிடமிருந்து இவ்வுண்மை திட்டமிட்டு மறைக்கப்படுகிறது. சமகால உலகில் நிகழும் மாற்றங்கள் பற்றியும் மக்கள் இயக்கங்கள் பெற்றுவரும் வெற்றிகள் பற்றியும் மக்கள் தெளிவாக அறியுமாறு நமது படைப்பிலக்கியங்கள் அத் தகவல்களை இலக்கியப் பதிவுகளாக்க வேண்டும். மட்டுமன்றி, நீதிக்காகப் போராடும் உலக மக்களின் போராட்டக் கலை இலக்கியங்களையும் அவர்கட்கான ஆதரவையும் கலை இலக்கிய வடிவிற் பதியும் தேவையும் நம்முன்னுள்ளது.

## வேலைத்திட்டம்

மேற்கூறியற்றைச் சாதிக்கப் பேரவை முன்னெடுக்க வேண்டிய அடுத்த கட்ட வேலைத் திட்டம் குறிப்பான பணிகளை அடையாளங் கண்டு நமது ஆற்றலுக்கும் சமூகச் சூழலுக்கும் ஏற்பத் திட்டமிட்ட முறையில் முன்னெடுப்பாகும். இதிற் பேரவை தனது உறுப்பினர்களதும் ஆதரவாளர்களதும் பங்களிப்பை எதிர்பார்க்கிறது. பேரவையின் பணிகளை முன்னெடுக்கப் பின்வரும் வேலைத்திட்டம் பரிந்துரைக்கப்படுகிறது.

1. இலக்கியக் கூட்டங்கள் கலந்துரையாடல்கள் கருத்தரங்குகள்

   பேரவை இயங்கும் ஒவ்வொரு பிரதேசத்திலும் ஒழுங்கான கால இடைவெளியிலும் தேவைக்கமைய மேலதிகமாகவும் நடத்தல்.

2. அரங்க அளிக்கைகள்

   இளங் கலைஞர்களை ஊக்குவித்து வளர்க்குமாறு சமூகப்பயனுள்ள மாற்றுக் கருத்துக்களை மக்களிடையே கொண்டு செல்லும் அளிக்கைகளை நடத்தல்.

3. நூல், சஞ்சிகை வெளியீடு

   நூல், சஞ்சிகை விநியோக முறையைச் சீர்ப்படுத்தல். மாதமொரு நூல் என்ற பழைய நிலையை எட்ட முயற்சிகள் மேற்கொள்ளல். தாயகம் சஞ்சிகையின் வெளியீட்டை ஒழுங்குபடுத்தல். புது வசந்தத்தை வருடாந்தம் வெளியிடல், மாணவர் கலை இலக்கிய இதழாகப் பயில்நிலத்தை மீள வெளிக் கொணரல்.

4. நூல் விநியோகம் வாசிப்பை ஊக்குவித்தல்

   வாசகர் வட்டங்களை விரிவுபடுத்தலும் படிப்பு வட்டங்களை அமைத்தலும் சமூக விஞ்ஞானக் கல்வி வட்டச் செயற்பாடுகளை விரிவாக்கலும்.

5. ஆற்றல் மேம்படுத்தல்

   இளையோரின் முயற்சிகளை இசை, நாடகம், கவிதை, புனைகதை இலக்கிய ஆற்றல்களை விருத்தி செய்யுமாறு ஏலவே முன்னெடுக்கப்பட்டுவரும் முயற்சிகளை விரிவுபடுத்தல்.

6. ஒலி ஒளிக் கருத்துப் பரிமாறல்

   திரைப்படங்கள், குறுந்திரைச் சித்திரங்கள் போன்றவற்றை, வாய்ப்பு வசதிகட்கேற்பக் காட்டலும் கலைக் கண்காட்சிகளை நடத்தலும் பொதுக் கலந்துரையாடலும்

7. இணையத்தளம்

   தொலைவில் உள்ளோரும் நிகழ்ச்சிகளிற் பங்குபற்ற இயலாதோரும் தகவல்களைப் பெறுமாறுள்ள தற்போதைய செயற்பாடுகளை விரிவுபடுத்தல்

8. சமூகச் செயற்பாடுகள்

   ஆடம்பரமான சடங்கு சம்பிரதாயங்களின் இடத்தில் பொருள்மிக்க நேரப்பயனுள்ள சமூக நிகழ்வுகளாகச் சமூகச் சடங்குகளை நடத்தலை ஊக்குவித்து உதவல்

9. கூட்டு முயற்சிகள்

   பேரவையின் இலக்குக்களுடன் முரண்படாத பிற அமைப்புக்களுடன் ஐக்கியத்தை வலுப்படுத்தும் சமூகப்பயனுள்ள கூட்டு நிகழ்ச்சிகளை நடத்தல்

10. விழாக்கள்

    கலை இலக்கியப் பண்பாடு தொடர்பான அரங்குகளையும் பேரவையின் ஆண்டு விழாக்களையும் சகல பிரதேசங்களிலும் முன்னெடுத்தல்

## நிறைவாக

தேசிய கலை இலக்கியப் பேரவையின் தோற்றமும் வளர்ச்சியும் அதன் 35 ஆண்டு காலப் பணிகள் செய்யப்பட வேண்டியவையும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. மாநாட்டுப் பேராளர்கள் இவை பற்றி ஆக்கபுர்வமான கருத்துக்களையும் விமர்சனங்களையும் முன் வைத்து கலந்துரையாடுமாறு வேண்டுகின்றோம்.

கலந்துரையாடலைப் பயனுற முன்னெடுப்பதனூடாக மாநாட்டிலே இணையும் பேராளர்கள் பேரவையின் குறிக்கோள்களையும் இலட்சியங்களையும் மேலும் முன்னெடுத்துச் செல்லத் திடசங்கற்பம் பூணுவோராக.

நன்றி

www.padippakam.com

# நன்றிகள்

தேசிய கலை இலக்கியப் பேரவையின் 39 வது ஆண்டு நிறைவை ஒட்டி நிகழும் பேரவையின் தேசிய மாநாட்டை ஒட்டி, ஈழத்து கலை நிகழ்ச்சிகள், கருத்தரங்கு என்பனவற்றின் சிகரமாக வெளியிட்டு வைக்கப்படும் இந்த புதுவசந்தம் சிறப்பு மலர் பொலிவுடன் அமையும் வண்ணம் நேரத்துக்கு தமது படைப்புக்களையும் ஆக்கங்களையும் தந்துதவிய அனைவருக்கும் இதனை அச்சிட உதவிய குமரன் அச்சகத்தின் உரிமையாளர் திரு.குமரன் உட்பட ஊழியர்களுக்கும் இதன் வடிவமைப்பில் பெரும் பங்காற்றிய அனோஜன், விமலாதித்தன் ஆகியோருக்கும்

ஆண்டு விழா நிகழ்வில் முக்கிய நிகழ்வான கருத்தரங்கில் பங்குபற்றவுள்ள ஆய்வாளர்களுக்கும், கலை நிகழ்ச்சிகளில் பங்குபற்றவுள்ள கலைஞர்களுக்கும், இரு நாள் நிகழ்ச்சிகளிலும் கலந்துகொண்ட பார்வையாளர்களுக்கும்

பல்வேறு வகையிலும் நிதி உதவி, பொருள் உதவி, சரீர உதவி, மற்றும் பயனுள்ள ஆலோசனைகள், அனுசரணைகள் வழங்கிய சகலருக்கும்

மற்றும் தேசிய கலை இலக்கியப் பேரவையின் வளர்ச்சிக்கும் செயற்பாடுகளுக்கும் உறுதுணையான விளங்கும் சகல உறுப்பினர்கள் ஆர்வலர்கள் புத்தகப் பண்பாட்டு பேராளர்கள், புரவலர்கள், சமூக விஞ்ஞான கற்கை வட்ட நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள் உரியன.

மலர்க் குழு

புதுவசந்தம்



படிப்பகம்

www.padippakam.com



# மனித இருப்பும் மனித அடையாளமும்

சி. சிவசேகரம்

அறிமுகம்

மனித இருப்பை உறுதி செய்யவல்லதும் மனிதருக்குத் தேவையானதுமான ஒரே அடையாளம் மனித அடையாளமாகும். அனைத்துப் பிற அடையாளங்களும் இரண்டாம் பட்சமானவை.

இயற்கையின் அடிப்படையில் அமைந்த முக்கியமான அடையாளம் பால் அடையாளமாகும். வழமையானவை என்று கூறக் கூடிய அடையாளங்களுக்குமப்பால் மனித உடலமைப்பிலும் உள்ளத்தின் தன்மையிலும் வழமை எனக் கூறப்படுபவற்றிலிருந்து பிறழ்ந்த பண்புகளையுடைய மனிதரின் பிறப்புக்கும் இயற்கை இடமளிக்கின்றது. அவ் வேறுபாடுகளிற் சில சிறப்பான ஆற்றல்களையும், வேறு சில குறைபாடுகளையும், பிற வழமையானவற்றிலிருந்து வேறுபட்ட முனைப்புகளையும் சுட்டலாம்.

இவ்வாறே கூர்ப்படைந்த மனித இனத்தின் வாழிடம் உட்பட்ட புறச் சூழல்களும் மரபணு மாற்றங்களும் மனிதரது தோற்றத்திலும் ஆற்றல்களிலும் வேறுபாடுகட்கு வழி செய்துள்ளன. இவாறான அடையாள வேறுபாடுகள் இன அடையாளங்களாகக் கொள்ளப்பட்ட போதிலும், அவை ஒரே உயிரினத்துக்கு உட்பட்டனவாயும் தம்மிடையே கலப்பிற்கு இடமளிப்பனவாயும் அமைந்திருந்தன. அதன் பயனாக மனித இனம் தோற்றத்தில் வேறுபாடுடைய பல்வேறு இனப்பிரிவுகளைக் கொண்டதாக விருத்தி பெற்றது, இவற்றில் எதுவுமே மனிதர் சேர்ந்து வாழ்வதற்கு தடையானதாக இருந்ததாகக் கொள்ளமுடியாது.

மனிதரிடையே தனிப்பட்ட முறையிலும் குழுக்களாகவும் மோதல்கள் இருந்து வந்துள்ளன. அவை மனிதர் எப்போதுமே போரை விரும்புவோர் என்பதனால் நிகழவில்லை. தமது இருப்பு மிரட்டலுக்குட்படும் போது தனிமனிதரும் மனிதக் குழுக்களும் பிறருடன் மோத நேருகிறது. அவ்விதமான ஆதிநிலைக் குழுக்களிடமிருந்து நாம் இன்று வெகுதூரம் வந்து விட்டோம். இன்று எந்த மனிதரதும் மனிதக் குழுவினரதும் இருப்பிற்குப் பிற மனிதரை அழிப்பதற்கான தேவை உள்ளதாகக் கூற இயலாது. ஆயினும் கடந்த நூற்றாண்டுக் காலத்துக்குள் மனித இனம் கொடிய போர்களை அதிகரித்துவரும் அளவிற் கண்டுள்ளது. மனிதரை மனிதர் அழிப்பதற்கான பேரழிவு ஆயுதங்கள், கொடுமையிலும் ஆற்றலிலும் எண்ணிக்கையிலும் பெருகி வந்துள்ளன. மனித உற்பத்தியின் கணிசமான பகுதி வேண்டுமென்றே மனித இனத்தை அழிப்பதற்கான தேவைக்குப் பயன்படுகிறது.

பொருளாதார விருத்தியின் பேரிலும் மனிதரது தேவைகள் எனப்படுகின்றவற்றின் பேரிலும் மனிதர் தமது சுற்றாடலுக்கும் அதில் வாழும் பிற உயிரிகட்கும் ஈற்றில் மனித இனத்திற்கும் செய்கின்ற கேடுகளைப்பற்றிப் பேசுவதைத் தவிர்த்து, வேண்டுமென்றே மனிதரை மனிதர் அழிப்பதற்காக மேற்கொள்ளும் நடவடிக்கைகளை மட்டுமே கவனத்திற் கொண்டால் அடையாளம் என்பது மனிதரைப் பிரித்து வைப்பதுடன் மனிதருடன் மனிதர் மோதுவதற்கான முதன்மையான காரணமாகவும் அமைவதனைக் காணலாம்.



படிப்பகம்

www.padippakam.com

### பெரும் அடையாளங்கள்

இயற்கையின் பாற்பட்ட அடையாளங்களுள் மனிதரிடையே தோற்றத்திலும் உடலமைப்பிலும் வேறுபட்ட மனிதக் குழுக்களின் அடையாளம் முக்கியமானது. எனினும் எந்த மனிதக் குழுவும் தூய தனி இனம் என்று சொல்ல இயலாதவாறு இன்று இனப்பிரிவுகளிடையே கலப்பு ஏற்பட்டுள்ளது. எவ்வாறாயினும், நிறத்தின் அடிப்படையிலான வேறுபாடு, அடிமை வியாபாரத்தாலும் கொத்தடிமை முறையிலும் மனிதர் புலம் பெயர்க்கப்பட்ட காலத்தில் இருந்து தொடருகிறது. ஏற்றத்தாழ்வான ஒரு சமுக அமைப்பும் அதைப் பேணும் உற்பத்தி முறைகளும் உற்பத்தி உறவுகளும் மட்டுமன்றி சமுதாயத்தில் ஊறிப்போயிருந்த சில ஆதிக்கச் சிந்தனைகட்குரிய சமுக அமைப்பும் நீங்கிய பின்னும், மனித சிந்தனையில் நிறத்தின் அடிப்படையிலான வேறுபாடு நிலைத்துள்ளது. இன்றைய அடையாளஞ் சார்ந்த முரண்பாடுகளில் நிறமும் நிறஞ்சார்ந்த இன அடையாளமும் தொடர்ந்தும் முக்கியமான பங்கு வகிக்கின்றன எனலாம். ஆயினும் அவை தொடர்வதற்கான பிரதான சமுக அடிப்படை நிறமல்ல என்பதையும் இன்று உலகளாவியதாக விரிந்துள்ள ஏகாதிபத்திய முதலாளிய அரசியல் பொருளாதார முறையே என்பதையும் நாம் உணரவேண்டும்.

மனித சமுதாயம் என்பது சிறு சிறு சமுதாயப் பிரிவுகளாகவே தனது அன்றாட இருப்பைக் கொண்டு இருந்து வந்துள்ளது. எனினும் மனிதத் தேவைகளும் அவை சார்ந்த உற்பத்தியும் நுகர்வும் விரிந்து வந்தமையையொட்டிச் சமுகப்பிரிவுகளிடையே உறவாடல்களுக்கான தேவையும் வளர்ந்து வந்தது. அதே வேளை, ஒரே சமூகப் பிரிவு வளர்ந்து பெரும் நிலப்பரப்பொன்றிற் பரவி வாழுகின்ற நிலைமைகளில் அச் சமுகத்தில் மேலும் கிளைகள் உருவாகவும் சில கிளைகளிடையே உறவே இல்லாமற் போகவும் வாய்ப்புண்டு. மொழிகளின் விருத்தியை நோக்குவோமானால் சமுகங்களிடையிலான உறவின் தன்மையும் நெருக்கமும் பொது மொழியொன்றின் உருவாக்கத்திற்கு வழி செய்துள்ளமையையும், அதே வேளை, பொது மொழி ஒன்றிற்கான தேவையின்றி ஒவ்வொரு கிளை மொழியும் தனித்துவமான ஒரு விருத்தியையும் இருப்பையும் பேணுவதனையுங் காணுவோம்.

மொழி என்பது முக்கியமான ஒரு சமுக அடையாளமாக இருந்து வந்துள்ளது. அதற்கான காரணம் விளங்குவதற்கு கடினமானதல்ல. எந்தவொரு சமுதாயத்தினதும் அக உறவாடல்களில் மொழியின் பங்கு முதன்மையானது. சமுதாய விருத்தியின் போக்கில் ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளின் பயன்பாடு வெவ்வேறு துறைகள் சார்ந்தேனும் இருந்துவரக் கண்டிருக்கிறோம். எவர்க்கும் எந்த மொழி முதன்மையானதாக உள்ளதென்பதைச் சமுகத்தில் அவரது நிலையும் பங்களிப்பும் தீர்மானிக்கக் கூடும். எவ்வாறாயினும் ஒரு தேசம் அல்லது ஒரு தேசிய இனம் என்பதை அடையாளப்படுத்துவதில் ஒரு மொழிக்கு அதிக முக்கியத்துவம் இருப்பதைப் பொதுவாகக் காணலாம். ஆனாற் பல மொழிகள் அல்லது மொழிப்பிரிவுகள் சமமான முக்கியத்துடன் ஒரு சமுகத்திற் பகிரப்படுவதும் உண்டு. இதை நகர் சார்ந்த சில சமூகங்களில் மட்டுமன்றிப் பழங்குடிச் சமூகப்பிரிவுகள் ஒரு பொதுமை நோக்கி நகரும் போதும் காணக் கூடியதாயிருக்கும்.

மதம் என்பது எப்போதுமே சமூகங்களின் ஆதிக்கச் சிந்தனையாயிருந்ததாகக் கூற முடியாது. மனிதரின் அன்றாட வாழ்விலும் பண்பாட்டிலும் மத நம்பிக்கைகளும் மதஞ்சார்ந்த சடங்குகளும் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் கொண்டுள்ளன. மதங்களின் முக்கியத்துவம் முதலாளித்துவத்தின் முக்கியத்தையொட்டிக் குறைவதற்கான சாத்தியப்பாடுகள் அதிகமாயிருந்த போதும் மதம் என்பதை ஒரு அடையாளமாக வலியுறுத்துவதற்குச் சமுக வாழ்வில் மதம் எவ்வளவு தூரம் பின்பற்றப்படுகிறது என்பது முக்கியமானதல்ல. ஒரு மதத் தீவிரக் கொள்கையை வலியுறுத்துகிறவர் அம்மதத்தை முறையாகப் பின்பற்றுபவராக இருக்கத் தேவையில்லை என்பதை நாம் காண இயலும். எனினும் ஒருவரின் அன்றாட வாழ்வுடன் குறிப்பிடத்தக்க உறவே இன்றி மதம் என்பது அவரது சமுக அடையாளமாக அமையலாம். சில சூழ்நிலைகளிற் பண்பாடு உட்பட பிற அடையாளங்களின் கூறுகளின் துணையுடன் ஒரு தேசிய இன அடையாளமாகவும் மதம் இடம்பெறலாம்.

> ஏற்றத்தாழ்வான ஒரு சமுக அமைப்பும் அதைப் பேணும் உற்பத்தி முறைகளும் உற்பத்தி உறவுகளும் மட்டுமன்றி சமுதாயத்தில் ஊறிப்போயிருந்த சில ஆதிக்கச் சிந்தனைகட்குரிய சமுக அமைப்பும் நீங்கிய பின்னும், மனித சிந்தனையில் நிறத்தின் அடிப்படையிலான வேறுபாடு நிலைத்துள்ளது.

சாதி என்பது குறிப்பாகத் தென்னாசியாவின் நிலவுடைமைச் சமுகத்தின் வர்க்க அடையாளத்தின் நீட்சியாகவுள்ளது. நிலவுடையச் சமுதாய உற்பத்தியுறவுகள் தொடர்கிற சூழல்களில் அது வலுவான ஒரு வர்க்க அடையாளமாக இருந்தது. நிலவுடமை உற்பத்தி உறவுகள் பெருமளவும் தளர்ந்தோ அழிந்தோ போன பிறகும் நிலவுடைமைச் சிந்தனையின் நீட்சியாகச் சாதியச் சிந்தனைகள் நிலைக்கின்றன. அகமண முறையின் மூலம் நிலைபெற்று வந்த சாதி அடையாளங்கள் இன்னமும் நகரச் சூழல்களில் அகமண முறையின் தொடர்ச்சி மூலம் பேணப் படுவதையும் நாம் காணுகிறோம்.

பண்பாடு என்பது முற்குறிப்பிட்ட அடையாளங்கள் அனைத்தையும் விட வேகமாக மாறி வருவதாகும். எனினும் பண்பாட்டை முன்னிறுத்திச் சமூகங்களின் தனித்துவத்தையும் அடையாளச் சிறப்பையும் வலியுறுத்துவோர் தமது பண்பாட்டில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைப் பற்றிக் கவனிக்க விரும்புவதில்லை. மனிதரின் சமுக இருப்பிற்கும் நடைமுறைக்கும் முக்கியமற்ற பண்பாட்டுக் கூறுகள் மிகையாக வலியுறுத்தப்படுவது பண்பாட்டைப் பேணும் நோக்கிலன்றி அடையாளத்தை வலியுறுத்தும் நோக்கிலேயே என்பது நாம் அவதானிக்கக் கூடியதொன்றாகும்.



படிப்பகம்

www.padippakam.com

தேசியம் என்பது மனிதரில் இயல்பான இருப்புக்குரிய ஒரு அடையாளமல்ல. தேசம் என்ற கருத்தாக்கமே வரலாற்றில் மிக அண்மையானது.

பண்பாட்டை மேலைத்தேய-கீழைத்தேய என்று பிரித்துப் பேசுகிற இடத்தில் சமூக உற்பத்தி முறையும் உற்பத்தி உறவுகளும் மாறுமிடத்தும் பண்பாடு எவ்வளவு தூரம் மாறுகிறது என்பது தவறவிடப்படுகிறது. இன்று மேலைத்தேயப் பண்பாடு எனப்படுவது முதலாளியத்தின் விளைபொருளாகும். நகர் சார்ந்த பழைய கிரேக்கச் சிந்தனையின் தொடர்ச்சியான பண்பாடாக அதைக் கொள்ள இயலாது என்பதுடன் ஐரோப்பிய நிலவுடமைச் சமூகத்தில் இருந்து உருப்பெற்ற முதலாளியப் பண்பாடு இன்று முதலாளிய வர்க்கத்தின் விருத்தி நிலையையொட்டி மேலும் பாரிய மாற்றங்கட்குள்ளாகி வந்துள்ளது.

இந்தியப் பண்பாட்டுக்குரியன என்று மெச்சப்படும் பல பண்பாட்டம்சங்களின் வேர்கள் இந்தியத் துணைக்கண்டத்திற்கு வெளியிலிருந்து வந்தவையே. எனவே சீனப் பண்பாடென்பதும் பிற ஆசியப் பண்பாடுகளெனக் கூறப்படுவனவும் ஒவ்வொன்றும் தனித்துவமான ஒரு பண்பாட்டிலிருந்து உருவானவை என்பதை விடப் பல்வேறு பண்பாடுகளின் தாக்கத்தால் உருவானவை என்பது கூடப் பொருந்தும்.

எனவே மனிதர் தம்முடைய தனித்துவமான அடையாளங்கள் என்று கூறித் தம்முட் பிளவுபட்டுப் போரிடும் அளவிற்குத் தூண்டும் அடையாளங்களில் எதுவுமே தூயதல்ல. எதவும் முற்றிலும் தனித்துவமானது என்பதும் சரியல்ல. அடையாளங்களின் பல்வேறு கூறுகளின் சேர்க்கையில் தனித்துவம் இருக்கலாமே ஒழிய, ஒவ்வொரு அடையாளக் கூறும் பிற அடையாளங்கட்குரிய பலருடன் பகிரப்படுவது என நாம் காணலாம்.

மனிதரை இன்று அதிகம் பிளவு படுத்தி இருக்கிற அடையாளங்களில் மதமும் தேசியமும் முக்கியமானவையாகத் தெரிகின்றன. மதங்களின் பேரால் மக்கள் மோதுகின்ற வேளையில் மதத் தலைவர்கள் எனப்படுவோர் எல்லா மதங்களும் ஒன்றையே போதிக்கின்றன என்பதைச் சொல்லத் தவறுவதில்லை. அதைவிடப் பொய்யான கூற்றுக்கள் அதிகம் இருக்க முடியாது. ஏனெனில் மாதங்களுக்குப் பொதுவானவை என்று கூறக்கூடிய எதுவும் இருப்பின், அது, மனித நேயத்திற்குள் அல்லது மனிதரின் சமுதாய இருப்பிற்குத் தேவையான அற ஒழுக்க விதிகளுக்குள் அடங்கும். எனவே அவ்வாறான பொதுவான பண்புகளைப் பேண மதங்கள் தேவையில்லை. மனிதர் மதங்களை நாடுவது அவ்வாறானதொரு தேவை கருதியும் அல்ல. அல்லல் மிக்க வாழ்வில் அல்லல்களின் காரணங்களைக் கண்டறிந்து தீர்ப்பதற்கு வழிகாட்டுவதற்கு மாறாக மனிதர்க்கு ஆறுதல் கூறுவதுடன் தற்காலிகமான மனநிம்மதியை மதம் வழங்குகிறது. எனவே வாழ்க்கை அல்லல்மிக்கதாக உள்ளவும் தனிப்பட்ட முறையிற் பலருக்கு மதம் எனும் பற்றுக்கோடு தேவைப்படுகிறது.

ஆனால் தனிமனித நம்பிக்கை என்ற எல்லையைத் தாண்டி மனிதரை வேறுபடுத்திப் பிரிக்கும் அடையாளமாக அது வலியுறுத்தப்படும் போது, அது ஆபத்தான சக்தியாகிறது. இவ்விடத்து அரசியற்படுத்தப்பட்ட மதங்களும் அவற்றின் தீவிர வடிவங்களும் சமூகக்கேடானவையாகின்றன. எந்தவொரு மதத்தையும் அவ்வாறானதொரு நிலைக்குத் தள்ளிவிட இயலும் என்பதை நாம் அண்மையில் கண்டுள்ளோம்.

தேசியம் என்பது மனிதரில் இயல்பான இருப்புக்குரிய ஒரு அடையாளமல்ல. தேசம் என்ற கருத்தாக்கமே வரலாற்றில் மிக அண்மையானது. அரசு என்பதையும் நாடு என்பதையும் தேசம் என்று அடையாளப்படுத்துவதற்கான தேவை முதலாளியத்திற்கு இருந்தது. அதன் பயனாகப் பல தேசிய இனங்களின் அடையாளங்கள் அழிக்கப்பட்டன. முக்கியமாகப், பல மொழிகள் வழக்கொழிந்தன அல்லது வழக்கொழிக்கப்பட்டன. இவ்வாறான வழக்கொழிப்புப் பண்பாட்டையும் பாதித்துள்ளது. மனிதக் குழுக்களின் அடையாளங்களின் சிதைவு முதலாளியத்தின் தேச எல்லைகளுக்குள் நின்றுவிடாது அதற்கு வெளியிலும் நடந்துள்ளதை நாம் அறிவோம்.

எனவே தேசியம் என்பது வெறுமனே குறிப்பிட்ட ஒரு சமூக-அரசியல்-பொருளாதாரக் கட்டமைப்பைப் பேணுவதற்கும் அப்பால் பிற தேசங்களை ஆதிக்கத்துக்குட்படுத்தவும் அழிக்கவும் முற்படுவதை நாம் காணுகின்றோம். தேசத்தினதும் தேசத்தின் நலன்களினதும் பாதுகாப்பின் பெயராற் கொடிய போர்கள் நடத்தப்படுகின்றன. உலகின் ஒடுக்கப்பட்ட மக்கள் தேசியத்தின் பேரால் தம்முட் போரிடும்விதமாக இன்று தேசியம் என்பது பின்தங்கிய முதலாளிய உற்பத்தியுடைய நாடுகளைப் பிளவுபடுத்தவும் பயன்படுகிறது. எனினும் இத் தேசங்களினதும் தேசிய இனங்களதும் மோதல்கள் பெருமுதலாளியத்திற்கு மட்டுமே நன்மை பயக்கின்றன. உண்மையில் இப் போர்களுக்குப் பின்னல் உள்ள ஊக்குவிப்பாளர்கள் பன்னாட்டுக் கம்பனிகளாக இருப்பதும் அவர்களுக்கும் அவர்களுடைய மூலதனத்திற்கும் ஒரு தேசம் இல்லை என்பதும் கவனிக்கத்தக்கன. அவர்கள் வலிய தேச அரசுகளுடன் தம்மை அடையாளப்படுத்தி வலிமை குறைந்த தேச அரசுகளையும் தேசங்களையும் தேசிய இனங்களையும் பிரித்தும் பிளவுபடுத்தியும் போரில் ஆழ்த்தியும் தேவையானபோது அவற்றின் மீது போர் தொடுத்தும் அடக்கியாள முற்படுகின்றனர்.

### சிறு அடையாளங்கள்

இவை மனித சமூகம் ஒன்றின் முழுமைக்கோ அதன் ஒரு தனித்துவமான சமூக-பொருளாதார-பண்பாட்டுக் கூறாக இயங்கக் கூடிய ஒரு பகுதிக்கோ உரிய அடையாளங்களுக்குள் காணப்படும் இயற்கையின் பிறழ்வுகள் எனக் கூறப்படுவனவும் தனிமனிதத் தெரிவுகளும் சார்ந்த சிறுபான்மை அடையாளங்களை இவ்வாறு கூறலாம். இவ்வாறான அடையாளமுடையோரைச் சிலர் விளிம்பு நிலை மாந்தர் என்பர். எனினும் இங்கு கருதப்படும் அடையாளங்கள் ஒவ்வொன்றும் மனிதரை விளிம்பு நிலையில் வைத்திருப்பதாகக் கூறுவது கடினம். எவ்வாறாயினும் இந்த வித அடையாளங்களால் மனிதர் பாரபட்சங்களுக்கு உட்பட இடமுண்டு என்பதை மறுக்க முடியாது

சுயபாற்காமம் என்பது குற்றமாகக் கருதப்பட்டுத் தண்டனை வழங்கப்பட்ட பல நாடுகளில் இன்று அது ஏற்கப்பட்ட ஒரு விடயமாகிவிடினும் சமூகத்தில் உள்ள மனத்தடைகள் காரணமான பாரபட்சம் தொடர்வதை நாம் காணுகின்றோம்.

உடலமைப்பிலும் உளவியலிலும் வேறுபாடு உடையோருடன் சமூகம் பொதுவாகப் பகைமையுடனேயே



படிப்பகம்

www.padippakam.com



நடக்கின்றது. வலதுகுறைந்தவர்கள் விடயத்தில் தனிப்பட்ட முறையில் உறவையோ நட்பையோ கருதி மனிதர் பரிவுடனும் மரியாதையுடனும் நடந்தாலும் அவர்களுக்கு சம வாய்ப்பளிப்பதற்கு எல்லாச் சமூகங்களும் முன்வருவதில்லை. அவர்களுக்கான சலுகை வழங்கப்படும் இடங்களிலும் சமத்துவம் உள்ளதா என்ற கேள்வியுள்ளது. முடவர், செவிடர், குருடர், பைத்தியகாரர் போன்ற சொற்களைத் தவிர்ப்பது நல்ல நோக்கமுடையதாயினும் உடல், உளக் குறைபாடுகள் பற்றிய மனத்தடைகளை நீக்கப் பேர்மாற்றம் போதியதல்ல.

இடதுகைப்பழக்கமுடையோரும் எல்லாச் சமூகங்களிலும் சமமாக நடத்தப்படுவதில்லை. பொதுப்பாவனைக்கான கருவிகள் முதல், கதவுகள் வரையிலான பலவும் வலது கைப் பழக்கக்காரருக்கானவை என்பதை நாம் பெருமளவிற் கவனிப்பதில்லை. மேற்குறிப்பிட்ட உடல் உள நிலை தொடர்பான சிறுபான்மை அடையாளங்கள் போகச், சமூக நிர்ப்பந்தங்கள் உருவாக்கும் விதவை, விபசாரி, சில்லறைத் திருடர் போன்றோர், குறிப்பாகப் பின்தங்கிய சமூகங்களில், மிகவும் கேவலமாகக் கருதவும் நடத்தவும் படுவதை நாம் அறிவோம். இன்று பெருந்தொகையான முதியோரும் இவ்வகைக்குள் வருகின்றனர். பெரும் அடையாளங்களின் பேரில் சமூகப் பிரிவினராக ஒன்றுபட்டுப் போராடக் கூடிய அளவிற்கு சிறு அடையாளங்களின் அடிப்படையில் போராடுவதற்கு இயலாவிடினும் சமூக விழிப்புணர்வு கூடுதலாக உள்ள சூழல்களில் அவர்களால் தமது உரிமைகட்காக போராட முடிகிறது. எனினும் அடிப்படையான சமூக மாற்றம் என வரும் போதும் பிற நியாயமான போராட்டங்களின் போதும் அவர்களுடைய தேவைகளைக் கணிப்பில் எடுப்பதன் மூலம் உரிமைப் போராட்டங்கள் வலிமை பெறுகின்றன என்பது கவனத்திற்குரியது.

## மனித இருப்பிற்கான போராட்டம்

மனித குலத்தின் நலமானதும் நிலையானதுமான இருப்பு, மனித சமுதாயம் நீதியானதாயும் சமத்துவமானதாயும் அமையும் போதே இயலும். அடையாள அடிப்படையிலான வேறுபாடுகள் ஏற்றத்தாழ்வாகவும் அடக்கலையும் நசுக்கலையும், சுரண்டலையும் உள்ளடக்கியனவாயும் உள்ளவும் அடையாள அடிப்படையிலான பகைமை தவிர்க்க இயலாதது.

எனவே, ஒரு அதிகார வர்க்கத்தினது நிலைப்பிற்காகப் பல மனிதரைச் சில மனிதர் சுரண்டுவதை அடிப்படையாகக் கொண்டிருக்கச் செய்கிற வர்க்க சமூகத்தின் உற்பத்தி உறவுகள் சார்ந்த முரண்பாடு மனித இருப்பின் அடிப்படையான முரண்பாடாகவும் பகை முரண்பாடாகவும் இருந்து வருகின்றது. அவ்வாறான சுரண்டல் அமைப்பின் நீடிப்பிற்காக முதலாளியம் பிற சமூக முரண்பாடுகளையும் தனக்கேற்பப் பயன்படுத்தி வந்துள்ளது. குறிப்பாக, முதலாளியம், நவீன ஏகாதிபத்தியமாகி உலக மயமாக்கல் என்ற பேரில் உலகு முழுவதையும் சில பெரு முதலாளியக் குழுக்களின் ஆதிக்கத்தின் கீழ் வைத்திருப்பதற்காக தேசியம் மதம் இனத்துவ அடையாளங்கள் ஆகிய யாவற்றையும் பயன்படுத்தி ஒடுக்கப்பட்ட மக்களைப் பிளவுபடுத்துகிறது.

அது மட்டுமின்றிப் பின்நவீனத்துவத்தின் மூலம் அதன் தொடர்ச்சியாக உருவாக்கப்பட்டு வரும் புதிய கோட்பாடுகள் மூலமும் சிறு அடையாளங்கள் எனப்படுபவனவற்றை மிகைப்பட வலியுறுத்திப் பெரிய பிரச்சினையிலிருந்து கவனத்தைத் திருப்பவும் முனைகிறது. இன்று நவகொலனிய முறை மூலம் ஏகாதிபத்தியம் பின்தங்கிய முதலாளிய நாடுகளின் அரசுகளைக் கட்டுப்படுத்தி அவற்றின் மூலம் மக்களின் எழுச்சிகளைக் கட்டுப்படுத்துவது போக, என்.ஜி.ஒக்கள் எனப்படும் "தன்னார்வக்" குழுக்கள் மூலமும் மக்களின் ஐக்கியப்பட்ட எழுச்சிக்குக் குழி பறிக்கிறது.

இந்த நிலையில் மக்களின் நலன் மீதும் மானிடத்தின் நிலைப்பின் மீதும் நலமான இருப்பின் மீதும் அக்கறையுடையவர்கள் செய்யக்கூடியது என்ன ?

அடிப்படையான முரண்பாட்டை விட மற்றவற்றை மாயை என்று புறக்கணிக்க இயலுமா?

அடிப்படையான முரண்பாடான வர்க்க முரண்பாடு தீர்ந்தாற் பிற யாவும் தாமாகத் தீருமென ஆறுதல் சொல்ல இயலுமா?

அவ்வாறான அக்கறையின்மை மனிதரிடையே அடையாளஞ்சார்ந்த பகைமையையும் அதன் விளைவான மோதல்களும் வலுப்பதற்கே உதவும். எனவே ஆண்-பெண் வேறுபாடு தவிர்ந்த சகல அடையாள வேறுபாடுகளும் மனித இனத்திற்குத் தேவையற்றவை என்பதை உணர்வதுடன் ஆண்-பெண் வேறுபாடு என்பது பாகுபாட்டுக்கும் ஆண்களின் மேலாதிக்கத்திற்கும் வழி செய்வது மானுட நலனுக்குக் கேடானது என்பதை ஏற்பதும் முக்கியமானது.

எனவே தான் எந்த அடையாளத்தின் அடிப்படையிலான முரண்பாடுகளைச் சுமூகமாகத் தீர்க்கக் கூடிய அளவிற்கு அவற்றை நீதி நியாயத்தின் அடிப்படையில் தீர்ப்பதற்கான தேவை நம் முன் உள்ளது. நீதி நியாயங்கள் மறுக்கப்படும் போது நிகழும் போராட்டங்கள் சரியானவை என்பதுடன் நீதிக்கான பிற போராட்டங்களுடன் ஒவ்வொன்றும் உறவு படுத்தப்பட்டு வலுப்படுத்தப்படுவதும் மனித இனத்தின் இருப்பிற்கு அவசியமானது.

மனித அடையாள வேறுபாடுகள் தம்மளவிற் கேடானவை அல்ல. அவை நட்பான முரண்பாடுகளாக அமையுமாறு கவனித்துக் கொள்வது எவ்வாறு என்பது தான் மனித இனத்தை எதிர்நோக்கும் பெரிய சவாலாகும். ■



படிப்பகம்

www.padippakam.com




# மானிட இருப்பை அச்சுறுத்தும் இலாப வேட்கை

சி.தில்லைநாதன்

மனிதன் ஒரு சமூகப் பிராணி என்று அரிஸ்டோட்டல் கூறினார். ஏனைய விலங்குகளைப் போல் அன்றி, விரயத்தை தவிர்த்து மேலதிகமாக உள்ளவற்றைப் பகிர்ந்து கொள்ளவும் நாளைய தேவை கருதிப் பாதுகாத்து வைக்கவும் பயிர் விளைக்கவும் மறு நடவு செய்யவும் மனிதன் பழகிக்கொண்டுள்ளான். தான் பட்டனவற்றிலிருந்து படித்துக்கொள்ளும் ஆற்றலும் அவனிடம் உண்டு. சமூக அக்கறையும் உலகம் பயன்பட வாழவேண்டும் என்ற உணர்வும் பகுத்துண்டு பல்லுயிரோம்பும் பண்பும் வளர்ந்தவிடத்து மனித நாகரீகம் வளம்பெற்றது. சமூகத்தைச் சார்ந்தன்றி வாழமுடியாத மனிதன் சுயநலம் மிகுந்தவனாகச் சமூகத்தைச் சுரண்ட முற்படுமிடத்து அனர்த்தங்கள் தோன்றுகின்றன. மனிதன் தான் வாழும் சமூகத்தைப் பற்றிய விளக்கமும் அக்கறையும் அருகியவனாகவும், தான் வாழுகின்ற சூழலை மாசுபடாது பாதுகாக்கத் தவறுபவனாகவும், தன் மானிட விழுமியங்களைத் தான் வளர்த்த தொழில் நுட்பம் விஞ்சிவிடாது கட்டுப்படுத்த முடியாதவனாகவும் ஆவது எவ்வாறு என்பது எண்ணிப்பார்க்கப்பட வேண்டிய விடயம்.

பொருளாதார வாழ்வில் தனியார் முதலாளித்துவம் ஆதிக்கம் செலுத்துகின்ற சூழ்நிலையில் இலாப வேட்கையே பிரதான உந்து சக்தியாகக் கருதப்படுகிறது. போடுகின்ற முதலுக்கும் உற்பத்திக்கான பங்களிப்புக்கும் ஈடுசெய்யுமளவுக்கு நியாயமான இலாபத்தை எதிர்பார்ப்பதற்குச் சமூக அடிப்படையிலோ பொருளியல் அடிப்படையிலோ தார்மீக அடிப்படையிலோ மறுப்புத் தெரிவித்தல் சாலாது. ஆனால், அவ்வடிப்படைகளில் நியாயம் கற்பிக்க இயலாத அளவுக்கு "இலாபம் இலாபத்துக்காகவே" என்ற ஆவேசத்தில் முனைந்து நிற்பது மூர்க்கத்தனத்தை வளர்த்து மானிடப் பண்புகளை மழுங்கடிக்கக் கூடும்.

"ஊருஞ் சதமல்ல உற்றார் சதமல்ல.... தேசத்திலே யாருஞ் சதமல்ல நின் தாள் சதம் கச்சி ஏகம்பனே" என்று பட்டினத்தார் பாடினார். வேறு எதுவும் சதமல்ல இலாபம் ஒன்றே சதம் என்று கருதப்படுகிறபோது உற்பத்திக்கு கூடுதலான பங்களிப்பினை வழங்கும் தொழிலாளர்கள் உற்பத்திச் செலவினங்கள் என்ற தலைப்பின் கீழ் உற்பத்திக்கு உபயோகிக்கப்படும் வெறும் கருவிகளைப்போல் நோக்கப்படுகின்றனர். உற்பத்திச் செலவினை இயன்றவரை குறைப்பதும் இலாபத்தை அதிகரிப்பதற்கான உபாயமாகும். அவ்வாறு இலாபத்தை அதிகரிக்கும் வேட்கையால் உழைக்கும் மக்கள் கூலிகளாக அடிமைகொள்ளப்படுகின்றனர். ஆபிரிக்கக் கறுப்பின மக்கள் மனிதர்களாகவன்றி மலிவான உற்பத்திக் கருவிகளாகச் செல்வந்தர்களால் விலைகொடுத்து வாங்கப்பட்டனர். பிஜித் தீவின் கரும்புத் தோட்டங்களுக்குக் கூலிகளாகக் கொண்டு செல்லப்பட்டவர்களின் "செக்கு மாடுகள் போலுழைத்து ஏங்கிய" அவலங்களை மகாகவி பாரதி பாடியிருக்கிறார். எங்கள் தேசத்துத் தேயிலைத் தோட்டங்களுக்கும் கூலிவேலைக்கு மருட்டியும் விரட்டியும் கொண்டுவரப்பட்டவர்கள் சுரண டப்படும் கொடுமை தலைமுறை தலைமுறையாகத் தொடர்கிறது. இன்று பல தொழில் நிலையங்களில் ஏழைகள் முடக்கப்பட்டு இலாபம் பெருக்கும் சாதனங்களாக உறிஞ்ச ப்படுகின்றனர்.

"நடவு செய்த தோழர் கூலி நாலணாவை ஏற்பதும் உடலுழைப்பிலாத செல்வர் உலகையாண்டுலாவலும்" ஒவ்வாதென்ற பாரதிதாசன் அவ் வழக்கத்தை மிதித்திட வழிதேடினார். ஆனால், இலாப வேட்கை தொடர்வதை உறுதிசெய்யும் வகையில் அதனை நியாயப்படுத்தும் ஒழுக்கக் கோட்பாடுகள்கூட முன்வைக்கப்பட்டுள்ளன. கூலியைக் குறைத்துக் கொடுப்பது நல்லதென்றும் கூடக்கொடுத்தால் உபரி வருமானத்தை தேவையில்லாத வழிகளில் செலவழித்துத் தீய பழக்க வழக்கங்களுக்கு அடிமைப்பட்டுவிடுவார்கள் என்றும் கூறப்பட்டது. அன்றாடங் காய்ச்சிகளாகக் கூலிகளை வைத்திருப்பதே உசிதமானதாம். தேவையின் நிர்ப்பந்தப் பதைப்பு அற்றவிடத்துக் குளிரையும் வெயிலையும் நோய்நொடிகளையும் பாராது கடுமையாக உழைக்க மாட்டார்களாம். அவர்கள் அடங்கி ஆறுதல்பெற வைப்பதற்குக் கடவுளின் விதி, கர்மவினை என்பன குறித்தும் பேசப்படுகிறது. தீவினை அறுத்து ஈடேற அவைகள் உதவுமாம்.

ஏழை மக்கள் துன்பத்தை மறந்து குதூகலத்திலே திளைக்க உதவும் கலை இலக்கியங்களும் சந்தையைப் பிடித்து இலாபத்தைப் பெருக்கிவருகின்றன. திரைப்படத் துறை



படிப்பகம்

www.padippakam.com

நல்லதோர் உதாரணமாகும். தமிழர் சமூக வாழ்விலும் அரசியலிலும் அதீத செல்வாக்குச் செலுத்திவரும் சினிமா பயனற்ற கற்பனைகளிலும் பகற் கனவுகளிலும் பெருவாரியான மக்களை மயக்கிவைத்திருக்கிறது. அதிலே, காற்றிலேறி விண்ணையும் சாடும் வீரம், மதி மயக்கும் காதல், பயங்கரக் கவர்ச்சி என்பவை மட்டுமன்றி, "நான் ஆணையிட்டால் அது நடந்துவிட்டால் ஏழைகள் வேதனைப்பட மாட்டார்" என்பது போன்ற பாமரரை ஈர்க்கும் பிரகடனங்களும் மலிந்திருக்கும். எழுந்தமானத்துக்குச் சொல்லப்படுகிற நியாயம் என்னவென்றால், பகல் முழுக்கக் கஷ்டப்படுகின்றவர்கள் மாலையில் சிறுபொழுதாவது மகிழ்ந்திருக்க வசதிசெய்யும் கைங்கரியத்தை நிறைவேற்றுகிறோம் என்பதாகும். ஆனால், கஷ்டப்படுகிறவர்கள் தங்களுடைய அவலங்களையும் அவற்றுக்கான காரணங்களையும் நினைத்துப் பார்க்கவோ விளங்கிக்கொள்ளவோ விடாதிருப்பது கொள்ளை இலாபம் அடிப்பவர்களுக்கு அனுகூலமானதாயிருக்கும் என்பது சொல்லப்படுவதில்லை. இச்சந்தர்ப்பத்தில்,

"பாமர மக்கள் மகிழ்ந்திட வைத்தல்
படங்களின் நோக்கமெனின்,
நாமம் குழைத்திட வோஅறி வாளர்கள்
நற்கலை கண்டார்கள்?"

என்று மடமையை வளர்க்கும் அவ் வஞ்சகத்தைப் பாரதிதாசன் சாடியமை எண்ணிப் பார்க்கத்தக்கது.

இவ்வாறு அறிவாளர்களின் கண்டுபிடிப்புக்கள் பல அவர்கள் எதிர்பார்த்ததற்கு மாறாக, பல்தேசக் கம்பெனிகளதும் கூட்டுத்தாபனங்களினதும் கைகளில் அவற்றின் இலாபத்தைப் பெருக்கப் பயன்படுத்தப்படும் அளவுக்குப் பரந்த மானிடத்தின் நன்மைக்குப் பயன்படக் காணோம். அக் கண்டுபிடிப்புக்களின் வழிப்படும் உற்பத்திப் பொருட்களைப் பெருமளவில் தயாரிக்கவும் இலாபகரமாக விற்பனை செய்யவும் மேற்கொள்ளப்படுகின்ற வழிமுறைகளும் மானிட நலனுக்கு ஊறு விளைப்பனவாக உள்ளன. தொழில்நுட்ப, மருத்துவ, ஆயுத உற்பத்தித் துறைகளில் அதைத் துலாம்பரமாகக் காணலாம். பொருளாதார, எரிபொருள், உணவு, சுற்றுலா, கல்வி முதலான துறைகளிலும் எல்லைமீறி இலாபம் சம்பாதிக்கும் எத்தனங்கள் மானிட நலனுக்குப் பங்கம் விளைவிப்பனவாக உள்ளன. சூழல் மாசடைதல், காலநிலை மாற்றம், புவி வெப்பமடைதல் முதலானவை குறித்து நிறையப் பேசப்படுகிறது.

உற்பத்தியினையும் இலாபத்தையும் எல்லையின்றிப் பெருக்குவதற்காக நுகர்வுக் கலாசாரமும் தேவை தீர்ந்ததும் தூக்கி எறிந்துவிடும் கலாசாரமும் மிதக்கும் (நிலைத்திராத) விழுமியங்களும் வெகு வித்தாரமாக வளர்க்கப்படுகின்றன. பண்டங்களின் நுகர்வு உண்மையான தேவைகளின் அடிப்படையிலன்றிப் பகற்கனவுகளால் நிர்ணயிக்கப்படும் நிலை வளர்ந்து வருகிறது. வெகுசன ஊடகங்கள் பகற்கனவுகளை வளர்க்கின்றன. அவ்வூடகங்களில் முக்கிய இடம்பெறும் விளம்பரங்கள் மனங்கவரும் வகையில் கெட்டித்தனமாக திட்டமிடப்படுகின்றன. ஒருவருடைய சமூக அந்தஸ்து உடல்வலுவினாலோ ஒழுக்கத்தினாலோ கல்வியினாலோ அன்றி, நுகரும் தோரணையிலே அடையாளம் காணப்படும் தன்மை வளர்கிறது. மற்றவர்களிடமிருந்து தங்களை வேறுபடுத்திக் காட்டும் நவீன நடையுடைபாவனைகளை நாடும் போக்கு அதிகரித்து வருகிறது. இஷ்டம்போலத் தேவை முடிந்ததும் கைவிடும் உறவுமுறையினை ஒரு ஆடம்பரமாக மதிக்கும் மனப்பான்மை முன்னெடுக்கப்படுகிறது. இப்படியான நுகர்வோர் சமூகம் நுகர்வோருக்கு வலுவூட்டுவதாகும் என்று சிலர் வாதிட்டாலும், நடைமுறையில் அது முதலாளித்துவ விழுமியங்களுக்கு அழுத்தம் தந்து, வறியமக்களிடமிருந்து செல்வந்தர்களைப் பிரிக்கும் இடைவெளியை அதிகரிக்கச் செய்வதாகவே உள்ளது. அப்படியான நிலையில் மேலாதிக்கம் பெறுவது நுகர்வுச்சார்புவாதமேயன்றி நுகர்வோர் அல்லர்.

இன்று மேலெடுக்கப்படும் உலகமயமாக்கலும் பெருமுதலாளித்துவத்தின் சந்தையை எல்லைகடந்து பெருக்கும் வேட்கையை அடிப்படையாகக் கொண்டதுவே. பன்முகத்தன்மை கொண்டதாக உலகம் உள்ளது. அவ்வகையுறு தன்மையே தன் பேரழகென்றும் பலமென்றும் போற்றப்படுகிறது. ஆனால் பல்தேச முதலாளித்துவத்தை பொறுத்தவரை வேறுபாடுகளை மிதித்து மேவுதல் சர்வலோக மேலாதிக்கம் கைகூடுவதை இலகுவானதாக்கும். அந்தக் கைங்கரியத்தை நவீன தொடர்பாடற் சாதனங்கள் வெகு துல்லியமாகச் செய்துவருகின்றன. ஓரங்கட்டப்பட்டுள்ள பெரும்பாலான மக்களின் கவனம் அவர்களுடைய பொருளாதாரப் பிரச்சனைகளிலும் வறுமையிலிருந்தும் திசைதிருப்பப்பட்டு இனத்துவ முரண்பாடுகளிலும் ஆள்புல ஒருமைப்பாடு, மக்களின் இறைமை போன்றவற்றிலும் குவிமையப்படுத்தப்படுகிறது. வர்க்க அரசியலை மறைக்கும் வகையில் இனத்துவ அரசியல் மேலெடுக்கப்படுவது வெள்ளிடைமலை.

மானிட இருப்பிலோ இருப்பிடத்திலோ எதிர்காலத்திலோ கரிசனை இகந்த, இலாபம் பெருக்குவதையே குறியாகக் கொண்ட எத்தனங்களின் தாற்பரியங்களைக் கவனத்துக்கெடுக்கையில், இங்கிலாந்திலே தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டபோது மனிதத்தை மறந்த இலாப நோக்கு மேலோங்கியமையின் விளைவுகள் பற்றி ஒரு நூலில் (J.L. Hammond and Barbara Hammond, Rise of Modern Industry, London, 1937) கூறப்பட்ட சில விடயங்கள் சிந்தனைக்கு உரியவையாகும். இங்கிலாந்து இலாபங்களை வேண்டியது, இலாபங்களைப் பெற்றுக்கொண்டது. எல்லாமே இலாபத்தை நோக்கித் திரும்பின. நகரங்கள் தங்கள் இலாபகரமான அழுக்கையும் தங்கள் இலாபகரமான புகையையும் தங்கள் இலாபகரமான அசுத்த சேரிகளையும் தங்கள் இலாபகரமான சீர்குலைவையும் தங்கள் இலாபகரமான அறியாமையினையும் தங்கள் இலாபகரமான கையறுநிலையையும் பெற்றுக்கொண்டன.... அழகும் மகிழ்வும் ஓய்வும் கற்கையும் நாகரீகமான பார்வையும் பழக்கமும் புதிய சூழலில் மனிதனுக்கு கிட்டாமல் போயின. ■

> உற்பத்தியினையும் இலாபத்தையும் எல்லையின்றிப் பெருக்குவதற்காக நுகர்வுக் கலாசாரமும் தேவை தீர்ந்ததும் தூக்கி எறிந்துவிடும் கலாசாரமும் மிதக்கும் (நிலைத்திராத) விழுமியங்களும் வெகு வித்தாரமாக வளர்க்கப்படுகின்றன.



படிப்பகம்

www.padippakam.com




# நண்பர்களும் எதிரிகளும்: உலக அரசியலின் திசைவழிகளும் தமிழ் மக்களின் எதிர்காலமும்

தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

## அறிமுகம்

சர்வதேச அரசியலோ இராஜதந்திர உறவுகளோ வெறும் கூட்டல் கழித்தல் கணக்கல்ல. அவை எந்தவொரு பொதுச் சூத்திரத்தின் அடிப்படையிலும் விளங்கிக்கொள்ளக் கூடியனவல்ல. அவை தேசநலன்களாலும் தந்திரோபாய, மூலோபாயத் தேவைகளின் அடிப்படையிலும் வழிநடத்தப்படுபவை. ஜெனீவாவில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப் பட்ட தீர்மானம் தமிழ் மக்களுக்கு ஆதரவானதெனவும் அமெரிக்கா, இந்தியா உள்ளிட்ட சர்வதேச சமூகம் இப்போது தமிழ் மக்களுக்கு தீர்வைப் பெற்றுத்தருவதற்காக முன்னெப்போதையும் விட மிகுந்த முனைப்புடன் அக்கறையுடன் செயற்படுகின்றது போன்றதொரு தோற்றங்காட்டப்படுகிறது. இது மிகவும் தவறானது மட்டுமல்ல ஆபத்தானதும் கூட. மூன்று ஆண்டுகளுக்கு முன் கண்முன்னே நடந்த மனிதப் பேரவலத்தை கண்டும் காணாமல் இருந்தது மட்டுமல்லாது, ஆயதங்களை வழங்கியது முதல் யுத்தத்தை முன்நின்று நடாத்தியது வரை கறைபடிந்த கைகளையுடையவை இதே நாடுகள் தான் என்பதை எம்மில் பலர் வசதியாக மறந்துவிடுகின்றோம்.

சர்வதேசரீதியாக மனித உரிமைகள் பற்றி எவ்வளவு தான் பேசப்பட்டபோதும் நாட்டுக்கும் நாட்டுக்குமிடையான உறவு என்பது அரசிற்கும் அரசிற்குமிடையேயான உறவே ஆகும். அதில் மக்களின் நியாயமான கோரிக்கைகள் அதிகமாக இரண்டாம் பட்சமானதாக்கப் பட்டுவிடும். இதனை விளங்கிக் கொண்டே வெளிநாட்டு அரசாங்கங்களை இலங்கை அரசாங்கத்திற்கு எதிராகப் பயன்படுத்துவது பற்றிச் சிந்திக்க வேண்டும். இதில் வீண் கனவு காணக் கூடாது. இது ஜெனீவாவை மையப்படுத்திய அரசியலுக்கு மிகவும் பொருந்தும். போருக்குப் பிந்திய தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தின் திசைவழியைத் தீர்மானிப்பதில் இவை முக்கியமான சந்திகள். சுயநிர்ணய உரிமைக்குச் சர்வதேச சமூகம் எப்போதும் துணை புரிவதில்லை. அது தன் நிகழ்ச்சிநிரலுக்குட்பட்டு அதற்கு ஆதரவு போன்று காட்டிக்கொள்ளும். இறுதியில் எப்போதும் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்திற்கு எதிரான நிலைப்பாட்டையே சர்வதேச சமூகம் எடுக்கும். சுயநிர்ணய உரிமைப் போராட்டத்திற்கு எதிராகச் செயற்படும் தேசங்களிடம் கெஞ்சிக் கேட்பதற்கு எதுவுமே இல்லை. இலங்கைக்கு எதிராக வாக்களித்த நாடுகளை மெதுவான நெகிழ்ச்சியான பார்வைக்குட்படுத்துவது அடிமைத்தனமேயன்றிப் போராட்ட உணர்வல்ல. இலங்கைக்கு ஆதரவாக வாக்களித்த நாடுகளைத் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கும் சுயநிர்ணய உரிமைக்கும் எதிரானவை என்றும் இலங்கைக்கு எதிராக வாக்களித்த நாடுகளைத் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கும் சுயநிர்ணய உரிமைக்கும் ஆதரவானவை என்றும் கொள்வது தவறானது. அவ்வாறு விளக்கம் கொடுப்பவர்கள் தெரியாமல் செய்கிறார்கள் என்ற வாதம் கேட்டுப் புளித்துப்போன ஒன்று. அடிப்படையில் அரசியல் இவ்வாறு ஒரு நேர்கோட்டில் பயணிப்பதல்ல. இதனடிப்படையில் நண்பர்களையும் எதிரிகளையும் வரையறுப்பவர்கள் இதை அறியாமற் செய்யவில்லை. அயோக்கியமாகச் செய்கிறார்கள் என்று உறுதியாகச் சொல்லலாம். இப் பின்னணியில் ஈரானின் மீதான அமெரிக்காவின் நிலைப்பாடு குறித்துத் தமிழ் மக்கள் என்ன நினைக்கிறார்கள் யார் பக்கம் நிற்கிறார்கள் என்பது கேட்க வேண்டிய கேள்வியாகிறது.

எம்மில் எத்தனை பேர் தமிழர் ஒடுக்கப்பட்ட சமூகம் என்பதை ஏற்றுக் கொள்கிறோம்? தமிழர் போல் உலகெங்குமுள்ள ஒடுக்கப்பட்ட சமூகங்களோடு நாம் எம்மைத் தொடர்புபடுத்தியிருக்கிறோமா? ஆண்ட பரம்பரைக் கனவுகளிலிருந்து நாம் இன்னமும் விடுபடவில்லை. எமது தொன்மைகளின் பெருமைகளிலும் புனைவுகளிலும் மூழ்கியிருக்கும் வரை எமக்கு விடிவில்லை. உரிமைக்கான போராட்டம் விடுதலைக்கான போராட்டமாக வளர்ந்து இப்போது இருப்பிற்கே போராட வேண்டிய நிலையில் தமிழ்ச் சமூகம் உள்ளது. இதற்கான பழியைக் குறிப்பாக எவர் மீதும் சுமத்துவது சரியாகாது. தமிழ்ச் சமூகம் தனது விடுதலைக்கான பொறுப்பை முற்றிலும் தன் தோள்களில் சுமக்காதவரை தவறுகள் தவிர்க்க இயலாதவை.

## நண்பர்களும் எதிரிகளும்

இலங்கையில் சனநாயகமும் மனித உரிமைகளும் பேணப்பட வேண்டும் என்று அமெரிக்கா சொல்வதைத் தமிழர்கட்கு ஆதரவான நிலைப்பாடாகக் கருதுவது முட்டாள்தனமானது என்பதை நாம் அறிந்திருக்கிறோமா? இலங்கைக்குக் கேடானதும் இலங்கை அரசுக்கு எதிரானதும் தமிழருக்கு



படிப்பகம்

www.padippakam.com

நல்லதாக அமைய அவசியமில்லை. அதிலும் முக்கியமாகத் தமிழரைக் காரணங்காட்டிக் குறுக்கிடுகிற எவரும் தமிழரின் நன்மை கருதிக் குறுக்கிடவில்லை என்பதை நாம் நன்கு நினைவிலிருத்த வேண்டும். அதுபோலவே தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தில் நண்பர்களையும் எதிரிகளையும் நாம் தெளிவாக இனங்காணவேண்டும்.

> இலங்கைக்குக் கேடானதும் இலங்கை அரசுக்கு எதிரானதும் தமிழருக்கு நல்லதாக அமைய அவசியமில்லை. அதிலும் முக்கியமாகத் தமிழரைக் காரணங்காட்டிக் குறுக்கிடுகிற எவரும் தமிழரின் நன்மை கருதிக் குறுக்கிடவில்லை என்பதை நாம் நன்கு நினைவிலிருத்த வேண்டும்.

ஜெனீவாவில் இலங்கைக்கு ஆதரவாக வாக்களித்த நாடுகளில் பல எந்தவொரு நாட்டிற்கெதிராவும் மனித உரிமை மீறல் தொடர்பில் தீர்மானம் கொண்டுவருவதற்கான தகுதி உலகெங்கும் மனித உரிமை மீறல்களை நடாத்துகின்ற அமெரிக்காவுக்கு கிடையாது" என்பதன் அடிப்படையிலேயே வாக்களித்தன என்பதனை மறக்கலாகாது. வழமை போலவே தீர்மானத்திற்கு எதிராக வாக்களித்ததன் மூலம் கியுபா தமிழ் மக்களுக்கு துரோகமிழைத்து விட்டது என்று சொல்லப்படுகிறது. இந்தத் தீர்மானம் குறித்த சில அடிப்படைகள் அவசியமானவை.

1. மேற்குலகு இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை நிறைவேற்ற நினைத்தது தமிழ் மக்கள் மீதான அக்கறையாலோ மனித உரிமை மீறல்களை தட்டிக் கேட்கவோ அல்ல. மாறாக இலங்கை அரசைத் தனக்குப் பணிவான அரசாக மாற்றவே.
2. மேற்குலகத் தீர்மானம் நிறைவேறியிருந்தாலும், இலங்கை மேற்குலக நலன்களைப் பேண ஒத்துழைக்குமிடத்துத், தீர்மானம் எவ்விதமான செயல் வடிவத்தையும் எடுக்காது என்பதை உறுதியாகச் சொல்லலாம்.
3. ஐ.நா.வோ எந்த மேற்கு நாடுமோ உண்மையிலேயே விரும்பியிருந்தால் இலங்கையில் நிகழ்ந்த போர்க் குற்றங்கள் பற்றிய விசாரணைகளைத் தொடக்கியிருக்கலாம். அவர்களது நோக்கம் அதுவல்ல.

**இனிக் கியுபாவின் நிலைப்பாட்டுக்கு வருவோம்.**

1. நீண்டகாலமாக மனித உரிமைகளின் பெயரில் இலத்தீன் அமெரிக்க நாடுகளின் உள் விடயங்களில் அமெரிக்கா தொடர்ச்சியாகத் தலையிட்டு வந்துள்ளது.
2. ஒரு பக்கம் தனக்கெதிரான ஆட்சிகளை கவிழ்ப்பது, தனக்கெதிரான ஆட்சிகள் உள்ள நாடுகளில் பிரிவினைவாதத்தைத் தூண்டித் தலையிடுவது என இலத்தீன் அமெரிக்க நாடுகளில் அமெரிக்கா பல காலமாய்ப் பல அநியாயங்களைச் செய்துள்ளது.
3. எண்ணிலடங்கா மனித உரிமை மீறல்களை உலகமெங்கும் செய்வதுடன் சர்வதேசச் சட்டங்களைத் துளியும் மதிக்காத நாடான அமெரிக்கா எவ்வாறு இன்னொரு நாட்டுக்கெதிராக மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளை முன்வைக்க முடியும்?
4. கியுபாவின் நடவடிக்கை, வெறுமனே இலங்கை என்பதற்கப்பால் அமெரிக்க நோக்கங்களைத் தூர நோக்கில் மதிப்பிட்டு எடுக்கப்பட்ட தற்காப்பு நடவடிக்கை யென்றே எண்ணத் தோன்றுகிறது.

பாதிக்கப்பட்டோர் என்ற வகையில், தமிழர் கியுபா மீது மனத் தாங்கலடைவது விளங்கிக் கொள்ளக் கூடியது. ஆனால், எந்தத் தமிழ்த் தலைமையாவது இதுவரை அமெரிக்காவினதும் பிற மேற்கு நாடுகளதும் கொடுமைகட்குட்பட்ட நாடுகட்கு ஆதரவாக இல்லாவிடினும் அனுதாபமாகவாவது குரல் கொடுத்ததுண்டா? இன்னமும் அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் பின்னால் அலைகிற போக்கல்லவா தொடர்கிறது. இலங்கை அரசாங்கத்தின் நோக்கங்கள் என்னவானாலும், எவ்வாறோ அது மூன்றாமுலகில் நட்புச் சக்திகளை வைத்திருக்கிறது. நாம் என்றுமே நட்பை நாடாதவர்களிடம் நிபந்தனையற்ற ஆதரவைக் கோருகிறோம். நம் ஆதரவை வலிந்து வழங்கினோரின் துரோகங்களை மட்டுமன்றிக் கொலை பாதகங்களையும் மன்னித்து விடுகிறோம். தமிழருக்கெதிராக ராணுவ உதவி வழங்கிய நாடுகளில் அமெரிக்கா, இந்தியா, சில ஐரோப்பிய நாடுகள், இஸ்ரேல் என்பன முதன்மையானவை. பாக்கிஸ்தானும் சீனாவும் ரஷ்யாவும் வெகுதூரம் பின்னால் வருவன. கியுபாவோ லத்தின் அமெரிக்க இடதுசாரி ஆட்சிகளோ நமக்கு எக் கேடும் செய்யாதவை என்பது கவனிக்கத் தக்கது.

இன்று உலகெங்கும் பரந்துவிரிந்துள்ள விடுதலைப் போராட்டங்களில் எவற்றையெல்லாம் தமிழ் மக்கள் ஆதரிக்கிறார்கள்? ஒடுக்குவோரும் ஒடுக்கப்படுவோரும் நிறைந்திருக்கின்ற உலக அரசியல் அரங்கில் தமிழர்கள் எந்தப்பக்கம் நிற்கிறார்கள்? உலகில் மிகவும் நீண்டகாலமாக தொடருகின்ற பலஸ்தீன விடுதலைப்போராட்டத்தில் தமிழர்கள் யாரை ஆதரிக்கிறார்கள்? அமெரிக்கா இலங்கைக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் தீர்மானமொன்றை நிறைவேற்றியது தமிழர்கள் சார்பில் என்றால் ஏன் அதே அமர்வில் இலங்கைகு எதிரான தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னர் இஸ்ரேலிற்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட தீர்மானங்களுக்கு எதிராகவும் இஸ்ரேலிற்கு ஆதரவாகவும் அமெரிக்கா வாக்களித்தது? அமெரிக்கா உரிமைப் போராட்டங்களில் யார்பக்கம் நிற்கிறது என்பதற்கு இது ஒரு உதாரணம் மட்டுமே. பலஸ்தீன மக்களை அவர்களது தாயக பூமியில் இருந்து விரட்டி அதனை இஸ்ரேலின் நிலங்களாக மாற்றுவதே அமெரிக்க-பிரித்தானிய-இஸ்ரேல் சியோனிசத்தின் அடிப்படைத் திட்டமாகும். கடந்த அறுபது ஆண்டுகளுக்கு மேலாக மத்திய கிழக்கிலே இடம் பெற்று வரும் போராட்டத்தினதும் போரினதும் இரத்தப் பெருக்கினதும் அகதி வாழ்வினதும் மையப் புள்ளி அதுவேயாகும். பலஸ்தீன மக்களது வீரம் செறிந்த போராட்டத்தை இஸ்ரேலிய ஆக்கிரமிப்பாலும் அதற்கு உதவி நிற்கும் அமெரிக்க மேற்குலக சக்திகளாலும் முறியடிக்க முடியவில்லை. இன்று பலஸ்தீனத்தில் ஏற்பட்டுள்ள அவல நிலை சுயநிர்ணய உரிமைக்காகப் போராடும் ஒவ்வொரு நாட்டின் நேர்மையான விடுதலை அமைப்புகளுக்கும் ஒடுக்குமுறைக்கு உள்ளான மக்களுக்கும் ஒரு சமகால அனுபவமும் படிப்பதற்குரிய பல விடயங்களைத் தருவதாகவும் உள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

இத்தகைய கேடுகெட்ட அமெரிக்க ஏகாதிபத்தியத்தையும் சியோனிச இஸ்ரேலையும் நம்பி அல்லது முன்னுதாரணமாகக் கொண்டு அல்லது உதவிகளைப் பெற்று சுயநிர்ணய உரிமை அடிப்படையில் வெற்றி கொள்ளலாம் என்பது நடக்கக் கூடிய காரியமல்ல. அது மட்டுமன்றி அத்தகைய அந்நிய ஏகாதிபத்திய சக்திகள் எமது மக்களின் இரத்தத்திலும் கொலைகளிலும் அகதி வாழ்விலும் தமது தமது தேவைகள் நலன்களை ஈட்டிக் கொள்ள முனைந்து கொள்வர் என்பதையே பாலஸ்தீனத்தின் இன்றைய இன்றைய நிலை நமக்கு உணர்த்துகிறது.

இன்று ஈரானில் நடப்பதென்ன? ஈரான் தனது அணுசக்தியை விருத்தி செய்யவும் அணு உலைகளில் பயன்பட்ட யுரேனியத்தைச் செறிவுபடுத்தி மீண்டும் பயன்படுத்த ஆய்வுகளை நடத்தவும் கூடாது என அமெரிக்கா சொல்கிறது. ஈரான் அணு ஆயுதத் தயாரிப்புக்கு ஆயத்தப்படுத்துகிறது என்பதே அமெரிக்காவினதும் இஸ்ரேலினதும் குற்றச் சாட்டாகும். ஈரானின் அணுசக்தி விருத்தி முயற்சிகளைத் தடுக்க எந்த உலக நாட்டுக்கும் உரிமையில்லை. ஈரான் அணு ஆயுத உற்பத்தித் திட்டமிடுகிறது என்று குற்றச்சாட்டுகிற இஸ்ரேல் இன்று நானூறுக்கும் மேற்பட்ட அணு குண்டுகளைத் தன்வசம் வைத்திருக்கிறது. அது பற்றி எதுவுமே பேசாத அமெரிக்காவுக்கு ஈரானைக் கண்டிக்க என்ன உரிமை உள்ளது? அமெரிக்கா, ரஷயா, பிரிட்டன், சீனா, பிரான்ஸ் ஆகிய நாடுகளிடம் பல காலமாகவே அணு ஆயுதங்கள் இருக்கின்றன. இந்தியாவும் பாக்கிஸ்தானும் அணு ஆயுத உற்பத்தியில் புதிதாக இறங்கி அவையும் அவற்றைக் கொண்டிருக்கின்றன. அமெரிக்காவின் மிரட்டலின் பின்னணியிலேயே வட கொரியா தற்காப்பிற்காக அணு ஆயுதத் தயாரிப்பில் இறங்கியது என்பது கவனிக்க வேண்டியது. இப்போது ஈரானின் மீதான அமெரிக்காவின் அதீத அக்கறை வேறு நோக்கங்களைக் கொண்டது. ஈரானின் மீதான அமெரிக்க ஆதிக்கத்திற்கு அறுபது வருடங்களுக்கு முன்னமே அத்திவாரமிடப்பட்டது. ஈரானின் ஆட்சித் தலைவர் மொஸாடெக் படுகொலையின் பின்பு அமெரிக்க-பிரித்தானிய முயற்சி மூலம் ஈரானில் முடியாட்சியொன்று நிறுவப்பட்டது. அதைப் போன்ற பயங்கரமான சர்வதிகாரக் கொடுங்கோன்மை ஆசியாவில் வேறெதுவும் இல்லை எனுமளவுக்கு, அந்த ஆட்சி சகல எதிர்ப்பாளர்களையும் கடுங்கண்காணிப்பு, ஆட்கடத்தல், சித்திரவதை, கொலை என்பன மூலம் கட்டுப்படுத்தியது. அந்த ஆட்சி கொமெய்னி தலைமையிலான இஸ்லாமியப் புரட்சியால் 1978ல் தூக்கி எறியப்படும் வரை ஈரான் அமெரிக்காவின் நெருங்கிய கூட்டாளியாகவே இருந்தது. ஈரானின் இஸ்லாமிய மதவாத ஆட்சியின் தவறுகள் காரணமாக கணிசமானளவில் மக்கள் அதை வெறுத்தாலும் அந்த ஆட்சியை கவிழ்க்க ஈராக்-ஈரான் போரின் போது சதாமுக்கு ஆதரவு உட்பட அமெரிக்கா எடுத்து வந்த நடவடிக்கைகள் முடிவில் இஸ்லாமிய மதவாதிகளின் கைகளையே வலுப்படுத்தின. ஈரானின் பொருளாதாரம் அமெரிக்காவின் நெருக்குவாரங்களால் ஒரு புறமும் ஈரானிய ஆட்சியின் பழைமைவாதப் போக்கால் இன்னொரு புறமும் பல சிக்கல்களை எதிர்நோக்கினாலும் ஈரான் ஆசியாவின் வலுவான ஒரு நாடாக வளர்ந்துள்ளது. மத்திய கிழக்கில் அமெரிக்க ஆதிக்கத்திற்குத் தடையாகவும் சீனாவைச் சுற்றி வளைத்துத் தனிமைப்படுத்தும் முயற்சிக்கும் தடையாகவும் உள்ள முக்கியமான ஒரு நாடு ஈரான். ஈரானில் ஒரு அமெரிக்கச் சார்பு ஆட்சியை நிறுவும் முயற்சி தோல்வி கண்ட பின்பே ஈரான் பற்றிய கடும் போக்கை அமெரிக்கா மேற்கொண்டது. ஈரானுக்கு எதிரான கடும் போக்கு முஸ்லீம் மதவாதச் சனாதிபதி அஹ்மெடி நெஜாடின் தெரிவின் பின்பு தீவிரமாகியது.

எந்தவொரு விடுதலைப் போராட்டத்திற்கும் நட்புச் சக்திகள் அவசியமானவை. ஆனால் அவற்றிற்கிடையிலான உறவு ஈவோருக்கும் இரப்போருக்கும் இடையிலான உறவாக இருக்க முடியாது.

ஈரானை ஐ.நா. பாதுகாப்புச் சபை மூலம் விசாரணைக்குட்படுத்தி அதன் அணுசக்தித் திட்டங்கட்கு முற்றுப்புள்ளி வைப்பது அல்லது ஈரானைப் பலவாறான வணிகத் தடைகட்குட்படுத்திப் பலவீனப்படுத்துவது தான் அமெரிக்க-இஸ்ரேலிய நோக்கமாகும். தமது பொருளாதார நலன்கட்காக ஈரானுடன் வணிக உறவைப் பேண வேண்டிய நிலையிலுள்ள ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் ஒருபுறம் அமெரிக்காவுடன் சேர்ந்து ஈரான் மீது நெருக்குவாரங்களைப் பிரயோகிக்கின்றன. மறுபுறம் ஈரானுடன் சமரசத்துக்கான வழிகளைத் தேடுகின்றன. ஈரானின் அணுசக்தி விருத்திக்கு உதவிசெய்து வந்த ரஷ்யாவும் சமரச முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது. சீனா இப் பிரச்சனை பாதுகாப்புச் சபைக்குப் போவதை விரும்பவில்லை. இந்நிலையில் அமெரிக்கா புதிய வழிமுறைகளைத் தேடவேண்டிய கட்டாயத்தில் இருக்கிறது. இதன் பின்னணியிலேயே நாம் நண்பர்கள் பற்றியும் எதிரிகள் பற்றியும் சிந்திக்க வேண்டும். எந்தவொரு விடுதலைப் போராட்டத்திற்கும் நட்புச் சக்திகள் அவசியமானவை. ஆனால் அவற்றிற்கிடையிலான உறவு ஈவோருக்கும் இரப்போருக்கும் இடையிலான உறவாக இருக்க முடியாது. அவ்வாறான உறவு நிச்சயமாக நட்பாக இருக்கமுடியாது. இதை நாம் தெளிவாக விளங்கிக்கொள்ள வேண்டும்.

தமிழ் மக்கள் மத்தியில் சீனப் புச்சாண்டி நீண்டகாலமாகக் காட்டப்பட்டு வருகிறது. தமிழ் அரசியல் தலைவர்களாலும் தமிழ்த் தேசியவாதத்தால் வழிநடத்தப்படுகின்ற தமிழ்ப் பத்திரிகைகளாலும் தமிழ் மக்களின் விடுதலைப்போராட்டத்திற்குச் சீனா மிகப்பெரிய எதிரி என்றும் அது திபெத்திய விடுதலைப் போராட்டத்தை கொடுமையாக ஒடுக்கிறது என்றும் தொடர்ந்தும் சொல்லப்பட்டு வருகிறது. சீனா இலங்கை அரசாங்கத்துடன் செயற்படுவதை தமிழ் மக்களுக்கு எதிராக செயற்படுவதாகக் காட்டுவதில் தமிழ் பத்திரிகைகள் முன்னணியில் செயற்படுகின்றன. இலங்கை அரசுக்குப் போரின் போது ஆயதங்களையும் போர்த் தொழில்நுட்பத்தையும் புலனாய்வுத் தகவல்களையும் செய்மதிப் படங்களையும் வழங்கியவர்களில் முன்னிலையில் இருப்பன அமெரிக்காவும் இந்தியாவும் பிரித்தானியாவுமே என்பதை நாம் வசதியாக மறந்துவிடுகிறோம். சீனா தான் முதல் எதிரி போற சித்தரிக்கப்படுகிறது. இதைச் செய்பவர்கள் தங்கள் இந்திய-அமெரிக்க விசுவாசத்தைக் காட்டவே இவ்வாறு செய்கிறார்கள் என்பதை தெரிந்துகொள்வது பயனுள்ளது. சீனா எந்த நாட்டையுமோ எந்த ஒடுக்கப்பட்ட மக்களையுமோ விடுவிக்க வேண்டும் என்று எந்த உண்மையான இடதுசாரியும் என்றுமே எதிர்பார்த்ததில்லை. அப்படி எதிர்பார்த்திருந்தால் அது அடிப்படையிலேயே தவறானது. எந்த மக்களது விடுதலையும் முற்றிலும் அவர்களது கையிலேயே தங்கியுள்ளது. எந்த அயல்நாட்டையும் "சர்வதேச சமூகத்தையும்" எதிர்பார்த்திருப்பது பயனற்றது மட்டுமல்ல மிகவும் கேடானதுமாகும்.



படிப்பகம்

சீனாவின் வெளியுறவுக் கொள்கையின் அடிப்படையானது வெவ்வேறு அரசு கட்கிடையான உறவு, வெவ்வேறு நாட்டு மக்களுக்கிடையிலான உறவு, வெவ்வேறு நாடுகளின் கம்யுனிஸ்ற் கட்சிகளுக்கிடையிலான உறவு, என்ற மூன்று தளங்களில் அமைந்திருந்தது. 1950களில் நாடுகளுக்கிடையிலான உறவை 5 அம்ச அடிப்படையில் சீனா வகுத்துக் கொண்டது: (1) நாடுகளது இறைமையையும் பிரதேச ஒருமைப்பாட்டையும் பரஸ்பரம் மதித்தல், (2) பரஸ்பர ஆக்கிரமிப்பின்மை, (3) ஒரு நாடு மற்றதன் உள் அலுவல்களில் தலையிடாமை, (4) சமத்துவமும் பரஸ்பர நன்மையும், (5) சமாதானமாக உடனிருத்தல். இக் கோட்பாடுகளே பின்னர் அணிசேரா நாடுகளாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேச உறவுகட்கான அடிப்படையாயிற்று என்பதையும் குறிப்பிடல் தகும். சீனாவின் வெளியுறவுக் கொள்கையின் தன்மையை அது உலக அலுவல்களில் எவ்வாறு நடந்துகொண்டுள்ளது என்பதை நோக்குவதன் மூலம் மதிப்பிடலாம்.



1. சீனா எந்தச் சுதந்திர நாட்டினதும் இறைமையை மதித்தே நடந்து வந்தது. எந்த நாட்டிலும் "ஆட்சி மாற்றம்" ஒன்றைச் சீனா பரிந்துரைத்ததில்லை. அதற்கான காரியங்களில் இறங்கியதுமில்லை.
2. சீனா கொலனிய எதிர்ப்பு, ஏகாதிபத்திய எதிர்ப்பு நோக்குடைய விடுதலைப் போராட்டங்களை நிபந்தனையின்றி ஆதரித்து வந்தது. அதேவேளை, தான் ஆதரித்த விடுதலைப் போராட்டம் வெற்றிபெற்ற பின்பு யார் ஆட்சி அமைக்கவேண்டும் என்று எங்கேயும் எவரையும் வற்புறுத்தியதில்லை.

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தின் ஆதரவுச்சக்திகள் என தமிழ்த் தேசிய வாதிகளும் தமிழ் அரசியல் தலைமைகளும் பரிந்துரைக்கின்ற அமெரிக்காவும் இந்தியாவும் மேற்சொன்ன இரண்டு விடயங்களிலும் எவ்வாறு செயற்பட்டுள்ளன, அவை இரண்டினதும் வெளியுறவுக்கொள்கைகள் எவ்வாறு இருந்துள்ளன என்பவற்றை நோக்கினால் தமிழ் மக்களின் நட்புச் சக்திகள் பற்றி புதிய முடிவுகளுக்கு வர இயலும் என்பதோடு சீன மிரட்டல்" என்பதன் பின்னான அரசியலையும் விளங்கிக்கொள்ள இயலும். இவையனைத்தையும் விடக் கவனிக்கவேண்டிய முக்கியமான ஒரு விடயம் உள்ளது. சீனா இன்று வரை வேறெந்த நாட்டின் மண்ணிலோ கடற்பகுதியிலோ தனது படைத்தளம் எதையும் நிறுவவில்லை என்பதுடன், வேறு நாடுகளின் பிரச்சினைகளை தீர்க்கிற போரிற்கூட இதுவரை சீனாவின் படைகள் அயல்நாடுகளில் நிலைகொண்டு இருந்ததில்லை. இது சீனாவை மற்ற எந்த வல்லரசினின்றும் வேறுபடுத்திக் காட்டுகிறது. சீனா இதுவரை இராணுவ மிரட்டல் மூலம் தனது தேவைகளை நிறைவேற்றிக் கொண்டதும் இல்லை. பிற நாடுகளை, முக்கியமாக வலிமை குறைந்த நாடுகளை வலிந்து மிரட்டுவதைச் சீனா எப்போதுமே நிராகரித்து வந்துள்ளது.

திபெத்திய மக்கள் மத உரிமையோ மொழி உரிமையோ பண்பாட்டு உரிமையோ மறுக்கப்பட்ட ஒரு தேசிய இனமல்ல. திபெத்திய மக்களின் வாழ்க்கைத் தரமோ சமூக நலன்களோ சமூக மேம்பாட்டுக்கான வாய்ப்புகளோ சீன மத்திய அரசாலோ பேரினவாத அரசியலாலோ மறுக்கப்படவில்லை. சீனக் குடியரசு நிறுவப்பட்டபோதே ஹான் பேரினவாதம் பற்றி எச்சரிக்கப்பட்டு சிறுபான்மைச் சமூகங்களின் அடையாளம் முதலான சகல உரிமைகளும் பேணப்படும் தேவை வற்புறுத்தப்பட்டது. இதுவரை அந்த நிலையில் மாற்றமில்லை. திபெத்திய மக்கள் என்றென்றைக்கும் சீனாவின் ஒரு சிறுபான்மைத் தேசிய இனமாக வாழ விரும்புவர் என்பதற்கு உத்தரவாதம் எதுவும் இல்லை. அது சீனாவின் ஹான் தேசிய இனம் பேரினவாத அடக்குமுறையில் ஈடுபடுகிற போதும் திபெத்தியரது சுயாட்சி உரிமைகள் பாதிக்கப்படுகிற போதுமே நடக்கக் கூடியது. திபெத்தில் அவ்வாறான நிலைமை இல்லை. திபெத்தினுள் குறுகிய இனவாதம் இருக்கலாம். தேசிய இனங்களிடையிலான பல்வேறு முரண்பாடுகள் இருக்கலாம். எனினும் ஒரு திபெத் தேசிய விடுதலைக் கோரிக்கைக்கோ இயக்கத்திற்கோ இதுவரை திபெத்தினுள் தேவை ஏற்படவில்லை. அவ்வாறான தேவை திபெத்திற்கு வெளியே திபெத்திய மக்களை ஒடுக்கிக் கொடுமை செய்து தமது அதிகாரம் கைநழுவிப் போனதால் கிளர்ச்சியில் ஈடுபட்டு அது தோற்றதால் வெளியேறினோரின் பரம்பரையினருக்கு இருக்கிறது. அவர்களைப் பராமரித்து ஊக்குவிக்கிற அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு இருக்கிறது. அமெரிக்காவுடன் கூட்டாளிகளாக உள்ள பிற்போக்குவாதிகட்கும் இருக்கிறது. அவர்களில் எவரும் வேண்டுவது விடுதலை அல்ல. எந்தவொரு விடுதலைப் போராட்டத்திற்கும் நட்புச்சக்திகள் மிக அவசியமானவையே. ஆனால் அது எவ்வாறான நட்பு என்பது முக்கியமானது. பொருந்தாநட்பு பல சமயங்களில் போராட்டங்களின் திசைவழிகளையே தடம்மாற்றும் தன்மையுள்ளது என்பதை நாம் நமது வரலாற்றினூடே கண்டிருக்கிறோம்.

### சுயநிர்ணய உரிமையும் சர்வதேச சமூகமும்

மூன்றாம் உலக நாடுகள் பலவற்றில் கடந்த மூன்று தசாப்தங்களாகத் தேசிய இனப் பிரச்சினை என்பது தீவிரமடைந்து ஆயுதப் போராட்டங்களாக விருத்தி பெற்று வந்துள்ளதைக் காணலாம். தேசிய இனங்கள் மீதான பெருந் தேசிய இன அகங்கார ஒடுக்கு முறையை ஆளும் வர்க்கப் பெரும் தேசியவாத சக்திகள் கட்டவிழ்த்து வந்திருக்கிறார்கள். இதனை எதிர்த்து சுயாட்சிக் கோரிக்கைகளும் அதற்கு அப்பாலான பிரிவினைக் கோரிக்கைகளையும் போராடும் தரப்புகள் முன்வைத்து வந்துள்ளன. இத்தகைய இன மதத் தேசிய முரண்பாடுகளையும் ஒடுக்குமுறைச் சுழலையும் தத்தமது ஏகாதிபத்திய வல்லாதிக்க நோக்கங்களுக்குத் தகுந்தாற் போல அச் சக்திகள் பயன்படுத்தியும் வந்துள்ளன. தேசிய



படிப்பகம்

www.padippakam.com

இனப் பிரச்சினை யுத்தமாகவும் ஆயுதப் போராட்டமாகவும் காணப்படும் சூழல் பெரும்பாலான நாடுகளில் பிரதான முரண்பாட்டுப் பிரச்சினையாகி நாளாந்த உயிரிழப்புகளையும் இரத்த ஆறு ஓடுவதையும் வேகப் படுத்தி நிற்கின்றது.

இவ்வாறான தேசிய இனப் பிரச்சினை விடயத்தில் இரண்டு அம்சங்கள் உள்ளடங்கி இருப்பதைக் காண முடிகின்றது.

1. ஒன்றுக்கு மேற்பட்ட தேசிய இனங்கள் சுயநிர்ணய உரிமை அடிப்படையில் தமக்கான சுயாட்சி உரிமைகளைக் கோரி நிற்பது நியாயமானதும் ஏற்றுக்கொள்ளத் தக்கதுமான ஒரு அம்சமாகும்.

2. அதே வேளை, மோதற் சூழலை வலிந்து உருவாக்கி ஏகாதிபத்திய சக்திகளின் துணையுடன் அவர்களது உள் நோக்கங்களுக்கு ஏற்பப் பிரிவினையைச் சாத்தியமாக்க முன் நிற்பது, ஏற்றுக் கொள்ள முடியாத பிற்போக்கான இரண்டாவது அம்சமாகும்.

இவ் விடயத்தில் தான் தேசிய இனப் பிரச்சினையின் தீர்வுக்கு ஐக்கியப்பட்ட ஒரு நாட்டிற்குள் சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான சுயாட்சியா அல்லது துண்டாடப் படும் தனி நாடா என்பது சிந்தனைக்கு உரியதாகின்றது. இதனை நாட்டு நலன், மக்கள் நலன், ஒடுக்கப்படும் வர்க்கங்களின் நலன், ஏகப் பெரும்பான்மையான உழைக்கும் மக்களின் வாழ்வும் மேம்பாடும் என்பனவற்றின் அடிப்படையில் வைத்து நோக்குதல் வேண்டும். இவற்றுடன் உலக மேலாதிக்கத்திற்கும் பிராந்திய மேலாதிக்கத்திற்கும் பேரவாக் கொண்டு அலைந்து வரும் வல்லாதிக்க சக்திகளையும் கணக்கிற் கொண்டே பிரிவினையா சுயாட்சியா என்பதைத் தீர்மானிக்க வேண்டும்.

கொசோவோ தனி நாட்டுப் பிரகடனமும் அதற்கான அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளின் அங்கீகாரமும் தனித் தமிழீழத்திற்கான புதிய முன்னுதாரணமாகக் காட்டப்படுகிறது. முன்னர் இஸ்ரேல், வங்கதேசம் எனப் பலவும் காட்டப்பட்டு வந்ததை இங்கு நினைவுகூர்வது தகும். சேர்பியர்கள் பெருந்தேசிய மேலாதிக்கவாதிகள் என்பதனாலேயே யுகோஸ்லாவியா உடைந்தது என்றும் சேர்பியர்களின் தேசிய இனவெறியாலேயே கொசோவோ பிரிந்து செல்ல நேர்ந்தது என்று மிகையான எளிமைப்படுத்தப்பட்ட ஒரு புனைவை நாம் மீண்டும் மீண்டும் கேட்கிறோம். யுகோஸ்லாவியாவின் விடயத்தில் அந்த நாடு ஸ்லாவ் தேசிய இனங்கள் பலவற்றின் ஒன்றிணைவால் உருவான நாடு என்பதும் அங்கே எவ்விதமான தேசிய இன ஒடுக்கலும் இருந்ததில்லை என்பதும் பலருக்கு நினைவுக்கு வருவதில்லை. அங்கே இருந்துவந்த தேசிய இனங்களிடையே போட்டி இருந்தது. இடையிடை பகைமையான உணர்வுகளும் இருந்தன. ஆனால், அது 1990கள் வரை மோதல்கட்கோ பிரிவினைக்கோ இட்டுச் செல்லவில்லை. பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் இருந்தன. மிக மோசமான பொருளாதார நெருக்கடி இருந்து வந்த 1980களிலும் பிரிவினைக்கான இயக்கங்கள் உருப்பெறவில்லை.

மதத்தாலும் மொழிப் பிரிவுகளாலும் இனப் பிரிவுகளாலும் வேறுபட்ட யுகோஸ்லாவியத் தேசிய இனங்களைப் பிரிப்பதில் கத்தோலிக்கத் திருச்சபைக்கும் ஜேர்மனிக்கும் பயன் இருந்தது. ஆனாலும், யுகோஸ்லாவியாவில் தன்னுடைய படைகளை நிலைநிறுத்த திட்டமிட்டிருந்த அமெரிக்காவுக்கு பொஸ்னியா-ஹெர்ட்ஸகொவினா (பொஸ்னியா என்றே பலராலும் அழைக்கப்படுவது) ஒரு வாய்ப்பான இடமாயிற்று. அங்கே பிரிவினை தூண்டிவிடப்பட்டது.

ஜேர்மனிய, வத்திக்கான் ஊக்குவிப்புடன் ஸ்லொவீனியாவும், குறோவேஷியாவும் யுகோஸ்லாவிய சமஷ்டியினின்று பிரிந்துபோக முற்பட்டபோது யுகோஸ்லாவியக் குடியரசுத் தலைவரான மிலஷோவிச் சேர்பியப் பேரினவாதியாகத் தன்னை அடையாளப்படுத்தவில்லை. மாறாக யுகோஸ்லாவியா தொடர்ந்தும் ஒன்றுபட்ட நாடாக இருக்கும் தேவையையே வற்புறுத்தினார். குறோவேஷியப் பிரிவினையின் போது மேலைநாட்டுச் சார்பான நிலைப்பாட்டை எடுத்த அதன் தலைவர் துஜ்மன் பின்னர் சேர்பியர்கட்கு எதிரான இனத் துவேஷத்தை கட்டவிழ்த்து விட்டார். அதுமட்டுமன்றிக் குறோவேஷியாவினின் க்றயினா மாகாணத்திலிருந்து இரண்டரை இலட்சம் சேர்பியர்கள் இனச் சுத்திகரிப்புக்கு உள்ளாயினர்.

பொஸ்னியாவில் பொஸ்னிய முஸ்லிம் மேலாதிக்கச் சிந்தனையுடைய அலியா இஸெத்பெகோவிச் அமெரிக்க ஆதரவுடன் பொஸ்னியாவின் மூன்று தேசிய இனங்கள் மீதும் ஆதிக்கம் செலுத்த முற்பட்டார். அக் காலத்தில் அமெரிக்கா முஸ்லிம் தீவிரவாதத்தை வளர்த்து வந்தது என்பதையும், சோவியத் யுனியன் உடைவதை ஊக்குவித்ததும் போதாமல், முஸ்லிம் தீவிரவாதிகளைக் கொண்டு ரஷ்யாவை மேலும் பலவீனப்படுத்துகிற பணிகளிலும் தீவிரம் காட்டியதையும் நாம் நினைவிலிருத்த வேண்டும்.

இத்தகைய பின்னணியிலேயே சொஸ்னியாவில் சேர்பிய, குறோவேஷிய, முஸ்லிம் தேசிய இனங்களிடையிலான மோதலுக்கான நிலை உருவானது. இம் மூன்று சமூகங்களும் மதத்தால் மட்டுமே வேறுபட்ட ஒரே சேர்ப் இனத்தவர் என்பதும் மதம் சார்ந்த அரசியலும் அந்நிய ஆக்கிரமிப்புமே மூன்று சமூகங்களையும் வெவ்வேறாக்கின என்பதும் நாம் நினைவிலிருத்த வேண்டிய உண்மைகளாகும். எனினும், இன்னொரு முறை நடந்த அந்நியக் குறுக்கீட்டின் மூலம் பொஸ்னிய சரித்திரம் மூன்று சமூகங்களிடையிலும் மும்முனைப் போராட்டமாக வெடித்தெழ நேர்ந்தது. இதன் விளைவுகளில் சேர்பிய இனத்தவரது குற்றங்கள் மட்டுமே பேசப்பட்டதுடன் அவை மிகைப்படுத்தப்பட்டு அதே பொய்கள் இன்னும் திரும்பத் திரும்பக் கூறப்படுகின்றன. சேர்பியாவையும் மொண்டி நெக்ரோவையும் மசிடோனியாவையும் கொண்டிருந்த எஞ்சிய யுகோஸ்லாவியா எவ்வகையிலும் பொஸ்னியாவிற் குறுக்கிட இயலாதவாறு தடைகட்கு உட்படுத்தப்பட்டிருந்தது. எனவே, மிலஷோவிச் பொஸ்னியாவின் இரத்தக் களரிக்குப் பங்களித்தவரல்ல. எனினும் வெளி உதவியுடன் சேர்பியர்கள் மீதும் முஸ்லிம்கள் மீதும் குறோவேஷிய இனத் தீவிரவாதிகள் நடத்திய வெறியாட்டம் பற்றிப் பேசப்படுவதில்லை. முஸ்லிம் தீவிரவாதிகளுடைய குற்றங்களும் பேசப்படுவதில்லை. சேர்பியர்கள் பொஸ்னியாவில் அமெரிக்கா, நேட்டோ, ஐ.நா. எனும் மூன்று அந்நிய சக்திகளை எதிர்கொண்டனர். அதனால் அவர்களது மனித உரிமை மீறல்கள் நியாயமாகிவிடாத போதிலும், அவர்களை மட்டுமே குற்றவாளிகளாக்குவது தவறான நோக்கமுடையது.

கொசோவோவும் வொய்வொதினாவும் சேர்பியாவின் சுயாட்சி மாகாணங்கள். அங்கு வலுவான சுயாட்சிகள் இருந்தன. கொசோவோவில் ஒரு கணிசமான சேர்பிய சிறுபான்மை இருந்தது. சோவியத் யுனியனின் சரிவிற்குப் பின்னரே அங்கு கொசோவோ தேசியவாதம் கிளறிவிடப்பட்டது. கொஸொவோ தீவிரவாத இயக்கம் ஒன்று சேர்பியாவின் சோஷலிஸ" ஆட்சியைப் பலவீனப்படுத்துகிற நோக்குடன் அமெரிக்காவால் ஆயுதபாணியாக்கப்பட்டது. சேர்பியப் படைகட்கும் அமெரிக்கா ஆதரவு பெற்ற தீவிரவாதிகளுக்கும் மோதல்கள் வலுத்த போதும் கொசோவோவில் இனப்படுகொலைகள் நடக்கவில்லை. எப்போது நேட்டோ சேர்பியா மீது குண்டு வீச்சைத் தொடங்கியதோ அப்போதுதான் கொசோவோ அல்பேனியர் மீதான தாக்குல்கள் நிகழ்ந்தன.



படிப்பகம்

www.padippakam.com

கொசோவோவின் சேர்பியர்கள் விரட்டப்பட்டது பற்றி அதிகம் பேசப்படுவதில்லை.

ரஷ்யா மீள எழுச்சி பெற்று வருகிற நிலையில், ஒரு வலுவான சேர்பியாவை அமெரிக்கா விரும்பவில்லை. சேர்பியாவை புரண அமெரிக்க ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டு வந்து ரஷ்யாவுக்கு எதிராகப் பாவிக்க இயலாததாலேயே, முதலில் மிலஷோவிச்சைப் பலவீனப்படுத்தப் பாவிக்கப்பட்ட கொசோவோ தீவிரவாதம் நாட்டைப் பிரிக்கும் அளவுக்குப் போக அனுமதிக்கப்பட்டது. பாதுகாப்பின்பேரில் இன்று பொஸ்னியாவில் இன்னமும் அந்நியப் படைகள் உள்ளன. நாடு இன்னமும் பொருளாதாரத்தில் பின்தங்கியே உள்ளது. கொசோவா இன்று தனி நாடாகிக் கொள்வதற்கு அங்கு புகுந்து கொண்ட நேட்டோப் படைகளின் பிரசன்னம் அடிப்படையாக இருந்தது. ஆனால் இன்றும் அப்படைகள் இருக்கவே செய்கின்றன இனியும் அவை இருக்கவே போகின்றன. இதில் உள்ளடங்கி உள்ள உண்மை என்னவெனில் அமெரிக்காவும் பிற வல்லாதிக்க சக்திகளும் பிரிவினையை ஆதரிப்பது அல்லது எதிர்ப்பது என்பதன் அர்த்தம் அவர்களது பொருளாதார அரசியல் ராணுவ நலன்களின் அடிப்படையிலேயே ஆகும். சம்மந்தப்பட்ட மக்களின் நலன்களில் இருந்தல்ல.

மாக்ஸியவாதிகள் தேசங்களின் பிரிவினையை ஆதரிக்குங் காரணங்களுஞ் சூழ்நிலைகளும் தேசியவாதிகள் எனப்படுவோரின் நிலைப்பாடுகட்கு முற்றிலும் உடன்பாடானவையல்ல. மாக்ஸியவாதிகளது அணுகுமுறை வர்க்க முரண்பாட்டை அடிப்படையாகக் கொண்டது சர்வதேசப் பார்வையுடையது. தேசிய இனக்கட்சிகளுக்கிடையிலான முரண்பாடுகளைச் சினேக முரண்பாடுகளாகக் கருதுவது.

மாக்ஸியவாதிகள் தேசங்களின் பிரிவினையை ஆதரிக்குங் காரணங்களுஞ் சூழ்நிலைகளும் தேசியவாதிகள் எனப்படுவோரின் நிலைப்பாடுகட்கு முற்றிலும் உடன்பாடானவையல்ல. மாக்ஸியவாதிகளது அணுகுமுறை வர்க்க முரண்பாட்டை அடிப்படையாகக் கொண்டது சர்வதேசப் பார்வையுடையது.

தேசியவாதிகளது அணுகுமுறை ஒரு தேசத்தினதோ, தேசிய இனத்தினதோ நலன்கள் என்று தாம் கருதும் விஷயங்களை முதன்மைபடுத்துவது. எனவே அது தேசங்களிடையிலும் தேசிய இனங்களிடையிலும் உள்ள முரண்பாடுகளை முக்கியப்படுத்தி ஒரு தேசிய இனத்தின் நலன்கள் மற்றைய இனங்களின் நலன்களைவிட முக்கியமானவை என்று கருத இடமுண்டு. தேசிய இனங்கள் இரண்டின் அதிகார வர்க்கங்களிடையிலான பகைமையைத் தேசிய இனங்களிடையிலான பகைமையாகக் காட்டும் நிர்ப்பந்தத்திற்கும் அது உள்ளாக நேரிடுகிறது. சர்வதேச அரங்கிற் தன்னை ஏகாதிபத்தியவாதிகளின் கையில் ஒரு பகடைக் காயாக்கும் நிலைக்கும் அதன் குறுகிய உலக நோக்கே காரணமாகிறது.

மாக்ஸியவாதிகளின் நிலைப்பாடோ தேசியப் பிரச்சினையை வர்க்கமுரண்பாட்டின் ஒரு அம்சமாக கருதுவது, எனவே அது தேசிய ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் உள்ள முரண்பாடுகளைப் பிரதான முரண்பாடு, இரண்டாம் மூன்றாம் பட்ச முரண்பாடுகள் என்ற விதமாக அடையாளங் காண்கிறது. முரண்பாடுகளின் முக்கியத்துவத்தை நீண்டகாலக் கண்ணோட்டத்திலும் குறுகிய காலக் கண்ணோட்டத்திலும் வேறுபடுத்தி ஆராய்கிறது. ரஷ்யப் புரட்சியின் பாடங்களைச் சீனாவில் நேரடியாகப் பாவிக்க முடியாமற்போனமையும் சீனப் புரட்சியின் அனுபவங்கள் அப்படியே வியட்னாமியப் புரட்சியிலும் விடுதலைப் போரிலும் பயன்படாமையும் நமக்கு உணர்த்துவது என்ன?

பிரிந்துபோகும் உரிமையின் அங்கீகாரம் பிரிவினையை ஊக்குவிக்கும் நோக்கை உடையதல்ல. மாறாக அது ஒன்றுக்கு மேற்பட்ட தேசிய இனங்கள் சுயவிருப்பின் பேரில் ஒன்றாக வாழும் வாய்ப்பைப் பலப்படுத்தும் நோக்கையுடையது. இதன் காரணமாகவே சுயநிர்ணய உரிமை என்பது பிரிவினையே என்று கூறுவோர் சுயநிர்ணய உரிமை என்றதன் கருத்தைத் திரிக்கிறார்கள். அதாவது ஒன்றைச் செய்யும் உரிமையை அதைச் செய்யும் நிர்ப்பந்தமாக மாற்றுகிறார்கள். இது லெனினுடைய அடிப்படையான நோக்கத்திற்கு எதிராக லெனினின் சொற்களையே திரித்துப் பயன்படுத்தும் முயற்சி.

சுயநிர்ணயம் என்பது பிரிந்துபோகும் உரிமை தொடர்பானதாகக் கருதப்பட்டுத் தேசங்களின் சுய நிர்ணய உரிமை பற்றிய வாதம் பிரிவினைக்கான உரிமை தொடர்பான விவாதமாக இருந்த நிலையைக் கடந்து விட்டோம். தேசிய இனங்களின் பிரச்சனை, முக்கியமாகத் தேசிய அரசாக அமையும் வாய்ப்பில்லாத தேசிய இனங்களின் பிரச்சனை, இன்று மேலும் கவனமான பரிசீலனையை வேண்டி நிற்கிறது. சுய நிர்ணயம் என்பதன் அர்த்தம் ஒரு தேசம் பிரிந்துபோகும் உரிமையை எந்த நிலையிலும் மறுக்காத விதமாக மேலும் விரிவுபடுத்தபட வேண்டிய தேவையை நாம் எதிர்நோக்குகிறோம். தேசிய இனம் என்ற பதத்தின் பொருளை மேலும் விரிவுபடுத்த வேண்டிய தேவையும் ஏற்படுகிறது. தேசிய இனங்களாக அடையாளங்காண முடியாத ஒடுக்கப்பட்ட சமுதாய பிரிவுகளது உரிமைகள் தொடர்பாகவும் தெளிவான கருத்துக்கள் அவசியமாகின்றன.

ஒரு தேசிய இனம் ஒரு தேசமாக அல்ல தேசிய அரசாக அமைவதற்குச் சில நடைமுறைச் சாத்தியமான தேவைகள் உள்ளன. அதற்குரிய ஒரு தொடர்ச்சியான பிரதேசம் ஒரு முக்கியமான தேவை. இது எப்போதுமே இருக்கவேண்டிய நிர்ப்பந்தம் இருந்ததில்லை.

தேசிய இனப்பிரச்சனை தொடர்பான கொள்கைகள் ஆதிவாதிகள், நாடோடிகள் போன்ற சமுதாயப் பிரிவினரைப் போதிய கணிப்பிலெடுக்கத் தவறியதன் காரணமாக இம் மக்களது உரிமைகள் நாளாந்தம் பறிக்கப்பட்டு வருகின்றன. இலங்கையின் வேடர் சமுதாயத்தின் பிரச்சனையோ நாடோடிகளின் நிலைமையோ தேசிய இனப்பிரச்சினையின் ஒரு பகுதியாகவேனும் இதுவரை கருதப்படாமை கவனிக்கத்தக்கது.

ஒரு மக்கள் பிரிவு தேசிய இனமாகவோ அடையாளங் காணப்பட்டால் அதற்குச் சுய நிர்ணய உரிமை உண்டு. சுய நிர்ணய உரிமை என்றாற் பிரிந்து போகும் உரிமை. பிரிந்து போகும் உரிமையைப் பிரயோகிக்கும் வசதி இல்லாத ஒரு மக்கள் பிரிவுக்குச் சுய நிர்ணயத்தை அதன் முழுமையான



படிப்பகம்

www.padippakam.com

> **அமெரிக்காவையும் இந்தியாவையும் நம்பினால் எல்லாம் கிடைக்கும் என்று நம்புகிறவர்களும் மற்றவரை நம்பப் பண்ணுகிறவர்களும் இருக்கிறார்கள். நம்புகிறவர்களை விட நம்பச் சொல்லுகிறவர்கள் ஆபத்தானவர்கள்.**

அர்த்தத்தில் அனுபவிக்க முடியாது. இது உண்மை. அதனால் அவர்கட்குத் தம் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் உரிமையே இல்லை என்றாகிவிடுமா? அக் காரணத்தால் அவர்கள் தேசிய இனமாக இல்லாது போய்விடுவார்களா?

கடந்த இருபது வருடங்களாக தேசிய இனப்பிரச்சனை அநேக முக்கிய மாறுதல்களுக்கு ஆளாகியிருக்கிறது. இரண்டாவது அகிலத்தின் காலத்திய தேசிய இனப் பிரச்சனையும், லெனினிய காலத்திய தேசிய இனப் பிரச்சனையும் ஒன்றே அல்ல. பரிமாணத்தில் மட்டுமல்லாமல், அவற்றின் உள் தன்மையிலும் அவை தீர்க்கமாக வேறுபட்டுள்ளன.

ஒடுக்கப்பட்ட தேசங்களின் தேச விடுதலை இயக்கங்கள் எப்படிப்பட்ட தன்மை வாய்ந்தவை என்பதைச், சடங்குமுறை ஜனநாயகத்தின் கண்கொண்டு சீர்தூக்கி ஆராயக் கூடாது. அதற்குப் பதிலாக, ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தின் பொதுவான லாப நஷ்டக் கணக்குப் பட்டியல் காட்டுகிறபடி அவை என்ன விளைவுகளை நடைமுறையில் உண்டுபண்ணியிருக்கின்றன என்பதைக் கொண்டு தான் சீர்தூக்கி ஆராய வேண்டும் அதாவது "தனிமை நிலையில் நிறுத்திப் பார்க்காமல், உலக ரீதியில்" சீர்தூக்கி ஆராய வேண்டும் என்று லெனின் சரியாகக் குறிப்பிட்டுள்ளார்.

### பலஸ்தீனம்: நல்லதொரு நிகழ் உதாரணம்

உலகில் மிக நீண்டகாலமாக அடக்குமுறைக்கு ஆட்பட்டிருக்கும் சமூகமாக பலஸ்தீன சமூகம் இருந்து வருகின்றது. பல்லாயிரக்கணக்கான உயிரிழப்புக்கள், பொருள் இழப்புக்கள், நிலப்பறிப்புக்கள் போன்ற பலவற்றையும் தாண்டி இஸ்ரேலிய ஒடுக்குமுறைக்குகெதிராகவும் சியோனிச சண்டித்தனத்திற்கெதிராகவும் ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக பலஸ்தீன மக்கள் போராடி வருகிறார்கள். இஸ்ரேலின் படுகொலைகளும் தொடர்ச்சியான கொலைவெறித் தாக்குதல்களும் பலஸ்தீன மக்களின் மனவுரனைப் பாதிக்கவில்லை. ஒடுக்குமுறைக் கெதிரான போராட்டத்தில் சகலவிதமான போராட்டக் கருவிகளையும் அவர்கள் கையிலெடுக்கிறார்கள். உலகெங்கும் அடக்குமுறைக்கெதிராக போராடும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு உரமூட்டுகிறார்கள்.

பலஸ்தீன மக்களின் விடுதலைப் போராட்டம் அரபு மக்களின் விடுதலையின் முக்கியமான ஒரு குறியீடாக உள்ளது. பலஸ்தீன மக்களின் விடுதலைப் போராட்டம் உலகின் முஸ்லிம் மக்கள் எதிர்நோக்குகிற ஏகாதிபத்திய ஒடுக்குமுறைக்கு எதிரான பிரதான சவாலாகவும் இருக்கிறது. ஆனால், அதை அரபு மக்களுக்கும் முஸ்லிம்கட்கும் மட்டுமே உரியதாகக் கொள்ளக் கூடாது. ஏனெனில், அது உலகளாவிய ரீதியில் ஏகாதிபத்திய ஒடுக்குமுறை, தேசிய ஒடுக்குமுறை, இனவாதம், ஃபாஸிஸ அடக்குமுறை போன்ற பல்வேறு கொடுமைகட்கும் எதிரான போராட்டங்களின் பொதுவான குறியீடாகும்.

இதுவரை பலஸ்தீன மண்ணில் இஸ்ரேல் விளைவித்த சேதங்கட்கு நிவாரணமோ, நட்டஈடோ பற்றி இதுவரை எதுவுமே பேசப்படவில்லை இனியும் எதுவுமே பேசப்பட மாட்டாது. இஸ்ரேலின் பாதுகாப்பு என்கிற பேரில் மத்திய கிழக்கில் தனது குறுக்கீட்டை வலுப்படுத்துகிற அமெரிக்காவின் உண்மையான நோக்கங்கள் மத்திய கிழக்கின் எண்ணெய் வளம் தொடர்பானது. இந்த இடத்தில் தான் பலஸ்தீன மக்களைப் பற்றிய "சர்வதேச" அக்கறை நமக்கு சில பாடங்களைக் கற்பிக்கிறது. அவை மிகவும் முக்கியமான பாடங்கள். ஒடுக்குபவனும் ஒடுக்கப்படுபவனும் இருக்கின்ற சுழலில் யாருடைய ஆதரவு எமக்கு தேவை என்பது பற்றிய தெளிவு இருக்க வேண்டும். அமெரிக்காவையும் இந்தியாவையும் நம்பினால் எல்லாம் கிடைக்கும் என்று நம்புகிறவர்களும் மற்றவரை நம்பப் பண்ணுகிறவர்களும் இருக்கிறார்கள். நம்புகிறவர்களை விட நம்பச் சொல்லுகிறவர்கள் ஆபத்தானவர்கள். அவர்கள் தங்கள் சுயலாபம் கருதியே அப்படிச் சொல்லுகிறார்கள். இஸ்ரேலின் "தற்காப்புக்கான உரிமையை" எப்போதோ ஏற்றுக்கொண்ட ஒபாமா, இஸ்ரேல் பலஸ்தீன மக்களின் மீது நடத்திய வெறியாட்டத்தைக் கண்டிக்க மறுத்து அதை நியாயப்படுத்தியவர். அத்துடன் காஸா மீதான பொருளாதார தடையை பற்றி வாயே திறக்காதவர் என்பதையும் மறக்கலாகாது. ஒபாமா ஆட்சி ஈராக்கிலிருந்து படைகளை விலக்கிக்கொள்ள இருப்பது, அந்த நாட்டின் மீதான ஆக்கிரமிப்புத் தவறானது என்பதனால் அல்ல. இயலாமையாலேயே. அண்மையில் ஒரு நேர்காணலில் அமெரிக்க முன்னாள் சட்டமா அதிபர் ராம்சே கிளார்க் சொன்ன ஒரு விடயம் முக்கியமானது. "பயங்கரவாதத்திற்கு எதிரானது என நடத்தப்படுகிற போர் உண்மையில் இஸ்லாத்திற்கு எதிரான போராகும், பெரும்பாலான அரசியல் தலைவர்கள் இஸ்லாமிய பயங்கரவாதத்தை எதிர்ப்பதாகப் பறைசாற்றிக் கொண்டாலும் உண்மையில் இஸ்லாத்தை முற்றுமாக துடைத்தெறிந்து விடுவதே அவர்களது உண்மையான நோக்கமாகும். அமெரிக்க அரசாங்கம் எப்போதும் ஒரு எதிரியைச் சுற்றியே செயல் படக்கூடியது. தனது செயல் திட்டங்களின் உண்மையான நோக்கத்தை மூடி மறைக்கவும், அமெரிக்க மக்களை ஒருங்கிணைக்கவும் அமெரிக்கா ஒரு புதிய எதிரியை தேடிக் கொண்டிருக்கிறது. தேசப்பற்றை போற்றுவது அதன் உண்மையான நோக்கமன்று. பிறர் மீது மேலாதிக்கம் செலுத்துவதும், பிறரது வளங்களை அபகரிப்பதும்தான் அதனுடைய உண்மையான நோக்கம். அதே வேளை, அவற்றை யாரும் இனங்கண்டுகொள்ளாமல் இருக்க எதிரியை வேட்டையாடுவதாக வெளிவேடம் போடுகிறது. இங்கு தான் அமெரிக்க இராணுவம் தனது முழுமையான பங்களிப்பை செய்கிறது."

இன்று இஸ்ரேலின் கொடுமையைக் கண்டிக்கவும் இஸ்ரேலைத் தனிமைப்படுத்தவும் மூன்றாம் உலக நாடுகளிலிருந்தும் விடுதலை போராட்ட அமைப்புகளில் இருந்தும் மக்கள் இயக்கங்களில் இருந்தும் உரத்த குரல்கள் எழுமானால், அவை இஸ்ரேலின் எசமானனும் அடக்குமுறை ஆட்சிகள் பலவற்றின் ஆதரவுச் சக்தியாகவும் உள்ள அமெரிக்காவையும் தாக்கும். அதை விடுத்து இஸ்ரேல் போன்ற ஒரு நாடு பற்றிய கனவில் மூழ்கி இருப்பதும் அக கனவை வெற்று நம்பிக்கையாக வளர்ப்பதும் மக்களுக்கு இழைக்கின்ற துரோகமாகும்.

இஸ்ரேலின் கொடுமைகளை எதிர்க்கத் தவறுபவர்கள் உலகில் நடக்கிற எந்தக் கொடுமையையும் ஆதரிக்கக்கூடியவர்கள்



படிப்பகம்

www.padippakam.com

என்பதை நாம் மறக்கலாகாது. உள்ளபடி சொல்வதென்றால், மனசாட்சியையும், நீதியையும் கொன்றவர்களால் தான் இஸ்ரேலுக்கு ஆதரவாக பேசவோ, எழுதவோ முடியும். இங்கே சொல்ல வேண்டிய இன்னொரு மிக முக்கியமான செய்தி ஒன்றும் பொதிந்துள்ளது. இஸ்ரேலிய அரசு நடத்துகிற கொடுமைகட்கு எதிரான குரல்கள் எப்போதுமே இஸ்ரேலுக்குள்ளிருந்து எழுந்து வந்துள்ளன. எனினும், சரிக்கும் பிழைக்கும், நியாயத்திற்கும் அநியாயத்திற்கும் வேறுபாடு தெரியாத ஒரு சமூகமாக இஸ்ரேல் சீரழிந்து வந்துள்ளது. பலஸ்தீன மக்களுடைய உரிமைகள் முற்றாக வழங்கப்படாத வரை இஸ்ரேலுக்கு அமைதியோ, பாதுகாப்போ இல்லை என்பதை இஸ்ரேலிய மக்கள் புரிந்து கொள்ளத் தவறுகிறார்கள். ஒரு சமுகம் பலஸ்தீன பயங்கர வாதம் என்று இஸ்ரேல் அரசு சொல்லுகிற காரணத்தை கேள்வியின்றி ஏற்றுக்கொண்டதன் விளைவுதான் இது என்பதை சுட்டியாக வேண்டும். இப்போதெல்லாம் இஸ்ரேலியப் படையினர் செய்கிற எதற்கும் நியாயம் தேவையில்லை என்றாகிவிட்டது.

இஸ்ரேலின் இன்றைய அப்பட்டமான இனவெறிப் போக்கு வலுப்பெற்று, நாட்டின் ஆதிக்கச் சிந்தனையாவதற்கு எவ்வாறு அரசியற் கட்சிகளும் ஊடகங்களும் உதவின என்பதற்கும் மேலாக, இப்போக்கு எப்படி இஸ்ரேலிய சமுதாயத்தைச் சனநாயகமற்ற ஒன்றாகச் சீரழித்துள்ளது என்பது இங்கே கவனிக்கப்பட வேண்டியது. இதன் பலாபலன்களையும் தீமைகளையும் மௌனம் காக்கும் இஸ்ரேலிய மக்களே அனுபவிப்பர். எனவே எந்தவொரு ஆதிக்க மனப்போக்கிற்கும் எதிராகப் போராட வேண்டியது மக்களின் கடமை. அதை மக்கள் தாமாகவே செய்யத் தவறுவார்கள் எனில் துன்பம் வந்து சேரும். வரலாற்றை மக்களே உருவாக்குகின்றனர் என்பதன் உண்மையை நாம் மறக்கிற போது, தனி மனித ஆளுமைகள் மீது மிகையாக நம்பிக்கை வைத்து சமூகப் பொறுப்புக்களைக் குறிப்பிட்ட சிலரது கைகளில் விட்டு விட்டு ஒதுங்கிக் கொள்ளுகிறோம். இது மிகுந்த ஆபத்தானது என்பதற்கு இஸ்ரேலிய சமுகம் ஒரு சான்று. அந்நியர் மீது வைக்கின்ற நம்பிக்கைகள் அவர்களது நலன் சார்ந்ததாகவே இருக்க முடியுமே தவிர எங்களது நலன் சார்ந்ததாக இருக்க முடியாது என்பதற்குப் பலஸ்தீன சமுகம் ஒரு சான்று. ஒடுக்கப்பட்ட மக்களுக்கான ஆதரவானது மக்களாலேயே வழங்கப்பட முடியும் என்ற உண்மை உறைக்க வேண்டும் இல்லாவிடில் போராட்டம் திசை தவறுவது தவிர்க்க முடியாதது.


## தமிழ்த் தேசியவாத அரசியலின் திசைவழிகள்

தமிழ்த் தேசியவாதம் தமிழ் மக்களை எத்தகைய ஒரு அவலநிலைக்கு இட்டுச் சென்றிருக்கிறது என்பதை நாம் இன்று கண்கூடாகப் பார்க்கின்றோம். இந்த அவலத்திற்குப் பொறுப்புச்சொல்ல வேண்டியவர்கள் தமிழ்த்தேசியவாதத் தலைமைகளும் தமிழ்த் தேசியவாதிகளுமே. ஆனால் இன்றும் தங்கள் சந்தர்ப்பவாத அரசியலைத் தொடர்வது பற்றியே இவர்கள் அக்கறையாய் இருக்கிறார்கள். இவர்கள் முகாம்களின் வேலிகளுக்குப் பின்னால் இருந்து இன்றும் அல்லல்படும் மக்கள் பற்றியோ நடந்து முடிந்த பேரழிவு பற்றியோ எதுவித அக்கறையுமற்றுப் புதிய மாயைகளை, கனவுகளை, வெற்று நம்பிக்கைகளை மக்கள் மத்தியில் ஊட்டும் சீரழிவுச் செயற்பாடுகளில் இறங்கியிருக்கிறார்கள்.

விடுதலை என்பது அறஞ்சார்ந்த ஒரு பிரச்சனையுமாகும். அது யாருடைய அறம் எத்தகைய அறம் என்பன பற்றிய கேள்விகள் எப்போதுமே உள்ளன. இதை மக்களாகிய நாம் விளங்கிக்கொள்ள வேண்டும் இல்லாவிடில் தமிழ்த் தேசியவாதம் தமிழ் மக்களை இன்னொரு அவலத்தில் தள்ளிவிடும். தனது இருப்பையன்றி வேறு எதைப்பற்றியும் அக்கறை செலுத்தாத, மக்கள் மீது நம்பிக்கை வைக்காத தமிழ்த் தேசியவாதத்தால் வேறெதையுஞ் செய்ய இயலாது. இதை கடந்த நான்கு தசாப்தகால தமிழ்த் தேசியவாத அரசியலை எமக்குத் தெளிவாகக் காட்டியுள்ளது. தமிழ் மக்களால் தனித்து நின்றுபோராட இயலாது. எனவே, அந்நிய அரசுகளின் ஆதரவு தேவை என்று வாதிப்போர் பழைய பிழைகளையே திரும்பும் செயுமாறு தூண்டுகிற காரியத்தையே திரும்பத் திரும்பச் செய்கிறார்கள். அவர்களின் நோக்கம் சுயநலன் சார்ந்தது மட்டுமன்றி மக்கள் விரோதமானதும் கூட. அந்நிய ஆதரவு என்பது ஒரு ஒடுக்கப்பட்ட சமூகம் அந்நிய அரசுகளிடமிருந்து எதிர்பார்க்கக்கூடியதல்ல. அரசுகளிடையே நடக்கிற காநகர்த்தல்களை ஒரு விடுதலை இயக்கமோ ஒடுக்கப்பட்ட சமூகமோ தீர்மானிக்க முடியாது. எங்கள் அனுபவங்களிலிருந்து நாங்கள் கற்றவை அனைத்தையுமே மறுக்கிற விதமாக எங்கள் தலைமைகளது அரசியல் நடத்தை அமைகிறது. இது மிகவும் ஆபத்தானது. இது குறித்து நாம் அவதானமாக இருக்க வேண்டும். இல்லாவிடின் அதற்கான பலன்களை அனுபவிக்கப்போவது மக்களே அன்றி வித்தைகாட்டுகின்ற தமிழ்த்தேசியவாதத் தலைமைகள் அல்ல.

## நிறைவாக


நாம் எமது வரலாற்றிலிருந்து நிறையக் கற்றிருக்கிறோம். எமக்கு வழங்கப்பட்ட வெற்று வாக்குறுதிகள், நம்பிக்கைகள், எதிர்பார்ப்புகள் இன்னமும் அப்படியே எம்மைச் சூழ்ந்திருக்கின்றன. வடிவங்களும் பாத்திரங்களும் பாத்திரங்களை ஏற்பவர்களும் மட்டும் மாறியிருக்கின்றன. வேறெதுவும் மாறவில்லை. வராத கப்பலிலிருந்து, எதையும் பெற்றுத் தராத அண்டைத் தேசம் வரை எல்லாவற்றையும் பார்த்தாகிற்று. மக்கள் தங்கள் விடுதலையை தங்கள் தோள்களில் ஏற்றுச் சுமக்கும்வரை பேச்சுக்களும் வெற்றுக் கோஷங்களும் தொடர்ந்து கொண்டே இருக்கும். அவர்கள் தொடர்ந்தும் மக்களின் பேரால் மக்களையே ஏய்ப்பர். ■





படிப்பகம்

www.padippakam.com



# மானுடம் வென்றதம்மா

## மனித உறவுகளின் உன்னதங்களைக் கிளர்ந்தெழத்தூண்டும் "மிருச்சகடிகம்" நாடகத்தை முன்னிறுத்திய ஒரு தேடல்

*ந. இரவீந்திரன்*

"மானுடம் வென்றதம்மா" - கம்பராமாயணத்தில் வெளிப்பட்ட இந்த முழக்கத்தை முன்னிறுத்தி ப.ஜீவானந்தம், கவியுள்ளமொன்று பொதுமை நாட்டம் கொள்ளும் பாங்கை வெளிப்படுத்தியிருப்பார். அநீதி ஒழிக்கப்பட்டு நீதியின் வெற்றிபற்றிய அக்கறை எப்போதும் இருந்து வந்துள்ளது. நிலப்பிரபுத்துவச் சமூகமுறைமை நிலைநிறுத்தப்பட்ட சூழலில் கம்பர் இந்த விருப்பைக் காட்டுவார். இதற்கு ஆயிரம் ஆண்டுகளின் முன்னர்கூட மானுடத்தின் மேன்மைக்கான அவா மேலோங்கி வந்ததைக் காணவியலும். இந்த "கூட" அழுத்திச் சொல்லப்படக் காரணமுண்டு. அப்போதுதான் ஆதிக்கம்பெற்ற மருதத் திணை ஏனைய திணைகளை வென்றடக்கி, ஏற்றத்தாழ்வுச் சமூக முறை நிதர்சனமாக அடிகோலி இருந்தது. அதனைச் சாத்தியப்படுத்திய "வம்ப வேந்தரின்" புதுமைச் சாதனை பாடிப்பரவப்பட்டபோதே, "எவ்வழி நல்வழி ஆடவர், அவ்வழி வாழிய நிலனே" என்ற அவ்வையின் குரலும் ஒலித்தது. ஆட்சியாளரின் வேறெந்த திறனையும் முன்னிறுத்துவதைவிடுத்து "நல்வழி" வலியுறுத்தப்படும்போது, மானுடம் மேன்மைபெறும் மார்க்கம் மனம் கொள்ளப் படுகிறது எனப் புரிதல்கொள்ள இயலுமாகிறது.

நல்வழிப்பட்ட ஆட்சி குறித்த வள்ளுவரின் வரையறையில் அதிசயிக்கத்தக்கவண்ணம் மக்கள் நலநாட்ட அரசுக்குரிய பண்புகள் மேலோங்கியிருக்கக் காணலாம். நியாயமான வரியைக் கடந்து கூடுதல் அபகரிப்பைச் செய்யும் அரசை வேலேந்திக் கொள்ளையடிக்கும் வழிப்பறிகாரர் என்றே அடையாளப்படுத்துவார் வள்ளுவர். அல்லற்பட்டு ஆற்றாது அழும் மக்களின் கண்ணீர் கொடுங்கோலாட்சியை வீழ்த்தும் என்பார். பின்னாலே வணிக ஆதிக்கத்தைத் தகர்த்து விவசாயத்துக்கான அரசியலுக்கு அரசை மாற்றுவதில் பக்திப் பேரியக்கம் மக்களை அணிதிரட்ட ஏற்றதாக அல்லற்பட்ட மக்கள் பற்றிய வள்ளுவர் குரல் அமைந்தது எனலாம்.

மானுட நேசிப்புடனான கவியுள்ளங்கள் இவ்வகையில் மானுடத்தின் பொதுமை குறித்து அக்கறைகொண்டு பலவாறு கருத்துரைத்தபோதிலும் மனிதர் உணவை மனிதர் பறித்து உண்ணும் அவலம் மேவியதாய், உழைப்போர் பட்டினியில் வாட - அவர்களை வென்றடக்கிச் சுரண்டுவோர் உழைப்பில் பங்கின்றியே ஆடம்பரச் சுகபோக வாழ்வைக் காணும் அதேவேளை, அந்தத் தண்டச் சோறுண்போரே உயர்வானவர் எனப் போற்றும் தலைகீழ் விழுமியம் தோன்றி வளர்ந்த காலமாக இவை இருந்தன. "உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம், வீணில் உண்டு களிப்போரை நிந்தனை செய்வோம்" என்ற பாரதியின் குரலே தமிழில் முதன்முதலில் இந்தத் தலைகீழ் விழுமியக் கோலத்தை மாற்றும் புரட்சி அறைகூவலை விடுத்தது. அந்தப் புரட்சிப் பிரகடனத்தை வென்றெடுக்கும் நடைமுறைச் சாத்தியம் உருவாகி ஏறத்தாழ நூறாண்டு கடக்கும் நிலை ஏற்பட்டுள்ளபோதிலும், மானுடம் வெல்லுவதென்ன, மனுக்குலம் உட்படப் புல்பூண்டனைத்தையும் அழிக்கும் கோர யுத்த சாகரத்தில் உலகை நாசகாரப் படுத்துவதை முதலாளித்துவச் சுரண்டலாளர்கள் செய்வதிலிருந்து காக்கமுடியுமா என்ற கேள்வியே இன்று மேலோங்கியுள்ளது.

அதற்கான காரண காரியங்களைத் தேடுவதோ, தீர்வுக்கான வழிமுறையை நாடும் மார்க்கம் பற்றி அலசுவதோ இக்கட்டுரையின் நோக்கமல்ல. தமிழில் வள்ளுவரின்



படிப்பகம்

www.padippakam.com

குரல் சாத்தியப்பட்டபோது (கி.பி.நாலாம் நூற்றாண்டில்) சமஸ்கிருதத்தில் எழுந்த ஒரு நாடகத்தின் அரங்க அனுபவம் குறித்து இங்கு பார்க்கலாம். இந்த விவாதத்தினூடாக எமது எதிர்கால மார்க்கம் பற்றிய தேடலுக்குரிய விவாதத்தை தொடங்க இயலுமாயின் அதுவே போதுமானதாய் அமையும்.

-- *1* --

"மிருச்சகடிகம்"என்பதன் பொருள் சிறிய மண்வண்டில் என்பது. நாடகத்தின் இறுதிக் காட்சிகளில்தான் அந்தச் சிறிய மண் வண்டில் வரும்; கதையின் தொடக்கத்தில் அதற்கான மாற்றம் ஏற்பட்டிருக்கும். பொன்னிற வண்டில் வைத்து விளையாடத்தக்க பிள்ளையையுடைய குடும்பமொன்று களிமண் விளையாட்டு வண்டிலையே பிள்ளைக்கு கொடுக்கத் தக்க வறுமைநிலைக்காளான மாற்றம் தொடக்கத்தில் வரும். காட்சியில் பிள்ளை முன்னதாக வருவதில்லை. சூத்திரகரால் கி.பி. நாலாம் நூற்றாண்டில் எழுதப்பட்டது இந்த நாடகம். இதே சமகாலத்தில் முன்பின்னாக தமிழின் "சிலப்பதிகாரம்" காப்பியம் பிறந்தது. மிருச்சகடிகம் சமஸ்கிருத நாடகம் என்பது தவிர அதன் பேசுபொருள் சிலம்பு காட்சிப் படுத்தும் வாழ்க்கைக் கோலங்களிலிருந்து எவ்வகையிலும் வேறானதல்ல.

சாருதத்தன் என்ற வணிகன் செல்வச் செழிப்போடு இசையிலும் ஆடல்பாடல்களிலும் மூழ்கித்திளைப்பவன்; வசந்தசேனை எனும் அழகிய கணிகை அவனை எதிர்கொண்டபோது இருவரும் காதல்வயப்படுவர். ஆயினும் இணைதல் வாய்க்காமல் பிரிவு நிகழும். வசந்தசேனையைக் காதல் வேண்டி அரசனின் மைத்துனன் துரத்தியவாறிருந்ததால் அப்போதைக்கு காதல் மனதோடு இருவரும் பிரிந்திருப்பர். அடுத்த காட்சியில் சாருதத்தன் வறுமையெய்துவான்; இசையும் ஆடல்பாடல்களும் அவன் மாளிகையினின்றும் நீங்கிப் போய்விடும். அரசனின் மைத்துனனின் துரத்தலிலிருந்து தப்பித்துவரும் வசந்தசேனை சாருதத்தன் வீட்டில் தஞ்சம் புகுவாள்; அவனின் வறுமை கண்டு, தனது நகைகளைக் கொண்டு இழந்த வணிக வாய்ப்பை மீட்கட்டும் என்றுகருதி, இரவில் தான் திரும்புவதால் கள்வர் பயம் எனக்கூறி அவற்றை அடைக்கலப் பொருளாக வைத்திருக்குமாறு கூறிக் கழற்றிக் கொடுத்துவிட்டுச் செல்வாள்.

அதன் உள்நோக்கத்தைப் புரியும் வாழத்தெரிந்த பேர்வழியென்றால் முன்னதாக அவன் வறுமை எய்தியிருக்க மாட்டான்; வணிகத் தோல்வியைவிட, இல்லையென்று வரும் ஏதிலர்க்கு வாரிவழங்கியே அவன் வறுமையுற்றிருந்தான். இப்போதும் ஒன்றைப் பத்தாக்க முயலாது அடைக்கலப் பொருளாகவே பாதுகாத்து வந்தான். திருட்டைத் தொழிலாகக் கொண்டிராது, வசந்தசேனை வீட்டில் அடிமைப்பட நேர்ந்த தனது காதலியை மீட்கப் பணம் வேண்டித் திருடவரும் இளைஞன் "விதிவசத்தால்" சாருதத்தன் வீட்டில் திருடிய நகைகளோடு வசந்தசேனை வீட்டுக்கு செல்வான்.

அங்கே முன்னதாக வேலைக்காரியாயுள்ள தனது காதலியைக் கண்டு தனது நோக்கத்தை அவ்வாலிபன் கூறுவதை மறைவிலிருந்து வசந்தசேனை கேட்டிருப்பாள்; அவனோடு அவன் காதலியை அனுப்பும் எண்ணத்துடன் இருந்தவளுக்கு நகைகளைப் பார்த்ததும் சாருதத்தனின் நேர்மை புரியும். அதைவிட, களவுபோனதை மறைத்து அவன் மாற்று நகைகளைக் கொடுத்தபோது, அவனோடேயே தனது காதல் வாழ்வு இணைய வேண்டும் என்ற உறுதி வலுப்படும். ஒரு கணிகைக்குரிய வாடிக்கையாளரை மகிழ்விப்பதிலிருந்து விலகி அவனோடு வாழ முடிவு செய்வாள். அதற்கு வாய்ப்பாக, அல்லது பிரச்சனையாக அமைவது அவளிடம் வந்துசேர்ந்த சாருதத்தனின் விலைமதிப்பற்ற மாணிக்கமாலை. அனைத்தையும் இழந்த கணவனை இன்னமும் அந்தக் கணிகையிடம் தான் இழந்துவிடவில்லை என்பதால், தலைவி அந்த மாணிக்கமாலையைக் கொடுத்துக் கணவனை மீட்க முயன்றிருந்தாள். தலைவி இப்போதெல்லாம் அவனோடு உரையாடுவதில்லை-வேலையாட்கள் வாயிலாகவே ஊடாட்டங்கள். மனைவி தன் வறுமை நிலையைத் தொட்டுக் காட்டும் ஒரு சந்தர்ப்பமாய் மருகுவான் சாருதத்தன். இருந்தாலும் அந்தக் கணிகை மீதான காதலை வளர்ப்பதில் இந்தத் தலைவன் குறை வைக்கவில்லை.

அவனோடான அந்த உள்ளப் பிணைப்பைக் கொண்டிருந்த வசந்தசேனை மாணிக்கமாலையைத் தலைவியிடமே அனுப்பிவைப்பாள். இந்த நிலையில்தான் அந்தச் சிறிய மண் வண்டில் வரும். சாருதத்தனின் சிறிய மகன் முன்னதாக பக்கத்து வீட்டுச் சிறுவனின் பொன்னிற வண்டிலோடு விளையாடியது இன்றைய வறுமையால் இல்லாது போன நிதர்சனம் புரியாது, இந்தச் சிறிய மண்வண்டில் வேண்டாம், பொன்னிற வண்டில் வேண்டும் என அடம்பிடிப்பான். செவிலித்தாய் அவனை வசந்தசேனையிடம் அழைத்து வந்து தீர்வுக்கு வழி கோரியபோது, வசந்தசேனை தனது நகைகளைக் கொடுத்து பொன்னிறவண்டில் வாங்கச் சொல்வாள். அந்த நகைகளையும் மாணிக்கமாலையையும் மீண்டும் வசந்தசேனையிடம் கொடுப்பதற்காக தலைவி இறுதிமுயற்சி எடுத்தபோது இருவரிடையேயான உணர்ச்சிப் பரிமாறல் மாற்றத்தை ஏற்படுத்தும். அந்தச் சிறுவன் தனது மகன் என்பதால் நகைகள் அவனுக்காகலாம் என வலியுறுத்துவாள், வசந்தசேனை. இது தமிழின் வீரயுகப் பாடலில்(சங்க இலக்கியத்தில்) ஏற்கனவே கண்டகாட்சிதான்; தலைவியின் மகனைப் பரத்தை தன் மகனாக ஆரத்தழுவுவது அங்கே பேசப்பட்டிருந்தது.

மனமாற்றம் பெற்று வசந்தசேனையின் உண்மைக் காதலுக்கு மதிப்பளித்த தலைவி வசந்தசேனையைக் கணவர் சென்றிருக்கும் பூந்தோட்டம்சென்று, அனைத்தையும் இழந்து போய்விட்டதாய் மனச் சோர்வடைந்த அவனை மகிழ்விக்குமாறு கூறி அனுப்புவாள். அங்கு செல்லவேண்டியவள் தவறொன்றினால் அரசனின் மைத்துனனால் அனுப்பப்பட்ட வண்டிலில் சென்று மாட்டுப்பட்டிருப்பாள். தன்னை ஏற்க மறுத்த வசந்தசேனையை அக் கொடியவன் தாக்கியதில் மூர்ச்சையுறுவாள் வசந்தசேனை. அவள் இறந்துவிட்டதாகக் கருதி அவன் வெளியேறியபோது வந்துசேர்ந்த சருதத்தனின்மீது கொலைப்பழியைப்போடும் அரசனின் மைத்துனன், மரணதண்டனையைத் தீர்ப்பாக்கி நிறைவேற்றும் எத்தனிப்பில்.

இந்த அகவாழ்வுப்போராட்டத்தின்போது வெளியே புற வாழ்வுப்போராட்டத்தில் அடிப்படையான ஒருமாற்றம் ஏற்பட்டிருந்தது. வசந்தசேனையிடமிருந்து தனது காதலியை மீட்டுச் சென்று கொண்டிருந்தானல்லவா "திருட்டு" வாலிபன்; போகும் வழியில் அவன் அறியும் செய்தியால் காதலியைத் தனியே வீடுபோக அனுப்பிவிட்டுச் சமூகப் பொறுப்பேற்க அவன் கிளம்பியிருப்பான். அவனது உற்ற நண்பனான இடையரிளவல் அரசனால் சிறைப்பட்டிருப்பதான செய்திதான் அவனைச் சமூகப் பணிக்கு மீட்டிருந்தது. இவனால் சிறை மீட்கப்பட்ட இடையரிளவல் தப்பிச் செல்லும் வழியில் சாருதத்தன் உதவியையும் பெற்றிருந்தான். இறுதிக் கட்டத்தின்போது கொடுங்கோல் அரசனை வீழ்த்தி ஆட்சியைப் பொறுப்பேற்றிருந்தான். அவனது பணிப்பின்பேரில் "திருட்டு" நண்பன் சாருதத்தனின் புதிய பதவியை அறிவிக்கும்பொருட்டுவரும்போது கொலைக்களத்திலிருந்து மீட்கப்படுவான். கூடவே அரசனின் மைத்துனனின் கபடங்கள் அம்பலத்தில்; இறந்ததாக விடப்பட்ட வசந்தசேனையின் அசைவிலிருந்து உண்மையறிந்த துறவியொருவரால்



படிப்பகம்

www.padippakam.com

காப்பாற்றப்பட்ட வசந்தசேனையும் கொலைக்களத்திற்கு வந்து உண்மைகளை வெளிப்படுத்தியிருப்பாள் - அவளையும் அவளூடாக சாருதத்தனையும் காப்பாற்றும் துறவியுங்கூட முன்னர் சாருதத்தனின் உதவியைப்பெற்றவர்தான். இப்போது மக்களும் கொடுங்கோலரசுக்கு எதிரான புதிய அரசுக்கு ஆதரவாக ஒருங்குதிரள்வர். எல்லாம் நலமே!

--2--

எவரும் எதிர்பார்க்கக்கூடியவாறு பல நூற்றாண்டுகளின் முந்திய இந்த நாடகத்தை இப்போது மேடையேற்றுவது அவசியமா என்ற கேள்வி எழவே செய்துள்ளது. ஏப்ரல் மாத முடிவில் கொழும்பில் “மிருச்சகடிகம்” மேடையேற்றப்பட்டபோது, சொந்தப் பெண்டாட்டி அவ்வளவு ஆதரவாயிருக்க அவருக்கு இன்னொரு காதல் வேண்டிக்கிடக்கோ என்ற கேள்வியெழக் காணமுடிந்தது. சரி, அதைவிட்டுப் பார்த்தால் நாடகம் எப்படி என்ற போது “உண்மைதான் - அற்புதமாயிருந்தது” என்ற பதிலே வந்தது. இருவாரங்களின் பின்னர் நண்பர் சி.ஜெயசங்கரின் “மிருச்ச கடிகம் நாடக ஆற்றுகையும் அதன்போது வெளியிடப்பட்ட பிரசுரம் ஆகியவற்றை முன்வைத்து...” என்ற விமர்சனம் “தினக்குரல்” பத்திரிகையில் வந்ததைப் பார்த்தபோதும் நண்பர்கள், இந்த விமர்சனங்களைக் கடந்து நாடகம் நன்றாய்த்தானே இருந்தது என்ற பதிலையே காணமுடிந்தது.

> போருக்குப் பின்னரான சூழலில் பெரும் பொருட் செலவில் உயர் கல்வி நிறுவனமொன்றின் அரங்கியல் மாணவர்களை ஆதாரமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட மிருச்சகடிகம் நாடகம் ஈழத்துத் தமிழர்களின் நவீன அரங்க வரலாற்றில் ஒரு புறநடையாகவே காணப்படுகின்றது.

ஜெயசங்கர் முன்வைத்த விமர்சனத்தில் அடிப்படையான இரு அம்சங்களுண்டு. ஒன்று அரங்கியல் பிரச்சனை. நாடகத் தரப்பினரும் சரி, விமர்சனத்தை முன்வைத்த நண்பரும் சரி அரங்கியல் துறைக் கல்விப் புலம் சார்ந்தவர்கள். அவர்களைமீறி நாங்கள் மூக்கை நுழைப்பது அதிகப்பிரசங்கித்தனம் என்பதைச் சொல்லித் தெரியவேண்டியதில்லை. அரங்கியல் நுட்ப விவாதங்கள் கடந்து ரசனை நிலையிலிருந்து நாம் பேசுவதில் தப்பிருக்காது. இந்த நாடகம் சமஸ்கிருதப் பிரதி என்கிறவகையில், சமஸ்கிருத அரங்கு பற்றிய பரிச்சயத்துடன் அல்லது அந்த மரபுகளை உள்வாங்கிக்கொண்டு வெளிப்பட்டிருக்க வேண்டும் - ஆற்றுகை கிழக்கு பல்கலைக் கழக மற்றும் விபுலானந்தர் கலைக் கல்லூரி நாடக கற்கை மாணவர்கள் பங்கேற்பு என்கிறவகையில் இந்த எதிர்பார்ப்பு சரியானதுதான். அதை அவர்கள் தமது கல்விக் கலந்துரையாடலிலும் பெற்றுக்கொள்ள இயலும். பொது ரசனை என வரும்போது சினிமாப்பாணியில் அமைந்துவிட்டது என்பது விமர்சகரின் குற்றச்சாட்டு.

இப்போது எமது கவனிப்புக்குரியது, விமர்சகர் வெளிப்படுத்தும் அரசியல் குற்றச்சாட்டுகள் தொடர்பானது. அரங்க அரசியல், இனத்துவ அரசியல் என்கிற இரு தளங்களிலும் விமர்சனம் முன்வைக்கப்பட்டுள்ளது. “போருக்குப் பின்னரான சூழலில் பெரும் பொருட் செலவில் உயர் கல்வி நிறுவனமொன்றின் அரங்கியல் மாணவர்களை ஆதாரமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட மிருச்சகடிகம் நாடகம் ஈழத்துத் தமிழர்களின் நவீன அரங்க வரலாற்றில் ஒரு புறநடையாகவே காணப்படுகின்றது.ஏனெனில் ஈழத் தமிழரது நவீன அரங்கு பேராசியர் க. கணபதிப்பிள்ளை காலம் தொடங்கி இற்றைவரை ஒடுக்குமுறைகளுக்கு எதிராகவும், விலக்கிவைத்தல்கள், விளிம்பு நிலைகளில் வைத்திருத்தல் என்பவற்றை கேள்விக்குட்படுத்தியும் மாற்றுத்தளங்கள் பற்றிய உரையாடல்களை முன்மொழிந்துமே இயங்கி வருவது வரலாறாக இருக்கிறது....கடந்த அறுபது ஆண்டுகளுக்கும் மேலான ஈழத் தமிழர்களின் நவீன அரங்க வரலாறு உலகத்தின் புதுமைகளைத் தன்னகத்தே உள்வாங்கி இயங்கிவருவதுடன், புதுமைகளை உருவாக்கியும் அளித்திருக்கிறது என்பதும் யதார்த்தம்”.

இந்த அரங்க அரசியலில் நவீன கலைத்துவ மேன்மையைக் கடந்து சினிமாப்பாணிக்கு இந்த நாடகம் சென்றிருப்பதாகக் குற்றம் சாட்டப்படுவதை ஏற்க இயலவில்லை. இங்கு சொல்லப்படும் வகையில் கணபதிப்பிள்ளை தொடக்கிவைத்த மரபின் தொடர்ச்சியான மற்றொரு புதுமையாகவே “மிருச்ச கடிகம்” அரங்க ஆற்றுகை அமைந்திருந்தது. இதனைச் சினிமாப் பாணியெனக் கொச்சைப்படுத்திவிட முடியாது. அப்படித்தான் அந்தக்கலப்பு உள்ளது என்றால் மேன்மையான கலைத்துவ எழுச்சியைப் பாதிக்கும் வகையிலாய் இல்லாமல் செழுமைப்படுத்தும் அளவிலேயே அமைந்துள்ளது. இந்த இணைவு(சினிமாத் தாக்கம் கலைத்துவத்தைச் சிதைக்காமல் நாடக அனுபவத்தை மேன்மைப்படுத்தல்) புதுமையின் பாற்பட்டதே.

இதற்கு தமிழக அரங்கியலாளரான வெளி ரங்கராஜன் கருத்தைத் துணைக்கு எடுப்பது அவசியமாகின்றது. அங்கு நவீன நாடகத்தை மக்களிடம் எடுத்துச் செல்வதுகுறித்த கருத்தாடல் ஒன்று வெளி ரங்கராஜன் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டிருந்தது. அதன்போது இக்கருத்தை அவர் முன்வைத்தார்; தி.மு.க. எழுச்சியுறுவந்த ஐம்பதாம் ஆண்டுகளில் நாடக மேடைகளை உச்ச அளவில் பயன்படுத்திக்கொண்டனர். அந்த நாடகங்களின் பெரும் பகுதி அவர்களது கொள்கைவிளக்க உரைவீச்சுக்களாயே இருந்தன. நாடக அரங்கைப் பேச்சு மேடையாக்கியதற்கு மறுதலையாக, அரசியல் பிரசார மேடையை ஒருவகை நாடகப் பாங்குக்குரியதாக்கிக் கொண்டனர்; அதுவரை ஒரேயிடத்தில் நின்று பேச்சாளர் உரையாற்றுவது என்ற மரபை உடைத்துக்கொண்டு, அவர் உணர்ச்சி வேகத்துக்கு அமைவாக அங்கும் இங்கும் பாய்ந்து பாய்ந்து பேசி நாடக அனுபவத்தை உணர்த்தும் பாங்கு ரசிக்கத்தக்கதாயே இருந்தது. இரு(நாடக, பேச்சு) அரங்கங்களின் தனித்தனியேயான புனிதங்களை ஒரு தேவையின் நிமித்தம் உடைத்துக்கொண்டு மக்களை ஈர்க்க முடிந்தமை கவனிப்புக்குரியது; அதனின்றும் நவீன அரங்கியலாளர் கற்றுக்கொள்வது அவசியம் என்பது வெளி ரங்கராஜன் கருத்தாகும்.

அன்றைய சினிமாக் கலையிலும் திராவிடர் இயக்கத்தினர் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தியிருந்தனர். முன்னதாக கூத்துப்பாணியின் தாக்கம் சினிமாவில் அதிகமிருந்து, ஒரே பாட்டுக்கச்சேரியாக இருந்த பண்பை மாற்றி சினிமாவையும் பேச்சு மேடை போலாக்கிக் கொண்டனர். ஐம்பதுகளின் முடிவிலிருந்து எழுபதுகளின் தொடக்கம்வரை தமிழ்கூறு நல்லுலகின் ஒலிபெருக்கிகள் எங்கும் பராசக்தி, மனோகரா, வீரபாண்டிய கட்டப்பொம்மன் வசனங்கள் தூள்கிளப்பி



படிப்பகம்

www.padippakam.com

யிருந்தன. புதிய சினிமா நடிகன் ஆவதற்கான பிரதான பயிற்சிக்குரியதாக இந்த வசனங்களைப் பேசிக்காட்டுவது அவசியமாயிருந்தது. இந்த வசனங்களைப் பேசிநடித்த சிவாஜி கணேசன் சினிமா ஊடகத்தையே புரிந்து கொள்ளாமல் நாசப்படுத்தியிருந்தார் என்ற குற்றச்சாட்டுக்குள்ளாக நேர்ந்தது. அந்தக் குற்றச்சாட்டிலிருந்து அவரை மீட்டது மிக முக்கிய திறனாய்வு ஆளுமையான கா. சிவத்தம்பி என்பது கவனிப்புக்குரியது. இலக்கியத்தில் அழகியல் வாதத்துக்கு சரியும் அவரது திறனாய்வுக் கருத்துக்கள் வெளிப்பட்ட போது, பொதுவாக தமிழ்ச் சினிமா குறித்தும் குறிப்பாக சிவாஜி கணேசன் மறைவின் போது அந்தக் கலை ஆளுமை குறித்தும் கா.சி. எழுதிய கட்டுரைகள் வீச்சுடையனவாக இருந்தன. எண்பதுகளின் அழகியல் வாத அலை இலக்கியத்துறை விமர்சனத்தில் அவரை ஆட்டம் காணச் செய்தபோதிலும், அரங்கியல் தளத்தில் அவரை அசைக்க இயலவில்லை என்பதை சினிமா குறித்த அவரது ஆய்வுகள் காட்டின. தமிழ்ச் சினிமா வளர்ச்சியில் தமிழ்க் காப்பிய மரபினதும் பார்சி நாடகக் கலை மரபினதும் தொடர்ச்சி தாக்கம் புரிவதை விளங்கிக்கொள்வது அவசியம் என்பதை இதன்போது சிவத்தம்பி வலியுறுத்திருந்தார்.

மறுதலையாக, நாடக அரங்கின்மீது சினிமா அதன் சாதகமான பாதிப்பை ஏற்படுத்தமுடிந்தால் அரங்கப் புனிதம் எதுவும் சிதைந்துவிடப் போவதில்லை; செழுமைப் படுத்துவதாயே அந்தத் தாக்கம் கொள்ளத்தகும். "மிருச்ச கடிகம்" அரங்காற்றுகையில் இருந்திருக்கத்தக்க சினிமாவின் தாக்கம் என்பது அத்தகைய புதுமைக்கான பரிமாணத்துக்குள் மட்டுப்பட்டு விடத்தக்கதே. காட்சிப் படிமங்களும், நடிகர்களின் உடல்மொழியும் முழுமையான அரங்க அனுபவத்துக்குப் பார்வையாளர்களை ஆற்றுப்படுத்தி, இக்கலைப்படைப்பு எத்தகைய வாழ்வனுபவத்தை ரசிகமனங்களில் ஏற்படுத்த வேண்டுமோ அதற்குரிய அளவில் வெளிப்பட்டன. சினிமாத்தனமான மலினம் ஏற்பட வாய்ப்புள்ள கணிகையான வசந்தசேனையின் பாத்திரமேற்று நடித்த மாணவியின் ஒவ்வொரு அசைவும் நளினங்களும் உரையாடலும் அற்புதமான கலை அனுபவங்களாய் அமைந்து நாடகப் பிரதி வெளிப்படுத்த முனைந்த வாழ்வனுபவத்தை ரசிகர்களிடம் தொற்றவைப்பதாகவே அமைந்திருந்தன. இதைப் பார்வையாளர்கள் விதந்துரைப்போடு சொல்லிச் சென்றதை அவதானிக்க முடிந்தது. அவ்வாறே "திருடனாக" பாத்திரமேற்றவர் வெளிப்படுத்திய உடல்மொழிகளும் எவ்வகையிலும் மிகைப்படாமல்(அல்லது சினிமாத்தனமாயில்லாமல்), அளவோடு சொல்லவேண்டியதைச் சொன்னதாகவே அமைந்திருந்தது. அரசனின் மைத்துனன், சாருதத்தன்-அவனது அணுக்கத்தொண்டனான பிராமணன்(இவரது பேச்சு சிலவேளைகளில் புரிதலுக்கு அப்பாற்பட்டதாக அமந்திருந்தது) ஆகியோரும் அடுத்தநிலையில் பார்வையாளர்களின் கவனத்தை ஈர்த்திருந்தனர். சொன்னாற்போல, சிறிய மண்வண்டிலோடு விளையாட்டுக் காட்டி, படைப்பின் மையக்கருவாக இருந்த வாழ்வில் "விதியின்" விளையாட்டை வெளிப்படுத்தவேண்டிய அளவோடு உணர்த்தி நடித்த பாடசாலைச் சிறுவனும் பாத்திரம் அறிந்து போடத்தக்க வேடம் பூண்டிருந்தமையும் பார்வையாளர்களது கவனத்தை ஈர்ப்பதாக அமந்திருந்ததைச் சொல்லமறந்துவிட முடியாது. தவிர, ஒவ்வொரு பாத்திரத்துக்குமுரியவர், அந்த அரங்கு வெளிப்படுத்த முனைவதில் தனக்குரியதைப் புரிந்து கொண்டு இயங்கியிருந்தார்கள் என்பது அழுத்தி வலியுறுத்துவது வெறும் சம்பிருதாய பூர்வமான பாராட்டாக அமையாது.

உண்மையில் இந்த நாடகம் பற்றிப் பேசவேண்டும் என்ற தூண்டலை ஏற்படுத்துவதில் இந்த அரங்காற்றுகையில் பங்கேற்ற ஒவ்வொருவரது அர்ப்பணிப்பான பங்களிப்பும் காரணியாக அமைந்தது என்பது வலியுறுத்தப் படுவது அவசியம்.

என்னதான் அரங்கக் கல்வி உயர் நிறுவன மாணவர்கள் என்றபோதிலும், சமூக அக்கறையோடு இத்தனை தொகை மாணவர்கள் ஒருங்கு திரண்டு பொறுப்புணர்வுடன் இயங்கி இருக்கிறார்கள் என்பதைப் பாராட்டாமல் இருக்க முடியாது. தவிர இந்த வளம் எதற்காகப் பிரயோகிக்கப்பட்டுள்ளது என்பதும் கவனிப்புக்குரியது. அது சார்ந்ததாகவே ஜெயசங்கரின் அடிப்படையான விமர்சனம் அமந்திருந்தது. அது அழுத்தம் கொடுத்துக் கவனிக்க வேண்டிய ஒரு அம்சமே.

--3--

இந்த நாடகம் ஏற்கனவே சிங்களத்தில் "மெட்டி கரத்தய" என மண்வண்டில் என்ற பொருள்பட 2000 ஆம் ஆண்டிலிருந்து மேடையேற்றப்பட்டு வருகிறது; அதன் நெறியாளர் சிங்கள அரங்கின் சமகால ஆளுமைகளில் ஒருவரான பராக்கிரம நெறியெல்ல. அவ்வாறு சிங்கள மொழிபெயர்ப்பிலிருந்து தமிழாக்கப்பட்ட "மிருச்சகடிகம்" சமஸ்கிருதத் தலைப்போடு, பராக்கிரம நெறியெல்லவின் நெறியாள்கையில் தரப்பட்டுள்ளது. தமிழ் அரங்க ஆற்றுகைக்கு நிர்வாக நெறியாளராக தமிழ் அரங்கின் சமகால ஆளுமைகளில் ஒருவரான சி. மௌனகுரு திகழ்கிறார். இந்த சிங்கள-தமிழ்க் கூட்டு விமர்சனத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த நாடக வாயிலான இணைப்பு கலாசார ஒற்றுமைக்கு வழிசமைக்கும் என நம்பப்படுவதாக நாடகம் தொடர்பிலான பிரசுரம் ஒன்று கருத்துரைத்துள்ளது. இது தொடர்பில் ஜெயசங்கர் கடும் ஆட்சேபத்தைத் தெரிவித்துள்ளார். "உரிமைகள் பற்றிய நிலைமைகளுக்கும், விடயங்களுக்கும் விளக்கங்கள் காணமுடியாமல் பேசப்படுகின்ற கலாசார ஒற்றுமை என்பது எங்கனம் சாதாரணமாக எடுத்துக்கொள்ளக்கூடியது? கலாசார சங்கமம் பற்றிப் பேசப்படுகின்ற பொழுதுகளில் எழுகின்ற கேள்விகளில் அடிப்படையானவை எவை? வித்தியாசமான பண்பாடுகளின் கொண்டாட்டம் பரிந்துரைக்கப்படாமல் கலாசார சங்கமம் முன்மொழியப்படுவதன் நோக்கம்தான் என்ன?" எனும் நியாயமான கேள்விகளை எழுப்புகிறார் ஜெயசங்கர்.

இந்த நாடக முயற்சியை மட்டும் பார்த்தால் கலையிலும் சிங்கள மேலாதிக்கத்துக்கு இடம் கொடுத்தது போன்ற தோற்றம் எழலாம்தான்; அவ்வாறன்றி, பராக்கிரம நெறியெல்லவின் தொடர்ச்சியான முந்திய முயற்சிகளையும் பார்ப்போமானால் இந்தச் சந்தேகம் அவசியமற்றது எனப் புரிந்துகொள்வோம். அவர் யுத்த காலத்திலேயே தமிழ்க் கலைஞர்களைச் சிங்கள மக்கள் மத்தியில் கொண்டு சென்றவர். ஒரு பிரதியை, தமிழில் சிங்கள நடிகர்களை வைத்தும் சிங்களத்தில் தமிழ் நடிகர்களை வைத்தும் மேடையேற்றி பார்வையாளர்களின் பாராட்டைப் பெற்றவர். தேசிய கலை இலக்கியப் பேரவையுடன் இணைந்து கொழும்பில் மேற்கொண்ட இதுபோன்ற முயற்சிகளைப் பார்த்திருக்கிறேன். ஜெயசங்கர் இந்த முயற்சிகளை அறிந்திருப்பார் என்றே நம்புகிறேன்.

பண்பாட்டு ஆக்கிரமிப்பு உணர்வோடு இயங்கியவரல்ல பராக்கிரம நெறியெல்ல. சிங்களக் கலைஞர்களின் நட்புணர்வைத் தமிழ் மக்களுக்கு வெளிப்படுத்தும் சமத்துவப் பண்பைக் காட்டுவதோடு, சிங்கள மக்களுக்குத் தமிழர் பிரச்சனைகளைத் தெளிவுபடுத்த முயற்சிக்கிறவர். இந்தக் குணாம்சம் இல்லாதிருப்பதே இலங்கையின் பெரும் சாபக் கேடாகும். தமிழ்க் காங்கிரஸ், தமிழரசுக் கட்சி, தமிழர்விடுதலை கூட்டணி என்பன தமிழர் மத்தியில் வெறும் இனவாதத்தை வளர்க்கும் அரசியல்



படிப்பகம்

www.padippakam.com

யுத்தத்தினூடாக தமக்கான பாராளுமன்ற ஆசனங்களைப் பெருக்கினரே அன்றித் தமிழர் பிரச்சனைத் தீர்வுக்காக எந்தப் போராட்டங்களையும் முன்னெடுத்தவர்களல்ல; அதோடு சிங்கள மக்கள் தவறான புரிதல் கொள்ள வாய்ப்பளித்து அங்கே தம்மைப்போன்று சிங்கள இனவாதிகள் ஆதாயம் பெற வாய்ப்பேற்படுத்திக் கொடுத்தனர். முப்பது வருட யுத்தத்தின் அரசியலும் இதேபோன்றே இருதரப்பு இனவாதிகளும் மக்களைப் பிளவுபடுத்துவதாய் இருந்ததன்றி வேறல்ல. இந்த ஆதிக்கக் கும்பல்களுக்கு தமிழ்-சிங்கள மக்கள் ஐக்கியப்படக் கூடாதென்பதே அடிப்படைக் குறிக்கோள். இதனைத் தகர்த்து இருஇன மக்களும் ஐக்கியப்படுவதை விடுதலையை நேசிக்கும் எவரும் வரவேற்றாக வேண்டும். அதனையே பராக்கிரம நெறியெல்லவும் மௌனகுருவும் இங்கே செய்துள்ளார்கள்.

கொழும்பில் இந்த நாடகத்தை முதன் முதலில் பார்த்த சிங்கள மக்கள் தம்மால் புரிந்துகொள்ள முடிந்ததாகக் கூறியதைக் கேட்க முடிந்தது. ஒரு அரங்கில் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் ஒன்றிணைந்து இருப்பதே இன்று பெரும் மகிழ்வுக்குரிய அம்சம்; அதனூடாக பரஸ்பரப் புரிந்துணர்வுக்கு வர என்ன செய்யப்பட வேண்டும் என்பதைத் தேடுவது அவசியம். அரசியல் அரங்கில் உரிமைகுறித்து எழுப்பப்படும் செயல் ஒழுங்குக்கு இந்த ஐக்கியம் வலுச்சேர்க்குமே அன்றி, இனப்புரிந்துணர்வு என்பது எவ்வகையிலும் காட்டிக்கொடுப்பாக மாட்டாது. தமிழ்த் தேசியம் ஆண்டபரம்பரை மமதையை வெளிப்படுத்துவதும், சிங்களப் பேரினவாதம் ஏனைய சிறு தேசிய இனங்களை ஆக்கிரமிப்புக் கொள்ள முனைவதும் இத்தகைய கலைஞர்கள் ஏற்படுத்தும் 'கலாசார ஒற்றுமையால்' முறியடிக்கப்படும் வாய்ப்பே அதிகம். ஒரு அரங்கியல் கலைஞரும் அத்துறையின் கல்வி இயலாளருமான ஜெயசங்கர், மக்களைப் பிளவுபடுத்தும் பிற்போக்கு அரசியல்வாதிகள் போலன்றி, மக்களை ஒன்றிணைக்கும் உயர்ந்த கலையுள்ளத்தையே வெளிப்படுத்துவார் என நம்பலாம்.

--4--

இனப்புரிந்துணர்வையும் இன ஒற்றுமையையும் ஏற்படுத்துவதை இந்த நாடகப் பேசுபொருள் எந்த அளவில் சாத்தியப்படுத்த வல்லது? சொந்த மனைவிக்கு துரோகமிழைப்பதும், கொடுங்கோலரசைக் கிளர்ச்சியில் வீழ்த்துவதை முனைப்பாக்காமல் அடக்கி வாசிப்பதும், ஏவலாளர்கள் மேல் சவாரி செய்யும் உயர்சாதி மனப்பாங்கை வெளிப்படுத்துவதும் என எதிர் விழுமியங்களைப் பேசு பொருளாக்கியுள்ள இந்த நாடகமா இனப்புரிந்துணர்வை ஏற்படுத்திவிடப் போகிறது என்ற கேள்வியை மேலோட்டமாகப் பார்க்கும்போது நியாயம் போலவேபடும். மாறாக, முதல் பார்வை அனுபவத்தில் இத்தனை உத்தம குணங்களைக் கொண்டிருக்கும் தலைவன் கணிகையை நாடுவதென்பது தவிர்ந்த ஏனைய அம்சங்கள் எதுவும் நெருடலாக இருந்ததில்லை.

வணிக மேலாதிக்கம் நிலவிய அதே வேளை அதன் வீழ்ச்சியோடு நிலப்பிரபுத்துவம் ஆதிக்கம் பெறவுள்ள மாற்றத்துக்கு சற்று முன்னதாக உள்ள காலமான கி.பி. நாலாம் நூற்றாண்டுக்குரிய கதை இது. வீழ்ச்சியுறும் வணிக ஆதிக்கத்தின் ஒரு குறியீடே சாருதத்தன் என்ற வணிகனின் வறுமையுறுதல் எனக் கருதலாம். செல்வச் செழிப்பின் மேட்டிமைப் பண்பின் வெளிப்பாடன்றி, ஏவலர்களுடனும் நட்பாகப் பழகும் பாங்கே நாடகம் முழுமையிலும் காணமுடிந்தது. கணிகையும் இலகுவாய் தனது அடிமைப் பெண்ணை காதலனுடன் அனுப்ப மனம் ஒப்புகிறவளாயுள்ளாள்.

ஆணாதிக்கம் என்கிற வகையில் மனைவியோடு பேச்சு வார்த்தையில்லாமல் கணிகையை நாடும் தலைவன், மற்றும் காதலை ஏற்க மறுக்கும் கணிகையை வன்முறையால் அடைய முயலும் அரசனின் மைத்துனனின் துரத்தலும் இறுதியில் கொலை செய்யக்கூடிய அளவுக்கு ஆதிக்கத்தை வெளிப்படுத்துவதும் என்பவை கவனிப்புக்குரியன. இவை கூட மறுவாசிப்புக்குள்ளாகும்போது மாறுபட்ட அனுபவங்களைத் தரக் காணலாம்.

வறுமை எய்திய நிலையில் அவனது பொறுப்பற்ற தன்மையின் மீதான தனது எதிர்ப்புணர்வைத் தலைவி பேசாது ஒதுக்குவதன் வாயிலாக வெளிப்படுத்துகிறாள். அவளது மாணிக்கமாலை தரப்படும்போது தன் இயலாமையை அவள் இடித்துரைப்பதாக தலைவன் மறுகுவதில் அவனது தாழ்வுமனப்பான்மை வெளிப்படக் காணலாம். அதற்கான மாற்றாக கணிகைமீதான காதல் அமைகிறது. இதன் மறுதலை நடத்தையைச் சிலப்பதிகாரத்தில் காணலாம். மாதவி எனும் கணிகையுடனான காதல் வாழ்வில் பணம் அனைத்தும் தேய்ந்த தாழ்வுமனப்பான்மையோடு இருந்த கோவலன், சிறு ஊடலில் அவளைப் பிரிந்து மனைவி கண்ணகியை நாடிவருவான். வருபவனைத் தெருவில் நிறுத்தி நாக்கைப்பிடிக்கிற மாதிரிக் கண்ணகி நாலு கேள்வி கேட்காதது அன்றைய ஆணாதிக்க ஏற்புக்கு அமைவான காப்பிய வார்ப்பு; இன்றைய விழிப்புணர்வில் கண்ணகி குற்றக்கூண்டில் நிறுத்தப்படுவதைக் காணலாம். இந்த நாடகத்தில் முன்னதாக தனது வலிமையான எதிர்ப்புணர்வைத் தலைவி காட்டுகிறாள்.


அதுசரி, பிறகு எல்லாத்துக்கும் சேர்த்து கணவனை மகிழ்விக்க கணிகையைக் கூட்டிக்கொடுப்பவளாக அல்லவா காட்டப்படுகிறாள்? இங்கு ஆணாதிக்கத்துக்குரிய அம்சம் இருப்பது மெய்; அதைமீறி, கண்ணகியை விடவும் ஆளுமைக்குரிய பெண் என்பதை தலைவி உணர்த்தத் தவறவில்லை. கணிகை அந்தக் குடும்பத்தின் ஒரு அங்கமாகி இழந்த அவனது வணிக வாய்ப்பை மீட்டுக் கொடுத்து, தலைவிக்குமான நம்பிக்கையையும் தருகிறவளாக இங்கு உள்ளநிலையில், அவளது உண்மைக் காதலைத் தலைவி ஏற்றுக் கொள்கிறாள். இந்த மீட்பின் பின்னர் தாழ்வுமனப்பான்மையிலிருந்து தலைவன் மீள உள்ள வாய்ப்பினால் கணிகையோடு மட்டுமன்றித் தலைவியோடும் அன்னியோன்ய வாழ்வை அவன் சாத்தியப் படுத்த இயலும். அன்றைய பரத்தைமையை ஏற்புக்குரியதாய்க் கொண்ட வாழ்முறை இப்படைப்புக்கு வெளியேயான விமர்சனங்கள் ஊடாக மாற்றத்துக்குக் கொண்டுவரப்பட வேண்டிய ஒன்று.

இதற்கு அப்பால் மனித உறவுகளிடையே அன்றைய சமூக வளர்ச்சி ஏற்பட்ட தன்மைக்கு அமைவாக உன்னதப் பண்புகளை வெளிப்படுத்துவதாக இந்த நாடகம் அமைந்திருப்பது அழுத்தி வலியுறுத்தப்பட வேண்டிய அம்சமாகும். அநீதிக்கு எதிரான போராட்டமும் அன்றைக்கான அளவில் வெளிப்பட்டிருக்கிறது எனலாம். இக் காரணங்களினாலேயே இந்த நாடகப் பிரதியை ஒரு இலக்கிய வடிவமாய் கதிரவேல்செட்டியார் தமிழாக்கியபோது, அதற்கு விபுலானந்த அடிகள் முன்னுரை எழுதியிருந்தார். இப் பிரதியின் நாடகக் குணாம்சத்தில் துண்டாக்கலுக்கான நவீனத்துவ வாய்ப்பிருந்ததால் ஜெர்மனிய நாடக மேதை பிரெக்ட் இந்த நாடகத்தை விதந்துரைத்தார். (இது குறித்து உரையாடலின் போது இக்கருத்தை மௌனகுரு கூறியிருந்தார்; மேல் விபரங்களை அவர் விளக்க வேண்டும்). தவிர சமூக நோக்கிலான எமது பார்வையோடு, அரங்கியல் நோக்கும் இணைந்த மேலும் வளரும் திறனாய்வுகள் இன்னும் பல உண்மைகளை வெளிக்கொணரும் என நம்பலாம். ■



படிப்பகம்

www.padippakam.com



# யாழ்ப்பாணக்குடாநாட்டில் தமிழ்மொழியின் பிரயோக எல்லை இருப்புக்களின் தொன்மநிலையைக் காட்டும் சாசனமூலங்கள்

செல்லையா கிருஷ்ணராசா

ஈழத் தமிழரது வரலாற்றுக் கட்டுமானத்திற்கு அடிப்படையாகத் தேவைப்படுவது சாசனச் சான்றுகளே. இலங்கையைப் பொறுத்தமட்டில் சாசனவியல் ஆய்வுகள் இன்னும் தொடக்க நிலையிலேயே இருந்து கொண்டிருப்பதன் காரணத்தினால் வரலாற்று எழுத்தியலுக்கு விஞ்ஞான அடிப்படையில் அதனைப் பயன்படுத்துகின்ற பண்பு உருவாகவில்லை. இந்நிலையில் ஈழத்தில் தமிழ்ச்சாசனவியல் வரலாறானது பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் முயற்சிகளுடனேயே தோற்றுவிக்கப்பட்ட நிலையில் பேராசிரியர் வேலுப்பிள்ளை, பேராசிரியர் இந்திரபாலா, பேராசிரியர் பத்மநாதன் ஆகியோர்களுடைய ஆக்கபூர்வமான முயற்சிகளுடன் உருப்பெற்றுக் கொண்டமையைக் காணமுடிகிறது. இருந்தும் அத்துறையை வளர்த்தெடுத்துச் செல்லும் வழியை (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தோற்றுவிக்கப்பட்டு இரு கால்நூற்றாண்டாகியும்) எவருமே உருவாக்கிக் கொடுக்க முன்வராமல் இருந்து கொண்டிருப்பது மிகவும் வேதனைப்பட வைக்கும் ஒரு விடயமாகும்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் சாசனக் கண்டுபிடிப்புக்கள் மிகவும் குறைவாகவே நிகழ்த்தப்பட்டுள்ளன. இதற்குக் காரணம் இத்துறையில் ஆர்வம் காட்டும் ஆய்வாளர் மிகவும் குறைந்த எண்ணிக்கையில் இருப்பதெனலாம் அல்லது இப் பிராந்தியத்தின் இயற்கையமைப்பு எண்ணிக்கையில் கூடுதலான சாசனங்கள் உருவாவதற்குத் தடையாக அமைந்திருக்கக்கூடும். அதற்கு மேலாக, அந்நியர் ஆட்சிக்கால யாழ்ப்பாணத்தில், குறிப்பாக போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் ஆகியோர்களது ஆட்சிக்காலங்களின்போது இப் பிராந்தியத்தில் காணப்பட்ட சாசனப் பதிவுகள் அழிக்கப்பட்டிருக்கலாம். பொதுவாகப் போர்த்துக்கீசரும், ஒல்லாந்தரும் சாசனப்பதிவேடுகளைத் தாம் அமைத்த கோட்டைச் சுவர்களுக்கும் அத்திவாரங்களுக்குள்ளும் இட்டு மறைத்துவிடுகின்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர் என்று கூறப்படுகின்றது.

பேராசிரியர் கா. இந்திரபாலாவின் தனிப்பட்ட முயற்சி காரணமாக யாழ்ப்பாணத்துச் சாசனங்கள் பற்றிய ஆய்வுப் புத்தூக்கம் பெற்றிருந்தது. சாசனவியற்துறையில் இவர் பல கண்டுபிடிப்புக்களையும், பதிப்புக்களையும் தொல்லியல் வரலாற்று நோக்கில் மேற்கொண்டிருந்தமையைக் காணலாம். தமிழ்ச் சாசனங்களின் முக்கியத்துவத்தினை வெளியுலகிற்குத் தெரியப்படுத்துவதற்கான நோக்கில் எபிகிராபியா தமிலிக்கா (Epigraphia Tamilica) என்ற சாசனவியற் பதிவேடொன்றினையும் ஆரம்பித்து வைத்தார். இதுவரையில் யாழ்ப்பாணக் குடாநாட்டிற் கண்டு பிடிக்கப்பெற்ற தமிழ்ச் சாசனங்களைப் பற்றிய தகவல்களை இப் பதிவேட்டிலிருந்தும்,




படிப்பகம்

பேராதனைப் பல்கலைக்கழகத்திலிருந்து வெளிவந்திருந்த "சிந்தனை" என்ற சஞ்சிகையில் தொடர்ச்சியாக வெளிவந்த அவரது "யாழ்ப்பாணத்துக் கல்வெட்டுக்கள்" என்ற ஆராய்ச்சிக் கட்டுரையிலிருந்துமே அறிந்து கொள்ள முடிகின்றது. பேராசிரியர் இந்திரபாலா தமிழ்ச் சாசனங்களை உள்ளடக்கிய தனது இரண்டாவது தொகுப்பினை (Epigraphic Tamilica Vol. II) அச்சிடுவதற்கு ஆயத்தமாகிய நிலையில் பல்கலைக்கழகச் சேவையை விட்டு நீங்கி, வெளிநாட்டு சென்றமை எமது சமூகத்திற்கு ஏற்பட்ட இழப்புகளில் ஒன்றாக அமைந்தது. சாசனவியற் துறையில் அவரது சேவையைத் தொடர்வதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் எவருமே உருவாக்கப்படாமல் இருக்கின்றமையும் எமது துர்ரதிர்ஷ்டமேயெனலாம்.

கிருஷ்ணராசா ஆகியோர் இத் துறையில் முழு ஈடுபாட்டுடன் உழைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. சாட்டியிலிருந்தும் புநகரியிலிருந்தும் கந்தரோடையிலிருந்தும் வரணியிலிருந்தும் மாயக்கையிலிருந்தும் ஏராளமான தொல்லியல் மூலங்கள் மீட்டெடுக்கப்பட்டு, ஈழத் தமிழர் வரலாற்றின் இருப்பின் தொன்மம் உறுதிப்படுத்தப்பட்டது. அதன்விளைவாக தமிழ் பிராமி மட்பாண்டச் சாசனங்களில் பொறிக்கப்பட்ட வாசகங்கள் ஊடாக தமிழர் வரலாற்றுச் செய்திகள் பல கிடைக்கப்பெற்றன. அவை வட இலங்கைவாழ் தமிழ் மக்களின் இருப்பினை உறுதிப்படுத்தும் புதிய வரலாற்று ஆவணங்களாகும்.

*1.* **ஆனைக்கோட்டை தமிழ் பிராமி முத்திரைச் சாசனம்**



ஆனைக்கோட்டை சாசனம்

கடந்த இரு தசாப்த காலகட்டத்திலிருந்து யாழ்குடாநாடு பொறுத்து தொல்லியற் கண்டுபிடிப்புக்கள் பல நிகழ்த்தப்பட்டு வருவதனைக் காண்கின்றோம். 1980இலிருந்து ஆனைக்கோட்டை அகழ்வாய்வினூடாக யாழ்ப்பாணத்தின் தொல்லியல் வரலாற்றிற் பலமாற்றங்கள் நிகழ்ந்து வந்துள்ளன. ஈழத் தமிழர் வாழ்வியல் தொடர்பான ஏராளமான தொல்லியற் சான்றுகள் இக் காலப்பகுதியில் வெளிக்கொணரப்பட்டு, தமிழர் வரலாறு தொடர்பான புதிய விளக்கங்கள் வெளிக்கொணரப்பட்டன. பேராசிரியர்களான இந்திரபாலா, இரகுபதி, புஷ்பரட்ணம், சிற்றம்பலம், பத்மநாதன்,

1980இல் ஆனைக்கோட்டையில் உள்ள கரையாம்பிட்டி ஈமச்சாலையில் மேற்கொண்ட அகழ்வாய்வின் பெறுபேறாக இத் தமிழ்ப் பிராமி முத்திரைச் சாசனம் மீட்கப்பட்டது. திராவிடப் பண்பாட்டுக் குறிகாட்டியான கறுப்பு-சிவப்பு மட்கலமொன்றினுள் பாதுகாக்கப்பட்டிருந்த இம் முத்திரை செம்பினாலான ஒரு மோதிரமாகும். இரண்டு வரிகளில் எழுத்துக்களின் பொறிப்பினைக் கொண்டிருக்கும் இம் முத்திரைச் சாசனம் கீழ்வரியில் கோவேதம்ஃகோவேதம் என்ற வாசகத்தினைக் கொண்டிருக்கின்றது. கி.பி. முதலாம் நூற்றாண்டிற்கும்

www.padippakam.com

முற்பட்ட காலப் பகுதிக்குரிய இவ் வரிவடிவமானது ஈழத் தமிழர் பயன்படுத்தியிருந்த பழந்தமிழ் வழக்கினை ஐயத்திற்கிடமின்றி எமக்கு நிரூபித்துள்ளது. தென்னிந்திய திராவிட-பெருங்கற்காலப் பண்பாட்டுப் பரப்பில் கிடைத்த ஒரேயொரு செம்புச்சாசனம் இது என்பதனை எவருமே இதுவரையில் மறுத்துரைக்கவில்லை. அவ் வகையில் ஈழத் தமிழர் பண்பாட்டுப் பரப்பில் கிறிஸ்துவுக்கு முற்பட்ட சகாப்தத்தில் கோன் முறையொன்று வளர்ச்சி பெற்றுவிட்டிருந்தமையை ஆனைக்கோட்டை முத்திரைச் சாசனம் உறுதிப்படுத்தி நிற்கின்றது. அவ் வகையில் ஈழத் தமிழரின் வரலாற்றுத் தொன்மையை மிகத் தெளிவாகக் காட்டிய முதலாவது தொல்லியற் சான்றும் இதுவெனலாம்.

## 2. பூநகரி "வேளிர்" தமிழ்ப் பிராமிச் சாசனம்

யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு தென்மேற்கேயுள்ள பூநகரியும் அதனுடன் இணைந்த நிலப்பரப்புக்களும் வரலாற்றுக்கு முற்பட்ட-பிற்பட்ட தொல்லியற் தடயங்களை நிறையவே கொண்டிருக்கின்றன. அவ் வகையில் குடாநாட்டிற்கு வெளியே தமிழ்ப் பிராமிச்சாசன வழக்குமுறை மக்கள் வாழ்வில் பங்கெடுத்திருந்த தன்மையைப் பூநகரியிலிருந்து கண்டெடுக்கப்பட்ட தமிழ்ப் பிராமி மட்பாண்ட சாசனங்கள் திட்டவட்டமாகவே உறுதிப்படுத்தியுள்ளன. அவற்றுள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்குவது "வேளிர்" என்ற குலப்பெயர் பொறிக்கப்பட்டு கிடைத்த ஒரு மட்பாண்டச் சாசனமாகும். ஈழத்தினதும் தென்னிந்திய தொல்லியலாளரதும் கவனத்தினை ஒருங்கே ஈர்த்த இச் சாசனமானது சங்ககால வாழ்க்கை முறையை ஒத்த பண்பாடும் குலமுறையும் ஈழத்தின் வட பகுதியில் இருந்தது என்பதனைத் திட்டவட்டமாகவே உறுதிப்படுத்தியுள்ளது.

சங்ககால இலக்கியங்களில வேளீர் மரபு பற்றிய பல அரிய வரலாற்று செய்திகளை நாம் காண்கின்றோம். சிற்றரச மரபு ஒன்று வேளீர் குல மக்களிடம் காணப்பட்டிருந்த தன்மையை அச் சான்றுகள் எமக்கு எடுத்துக்காட்டுகின்றன. எனவே இப் பின்னணியில் பூநகரி வேளீர் தமிழ்ப் பிராமி மட்பாண்ட சாசனத்தையும் அதன் வரலாற்று முக்கியத்துவத்தையும் நோக்கும்பொழுது கி.பி. முதலாம் நூற்றாண்டளவில் பூநகரியில் கோன்மை முறையைத் தழுவிய அரச குடும்பமொன்று ஆட்சி புரிந்திருக்க வேண்டுமென்பதனை உறுதிப்படுத்திக்கொள்ளலாம். இதனை மேலும் அங்கிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சங்ககால நாணயங்களும் உறுதிப்படுத்தி நிற்கின்றன. பூநகரியில் பெருங்கற்பண்பாட்டு தடயங்களும் அவ்வாறான ஒரு கோன்மைமுறையை மேலும் உறுதிப்படுத்துகின்றன.

## 3. கந்தரோடையில் கிடைத்த "பதி" மட்பாண்டச் சாசனம்

மிகவும் அண்மைக் காலத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட ஒரு தொல்லியற்சான்று என்ற வகையில் கந்தரோடை "ஆபதி" மட்பாண்டத் தமிழ்ப் பிராமிச்சாசனம் ஈழத் தமிழர் வரலாற்றிற்கு மேலும் உதவுவதாக உள்ளது. கறுப்பு - சிவப்பு மட்கலத்தில் பொறிக்கப்பட்ட இச் சாசனம் தொடர்ச்சியானதாகப் பொறிக்கப்பட்டிருந்தும் எமக்கு "ஆபதி எ.." என மட்டுமேயுள்ள வாசகம் மாத்திரம் கிடைத்துள்ளது. தமிழ்ப் பிராமி வாசகத்தினைக் கொண்டுள்ள இச் சாசனம் கி.பி. 1ஆம் நூற்றாண்டிற்கும் முற்பட்டது என்பதனை அதன் வரிவடிவ முறைமையிலிருந்து கண்டுகொள்ள முடிகிறது.

பழந்தமிழ் வழக்கில் "ஆ" என்பது பசுவினையும், "பதி" என்பது தலைவனையும் குறித்து நின்றமையால் "ஆபதி" என்பது பசுக்களின் தலைவன் என்ற பொருளில் கொள்ள முடியும். அவ்வாறாயின் அதுவும் "கோன்மை" தொடர்பாகவே சங்ககால வாழ்வு மரபில் கையாளப்பட்டிருந்த தன்மையை சங்க இலக்கியங்கள் வாயிலாகக் கண்டுகொள்ள முடிகிறது. ஆநிரை கவர்தல் - ஆநிரை மீட்டல் என்பன சங்ககாலத்து அரசமுறையோடு தொடர்புபட்டதாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. பசுக்களைச் செல்வமாக உடையவனே அரசன் என்பது இதனாற் பெறப்படும். அவ் வகையில் குடாநாட்டுப் பரப்பினுள் கந்தரோடையிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட "ஆபதி" என்ற தமிழ்ப் பிராமிச் சாசனமானது ஈழத் தமிழர் வரலாற்றின் கோன்மையை எடுத்துக்காட்டியுள்ளது. ஈழத்து வரலாற்று இலக்கிய மூலாதாரங்களில் குறிப்பிடப்படாத இச்செய்தியை, கந்தரோடை தமிழ்ப் பிராமி மட்பாண்டச் சாசனம் தருவதிலிருந்து அம்மக்கட்கூட்டத்தின் தொன்மையான பண்பாட்டு எல்லையை, கிறிஸ்தவ சகாப்த காலத்திற்கும் முற்பட்ட நூற்றாண்டுகளுக்கு எடுத்துச்செல்ல முடிகின்றது.

## 4. கந்தரோடை அபிசிதன் மட்பாண்டச்சாசனம்

1985 இல் கந்தரோடையில் இக்கட்டுரையாசிரியரினால் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வின்போது இவ்வாசகம் பொறிக்கப்பட்ட மட்பாண்டச்சாசனம் கிடைக்கப்பபெற்றது. தமிழ்நாட்டுக்குரிய பழந்தமிழ் பிராமிவரிவடிவமாக கறுப்புச்சிவப்பு மட்பாண்டத்தில் பொறிக்கப்பட்டுக்கிடைத்த இச் சாசனம் மிகவும் வரலாற்று முக்கயத்ததுவம் வாய்ந்ததாகும். அன் விகுதியுடன் முடிவடைகின்ற இச் சாசனம் தமிழ்ப் பிராமி வரிவடிவப்பிரயோகத்தினை கந்தரோடையில் திட்டவட்டமாக உறுதிப்படுத்திய ஒரு சாசனப் பதிவேடாகும்.

## யாழ்ப்பாணத்து மத்தியகால தமிழ்க்கற்சாசனங்கள்

யாழ்ப்பாணத்தில் கிடைத்துள்ள தமிழ்கற்சாசனங்கள் யாவும் பிற்பட்ட சோழர் காலத்திற்குரியனவாகவும், சில அதற்கும் பிற்பட்டனவாகவும் காணப்படுகின்றன. இதுவரையில் கிடைக்கப்பெற்றுள்ள சோழர்காலத் தமிழ்ச் சாசனங்களைப் பற்றிய தகவல்களை எபிகிரதபியா தமிலிக்கா என்ற சாசனப் பதிவேட்டிலிருந்தும், அச்சாசனங்கள் தொடர்பாக வார ஏடுகளில் வெளிவந்திருந்த கட்டுரைத் தொகுப்புக்களில் இருந்துமே பெற்றுக்கொள்ள முடிகிறது. அவை யாழ்ப்பாணப் பண்பாட்டு வரலாற்றுக் கட்டுமானத்திற்கு உரிய வரலாற்று மூலகங்களாகவும் அமைகின்றன. அவ் வகையின் ஊர்காவற்றுறை கடற்கோட்டையிலிருந்து மீட்கப்பட்ட இரண்டு சாசனங்கள், அதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் பிரதான வீதியில் உள்ள தேனீர்க்கடை வாசலில் கண்டுபிடிக்கப்பட்ட சாசனமொன்று, பின்னர் நயினாதீவிற் கண்டுபிடிக்கப்பட்ட சாசனமொன்றும் இறுதியாக உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் கோவிலிலிருந்தும், நாயன்மார்க்கட்டுப் பிள்ளையார் கோவிலிலிருந்தும் கண்டுபிடிக்கப்பட்ட சாசனங்களும் கள்வியற்காட்டுச் செப்பேட்டுச் சாசனமும் இங்கு ஆய்வுக்குட்படுத்தப்படுகின்றன.

### ஊர்காவற்றுறைக் கல்வெட்டுக்கள்:

ஊர்காவற்றுறைக் கடற்கோட்டையிலிருந்து இக் கல்வெட்டுக்களை முதன்முதலில் கண்டுபிடித்தவர் திரு. ஹேபட் கெனமன் என்பவராவர். இக் கல்வெட்டுக்களைத்



படிப்பகம்

தாங்கிய கற்றுண்கள் அக் கோட்டையின் வடகிழக்குப் பக்க மதிலில் அடித்தளத்திலிருந்து 11 அடி உயரத்தில் வைத்துக் கட்டப்பட்டிருந்தது. 1968இல் இலங்கைத் தொல்பொருளாய்வுப் பகுதியினரால் அக் கற்றுண்கள் அங்கிருந்து அகற்றப்பட்டு, அவற்றின் மைப்பிரதி எடுக்கப்பட்டுப் பதியப்பட்டது. அதனைத் தொடர்ந்து 1969 ஏப்ரலில் பேராசிரியர் இந்திரபாலாவினால் தெளிவான முறையில் மைப்பிரதி எடுக்கப்பட்டுச், சாசனம் வாசிக்கப்பட்டது. அதன் பின்னர் அவற்றின் வரலாற்று முக்கியத்துவத்தினை "எபிகிரபியா தமிலிக்கா" என்னும் சாசனப் பதிவுச் சஞ்சிகையில் முதலாவதாக எழுதி வெளியிட்டிருந்தார்.

வைரமான சுண்ணக் கற்றுணில் இச் சாசனம் பொறிக்கப்பட்டுள்ளது. இரண்டு பக்கங்களில் பொறிப்புக்களைக் கொண்ட இச் சாசனம் தனித்தனியான சாசன வாசகத்தினை உள்ளடக்கியுள்ளது.

இச் சாசனம் பொறிக்கப்பட்ட காலத்தில் அத்தூண் வாயிற்படியில் கதவுநிலைக்கு பயன்படுத்தப்பட்டிருக்கலாம் எனவும் அதனைக் கருத இடமுண்டு. அதன் நீளம் 37 அங்குலங்களாகும்.

> யாழ்ப்பாணத்தில் கிடைத்துள்ள தமிழ்கற்சாசனங்கள் யாவும் பிற்பட்ட சோழர் காலத்திற்குரியனவாகவும், சில அதற்கும் பிற்பட்டனவாகவும் காணப்படுகின்றன.

இந்திரபாலா இச் சாசனங்களை மாதோட்டம்-ஊர்காவற்றுறைக் கல்வெட்டுக்கள் எனப் பெயரிட்டுள்ளார். அவரது கருத்தின் பிரகாரம் இது மாதோட்டத்திலிருந்து கடல் வழியாக ஹமென்ஹில் கோட்டைக்குக் கொண்டு செல்லப்பட்டிருக்க வேண்டும் என்பதும், இதனை ஒரு கல்வெட்டின் உட்பொருளைக்கொண்டு அறியக்கூடியதாக உள்ளது எனவும், "இதனாலேதான் இக் கல்வெட்டுக்களை மாதோட்டம்-ஊர்காவற்றுறைக் கல்வெட்டுக்கள் என குறிப்பிட்டுள்ளேன்" எனவும் அவர் கொள்வதனைக் காணலாம்.

இக் கல்வெட்டில் இரண்டு பக்கங்களிலும் சாசனவாசகம் காணப்பட்டிருந்த பொழுதிலும், முதலில் ஒருபக்க வாசகத்தினையே இந்திரபாலா வாசித்திருந்தார் (1969-04-16). மற்றைய பக்கத்தில் காணப்பட்ட சாசனவாசகம் சுண்ணச்சாந்தினால் பெருமளவுக்கு மூடப்பட்டிருந்தமை காரணமாக முதலிரு வரிகளையே அவரால் வாசிக்க முடிந்திருந்தது. பின்னர் 1978இல் சுண்ணச்சாந்தினை நீக்கி சாசன வாசகத்தினை வாசித்து அதன் முழுமையான வரலாற்று முக்கியத்துவத்தினையும் வெளிப்படுத்தினார். அப் பகுதியை மைப்பிரதி எடுக்காமலேயே வாசிக்க முடிந்திருந்தது என்பதனை அவர் மேலும் குறிப்பிட்டதிலிருந்து அச்சாசன வாசகம் மிகவும் தெளிவாக இருந்தது என்பதும் புலனாகின்றது.

**வரிவடிவம்:**

இவ்விருபக்கப் பொறிப்புக்களிலும் வரிவடிவமானது கிரந்தமும் தமிழும் கலந்த முறையில் பொறிக்கப்பட்டுள்ளமையைக் காணலாம். பொறிப்பில் காணப்படுகின்ற மொழிநடையானது பிற்பட்ட சோழர் காலத்துக்குரிய சாசனத் தமிழ் மரபாக உள்ளது. இவ்விரு பக்கப் பொறிப்புக்களின் பொருளையும், சாசனம் பதியப்பட்டதிற்கான நோக்கத்தினையும் பூரணமாக அறிந்து கொள்வதற்குத் தடையாகவிருப்பது அக்கல்லின் எஞ்சிய அடிப்பாகம் கிடைக்காமையே. எனினும் இவ்விருபக்கச் சாசனப் பதிவுகளில் சில முக்கியமான வரலாற்றுத் தகவல்களை அறிந்துகொள்ள முடிகின்றது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

***சாசனத்தின் பாடப்பிரதி:***

*1ம் பக்கம்*

ஸ்வஸ்தி ஸ்ரீ ஈழமுழுவதுங்
கொண்டு ஈழத்தரைசரையும்
பெண்டிர் பண்டாரமும்
பிடிச்சுக் கொடுபோன அதிகாரத்
தண்ட நாசகனார் ஐயங்கொண்ட
சோழ மூவேந்த வேளாளன்
மாதோட்டமான இராசராசபுர ..

*2ம் பக்கம்*

ஸ்வஸ்தி ஸ்ரீ ஈழமானமும்
முடிச்சோழமண்டலத்து
பாண்டியன் குலதனமாக
வைத்த முடியும் ஈழத்
தரையர் தம் முடியும்
ஆங்கவன் தேவி முடியும்
பெண்டிர் பண்டாரமும்
பிடிச்ச் கொடுபோன அதிகாரத்
தண்ட நாயகன்...

முதலாம் பக்கத்தில் உள்ள சாசனப் பதிவில் முதல் 17 வரிகள் மட்டுமே காணப்படுகின்றன. இரண்டாம் பக்கத்தில் முதல் 18 வரிகள் மட்டும் கிடைத்துள்ளன. இச் சாசனப் பதிவின் கீழ்ப்பாகம் உடைந்திருக்கக்கூடும் அல்லது மிகுதிப்பதிவு வேறொருகல்லில் பதியப்பட்டிருக்கக்கூடும் என சந்தேகிக்கப்படுகிறது. எனவே இரு பக்கப் பதிவுகளிலும் வரிகள் முற்றுப்பெறாதவொரு நிலையில் உள்ளன என்பதனை உணரலாம்.

இவ்விருபக்கச் சாசனப் பதிவுகளை நோக்கும்பொழுது முதலில் வாசிக்கப்பட்டதே முதலிற் பொறிக்கப்பட்டது என்பதும் மற்றது சிறிதுகாலம் பிந்திப் பொறிக்கப்பட்டிருந்தது என்பதும் தெளிவாகின்றது. இதனை அப் பதிவுகளின் பொருளமைதியிலிருந்து உணர்ந்து கொள்ளக்கூடியதாகவுள்ளது. இவ்விருபக்கச் சாசனப் பதிவுகளையும் அடிப்படையாகக் கொண்டு இக் கல்வெட்டின் முக்கியத்துவத்தினை நோக்க வேண்டும். இராசேந்திர சோழ மன்னனது ஆட்சிக்காலத்தின்போது சோழப்படைகள் இலங்கை மீது போர்ப் பிரகடனம் செய்து, அக்காலத்தில் இலங்கையின் அரசனாக விளங்கிய ஐந்தாவது மகிந்தனையும் அவனுடைய அரசியையும், மற்றும் அரச செல்வங்களையும் கவர்ந்து கொண்டு சென்ற வரலாற்றினை, மாதோட்டத்தில் கோயில் ஒன்றில் ஏற்படுத்தப்பட்ட தேவதானத்துடன் தொடர்புபட்ட முறையில் எடுத்துக் குறிப்பிடப்பட்டுள்ளது.

"மாதோட்டத்தில் ஒரு கோயிலில் சோழர் தளபதியாகிய அதிகாரத் தண்டநாசகனால் ஜய(ங்) கொண்ட (சோழ) மூவேந்த வேளாளர்" செய்து கொண்ட ஒரு காரியத்தைக்



படிப்பகம்

www.padippakam.com

குறிப்பிடுவதற்கே இக் கல்வெட்டுப் பொறிக்கப்பட்டது என்று ஊகிப்பதற்கு இடமுண்டு.

சூளவம்சத்திற் கூறப்பட்ட செய்திகள், முதலாம் ராசேந்திரனின் கரந்தைச் செப்பேடு, கோணேரிராஜபுரத்திலுள்ள ராசேந்திரனின் 7ஆம் ஆட்சியாண்டைச் சேர்ந்த கல்வெட்டு ஆகியவற்றுடன் ஒப்பிட்டு இச் சாசனத்தின் செய்தியை உறுதிப்படுத்திக் கொள்ளக் கூடியதாகவுள்ளது. சாசனத்தின் இரண்டாம் பக்கத்திலுள்ள பாடப் பிரதியை உறுதிப்படுத்தும் வகையில் சூளவம்சத்தில் இடம்பெறும் வாசகத்தினை இந்திரபாலா பின்வருமாறு எடுத்துக்காட்டுகின்றார்.

"...(ஈழத்து) மன்னனுடைய 36வது ஆட்சியாண்டிலே சோழர் (மன்னனுடைய) மஹிஷியையும், (மன்னன்) முதுசெமாக்கப் பெற்றிருந்த இரத்தினங்களையும், முடியையும், (அரச குடும்பத்தின்) ஆபரணங்கள் அனைத்தையும் தெய்வங்கள் அளித்த பரிசாகிய விலை மதிக்கமுடியாத வைரக் காப்பினையும் பின்னர் மன்னனையும், தாம் பெற்ற செல்வங்கள் அனைத்தையும் உடனடியாகச் சோழமன்னனிடம் அனுப்பி வைத்தனர்."

சூளவம்சத்தில் கூறப்பட்டுள்ள இப் பகுதியை சாசனப்பகுதியுடன் குறிப்பாக பிந்தி வாசிக்கப்பட்ட சாசனப் பாடப் பிரதியுடன் ஒப்பிட்டு நோக்கும்பொழுது அவை இரண்டும் பெருமளவுக்கு ஒத்திருப்பதனைக் காணலாம். எனவே சூளவம்சம் குறிப்பிட்டுள்ள இச் செய்தியானது பெருமளவுக்கு வரலாற்று உண்மைமிக்கது என்பதனைத் தமிழ்நாட்டிற் கிடைத்துள்ள இராசேந்திர சோழனின் மெய்க்கீர்த்தியுடன் ஒப்பிட்டும் அறிந்துகொள்ள முடிகின்றது.

"பொருகடல் ஈழத்தரசர் தம்முடியும்
ஆங்கவர் தேவயரோங்
கெழின் முடியும் முன்னவர்
பக்கல் தென்னவர்
வைத்த சுந்தரமுடியும்
இந்திரனாரமுந் தெண்டிரை
ஈடமண்டல முழுவதுங் ."

1ஆம் இராசேந்திர சோழனின் மெய்க்கீர்த்திப் பாகமாக நீண்டு செல்கின்றது.

இவ்வாறாக ஊர்காவற்றுறைக் கல்வெட்டுக்களினால் இராசேந்திர சோழனுடைய இலங்கைப் படையெடுப்பும் (1014) அப் படையெடுப்பானது அவனது தளபதியின் தலைமையில் மேற்கொள்ளப்பட்டு வெற்றி கொள்ளப்பட்டது என்பதும் தெளிவாகின்றது. இதுவரை காலமும் இலங்கை மீதான சோழர்களுடைய போர்ப் பிரகடனத்தைப் பற்றி, சூளவம்சம் கொடுத்த தகவலைத், தென்னிந்திய சாசனங்களே உறுதிப்படுத்தின. ஆனால் ஹமன் ஹில் கோட்டைச் சாசனங்கள் கண்டுபிடிக்கப்பட்டதன் பின்னர் அந்நிலை மாறி, முதன்முதலாக அக் கூற்றினை இலங்கையில், அதுவும் ஈழத் தமிழரின் நிலப்பரப்பிற்குள் கிடைத்த சாசனமென்றினால் உறுதிப்படுத்திக் கொள்வதற்கு வாய்ப்பேற்பட்டது எனலாம்.

### யாழ்ப்பாணக் கோட்டைச் சாசனம்:

யாழ்ப்பாணக் குடாநாட்டினுள் கண்டுபிடிக்கப்பெற்று வெளிப்படுத்தப்பட்ட சோழருடைய சாசனங்களில் யாழ்ப்பாணக் கோட்டைச் சாசனமும் ஒன்றாகும். இச் சாசனம் யாழ்ப்பாணக் கோட்டையின் பிரதான வாயிலின் உட்புறத்தில், கழிவுநீர் வாய்க்காலுக்குக் குறுக்கே வைத்துக் கட்டப்பட்டிருந்தது. இதனைப் பேராசிரியர் இந்திரபாலா 1970 ஏப்ரல் 14ஆம் திகதி மேற்கொண்டிருந்த மேலாய்வின்பொழுது கண்டுபிடித்து, அதன் மையப்பிரதியையும் எடுத்துக் கொண்டிருந்தார். இன்று யாழ்ப்பாணம் தொல்லியல் அரும்பொருளகத்தில் காணப்படும் இச் சாசனம், எபிகிரபியா தமிலிக்காவில் 10வது சாசனமாகப் பதியப்பட்டுள்ளது.

வைரமான சுண்ணக்கல்லில் பொறிக்கப்பட்ட இச் சாசனமானது 5 அடி 10 அங்குல நீளத்தினையும், 8 அங்குலப் பக்க அகலத்தினையும் உடையதாகவுள்ளது. நான்கு பக்கங்களில் இரு பக்கப் பரப்பிலேயே சாசனம் பொறிக்கப்பட்டுள்ளது.

### வரிவடிவம்:

இரு பக்கப் பரப்பில் பொறிக்கப்பட்ட இச் சாசனமானது கிரந்தம், தமிழ் ஆகிய வரிவடிவங்களினால் பதிவு செய்யப்பட்டுள்ளது. சாசனத்தின் மொழி சோழர் காலத்திற்குரிய தமிழாகும். வரிவடிவத்துக்குரிய வளர்ச்சிநிலை கி.பி. 11ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்ததாகவுள்ளது. சமகாலத்தில் தமிழ்நாட்டில் ஏற்பட்டிருந்த தமிழ் மொழியின் இலக்கண வரம்புகள் சோழர் சாசனத் தமிழ் மரபிலும் பின்பற்றப் பட்டிருந்தமையை ஒத்து, ஈழத்தில் யாழ்ப்பாணத்திலும் அம் மரபு பின்பற்றப் பட்டிருந்தமைக்கு இச் சாசனம் சிறந்த எடுத்துக்காட்டு எனலாம்.

### சாசனத்தின் பாடப்பிரதி:

இந்திரபாலா இச் சாசனத்தின் பாடப் பிரதியை இரண்டாக வகுத்து, வாசித்து எபிகிரபியா தமிலிக்காவில் பதிப்பித்துள்ளார். அதில் "A" பாகம் 44 வரிகளையுடையதாக வுள்ளது. அது ஒரு மெய்க்கீர்த்திப் பாகமாகவும் உள்ளது. இம்மெய்க்கீர்த்திப் பாகம் பெருமளவுக்கு சேதமடைந்திருந்ததன் காரணமாக அதனை நேரடியாக வாசிப்பதில் சிக்கல்கள் ஏற்பட்டிருந்தன. ஆனால் அதிர்ஷ்டவசமாக அச் சாசனம் "திருமன்னி வளர" எனத் தொடங்கும் முதலாம் இராசேந்திர சோழனுக்குரிய மெய்க்கீர்த்திப் பாகமாக விளங்கியபடியால் சிதைவுபட்ட அப் பகுதியை புரணப்படுத்துவதற்கு தமிழகத்தில் கிடைத்த அம் மன்னனது சாசனங்களை ஆதாரமாகக் கொள்ள முடிந்தது.

இச் சாசனத்தின் "A" பாகத்தின் முக்கியத்துவம் என்னவெனில் தமிழகத்தில் முதலாம் இராசேந்திரனின் ஆட்சிக்காலத்தில் வெளியிடப்பட்டிருந்த "திருமன்னி வளர" எனத் தொடங்கும் மெய்க்கீர்த்தி வகையை உறுதிப்படுத்தும் வகையில் மணிபல்லவத்தில் (யாழ்ப்பாணத்தில்) கிடைத்த ஒரேயொரு சாசனம் இதுவாகும். யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு வெளியே இவனது மெய்க்கீர்த்திச் சாசனங்கள் பல கிடைத்துள்ளன. பொலநறுவையில் உள்ள 2ஆம் சிவ தேவாலயம் (வானவன் மாதேவி ஈஸ்வரம்), பொலநறுவையிலுள வட்டதாகே, திருகோணமலைக் கோட்டை, பெரிய குளம் ஆகிய இடங்களில் முதலாம் இராசேந்திரனின் இம் மெய்க்கீர்த்திச் சாசனங்கள் காணப்பட்டன.

"B" சாசனப்பகுதியே எமது பிரதேசத்தைப் பொறுத்து வரலாற்று அடிப்படையில் முக்கியமானதொன்றாகவுள்ளது. இங்கு சில வரிகளே பேணப்பட்டுள்ளபொழுதிலும், அவற்றிலிருந்து அச் சாசனம் பதியப்பட்டதற்கான நோக்கத்தினை அறிய முடிகின்றது. இப் பகுதி அரசனின் ஆட்சியாண்டுடனும், ஆட்சியாளனின் பெயருடனும் ஆரம்பிக்கின்றது. 29 வரிகளையே கொண்டு காணப்படும் இச் சாசனப் பகுதியின் பதிவு நோக்கம் குறிப்பிட்ட ஒரு கோயிலுக்கு கொடுத்த தானச் செய்தியைப் பதிவு செய்வதாகவே உள்ளது.

தானம் கொடுத்தவருடைய பெயர் இப் பகுதியில் இறுதியில் "சாத்தன்" எனக் கொடுக்கப்பட்டுள்ளது. தானம் கொடுக்கப்பட்ட



படிப்பகம்

www.padippakam.com

பொருள் "சாவா மூவா" (ப்பேராடு) என்பதாகும். இச் சாசனம் பொறிக்கப்பட்ட சமகால தமிழகத்திலும், அதனுடன் தொடர்புடையதாகவிருந்த பிரதேசங்களிலும் கோவில்களுக்கு வழங்கப்பட்ட தானங்களுள் ஆடுகள், மாடுகள், எருமைகள் முதலியனவும் உள்ளடங்கும். அவற்றைப் பற்றிச் சாசனங்களில் குறிப்பிடும்பொழுது "சாவாமூவா" என அடைமொழி வழங்கி பதிவுசெய்வது சாசன வழக்காக அமைந்தது.

கோவில்களுக்கு இவ்வகையான தானங்களை வழங்கும் நோக்கம் அவற்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்படும் நெய்யினால் திருவிளக்கிடுவதற்கு ஆகும். இச் சாசனத்தில் (நல்) லூரான் (ஒரு கோவிலுக்கு) அத்தகைய தானம் வழங்கப்பட்ட செய்தியை பதிவு செய்துள்ளமை இப் பிரதேசத்தின் பண்பாட்டு வரலாற்றுக்கு உதவுவதாக உள்ளது. "சாவாமூவா" என்ற தொடரின் பொருளானது குறையாதது என்பதாகும். கோவிலின் பொறுப்பில் கையளிக்கப்படுகின்ற ஆடுகள் தம்மினத்தினை தொடர்ந்து பெருக்கிக்கொள்ளும் என்ற பொருளிலேயே "சாவாமூவா" என்ற சொற்பதம் சாசனங்களில் பொறிக்கப்பட்டது என சாசனவியலாளர் குறிப்பிடுவர்.

**யாழ்ப்பாணம் கோட்டைச் சாசனத்தின் பாடப்பிரதி:**

1. பக்கம் "A"

1-9 (திருமன்னிவளர
இரு நிலமடந்தையும்
போர்ச்சயப் பாவையும்
சீர் தனிச் செல்வியும்
தன் பெருந் தேவியராகி
யின்புற நெடியவூ ழியுள்
இடைதுறை)

10. (ந) ாடும் தொடர்வன
11. (வே) வலிப் படர்வன
12. (வ)ாசி (யும் சுள்ளி)
13. (ச்) சூள் (ம) திற் (கொ)
14. ள்ளிப் (பாக்கையு)
15. (ம்) நன் (ணற்கருமர)
16. ன் (மண்ணைக்)
17. (ட)க்கமு (ம் பொருகடலீ)
18. ழத்தரை (சர்தம்முடியு)
19. (ம்) ஆங் (கவ)ர் (தே)
20. (வ) ய (ரோங்கெழி)
21. (ல்) முடி (யுமன்ன)
22. வர் பக்க(ல் தென்)
23. (ன) வர் (வைத்த சுந்)
24. தரமுடி (யுமிந்திர)
25. னாரமும் (தெண்டி)
26. றையீழ (மண்டல)
27. (மு) ழுவது (மெறிபடை)
28. (க்)கே (ரள) முறை
29. (மை) யி(ற்சூடுங்குல)

30-35 (தன) மாகிய பலர்
புகழ் முடியும் செங்கதிர்
மாலையும் செங்கதிர் வேலைத்
தொல்பெருங்காவற் பல்பழந்
தீவும் செரு) விருசி

36. (னைவியிறுபத்தொ) ருகா (ல)
37. (ர) சுகளை கட்ட பரசுராம
38. (ன்) மேவருந் சாந்திமத்
39. (ததீ) வரன் கருதி (இருத் (தி)
40. (ய) ெ(ச)ம் (பொற்திருத்த) கு
41. (முடி) (யு) மாம்பொரு (தி) தண்
42. (டா)ற் கொண் (டகோப்) பரகே
43. (சரி) வ(ன்ம) ரா (னகோ) விராஜெ
44. ந்திர (சொழ) த் (தெவருக்கு)

2. பக்கம் "B"

1. யாண (டு) .
2. உடையார் ஸ்ரீ (ரா)
3. ஜெ (ந்திர) சொழ ெ(த)
4. வர் .
5. ழ (த் தெரி) ..
6. .
7. ..டவ (ண்)
8. . றுவ ..
9. ஈழ (ம) ரன .
10. .ஞ
11. 
12. (நல்) லூர்
13. த ..

14 - 18 .

19. தி (ரு) வி (ள) க்
20. .க்கு வைத்த
21. .நெய் (யா)
22. (க்கிரனுக்கு (வை) .
23. (த)சாவாமுவா .
24. (பத்) து கி (வை)
25. (நெய்) யும் சந்திற் .
26. (த்) தவர் செலுத் (தி)
27. .. னேனிதை .
28. .. யினுடைய
29. ஆன சாத்தனே



படிப்பகம்

www.padippakam.com

"B" பகுதியில் உள்ள சாசனத்தின் பாடப் பிரதியை நோக்கும்பொழுது அங்கு நல்லூர் என்ற பெயருடன் தொடர்புபட்ட கோயில் ஒன்றிற்கு தானம் வழங்கப்பட்ட செய்தி குறிப்பிடப் பட்டுள்ளமையைக் காணலாம். பொதுவாகச் சோழப் பெருமன்னர்கள் தாம் அமைத்த சிவன் கோயில்களுக்கே இவ்வாறான தான வழக்கங்களை பின்பற்றி வந்திருந்தமை தெளிவாகும். அவ் வகையில் நல்லூரின் கண் அமைந்து காணப்பட்டிருந்த ஒரு சிவன் கோயிலுக்கே இச் சாவா மூவாப் பேராடுகளின் தானத்தை உறுதிப்படுத்தியிருந்தனர் என்பதனை இச் சாசனப் பகுதி மூலம் அறிய முடிகிறது. அவ்வாறாயின் நல்லூரின்கண் சோழ மன்னனால் அமைக்கப்பட்டிருந்த சிவாலயம் எது என்பது ஒரு பிரச்சினையாகின்றது. தற்போதைய நிலையில் நல்லூரின்கண் இரண்டு சிவன் கோயில்களைக் காண முடிகின்றது. ஒன்று சட்ட நாதேஸ்வரர் கோயில் மற்றது கையலாயநாதர் கோயில். இவற்றில் எது சோழர் காலத்துக்குரிய கோயில்? இது மேலும் விரிவான ஆய்வுக்குரிய ஒன்றாகும்.

சோழரால் அமைக்கப்பட்டிருந்த அச் சிவன்கோவில்(?) பின்னர் போர்த்துக்கீசரினாலோ அல்லது ஒல்லாந்தராலோ அழிக்கப்பட்டு அதன் மூலப் பொருட்களைக் கொண்டு யாழ்ப்பாணக் கோட்டையும் அப் பகுதியிலுள்ள குடியிருப்புக்களும் அமைக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதனை சான்றுகள் மூலம் உறுதிப்படுத்த முடிகின்றது. அவ் வகையில் அக் கோட்டையில் சோழர்களுடைய அச் சாசனம் கிடைக்கப் பெற்றமையையும் குறிப்பிடலாம். திராவிட மரபில் அமைந்த கோயிற் தூண்கள், சிற்ப வடிவங்கள் பொறிக்கப்பட்ட பல கருங்கற்கள் என்பன இப் பிராந்தியத்திலுள்ள இடிபாடுகளின் மத்தியில் காணப்படுவது மேலும் அக் கருத்தினை உறுதிப்படுத்தி நிற்கின்றது.

### யாழ்ப்பாணம் பிரதான வீதிக் கல்வெட்டு

எபிகிரபியா தமிலிக்கா என்ற சாசனப் பதிவேட்டில் ஏழாவது சாசனமாக இடம்பெற்றுள்ள இக் கல்வெட்டு யாழ்ப்பாணம் பிரதான வீதிக் கல்வெட்டு எனப் பெயரிடப்பட்டுள்ளது. "சென்ட்ரல் கபே" என்ற தேநீர்க்கடையின் வாசலில் படிக்கல்லாக நீண்ட காலமாக உபயோகிக்கப்பட்டு வந்த இச் சாசனத்தினை 1968இல் தொல்லியல் ஆய்வுப் பகுதியினர் மீட்டெடுத்துக் கொடுத்தனர். இக் கல்வெட்டின் முதன்மைப் பிரதியை தொல்லியல் ஆய்வுப் பகுதியினர் 1968 செப்டெம்பர் 20ஆம் நாளில் எடுத்திருந்தனர். ஆனால் அம் மைப்பிரதி தெளிவற்ற நிலையில் காணப்பட்டதன் காரணமாக கா. இந்திரபாலாவினால் 1969 ஏப்பிரல் 16ஆம் நாளில் மீண்டும் ஒரு மைப் பிரதி எடுக்கப்பட்டது. அதன் அடிப்படையிலேயே இச் சாசனத்தின் முக்கியத்துவம் இங்கு ஆராயப்படுகிறது.

வைரமான வெண் சுண்ணக்கல்லில் பொறிக்கப்பட்ட இச் சாசனம் 5 அடி நீளமும் 7 அங்குல அகலமுமுடையது. சாசனம் இடம்பெற்றுள்ள பகுதி ஒரு பக்கமாகவுள்ளது. பெறிக்கப்பட்ட சாசனப் பரப்பில் அடிக்கடி கால் மிதிபட்டதன் காரணமாக எழுத்துக்கள் மிகவும் சிதைவடைந்து காணப்படுகின்றன. இச் சாசனத்தில் 25 வரிகளுக்கு மேல் காணப்படுகின்ற போதிலும் ஏறத்தாள 15 வரிகளையே ஓரளவு வாசிக்க முடிந்துள்ளது.

சாசனத்தின் வரிவடிவம் கி.பி. 15ஆம் நூற்றாண்டுத் தமிழ் ஆகும். இச் சாசனத்தின் தொடக்கத்தில் "ஸ்ரீ" என்ற மங்கல வாக்கியம் மட்டும் கிரந்த வரிவடிவில் பொறிக்கப்பட்டுள்ளது. இச் சாசனப் பொறிப்பின் தன்மையானது சோழர்களது சாசனப் பொறிப்பு முறையுடன் பெருமளவுக்கு ஒத்துக் காணப்படுவதனையும் அவதானிக்கலாம். இலங்கையை ஆட்சிசெய் சிங்கள மன்னன் ஒருவனைப் பற்றியதாக இச் சாசனத்ததின் பொருள் இடம்பெற்றுள்ளது. இச் சாசனத்தின் வாசகம் பின்வருமாறு அமைந்துள்ளது:-

சோழரால் அமைக்கப்பட்டிருந்த சிவன்கோவில்(?) பின்னர் போர்த்துக்கீச ரினாலோ அல்லது ஒல்லாந்தராலோ அழிக்கப்பட்டு அதன் மூலப் பொருட்களைக் கொண்டு யாழ்ப்பாணக் கோட்டையும் அப் பகுதியிலுள்ள குடியிருப்புக்களும் அமைக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதனை சான்றுகள் மூலம் உறுதிப்படுத்த முடிகின்றது.

1. ஸ்ரீ சங்க
2. பொதிவ
3. (ர்) மரான
4. தி(ரு)பவ(ந)
5. (ச) சக்க(ற)
6. வத்திக(ள்)
7. சிறிபராக்
8. கிறமபா
9. கு தெவ
10. (ர்கு) யா
11. ண்டு..
12. .(ஆ)
13. வது(க்)
14. (குஏ) தி(ர)
15. (ா வது)

இச் சாசனத்தின் வரலாற்று முக்கியத்துவத்தினை ஆராய்வதற்கு ஏதுவாக அப் பொறிப்பு எமக்கு பாதுகாக்கப்பட்ட நிலையில் கிடைக்காது போனமை எமது துரதிர்ஷ்டமே. குறைந்தபட்ச நிலையில் அச் சாசனம் பொறிக்கப்பட்டதன் பொருளைக் கூட அறிந்துகொள்ள முடியவில்லை. இருந்தும் இக் கல்வெட்டினைப் பொறிப்பித்த மன்னனைப் பற்றி பேராசிரியர் இந்திரபாலா பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

இக் கல்வெட்டிலே குறிப்பிட்டுள்ள மன்னன் ஸ்ரீ சங்கபோதிவர்மரான திரிபுவநச் சக்கரவர்த்திகள் சிறி பராக்கிரமபாகு தேவர் என்பவனாவான். இம் மன்னனை அடையாளம் கண்டு கொள்வதிலே பிரச்சினைகள் இல்லை. பராக்கிரமபாகு என்ற பெயரைத் தாங்கிய பல மன்னர்கள் இலங்கையிலே ஆட்சி புரிந்திருந்தாலும் 12ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் யாழ்ப்பாணத்தில் ஆதிக்கம் செலுத்திய பராக்கிரமபாகு



படிப்பகம்

www.padippakam.com

ஒருவன் மட்டுமே. இவன் ஆறாம் பராக்கிரமபாகு ஆவான். எங்களுடைய கல்வெட்டின் எழுத்து நிச்சயமாகப் பன்னிரண்டாம் நூற்றாண்டுக்கு மிகவும் பிற்பட்டது. ஆகவே இக் கல்வெட்டிலே குறிப்பிடப்பட்டுள்ளவன் 15ஆம் நூற்றாண்டிலே யாழ்ப்பாணத்திலும் ஆதிக்கம் செலுத்திய 6ஆம் பராக்கிரமபாகு ஆவான்.

இக் கல்வெட்டானது கூடுதலாகச் சிதைந்திருக்கின்ற காரணத்தினால் பராக்கிரமபாகுவின் எந்த ஆட்சியாண்டில் பொறிக்கப்பட்டது என்பதனையும் கண்டுகொள்ள முடியாதிருக்கின்றது. ஆனால் இம் மன்னன் கோட்டையை (ஸ்ரீ ஜயவர்த்தனபுரத்தினை) தலைநகராகக் கொண்டு கி.பி. 1412க்கும் 1467க்கும் இடைப்பட்ட 55 வருட காலத்தில் ஆட்சி புரிந்தான் என்பதனை அறியலாம். வரலாற்று இலக்கியங்களின்படி இம் மன்னன் தனது 36ஆம் ஆட்சியாண்டின் பின்னரேயே யாழ்ப்பாண இராச்சியத்துடனான தொடர்புகளை மேற்கொண்டிருந்தான் என்பதனையும் அறிய முடிகிறது. இப் பின்னணியில் இந்திரபாலா, இக் கல்வெட்டானது 6ஆம் பராக்கிரமபாகுவின் 36ஆம் ஆட்சியாண்டாகிய கி.பி. 1448க்கும் அவன் இறந்த ஆண்டாகிய 1467க்கும் இடைப்பட்ட காலத்தில் பொறிக்கப்பட்டிருக்க வேண்டும் எனக் குறிப்பிடுகின்றார்.

இச் சாசனத்தின் வரலாற்று முக்கியத்துவத்தினை ஆராயும்பொழுது நேரடியான தகவல்களைக் கொடுக்க முடியாதிருப்பினும், சூசகமாக சில விடயங்களை குறிப்பிட்டுச் சொல்ல முடிகிறது.

6ஆம் பராக்கிரமபாகுவின் யாழ்ப்பாணத் தொடர்புகளில், அவனது வளர்ப்பு மகன் எனக் கூறப்படும் சபுமல் குமாரயா அல்லது செண்பகப் பெருமாள் எனக் குறிப்பிடப்படும் புவனேகபாகு தொடர்புற்றிருந்தான் எனக் கூறப்படுகிறது. சிறிது காலம் செண்பகப் பெருமாளினால் நல்லூர் வெற்றிகொள்ளப்பட்டு 6ஆம் பராக்கிரமபாகுவின் பிரதிநிதியாக யாழ்ப்பாண இராச்சியம் ஆளப்பட்டு வந்தது என்பதனையும் கைலாயமாலை, யாழ்ப்பாண வைபவமாலை போன்ற இலக்கியங்கள் வாயிலாக அறிய முடிகிறது. இக் கட்டத்திலேயே நல்லூரில் உள்ள முருகன் ஆலயத்தினை இப் புவனேகபாகு கட்டுவித்தான் என யாழ்ப்பாண வைபவமாலை குறிப்பிடுவதனை நல்லூர் முருகன் கோவிற் கட்டியம் உறுதிப்படுத்துகின்றது. இன்றுவரை நல்லூர் கந்தசுவாமி கோவிற் கட்டியத்தில் புவனேகபாகுவின் பெயர் இடம் பெற்றுக்கொண்டு வருவது யாழ்ப்பாண வரலாற்றில் மிகச் சுவையான ஓரம்சமாக உள்ளது எனலாம்.

(சிங்கள மன்னன் ஒருவனின் பிரதிநிதி, அவனால் வெற்றி கொள்ளப்பட்ட பிரதேசத்தில் போதிமாதவனுக்கு கோயிலை அமைப்பதற்குப் பதிலாக கந்தவேளுக்கு ஒரு கோயில் அமைத்தான் என்றால், நல்லூரின் வரலாற்றுப் பின்னணியில் இந்துத் தமிழ்ப் பண்பாட்டுப் பாரம்பரியத்தின் வலிமையான நீண்ட செல்வாக்கே அடிப்படைக் காரணமாக இருந்திருக்க வேண்டும். எனவே இச் சாசனத்தினூடே எதிர்காலத்தில் அவ் வரலாறு ஆராயப்படவேண்டும். இந் நகரை மையமாகக்கொண்ட யாழ்ப்பாண இராச்சியம் இந்துப் பண்பாட்டுப் பகைப்புலம் என்பதையும் இதனூடாக நிறுவ முடியும்.)

### நயினாதீவுக் கல்வெட்டு:

நயினாதீவில் உள்ள நாகபுஷணி அம்மன் ஆலயத்தினுள்ளே உள்ள ஒரு கற்பலகையில் இச் சாசனம் பொறிக்கப்பட்டுள்ளது. இச் சாசனப் பொறிப்பின் கற்பலகை 3அடி 11 அங்குல நீளமும், மேற்பகுதியில் 1 அடி 7அங்குல அகலமும், கீழ்ப்பக்கத்தில் 2 அடி 4 அங்குல அகலமுமுடையது. கற்பலகையின் இரு பக்கங்களிலும் சாசனப் பொறிப்பு இடம்பெற்றுள்ளது.

### வரிவடிவமும் மொழியும்:

இக் கல்வெட்டு கிரந்தத்தினையும் தமிழையும் வரிவடிவமகக் கொண்டுள்ளது. சாசனத்தின் முக்கியமான பகுதி தமிழ் வரிவடிவிலும், இறுதி இரண்டு வரிகள் சமஸ்கிருத வரிவடிவிலும் அமைக்கப்பட்டுள்ளது. இச் சாசனத்தின் வரிவடிவ அமைப்பினைக் கொண்டு அதனை கி.பி. 12ஆம் நூற்றாண்டுக்குரியதாகக் கொள்வர்.

இலங்கைத் தொல்பொருட் திணைக்களத்தினர் 1949இல் இச் சாசனத்தின் மைப்பிரதி ஒன்றை எடுத்தனர். இதற்கும் முன்னர் முதலியார் சி. இராசநாயகம் 1926இல் இச் சாசனத்தின் பாடப்பிரதியை தனது Ancient Jaffna என்ற நூலில் அடிக்குறிப்பாகக் கொடுத்துள்ளார். பாடப்பிரதி பின்வருமாறு:

ஊராத்துறையிற் பரதேசிகள் வந்து இருக்க
வேணுமென்றும் இவர்கள் ரஷைப்பட
வேணுமென்றும்
பு(து) துறைகளில் பரதேசிகள் வந்த(ாலித்)
துறையி(ே)ல)
சந்திக்க (ே)வணுமென்றும் நா(வாய) ஆனை
குதிரையோடு(ம்) பண்டார சேவைக்கு
ஆனை குதிரை கொடு வந்த மரக்கலங்
கெட்டதுண்டாகில் நாலத்தொன்று பண்ட(ா)ரத்துக்கு
கொண்டு மூன்று கூறும் டையவனுக்கு
விடக்கடவதாகவும்-வாணிய மரக்கலங்
கெட்டதுண்டாகில்
செம் பாகம் பண்டாரத்துக் கொண்டு
செம்பாகம் உடையவனுக்கு விடக் கடவதாகவும்
இவ் வயவஸதை தித்து தலையுங் கல்லிலுஞ்
செம்பிலும் எழுத்து வெட்டுவித்து இவ் வியவஸ்தை
செய்து கொடுத்து தேவ பராக்கிரம புஜேர்'

பேராசியரியர் கா. இந்திரபாலா 1949இல் தொல்பொருட் திணைக்களத்தினரால் எடுத்த மைப்பிரதியை வைத்து பதிப்பித்த இச் சாசனத்தின் பாடப்பிரதி பின்வருமாறு:

1. .. நாங்கள் .
2. வந்து ஊராத்துறை
3. (யில்) பரதெசிகள் வந்து
4. இருக்க வெணுமென்றும்
5. அவர்கள் ரஷைப்பட்டு
6. வணுமென்றும் பல து றை
7. ற களில் பரதெசிகள் வந்து தந்து
8. றையி(ெ)ல கூட வெணுமென்று
9. (ம்) நாம் ஆனை குதிரை மெல் ஸ்நெஹ
10. (மு) ண்டாதலால் நமக்கு ஆனை குதிரை
11. கொடு வந்த மரக்கலங் கெட்டது
12. ண்டாகில் நாலத் தொன்று பண்டா
13. (ர) த்துக்குக் கொண்டு மூன்று கூறும்
14. டையவனுக்கு விடக் கடவதாகவு
15. (ம்) வாணிய மரக்கலங் கெட்டதுண்



படிப்பகம்

16. டாகில் செம் பாகம் பண்டாரத்துக்

17. (கு)க் கொண்டு செம்பாகம் உடைய

18. (வ)னுக்கு விடக்கடவதாகவும் இவ்

19. வவஸ்தை (ரு)ள்ளதனையுங்க

20. ல்லிலுந் செம்பிலும் எழுத்து வெ

21. ட்டி வித்து இவ் வவஸ்தை செய்துங்கு

22. டுத்து .. கு

இவ்விரு பாடப் பிரதிகளிலும் பல வேறுபாடுகள் இருப்பதனை ஒப்பிட்டு நோக்கும்பொழுது உணர முடிகிறது. குறிப்பாக முதலியார் இராசநாயகம் தவறாக இச் சாசனத்தின் பாடப் பிரதியை பதிவு செய்துள்ளார் என்பதனை பிற்பட்ட சாசனப் பாடப் பிரதியை நோக்கும்பொழுது தெளிவாகின்றது. இந்திரபாலா இதனை நன்கு சுட்டிக் காட்டியுள்ளார். "உதாரணமாக, "பல" என்பது "புது" என்றும் (வரி 6) வந்து நந்துறை என்பது "வந்தால் இத்துறை" என்றும் (வரி 6-7) "கூட" என்பது "சந்திக்க" என்றும் (வரி - 8) "நாம்" என்பது "நாவாய்" என்றும் "மெல் ஸ்நெஹம் உண்டாதலால்" என்பது "ஓடும் பண்டார செவைக்கு" என்றும் (வரி 16-17), "வவ்ஸ்தை" என்பது "வயவஸ்தை" என்றும் (வரி 19, 21), "செய்துங்குடுத்து" என்பது "செய்து கொடுத்து" என்றும் (வரி 21), கொடுக்கப்பட்டுள்ளன. மேலும் சில சமஸ்கிருதச் சொற்கள் அவருடைய பிரதியிலே விடப்பட்டுள்ளன.

இக் கல்வெட்டுப் பொறிக்கப்பட்டதன் பிரதான நோக்கம் அச்சாசனப் பகுதியிலிருந்து தெளிவாகத் தெரிகிறது. "இக் கல்வெட்டு அக்காலத்திற் பிறநாட்டு வர்த்தகர்களுக்கு ஏற்படுத்தப்பட்ட சில வசதிகளையும் சுங்க ஒழுங்குகளையும் எடுத்துக் கூறுகின்றது. பிறநாட்டு வர்த்தகர்கள் இதிலே பரதேசிகள் என்று குறிப்பிடப்பட்டுள்ளனர் இவ் வர்த்தகர்கள் யானை, குதிரை போன்ற மிருகங்களையும் வாணிபப் பொருட்களையும் ஏற்றி வந்தனர் என்பது இக் கல்வெட்டாலே தெரிய வருகின்றது. மன்னனுக்கு யானை, குதிரை ஆகியனவற்றைக் கொண்டு வந்த மரக்கலங்கள் சேதமடைந்து கரையை அடைந்தால், அவை கொண்டுவந்த மிருகங்களுள் நாலில் ஒரு பங்கு மன்னனுடைய பண்டாரத்துக்கும் (திறை சேரிக்கும்) எஞ்சிய பங்கு மரக்கலச் சொந்தக்காரருக்கும் செல்ல வேண்டும் எனவும், பிற வாணிபப் பொருட்களை ஏற்றிவந்த மரக்கலங்கள் சேதமடைந்தால் அவற்றின் பொருட்களுள் அரைப் பங்கு பண்டாரத்துக்கும் அரைப் பங்கு சொந்தக்காரருக்கும் செல்ல வேண்டும் எனவும் விதிக்கப்பட்டிருந்தது.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இக் கல்வெட்டினைப் பொறிப்பிப்பதற்காக ஆணை வழங்கிய மன்னனின் பெயரையும் நன்கு அறிந்துகொள்ள முடிகிறது. இதனை இச் சாசனத்தின் 22ஆம் 23ஆம் வரிகளில் இடம்பெற்றுள்ள சமஸ்கிருத மொழிப் பதிவிலிருந்து, "சகல சிங்களச் சக்கரவர்த்தியாகிய தேவ பராக்கிரமபாகு" என அறிய முடிகிறது. சாசனத்தின் வரிவடிவ அமைப்பில் அது கி.பி. 10ஆம் அல்லது 12ஆம் நூற்றாண்டுக்குரியது என்பதனைக் கண்டு கொள்ளலாம். அவ்றாயாயின் இக் காலப் பகுதியில் பொலனறுவையில் இருந்து அரசு செய்த மன்னர்களுள் மூவருக்கு "தேவ பராக்கிரமபாகு" என்ற விருதுப் பெயர் வழங்கியமையையும் கண்டு கொள்ளலாம். இவர்களுள் எவர் இச் சாசனப் பதிவுக்குரியவர் என்பது இப்பொழுது ஆராய்வுக்குரியதாகின்றது.

நயினாதீவு "நாகபுஷணியம்மன் கோவிலினுள் காணப்படுகின்ற இக் கல்வெட்டுக்குரிய மன்னன் யார் என்பது தொடர்பாக இந்திரபாலா குறிப்பிடுவதும் இங்கு நோக்கத்தக்கது. "இக் காலப் பகுதியில் பராக்கிரமபாகு என்ற பெயரைத் தாங்கிய மூன்று மன்னர்கள் ஆட்சி புரிந்தனர். (1) முதலாம் மகா பராக்கிரமபாகு (2) பராக்கிரமபாகு நிஸங்க மல்லன் (3) இரண்டாம் பராக்கிரமபாகு என்போராவர். இவர்களுள் 2ஆம் பராக்கிரபாகு வட இலங்கையில் ஆட்சி புரியவில்லை. ஆகவே அவனுடைய கல்வெட்டாக இருக்க முடியாது. எனினும் 1ஆம் பராக்கிரமபாகுவே ஊர்காவற்றுறையில் பலவகைப்பட்ட முயற்சிகளிலே ஈடுபட்டவன். அவனுடைய கடற்படைத் தளங்களுள் ஒன்றாக ஊர்காவற்றுறை விளங்கியது என்பது தமிழ்நாட்டுக் கல்வெட்டு ஒன்றால் (திருவாலங்காட்டு கல்வெட்டில்) அறிய முடிகிறது. மேலும் 1ஆம் பராக்கிரமபாகு வெளிநாடுகளுடன் அரசாங்கம் நடாத்திய வர்த்தகத்தை நன்கு ஒழுங்குபடுத்தி வெளிநாட்டு வர்த்தகத்திலே அக்கறை காட்டியிருந்தான் என்பதனை நம்மால் அறிய முடிகிறது.. பராக்கிரமபாகு நிஸங்கமல்லனாக இருந்ததால் தனிப்பட்ட பராக்கிரம என்ற பெயரை மட்டும் விளங்குவது கஷ்டம். ஆகவே நயினாதீவுக் கல்வெட்டு 1ஆம் பராக்கிரமபாகுவினுடையது என்ற முடிவினையே ஏற்கவேண்டியுள்ளது.

இக் கல்வெட்டில் குறிக்கப்பட்ட ஊராத்துறை பற்றி இந்திரபாலா விளக்கம் கொடுக்கும்பொழுது அதனைத் தற்காலத்தில் ஊர்காவற்றுறை என அழைக்கப்படும் இடத்துடன் அடையாளம் காண்கின்றார். சூளவம்சத்தில் இப்பெயரானது "ஊராத் தொட" அல்லது "ஸூராத்தொட" என குறிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் விளக்குகின்றார். அதன் பொருள் "பன்றித்துறை" என்பதாகும். அவ்வாறாயின் தமிழ்நாட்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் காணப்படும் "ஊர்காவற்றுறை" என்ற இடப்பெயர் தொடர்பாக எம்மால் என்ன விளக்கத்தினைக் கொடுக்க முடியும்.

இச் சாசனத்தின் வரலாற்று முக்கியத்துவத்தில் இலங்கையுடன் தொடர்புபட்டிருந்த வர்த்தக முயற்சி பற்றிய வரைவு தெளிவாக உள்ளது. குறிப்பாக 1ஆம் பராக்கிரமபாகு காலத்தில் இலங்கைக்கு யானைகள் இறக்குமதி செய்யப்பட்டிருந்தன என்ற கூற்றினை இக் கல்வெட்டு உறுதிப்படுத்தி நிற்கின்றதெனலாம். யாழ்ப்பாணக் குடாநாட்டினுள் காணப்படும் யானைப்பந்தி, ஆனைவிழுந்தான் சந்தி, யானைபிறவு, ஆனைக்கோட்டை, கலிகை (கரியச்) சந்தி (கரி ஸ்ரீ யானை) போன்ற இடப்பெயர்களும் ஒருவேளை இவ் ஆனை வர்த்தகத்துடன் தொடர்புபட்டவையாகலாம்.

## உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் கோவிற் கல்வெட்டு

இணுவில் கிராமத்தின் கிழக்கு எல்லையாக விளங்கும் உரும்பிராய், வரலாற்றுப் புகழ்பெற்ற ஒரு தலமாகவுள்ளது. இங்கு அமைந்துள்ள கருணாகரப் பிள்ளையார் கோவிலிலே அதற்குக் காரணம் என்பது கர்ணபரம்பரைக் கதைகளினால் தெரிய வருகின்றது, கருணாகரத் தொண்டமான் என்பவன் இலங்கையை வென்றபோது உரும்பிராயில் உள்ள பிள்ளையார் கோவிலைத் திருத்தியமைத்தான் அல்லது கட்டினான் என்பது பொதுவான ஐதீகமாகும்.

யாழ்ப்பாண வைபவமாலையில் இணுவில் கருணாகரப் பிள்ளையார் கோவில் கட்டப்பட்ட வரலாறு கூறப்பட்டுள்ளதைக் காணலாம். அக் கூற்றானது இக்கோவிற் கல்வெட்டு ஒன்றினால் மேலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனவும், கி.பி. 1567இல் அக் கல்வெட்டு அங்கு வைக்கப்பட்டது எனவும் முதலியார்



படிப்பகம்

www.padippakam.com

இராசநாயகம் குறிப்பிட்டுள்ளார். இக் கல்வெட்டினை மைப்பிரதி எடுக்க ஆரம்பத்தில் இந்திரபாலா முயன்றபொழுது கோயில் அர்ச்சகர் அனுமதி கொடுக்கவில்லை. பின்னர் 1970 பெப்ரவரி 28ஆம் நாள் கருணாகரப் பிள்ளையார் கோவிற் கல்வெட்டினை அவர் மைப்பிரதியெடுத்தார். அதன் மூலம் அக் கல்வெட்டு மிகவும் சிதைந்தநிலையில் இருப்பதனை அறிந்துகொள்ள முடிந்தது.

ஒரு தூணின் உடைந்த பாகத்திலே ஐந்து பக்கங்களில் எழுத்துக்கள் காணப்பட்டன. மேற்பாகத்தில் இருந்த இரண்டாவது கல்வெட்டின் எழுத்துக்கள் ஏனையவற்றைவிட பிற்பட்ட காலத்தாகும். இவ்வெழுத்துக்களாவன:

1. திருச்சிற்றம்பலம்
2. பண்டார
3. த் தன்ம(ம்)
4. உடமை
5. ப் பணம் ரு

இவற்றுடன் ஒரு திருச்சூலமும் பொறிக்கப்பட்டிருந்ததால் இந்திரபாலா இதனை ஒரு திருச்சூலக்கல் எனக் குறிப்பிட்டுள்ளார். கல்லின் ஏனைய பாகங்களில் உள்ள எழுத்துக்கள் அனைத்தும் ஒரு தனிச் சாசனத்தினைச் சேர்ந்தவையாக உள்ளன. "ஸ்வஸ்திஸ்ரீ" என்ற மங்கல வாக்கியத்துடன் ஆரம்பமாகும் இச் சாசனம் "பிறபவ" ஆண்டில் பொறிக்கப்பட்டதாகத் தோன்றுகின்றது. இவ்வாண்டினை கி.பி.1567 என இந்திரபாலா குறிப்பிடுகின்றார்.

| | பக்கம் 1 | பக்கம் 2 | பக்கம் 3 | பக்கம் 4 |
|---|---|---|---|---|
| 01 | ஸ்வஸ்தி | சகா(த்)தம் | ............ | ............ |
| 02 | ....... பிறபவ | தருஷம் சித் | (திரை) | ............ |
| 03 | ............ | (தடப) .. | ன ............ | ............ |
| 04 | ............ | (ற்ற வா வுர) | (னாரு)ம் .... | ............ |
| 05 | ............ | ந்தத திருச்(சூ) | ல ............ | ............ |
| 06 | ............ | (கண அடி)தெ | ாழு(ம்)... லம் | ............ |
| 07 | ............ | (ம்பொ) னம்ப | லம்ப(னை).... | ............ |
| 08 | லன் (பென்) ..... | .... அழகி நினை | வியும் ... (ரும்) | ..... (ரும்செ) |
| 09 | (ய்) தது இந்தப்ப | (டி) சந்திராதித்தண | வரையும் நடக்க | கடவதாகவும் |
| 10 | இந்த தன்மத் | தை யாதா மொ | ருவர் பொல்லா | ங்கு நிலைத்தவ |
| 11 | ர்கள் கொங்கை(க்) | (க)ரையிலே கொவ | தை செய்தபாவம் | பெறக்கடவதாகவும் |

தமிழ் மொழியில் பொறிக்கப்பட்ட இக் கல்வெட்டுக்களின் வரிவடிவமானது 15ஆம் அல்லது 16ஆம் நூற்றாண்டுகளைச் சேர்ந்தது எனக் குறிப்பிடலாம். இவற்றுள் முதலாவது கல்வெட்டின் வரிவடிவமே காலத்தால் முற்பட்டது என இந்திரபாலா கருதுகின்றார். மேலும் அவர் குறிப்பிடும்பொழுது "இக் கல்வெட்டு, கோயிலுக்குச் செய்யப்பட்ட தர்மம் ஒன்றை பதிவு செய்வதற்காக எழுதப்பட்டது என்பது தெளிவு. எனினும் இத்தர்மம் என்ன என்பதனை திட்டவட்டமாக அறிய முடியவில்லை. கல்வெட்டுப் பொறிக்கப்பட்ட தூண் ஒரு திரிசூலக் கல்லாக இருந்தினாலும், கல்வெட்டிலே "(இ)ந்தக் திரிசூல" என்ற வாசகம் வருகின்றமையினாலும், இத் தர்மம் கோயிலுக்கு வழங்கப்பட்ட ஒரு நிலத்தானமாகும் என ஊகிக்கலாம். சைவக் கோயில்களுக்கு வழங்கப்பட்ட நிலத்தானங்களின் எல்லைக் கல்லாகவே திரிசூலக் கற்கள் நாட்டப்பட்டன. கோயிலின் பெயரும் எமது கல்வெட்டில் தெளிவாக இல்லை. ஆனால் முதலியார் இராசநாயகம் குறிப்பின்படி, "கருணாகரப் பிள்ளையார் கோயில்" என்ற குறிப்பு இதிலே வருகின்றது என விளக்குகின்றார்.

இக் கல்வெட்டின் ஒரு சிறப்பியல்பினையும் அவதானிக்க முடிகிறது. அதாவது கல்வெட்டுக்களின் இறுதியில் வரும் "ஓம் படைக்கிளவி" என அழைக்கப்படும் பாகமாகும். அது இக் கல்வெட்டில் "இந்தப்படி சந்திராதித்த வரையும் நடக்கக் கடவதாகவும், இந்தத் தன்மத்தை யாதாமொருவர் பொல்லாங்கு நினைத்தவர்கள் கங்கைக் கரையிலே கோவதை செய்த பாவம் பெறக் கடவதாகவும்" என்று இடம்பெற்றுள்ளது. கள்ளியங்காட்டில் கிடைத்த செப்பேடுகளில் கிடைத்த ஓம்படைக் கிளவியுடன் இதனை மேலும் ஒப்பிட்டு ஆராய்வது பொருத்தமாக அமையும்.

**நாயன்மார்கட்டு சிங்கையாரியன் கல்வெட்டு**

"யாழ்ப்பாண இராச்சியம்" என்ற மத்தியகால இறைபுலத்தின் தலைநகர் மையம் என்று இற்றைவரைக்கும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள நல்லூரில் யாழ்ப்பாண இராச்சியத்தினை ஆண்ட சிங்கையாரியனைக் குறிப்பிடும் ஒரு கல்வெட்டுக் கிடைத்திருப்பது வரலாற்றில் ஆர்வமூட்டும் ஒரு செய்தியாகும்.

"யாழ்ப்பாண இராச்சியம்" என்ற மத்தியகால இறைபுலத்தின் தலைநகர் மையம் என்று இற்றைவரைக்கும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள நல்லூரில் யாழ்ப்பாண இராச்சியத்தினை ஆண்ட சிங்கையாரியனைக் குறிப்பிடும் ஒரு கல்வெட்டுக் கிடைத்திருப்பது வரலாற்றில் ஆர்வமூட்டும் ஒரு செய்தியாகும்.

யாழ்ப்பாண இராச்சியத்தினை ஆண்ட எந்தவொரு மன்னனைச் சுட்டியாவது யாழ்ப்பாணக் குடாநாட்டிற்குள் கல்வெட்டுக்கள் எதுவும் இதற்கு முன் வெளிப்படவில்லை. 1979இல் நல்லூரைச் சுற்றியுள்ள பிரதேசங்களில் மேலாய்வு ஒன்றினை மேற்கொண்டு வருகையில் இக் கல்வெட்டினை முதன்முதலாக ஆராய முடிந்தது. நாயன்மார்கட்டிலுள்ள கனகரத்தினம் வீதியிலிருந்து செல்லும் நாயன்மார் வீதிக்குத் தெற்கே சுமார் 200 யார் தொலைவில் அமைந்துள்ள அரசடி விநாயகர் கோவிலில் இக் கல்வெட்டுக் கிடைத்தது. அது நல்ல நிலையில் பேணப்பட்டும் உள்ளது. (தற்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அரும்பொருளகத்தில் பாதுகாக்கப்பட்டுள்ளது.)

இந்த விநாயகர் கோயிலுக்கு முன்பாக உள்ள திருக்குளத்தினை ஆழமாக்கும் முயற்சியில் 1942இல் யாழ்ப்பாண மாநாகரசபையினர் ஈடுபட்டிருந்த பொழுது இச் சாசனம் அக் குளத்தின் மத்தியிலிருந்து மீட்கப்பட்டது என அறிய முடிகிறது. இச்செய்தி ஏற்கனவே "இந்து சாதனத்தில்"



படிப்பகம்

www.padippakam.com

வெளிவந்திருந்தும் அதன் வரலாற்று முக்கியத்துவம் எடுத்துக்காட்டப் பட்டிருக்கவில்லை.

இரண்டு அடி நீளமும் 1 அடி அகலமுமுடைய வெண் வைரக்கல்லில் இச் சாசனம் பொறிக்கப்பட்டுள்ளது. சாசனப் பதிவு தமிழ் வரிவடிவில் அமைந்துள்ளது. ஐந்து வரிகளைக் கொண்ட இச் சாசனப்பதிவு பிள்ளையார் சுழியுடன் ஆரம்பிக்கின்றது. இச் சாசனத்தின் பாடப்பிரதி பின்வருமாறு:

உ

கலி சகூஉருல்

தீர்தங் கொடுக்க

சிங்கையாரியனால்

அமைகப்பெற்றது

இலங்கையில் சிங்கையாரியர் பற்றிக் குறிப்பிடும் கல்வெட்டுக்களுள் இதனை இரண்டாவதாகக் கொள்ளலாம். (முதல் கல்வெட்டு கேகாலை மாவட்டத்தில் "கொட்டகம" என்ற இடத்தில் கண்டு பிடிக்கப்பட்டது. கொட்டகம கல்வெட்டு கி.பி. 14ஆம், 15ஆம் நூற்றாண்டுக்குரியதென்று கொள்ளப்படுகின்றது.) இச் சாசனத்தின் காலத்தைப் பற்றிப் பேராசிரியர் கா. இந்திரபாலா தெரிவித்த கருத்தாவது :-

"இக் கல்வெட்டு கலி 3025இல் நடைபெற்றதாக ஒரு சம்பவத்தினைக் குறிப்பிடுகின்றது. கலி 3025 என்பது கி.மு. 76ஆம் ஆண்டைக் குறிப்பதாகும். சாசனத்தின் எழுத்தோ கிறிஸ்துவுக்குப் பிற்பட்ட 14ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டது எனக் கூற முடியாது. சிங்கையாரியயுருடைய காலமும் கிறிஸ்துவுக்கு முற்பட்டதன்று. ஆகவே இதிலே கொடுக்கப்பட்ட ஆண்டிலே ஏதோ தவறுண்டு. யாழ்ப்பாண அரசு வீழ்ச்சியுறு முன்னர் 14ஆம் அல்லது 15ஆம் நூற்றாண்டில் இது பொறிக்கப்பட்டிருக்கலாம்"

இக் கல்வெட்டிற் குறிப்பிடப்படும் மன்னனை யார் என அடையாளம் கண்டு கொள்வது மிகவும் கஷ்டமாகவுள்ளது. ஏனெனில் சிங்கையாரியன் என்பது பொதுவாக யாழ்ப்பாணத்தினை ஆட்சிபுரிந்த மன்னர்கள் சூடிக்கொண்ட பொதுப் பெயராக விருதுப் பெயராக இருந்தமையினாலாகும். யாழ்ப்பாண வைபவமாலை, கைலாயமாலை போன்ற பழைய யாழ்ப்பாணத்து நூல்களில் சிங்கையாரியர் என்ற ஒருவன் தென்னிந்தியாவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்து அரசு புரிந்துள்ளான் எனக் கூறப்பட்டுள்ளது. எனினும் அவனுக்குப் பின்னர் ஆட்சிபுரிந்த பல யாழ்ப்பாண மன்னர்கள் சிங்கையாரியன் என்ற பெயரை வம்சப் பெயரைப் போன்று பயன்படுத்தியுள்ளார்கள். உதாரணமாக குலசேகர சிங்கையாரியன், வரோதய சிங்கையாரியன், மார்த்தாண்ட சிங்கையாரியன் போன்ற பெயர்களைக் காணலாம். இக் காரணத்தினால் இப்படியான மன்னர்களுள் எவனை எங்கள் கல்வெட்டு குறிப்பிடுகின்றது எனக் கொள்வது பிரச்சினையை ஏற்படுத்தும். பிரச்சினை எதுவாக இருந்தாலும் யாழ்ப்பாண வைபவமாலை போன்ற இலக்கிய ஆதாரங்களிலே சிங்கையாரியர்கள் எனக் குறிப்பிட்டுள்ள யாழ்ப்பாண மன்னர்கள் பற்றிய வரலாறு வெறும் கற்பனையாகாது என்பதனை கல்வெட்டுக்களாலும் உறுதிப்படுத்த முடிகிறது.

புனித தீர்த்த நிலையங்களிலிருந்து நீரினை எடுத்துச் சென்று தாம் புதிதாக அமைத்த கேணிகள், திருக்குளங்கள் ஆகியவற்றிலே கலந்து புனித தீர்த்தங்களின் பெயர்களைச் சூட்டுவது மரபாக இருந்து வந்தமையினை வரலாற்றில் காண முடிகின்றது. முதலாம் இராசேந்திர சோழன் கங்கை வரை படையெடுத்துச் சென்று கங்கை நீரைக் கொணர்ந்து கங்கை கொண்ட சோழபுரத்தில் ஒரு தடாகத்தினை அமைத்தான் என்பதனை சாசனங்கள் வாயிலாக அறிய முடிகின்றது. இதேபோன்று நல்லூரில் உள்ள சங்கிலியன் தோப்பில் அமைந்து காணப்படும் "யமுனாரி" எனப்படும் இயமுனா ஏரியும் வடஇந்தியாவிலுள்ள யமுனா நதியின் தீர்த்தங் கொண்டு உருவாக்கப்பட்டது என்று யாழ்ப்பாண வைபவமாலை குறிப்பிடுகின்றது. அதனையொத்த ஒரு வகையிலேயே நாயன்மார்கட்டு அரசடிப் பிள்ளையார் கோயிற் திருக்குளம் அமைக்கப் பெற்றிருக்கலாம் என்பதனை அச்சாசன வாசகம் எடுத்துக் காட்டுகின்றது. அல்லது சுவாமி தீர்த்தமாடுவதற்கான கட்டிடத்தினை குளத்தின் நடுவே சிங்கையாரிய மன்னன் அமைத்திருக்கலாம். இவ்வகையில் சிங்கையாரியன் பற்றிய இக் கல்வெட்டானது யாழ்ப்பாண வரலாற்றிற்கு இன்றியமையாததாகவுள்ளது.

## முடிவுரை

மேலே கூறப்பட்டவற்றைத் தொகுத்து நோக்கும்போது பின்வரும் விடயங்கள் எமது அறிவிற்கு தெளிவாகின்றன. அதாவது ஈழத் தமிழர் பண்பாட்டுப் பகைப்புலமானது தென்னிந்தியத் தமிழகப் பண்பாட்டுப் பகைப்புலத்துடனான தொடர்புகளையும், சமாந்தரமான உறவுகளையும் காலாதிகாலமாகக் கொண்டிருந்திருப்பினும் ஈழத்துக்கெனத் தனித்துவமான வெளிப்பாட்டினை தமிழகத்திலிருந்தும் சிறப்புக்கூறாகக வேறுபடுத்திய நிலையில் தாங்கிக் கொண்டிருப்பதனை இப்போது காணமுடிகிறது. தற்காலநிலையில் தமிழ்மொழி வழக்காறானது யாழ்ப்பாணத்தில் அதன் தனித்துவத்தினையும் இலக்கிய வழமைகளையும் இலக்கணச் செழுமைகளையும் கொண்டு எவ்வாறு தமிழகமொழிப் பயன்பாட்டின் விழுமியங்களிலிருந்து தனித்துவப்பட்டு வாழ்ந்து கொண்டிருக்கின்றதோ அவ்வாறே புராதன ஈழத் தமிழர் பண்பாட்டுப் பரப்பும் தனித்துவமான அரசியல், சமூக, பொருளாதார கட்டமைவுகளுடன் வளர்ச்சி பெற்றிருக்க வேண்டும். தென்கிழக்கிலங்கையின் கடற்கரையோரப் பிராந்தியம், வடமேற்கு - வடகிழக் கிழங்கையின் கடற்கரையோரப் பிராந்தியங்கள் என்பன காலத்தால் முற்பட்ட ஈழத் தமிழரின் பண்பாட்டு மண்படையடுக்குகளைக் கொண்டிருப்பதனையே அகழ்வாய்வின் முடிபுகள் தெளிவாக்கியுள்ளன. காலத்தின் போக்கில்-வளர்ச்சியில் ஏற்பட்ட பண்பாட்டு கட்டுமானங்களின் சேர்க்கையினாலும், கலப்பினாலும், இடப்பெயர்ச்சியினாலுமே ஈழத் தமிழரின் வரலாற்றுகாலக் குடியிருப்புகள் நகர்த்தப்பட்டு மாற்றங்களுக்கு உட்படுத்துவதற்குரிய அடிப்படைக் காரணியாயிற்று.

இந்நிலையில் ஈழத்தின் அடிப்படைப் பண்பாட்டுப் பரப்பு ஆதித்திராவிட பெருங்கற்காலச் சமூகத்தினரின் அலகுகளினால் பாவப்பட்டிருந்த (Pavement) வகையினையும், பிற்காலத்தில் அதற்கு மேல் பிறிதொரு மொழி, சமய பண்பாட்டுப பிரிவினரால் அடுக்கப்பட்ட பௌத்தப்பண்பாட்டு மேற்கட்டுமான அலகுகளும், பிற்காலங்களில் "ஆரியம் அல்லாத" கலைவடிவங்களும் குறியீடுகளும் இலச்சினைகளும் மரபுக்குறிகளும் இடம்பெறுவதற்கும், பிறபண்பாட்டு விழுமியங்களை ஏற்றுக் கொள்வதற்குமான தவிர்க்க முடியாதபடியான சூழல் காணப்பட்டிருந்தது எனலாம். பௌத்த மதத்தினை எடுத்துக் கொண்டாற்கூட இலங்கையில் "சிங்கள" என்ற இனத்துவ "அடையாள அலகு" என்ற முறையையும் மீறிப் பூர்வீக திராவிட மதக்குழுவினரின் தவிர்க்கமுடியாத அம்சங்களின் அரவணைப்பினை உள்வாங்கவேண்டியிருந்த சூழ்நிலையையும் காண்கின்



படிப்பகம்

www.padippakam.com

றோம். இதுவே இலங்கையில் பௌத்தம் என்பது "அரசியல் அலகுகளினால் மட்டும்" வலுப்படுத்தப்பட்டமைக்கும், ஜீவனோபாய ஊடகங்களின் தொடர்பினின்றும் நீங்கி அம்மதம் சாதாரண பொதுமக்களின் வழிபாட்டு முறைகளினின்றும் தனிமைப்படுத்தப்பட்டமைக்கும் காரணமாயிற்று. இதனாலேயே தென்னிலங்கை வாழ் பாமர சிங்கள மக்களின் வாழ்வில் "இந்துமதம் ஒரு குடும்ப மதமாக" கி.பி. 16ஆம் நூற்றாண்டு வரைக்குமாவது முக்கியத்துவம் பெற்று விளங்கக் காரணமாயிற்று. அவ் வழியே ஈழத் தமிழரின் ஆதித்திராவிடப் பண்பாட்டுக் கட்டுமானப் பரப்பின் புதிய எல்லைகளையும் கால வரம்பினையும் நிரற்படுத்திக்கொள்ள முடிகிறது. அவ்வாறான நிரற்படுத்தலுக்கு உதவுவதாகவே ஈழத்தில் கிடைத்த திராவிடக் கலைமுறைகளும், தமிழ் பிராமிச் சாசனங்களும், ஈழத்துத் திராவிட ராஜ்ய குலங்களால் வெளியிட்டு வைக்கப்பெற்ற நாக, உரக, சிங்க நாணயங்களும் முத்திரைகள், உருவம் பொறிக்கப்பட்ட ரத்தின மணிகள் (கந்தரோடை) மட்பாண்ட முத்திரைகள் போன்றனவும் அண்மைக்காலத் தொல்லியல் ஆய்வுகளின் பெறுபேறாக எமக்குக் கிட்டியுள்ளன. அவையே யாழ்ப்பாணத் தமிழரின் பண்பாட்டுப் பரப்பின் இருப்பின் புதிய எல்லைகளின் மூலங்களுமாகும். அவ்வழியே ஈழத் தமிழரின் பண்பாட்டுக் கட்டுமானப்பரப்பின் காலவரம்பினையும் பிரதேச வரம்பினையும் நிரற்படுத்திக் கொள்ள முடிகின்றது. அத்தகைய நிரற்படுத்தலுக்கு உதவியாகவே வன்னிப்பிராந்தியத்தில் அண்மைக் காலங்களில் கிடைத்த புராதன மட்பாண்டத் தமிழ்ப் பிராமிச் சாசனங்களும் ஈழத்து ஆதித்திராவிட ராஜீய குலங்களால் வெளியிடப்பெற்று வைக்கப்பட்ட முத்திரைகள், நாணயங்கள் இரத்தின மணிகள் போன்றனவும் கிடைத்துள்ளமையை அண்மைக்காலத் தொல்லியல் ஆய்வின் பெறுபேறுகள் தெளிவுபடுத்தியுள்ளன. இவை யாவும் இலங்கையில் எமது எதிர்காலத்தலைமுறையினருக்குரிய வாழ்வாதார ஜீவநாடிகளாகும்.

## இவ்வாய்வுக்குப் பயன்படுத்திய நூல்கள்


1. *Ancient Ceylon*, Vol. 3, 4, 8, 5, Dept. of Archaelogy, Colombo.
2. கிருஷ்ணராசா, செ., தொல்லியலும் யாழ்ப்பாணத் தமிழர் பண்பாட்டு தொன்மையும், 1998, யாழ்ப்பாணம்.
3. புஸ்பரட்ணம், ப., தொல்லியல் நோக்கில் இலங்கைத் தமிழர் பண்பாடு, 2000, சென்னை.
4. Sitrampalam. S.K., "The Form Demedh of the Sri Lankan Brahmi Inscriptions, A Historical Aesessment," *The Sri Lankan Journal of South Asian Studies* (New Series) No-6, 1996, University of Jaffna.
5. Pusparatnam, P. & Sankaran. K.R. "An Interpretation of the Term in Sri Lankan Brahmi Inscriptions as Revealed in Trade Relation. Between Sri Lanka and Tamil Nadu," *The Sri Lanka Journal of South Asian Studies*, (New Series) Vol.6, 1996/99, University of Jaffna.
6. தனபாக்கியம் குணபாலசிங்கம், இலங்கையில் தொல்லியலாய்வுகளும் திராவிடக் கலாசாரமும், மணிமேகலை பிரசுரம், சென்னை, 2001.
7. இந்திரபாலா, கா., இலங்கையில் தமிழர் - ஓர் இனக்குழு ஆக்கம் பெற்ற வரலாறு, குமரன் புத்தக இல்லம், சென்னை-கொழும்பு, 2006.
8. Fr. J.T.Xavier., *The Land of Letters*, Trincomalee, 1977.
9. புஸ்பரட்ணம், பரமு., "தொல்லிற் சான்றுகள் காட்டும் நாகநாட்டு அரசமரபு"., யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம், 10ம் மாநாடு, 05.03.2002.
10. கிருஷ்ணராசா, செ., "ஈழத்தில் நாகர் மரபுகள் - ஆய்வுக்கான சில அடிப்படைத் தகவல்கள்", வெளிச்சம், சித்திரை-வைகாசி 1994, யாழ்ப்பாணம்.
11. கிருஷ்ணராசா, செ., "எல்லாளன் குளம் - ஒரு வரலாற்றுக் குறிப்பு", வெளிச்சம், ஆடி 1994, யாழ்ப்பாணம். ■


திராவிடக் கலைமுறைகளும், தமிழ் பிராமிச் சாசனங்களும், ஈழத்துத் திராவிட ராஜ்ய குலங்களால் வெளியிட்டு வைக்கப்பெற்ற நாக, உரக, சிங்க நாணயங்களும் முத்திரைகள், உருவம் பொறிக்கப்பட்ட ரத்தின மணிகள் மட்பாண்ட முத்திரைகள் போன்றனவும் அண்மைக்காலத் தொல்லியல் ஆய்வுகளின் பெறுபேறாக எமக்குக் கிட்டியுள்ளன.



படிப்பகம்

www.padippakam.com



# வள்ளலார், நாவலர் ஆகியோர் கால ஈழ, தமிழகச் சூழல்

ஜெ. அரங்கராஜ்



தமிழ்ச் சமூகவியல் வரலாற்றில் சமயவியல் சார்ந்த பல நிகழ்வுகள் தமிழ்த் தேசியத் தன்மையினைப் பெரிதும் பாதித்துள்ளன. அவ்வகைமையில் தமிழ்த் தேசியத்தினைப் பெரிதும் பாதித்த நிகழ்வுகளாக வள்ளலார்-ஆறுமுக நாவலர் இடைப்பட்டதாய் 19ஆம் நூற்றாண்டில் நடைபெற்ற நிகழ்வுகளைக் கருதலாம். சமயவியல் எனும் படிநிலையைத் தாண்டி ஒரு தேசியத்தின் வேரினைப் பிளக்கும் வல்லாண்மை வாய்ந்ததாகவும் அறிவுலகத்தின் சிந்தனைப் போக்குகளை மடைமாற்றும் தன்மை கொண்டதுமாகவே இந்நிகழ்வுகளை எடுத்துக்கொள்ள இயலும். இந்நிகழ்வுகளினையும் இந்நிகழ்வுகளை ஒட்டியதாய அந்நாளைய சமூகச் சூழலையும் ஆயும்போது அதற்கான மெய்மைகளை உணரலாம்.

மெய்யறிவு வழிப்பட்டதாய சன்மார்க்க வழிக் கோட்பாடுகளைக் கொண்ட வள்ளலார் அவர்களுக்கும் சைவசித்தாந்த ஆகமவழிப்பட்டதாய ஆறுமுகநாவலர் அவர்களுக்குமான இம் மோதல் போக்குகளினது சமயம், நாவலர் அவர்களின் சமூகவியல் தேசியச் சூழல் எத்தன்மையது என்பதினை அறிதல் இன்றியமையாததாகிறது. ஈழத்தின் சமூக அமைவியலில் யாழ்ப்பாணத் தமிழ்ச் சமூகம் சற்றே மாறுபட்டதாய சிந்தனைப் போக்கினையும் சமூகக் கட்டமைவினையும் பெற்றதாக விளங்கியது. இதற்கான அரசியல் சமூகவியல் காரணம் தங்களின் இன மேலாண்மையையும் பண்பாட்டியல் தனித் தன்மையினையும் பாதுகாத்துக் கொள்வதற்காக தமிழர்கள் சிங்களவர்களுடன் மேற்கொண்ட இரண்டாயிரமாண்டுப் போராட்டங்களில் நாகநாடு எனப்பட்ட யாழ்குடா சில தகவமைப்புடைய தனித்துவங்களை வளர்த்தெடுத்து இருந்ததெனலாம். மேலும் சிங்கள அரசமரபுகளிலும் மேலான தனித்துவமான அரச மரபுகளின் தாயகமாகவும் யாழ்குடா விளங்கியமையும் அமையலாம். இவை சிங்களப் பேரினத்தன்மை தமிழர்களின் அகவியலைத் தொடாமல் செய்ததெனலாம். இப்போக்குப் பதினாறாம் நூற்றாண்டில் போர்த்துக்கீசியர் சங்கிலி மன்னனை வீழ்த்தும்வரை தொடர்ந்ததெனலாம்.

போர்த்துக்கீசியரும் ஒல்லாந்தரும் இலங்கையைக் கைப்பற்றிய போதும் தமிழ்ப் பகுதிகள் தனிநிர்வாகத்தில் தனிநாடாக இயங்கியபடியால் யாழ்ப்பாணமே அதன் தலைமைநகராக அமைந்தது. இத்தகு தலைமைக்காரணங்களால் அமெரிக்க மிசனரிமார்களின் வழியும் ஐரோப்பியப் பாதிரிகளின் வழியும் யாழ்ப்பாணத்தில் ஆங்கிலக் கல்வி பரவலாக்கம் பெற்றது. யாழ்குடாநாட்டின் உயர்மட்ட சமூகம் இவ்வாங்கிலக் கல்வியையும் மொழியையும் பெரிதும் பிடித்துக்கொண்டது. இம் மேற்கத்திய வழிபட்டதாய பார்வை என்பது, நாவலர் தொட்டு பேரா. கா. சிவத்தம்பி வரையதாயரிடத்திலும் காணலாம்.

தமிழகத்தில் இச் சூழலியம் முற்றிலும் மாறுபட்டதாய தன்மையினை யுடையதாக அமைந்ததனைக் காணலாம். 13ஆம் நூற்றாண்டுகளில் மாலிக் காபூர், உலுக்கான் முதலானோர் படையெடுப்புக்களோடு தமிழகத்தின் இறைமை அரசுநிலையில் பறிபோனது. அதன் பின்னதாய வேற்றின ஆட்சியாளர்களாலும், ஆங்கிலேயர்களாலும் தமிழகம் ஓர் இறைமையுடையதாகப் பொருட்படுத்தப் படாமல் போயின. தமிழர்களின் இறைமை சார்ந்த சிந்தனை மரபுகள் அழியாமல் புலவோர் மரபே பெரிதும் பாதுகாத்தது. இந்நிலையில் ஆங்கிலத்தினூடாய மேற்கத்திய தாக்கம் என்பதும் அந்நாளைய தமிழக அறிஞர்களிடம் ஈழத்திலும் சற்று மட்டுப்பட்டேயிருந்தது, ஈழத்தில் இந்நிலை மேலோங்கி இருந்தபடியால் தங்களின் சிந்தனை மரபு பற்றிய உயர்வான செருக்கு ஈழத்து அறிஞர்களிடம் ஏற்படலாயிற்று. இது தமிழக அறிஞர்களின் கருத்துக்களைத் தாழ் நோக்குடன் காண ஏதுவாக அமைந்தது.

சைவத்தின் மீதான பற்றுதலும் சாதிய முறைமைகளின் மீதாய பற்றுதலும் தமிழகத்திலும் யாழ்ப்பாணத்தில் 19-ஆம் நூற்றாண்டில் மிகுந்தே காணப்பட்டது. யாழ்ப்பாணம் நீங்கலாய மற்றைய ஈழப் பகுதிகளில் சைவப்பற்றுக் குறைந்தும் மரபுசார் வழிபாடுகள் மிகுந்துமே காணப்பட்டன.

சைவத்தைப் போற்றுவதோடு வைதீகம் சார்ந்த வாழ்வியற் சடங்குகளில் தங்களை ஈடுபடுத்திக் கொள்வதிலும் யாழ்ப்பாணம் முன்னிலையில் இருந்தது. 19ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாணம் பெரிதும் வைதிகமானாலும் நாவலரின் பங்களிப்பு மிகப் பெரிதாகவே அமைந்திருந்ததெனலாம்.

போர்த்துகீசிய ஆதிக்கத்திற்குப்பின் கிருத்துவம் மிகுந்து பரவத் தலைப்பட்ட காலத்தில் கிருத்துவத்திற்கு எதிராக மரபுசான்ற மக்களின் சமய இறைமையினைத் தூக்கிப் பிடிக்காமல் வைதிகக் கட்டமைவினையே செழுமையாக்கிப் பெரும் அரணாக முன்னிலைப் படுத்தியவர்களில் நாவலர் முதன்மையாளர்.



படிப்பகம்

www.padippakam.com

இவரது கிருத்துவத்திற்கெதிரான இம் முயற்சியும் முழுவெற்றி எனக் கருதவியலாது. ஏனெனில் மண்ணியல் சான்ற தங்களது இறைவழிபாட்டினை விடாமலும் வைதிகமயமாக்கல் இல்லாமலும் இருந்த கொங்கு நாட்டில் கிருத்துவ எழுச்சி என்பது ஆகக் குறைவே என்பது கருதத்தக்கது.

வைதீகமயமாக்கலில் முழுமையும் கவனம் கொண்டிருந்த நாவலர் வைதிகமே தங்களது மரபு எனக் கொண்டு, அதற்கு மாற்றாக இருந்த எதனையும் ஏற்க மறுத்தார். இது உண்மை மரபினை உணருதலின்றி இடையில் நுழைந்த ஒன்றினை மரபாகக் கைக்கொண்ட முயல்வு என்பதினை உணராமல் நுழைவையே மரபாகக் கொண்டமையால் ஏற்பட்ட விளைவாகும். பெரியாரும் இதனடி யொட்டியே மரபு எனும் சொல்லையே வெறுத்தாரெனலாம்.

முழுவதுமான வைதீகம் அல்லாத ஒன்றினை ஏற்க மறுத்த நாவலர் வைதீகமல்லாதனவற்றை அழிக்கவும் முற்பட்டார் முல்லைத்தீவில் கோவலன் கதையாகவும், மட்டக் களப்பில் கண்ணகி வழிபாடாகவும் விளங்கும் தமிழர்களின் மூதாதையர் வழிபாட்டையும் அவரால் ஏற்க இயலவில்லை சமண சமயத்தைச் சார்ந்த செட்டிச்சியை வழிபடுவது மூடத்தனம் எனக் கண்டித்தார். பன்றித் தலைச்சியம்மன், பிரட்டைத் தலைச்சியம்மன் முதலாய நாட்டுத் தெய்வ வழிபாட்டினையும் அவர் ஏற்றுக் கொள்ளவில்லை. இலக்கிய நிலையிலும், அவரது பதிப்புகளின் வழியும் இதனை அறிவியலும், பைராட் எனும் பெயரில் நாவலர் மொழிபெயர்த்த விவிலிய மொழிபெயர்ப்பிலும் சைவ மேலாண்மையே மிகுந்திருப்பதாகக் குற்றச்சாட்டு உண்டு. மேலும் அவரது திருக்குறள் பதிப்பின் பின் அட்டையில் இனிவர உள்ள நூல்கள் எனும் பட்டியலில் வளையாபதி இடம் பெற்றுப் பின் வெளியிடப்படாமல் அழிந்ததெனலாம்.

**சிதம்பரம் ஆயிரங்கால் மண்டபத்தில் ஒரு சொற்பொழிவில் வள்ளலார் ஈடுபட்டிருந்த பொழுது, நாவலர் எனும் சொல்லுக்கு விளக்கமாக நாவினால் அலர் உண்டாக்குபவன் எனக் குறிப்பிட, அது நாவலரால் நீதிமன்றம் வரை கொண்டு செல்லப்பட்டமையும் அதன் விளைவுகளும் யாவரும் அறிந்ததே.**

சைவசமயத்தின் பாற் கொண்ட பெரும் பற்றால் தமது தமையனார் பெரிய புரணத்தைப் பழித்தபோது அவரை வெட்டுவதற்கு அரிவாளுடன் ஆறுமுகநாவலர் சென்றாராம். இவ்வாறான சைவ மேலாண்மைக் குணமே வள்ளாருடனான இவரது முரணின் தாக்கமெனலாம்.

யாழ்ப்பாணச் சமூக அமைவில் பெண்களுக்கான மேலைக்கல்வி என்பது 19-ஆம் நூற்றாண்டின் துவக்கத்திலேயே ஏற்பட்டுவிட்டது. மேலும் உயிர்ப்பலி எதிர்ப்பு, கைம்பெண் மறுமணம் முதலியவற்றின் இன்றியமையாமையை உதயதாரகை முதலாய பத்திரிகைகளின் வழி அறியலாம்.[1] இவை எல்லாவற்றையும் ஆதரித்தும் போற்றியும் வந்த நாவலர் இவையாவும் சைவத்தின் பாற்பட்டே நிகழவேண்டும் என்ற எண்ணமும் கொண்டிருந்தார்.

யாழ்ப்பாணச் சூழ்நிலைக்கு முற்றிலும் மாறுபட்டதாய நிகழ்வுகளைக் கொண்டு அமைந்தது தமிழகச் சூழல். சமூகச்சீர்திருத்த நிலையில் வைதீகத்திற்கு எதிராகவும், வைதீகத்தால் தலைமை கொண்ட பார்ப்பனர்களின் சாதிய மேலாண்மைகளுக்கு எதிராகவும் ஓர் இயக்கம் தோன்ற வேண்டியதான சூழல் 19ஆம் நூற்றாண்டில் ஏற்பட்டது. அத் தேவையினை நிறைவு செய்பவராகவே வள்ளலார் விளங்கினார். தில்லைச் சிதம்பரத்தில் தீட்சிதர்களால் தமிழர்கள் மதிக்கப்படாமை கண்டே அதற்கு எதிராக உத்தரஞான சிதம்பரம் என வடலூரை அமைத்தார். சங்கராச்சரியாருடன் கருத்து முரண்பட்டமை, சாதியப் போக்குகளை எதிர்த்தமை எனக் கொண்டு செல்லாம்.

வள்ளலாரின் சன்மார்க்க சங்கம் சைவத்திற்கு எதிர்பட்டமையை நாவலாராலும் சைவத்தைப் போற்றிய அப் பிராமண மடங்களாலும் மடங்களைச் சார்ந்தோராலும் தாங்கிக் கொள்ள இயலவில்லை. மேலும் வள்ளலாரின் திருவருட்பா 1867ஆம் ஆண்டு வெளிவரத் தொடங்கித் தமிழகத்தின் பல பகுதிகளிலும் ஓதப்படலாயிற்று. சைவத்திற்கு மாற்றான இதனை ஏற்க இயலாமல் அப்பர், சம்பந்தர் முதலாய சைவ சமயக் குரவர் பாடிய பாடல்களில் சிலவற்றைத் தொகுத்து அருட்பா என நாவலர் வெளியிட்டார். அவர்கள் பாடாத மற்றைய மனிதர்களால் பாடப்பட்டவை எல்லாம் மருட்பா என்றார். அப்பொழுதே இச் சூழல் சிக்கலுக்குரியதாக மாறிற்று. போலி அருட்பா மறுப்பு எனப் 12 கண்டன நூல்கள் வள்ளலாருக்கு எதிராக வந்தன. மேலும் பல கண்டன நூல்கள் பலரால் எழுதப்பட்டன.

சிதம்பரம் ஆயிரங்கால் மண்டபத்தில் ஒரு சொற்பொழிவில் வள்ளலார் ஈடுபட்டிருந்த பொழுது, நாவலர் எனும் சொல்லுக்கு விளக்கமாக நாவினால் அலர் உண்டாக்குபவன் எனக் குறிப்பிட, அது நாவலரால் நீதிமன்றம் வரை கொண்டு செல்லப்பட்டமையும் அதன் விளைவுகளும் யாவரும் அறிந்ததே.

மேற்கண்ட வள்ளலார்-நாவலர் மோதல்களின் விளைவாகத் தமிழ்ச் சமூகம் சில கொடுமையான விளைவுகளுக்குத் தள்ளப்பட்டது எனலாம். தமிழ் அறிவுலகம் இருபெரும் பிரிவுகளாகப் பிரிந்தது. நாவலரும், சைவ மடங்களும், சைவப் பற்றாளர்களும், யாழ்ப்பாணத்து அறிஞர்களும் ஓரணியாகவும், புரசை, பாலசுந்தர நாயக்கர், பூவை கல்யாணசுந்தர முதலியார், இறுக்கம் இரத்தின முதலியார், நரசிங்கபுரம் வீராசாமி முதலியார், விசாகப் பெருமாள் ஐயர் முதலியோர் ஓரணியாகவும் பிரிந்தனர். இதன் தொடர்போக்கு 20ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி தாண்டியும் நீடித்தது.

உ.வே. சாமிநாதையருக்கும் சி.வை. தாமோதரம்பிள்ளைக்கும் இடைப்பட்டதாய சிந்தாமணிப் பதிப்புச் சிக்கல்கள் இதனை அடியொற்றி எழுந்தன எனலாம். மேலும் உ.வே. சா தன்னுடைய பதிப்பு நூல்களில், உரைகளில் ஒரே ஒரு மேற்கோள் தவிர, மற்றெங்கிலும் திருவருட்பாவை மேற்கோளாகக் காட்டவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. தமிழ் நூற் பதிப்பாளரும் ஆய்வாளர்களும் பிளவுபட்டமைக்குச் சான்றாகத் தொல்காப்பியச் சொல்லதிகரத்தைச் சேனாவரையர் உரையுடன் சி.வை.தா பதிப்பித்த பொழுது நிகழ்ந்தவற்றை எஸ். கணபதிப் பிள்ளை கூற்றின் வழி அறியலாம்.



படிப்பகம்

www.padippakam.com

**வள்ளலார்-நாவலர் சிக்கல்களால் தமிழ் அறிவுலகு இரண்டுபட்டுப் போனமையை அறியலாம். இதன் விளைவுகள் இன்றளவும் தொடர்வதினைக் காணலாம்.**

வித்துவ சூடாமணிகளான கோமளபுரம் இராச கோபாலபிள்ளை, தொழுவூர் வேலாயுத முதலியார் என்பவர்களுக்கு அடிவயிற்றிலே அக்கினி சூடாமணி வேலை செய்யத் தொடங்கிற்று. அந்த அழுக்காற்று மன்னர்கள் திரைமறைவில் நின்று, நரசிங்கபுரம் வீராசாமி முதலியாரைக் கிள்ளிவிட்டார்கள். இந்த வீராசாமி முதலியார் யாவரோ என்றால் அவர்தாம் இன்னாரென்று இதோ விளம்புகின்றேன். இவர் இராமலிங்கசுவாமியின் முதற் சீடர். அருட்பாப் புராணத்தில் தவக்கொழுந்து என்று புகழப்பட்டிருக்கிறார். இராமலிங்கரின் அடுத்த வாரிசு இவரே என்று சுத்தானந்த பாரதியார் முழங்குகின்றார். இந்த வீராசாமி முதலியார் யாழ்ப்பாணத்தையும் நாவலரையும் திட்டிப் பன்னிரண்டு நூல்கள் அருளியிருக்கின்றார். தீவாந்தர சைவ விநோதம் என்ற நூலில் நாவலரைப் படு கிருஸ்தவரென்றும் நாவலருக்குக் கிருத்துவப் பெயர் பைராட் என்றும் வாய்க்கு வந்தபடி வர்ணித்திருக்கின்றார். இந்த அருட்பாப் புலவராகிய வீராசாமி முதலியார் அந்த இரு இலக்கண மேதைகளின் உதவி கொண்டு தாமோதரம் பிள்ளையின் சேனாவரையர் விளம்பரத்தில் இலக்கணப் பிழைகள் கண்டுபிடித்து இலக்கண இலக்கியங்களில் மகா வல்லவரும் சென்னை முதல் ஈழம் ஈறாகவுள்ள தமிழ்நாட்டு வித்துவான்களில் தமக்கு இணையில்லாதவருமாகிய[2] நாவலர் அவர்களுக்குத், தாமோதரம்பிள்ளை கொடுத்த விசேடனத்தை ஆட்சேபித்து இணையில்லாதவர் என்பதற்குப் பெண்சாதியில்லாதவர் என்ற மெய்ப்பொருள் பண்ணி, தாமோதரம் பிள்ளையும் நாவலரையும் தூஷித்து, 1869ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் விஞ்ஞாபனப் பத்திரிக்கை என்று ஒரு தூஷணப் பத்திரிகை வெளியிட்டிருக்கிறார்.

மேற்கண்டவாறான மேதல்களும் அதனையொட்டி இரு தரப்பிலும் பல்வேறு கண்டன நூல்கள் எழுந்தன. இதில் நாவலர் வீராசாமி முதலியாரை எதிர்த்து எழுதிய நல்லறிவுச் சுடர் கொளுத்தல் எனும் கண்டனநூல் குறிப்பிடத்தக்கது.

மேற்கண்டவாறாக வள்ளலார்-நாவலர் சிக்கல்களால் தமிழ் அறிவுலகு இரண்டுபட்டுப் போனமையை அறியலாம். இதன் விளைவுகள் இன்றளவும் தொடர்வதினைக் காணலாம். சான்றாகத் தமிழர்களின் தாயகப்பகுதியில் எழுந்த தமிழ் இலக்கியங்களின் வரலாற்றைத் தமிழ் இலக்கிய வரலாறு எனும் நூல் செய்யும் தமிழக அறிஞர்களின் தமிழ் இலக்கிய வரலாற்றில் ஈழத்துத் தமிழ் இலக்கியங்களின் வரலாறு இடம் பெறாமையைக் கொள்ளலாம்.

இரும்புச் செய் விளக்கி னீர்ந்திரிக் கொளீஇ
நெல்லு மலருந்த தூஉய்க்கை தொழுது
மல்ல லாவண மாலை யயர
(நெடுநல்வாடை 41-43.)

எனும் பண்டைத் தமிழர்களின் ஒளியியல் சமய மரபை மீட்டுருவாக்கம் செய்து, பாலிலே சருக்கரை கரைவதுபோல், இறைவனிடம் உயிர் கலந்து விடும் எனும் சைவசித்தாந்த முத்தி நெறியிலிருந்து மாறுபட்டு, இறையருள் பெற்றால் உயிர் ஐந்தொழிலும் செய்யும் எனும் தமிழியற்சார் நெறியினைச் சைவ சமயிகளின் எதிர்ப்பை மீறி உய்வித்து மாண்புகள் மிக்க தமிழியற் சமயமாக வள்ளலரால் எழுந்த சுத்த சன்மார்க்கம் தமிழ் அறிவுப்புலத்தாரின் சிக்கல்களுக்கு ஆட்படாமல் சாலவளர்த்தெடுக்கப் பெற்றிருந்தால் இன்று சீக்கியர்களைப் போலத் தமிழர்களும் தங்களுக்கான தன்னுணர்வு மிக்க ஒரு சமய வரைவியலைக் கட்டமைத்திருப்பார்கள். தமிழறிவுலக மோதற் போக்கினால் அவை நிகழாமல் போனமை தமிழர்களுக்குப் பெரும் பேரிழப்பாகும். கடைவிரித்தேன் கொள்வாரில்லை கட்டிவிட்டேன் எனும் வள்ளலாரின் மனத்துயர் எளிதில் தவிர்க்கத் தக்கதல்ல.

வரலாற்றியல் நோக்கில் இம்மோதல்களைப் பார்க்கும்போது இக் கட்டுரையின் தொடக்கத்தில் குறிப்பிட்ட தமிழ்த் தேசியத்திற்கேற்பட்ட பாதிப்பாகத் தமிழர்களுக்கு ஏற்பட்ட விளைவுகளில் சாலப்பெரியதாக தமிழ் தேசிய எண்ணம் சிதைக்கப்பட்டமையைக் குறிப்பிடலாம். தொல்பழங் காலந்தொட்டே இலங்கையின் ஈழப்பகுதியும் தமிழகமும் தமிழர்களின் மரபு வழிப்பட்டதாய தாயகமாக இருந்து வந்துள்ளன. சி.வை.தா., உ.வே.சா. முதலாய பதிப்பாசிரியர்களும் வி. கனகசபை முதலாய வரலாற்று அறிஞர்களும் தமிழ் நாடுகள், தமிழ் வழங்கும் நாடுகள் என்றே இவற்றைக் குறிப்பிடுவர்.

ஈழமும் தமிழ் வழங்கும் தமிழர் தாயகம் எனும் எண்ணப்போக்கு இவ் அறிவுலக மோதல்களால் தமிழகத்தில் பெரிதும் சிதைந்தது. தமிழ் மக்கள் ஈழத்தைத் தமிழ்நாடுகளில் ஒன்றாகக் கைக்கொள மறந்தனர், ஈழத்தமிழ் வழக்குகளைச் சிங்களத் தமிழ் என்றனர் இலங்கைத் தமிழரும் வடக்கார், இந்தியர் எனத் தமிழகத் தமிழர்களை வேறு கொண்டனர்.

1905ஆம் ஆண்டு ஆங்கில அரசு வங்காளத்தைச் சமய அடிப்படையில் மேற்கு வங்கம், கிழக்கு வங்கம் எனப்பிரித்தபோது, அனைத்து வங்காளிகளும் கொதித்தெழுந்தனர். ஆனால் 1931ஆம் ஆண்டு இலங்கை, இந்திய நிர்வாகத்திலிருந்து பிரிக்கப்பட்டபோது ஈழத்திலும் தமிழகத்திலும் ஓர் உணர்வும் உண்டாகவில்லை. தங்களது தாயகங்கள் பிரிக்கப்படுவது பற்றி ஏது கவலையும் அற்றிருந்தனர். இவை தொடர்வாயின பெரியார், அண்ணா முதலாயத் தமிழ் தேசியப் பேச்சாளர்களாலும் இதே நிலையிலேயே கொண்டு செல்லப்பட்டது. இப்போக்குகளுக்கெல்லாம் மூலமாகத் தமிழ் அறிவுலகில் நிகழ்ந்த வள்ளலார்-நாவலர் மோதலையே குறிப்பிட வேண்டும் எனலாம்.

**அடிக்குறிப்புகள்**

1. உதயதாரகை,ஜனவரி, 1842
2. எஸ்.கணபதிப்பிள்ளை, 1950, வீரகேசரி.

**பார்வை நூல்கள்**

1. முனைவர் பா. சரவணன், அருட்பா - மருட்பா
2. நரசிங்கபுரம், வீராசாமி முதலியார், தீவந்திர சைவ விநோதம். ■



படிப்பகம்

www.padippakam.com



# போரும் அரசியலும்

சி.கா. செந்திவேல்

உலகில் உள்ள அனைத்தையும் விட மனிதர்களே மேலானவர்கள். மனிதர்களுக்கு நிகரான ஒன்றை இவ்வுலகில் எங்குமே காணவியலாது. பிரபஞ்சத்தில் இருந்து உருவாகிய இவ்வியற்கைப் பூவுலகில் மனிதர்கள் தோன்றி வளர்ந்து யாவற்றையும் உருவாக்கி வந்திருக்கின்றார்கள். இயற்கையோடு இணைந்தும் போராடியும் கட்டுப்படுத்தியும் தமக்கானவற்றைப் படைத்து வந்திருக்கின்றார்கள். உணவு, உடை, இருப்பிடம், மொழி, மதம் பண்பாடு போன்றவற்றை உருவாக்கி வளர்தெடுத்தெடுத்து வந்திருக்கின்றார்கள். மனிதர்களது உழைப்புத் திறனும் மூளையின் வளர்ச்சியும் சிந்திக்கும் ஆற்றலும் புதியன. கண்டுபிடிப்பதில் இடையறாத முயற்சியும் மனித குலத்தை முன்னோக்கி எடுத்தும் வந்திருக்கிறது. இத்தகைய மனித வாழ்வுப் பயணம் பல இலட்சம் ஆண்டுகளை கொண்டதாகும். இவ்வாறு மனித குலம் தோன்றி வளர்ந்து இனம் பெருக்கி நவீன அறிவியல் கண்டு வாழ்ந்து வந்த வரலாறு அற்புதமான மானிட வரலாறாக தொடர்கிறது. இங்கே கூர்ந்து அவதானிக்கத்தக்கது மனித இருப்பின் தொடர்ச்சியாகும். இம் மனித இருப்பானது வரலாறு முழுவதும் நெருக்கடிகள், சவால்கள், அனர்த்தங்கள், அழிவுகள் போன்றவற்றை எதிர் கொண்டே வந்திருக்கிறது. ஏற்றத்தாழ்வுகள், பஞ்சங்கள், பட்டினிகள் இடப்பெயர்ச்சிகள், கொடிய நோய்கள், சுரண்டல்கள், அரசியல் ஒடுக்குமுறைகள் போன்றவற்றை எதிர்கொண்டு அவற்றைக் கடந்தே மனித வரலாறு முன்னோக்கி வந்திருக்கின்றது.

இவ்வாறு மனித இருப்பிற்குச் சவால் விடுத்து வந்தவற்றில் போரும் அரசியலும் பிரதான இடத்தில் இருந்து வந்துள்ளன. இவை மனித சமூக வளர்ச்சிப் போக்கில் தற்செயலானவை அல்ல. அவை வரலாற்றின் குறிப்பிட்ட கட்டத்தில் தோன்றி வளர்ந்து விரிவு பெற்றுள்ளவை. மனிதர்கள் ஆரம்பத்தில் மனிதக் கூட்டத்தினராக வாழ்ந்த போது தமக்கான உணவைத் தாமே கூட்டாகத் தேடிப் பெற்றுத் தம்முள் பகிர்ந்துண்டு வாழ்ந்தனர். இயற்கை அனர்த்தங்களையும் வலிய மிருகங்களையும் கூட்டாக ஒன்று சேர்ந்து எதிர்த்து நின்று தமது இருப்பைத் தக்கவைத்தனர். அங்கே தனியுடைமை எதுவுமற்ற ஒரு சமத்துவமான சமூக வாழ்வு இடம்பெற்று வந்தது. ஆனால், மனித உழைப்பின் முயற்சியும் மூளை வளர்ச்சியும் சிந்திக்கும் ஆற்றலும் கருவிகளின் கண்டுபிடிப்புக்களும் விருத்திக்கும் இட்டுச்சென்றன. அவற்றின் விளைவாக மனிதர்களிடையேயான அடுத்தக்கட்டச் சமூக வளர்ச்சிப் போக்கு உருவாகியது. அதுவே தனிச் சொத்துடைமையின் ஆரம்ப வடிவங்களாகி விரிவு பெற்று முன்னோக்கிச் சென்றது. ஆரம்பகாலச் சொத்துடைமையின் வாயிலாக உள்ளோரும் இல்லாதோரும் என்ற நிலை மட்டுமின்றி உணவைத் தேடுவதிலும் உழைப்பிலும் வேறுபாடுகள் தோன்றின. உழைப்பில் ஈடுபடுவோர் பலராயிருக்க அதில் ஈடுபடாத சிலர் அதன் பலாபலன்களை அனுபவிப்பதான ஆரம்ப நிலைகள் உருவாகின. அச் சூழலில் உழைப்புப் பிரிவினையும் வர்க்கங்களின் தோற்றமும் தனிச் சொத்துடைமையின் வளர்ச்சியும் சமூக வளர்ச்சிப் போக்கின் அடிப்படையாகின. இவற்றின் அடிப்படையாக வர்க்க ஏற்றத்தாழ்வுகளும் முரண்பாடுகளும் போராட்டங்களும் உருவாகி வந்தன. இவற்றின் நடுவே தனிச் சொத்துடைமையினதும் சொத்துடைமையாளர்களினதும் பாதுகாப்பிற்காக அரசு என்பது தோற்றம் பெற்றது. அரசு என்ற ஆரம்ப வடிவம் ஆயுதம் தாங்கிய அரச இயந்திரமாக விருத்தி பெற்றது. காலப் போக்கில் அரசு என்ற பலாத்கார நிறுவனத்தைப் பாதுகாக்கும் அரசாங்கங்கள் தோற்றம் பெற்றன. மேலே கூறப்பட்ட வரலாற்றுப் பின்புலத்தின் ஊடாகவே போர் பற்றியும் அரசியல் பற்றியும் ஒருவரால் தெளிவான கண்ணோட்டத்தைப் பெற்றுக் கொள்ள இயலும்.



படிப்பகம்

www.padippakam.com

எனவே, போர் என்பது சமூக வளர்ச்சிப் போக்கில் தனிநபர்களின் விருப்பு வெறுப்புகளின் அடிப்படையில் தோன்றிய ஒன்றல்ல. போர் என்பது வர்க்கங்கள், தேசங்கள், நாடுகள், அரசியற் குழுக்கள் ஆகியவற்றுக்கிடையில் நிலவும் முரண்பாடுகள் ஒரு கட்டத்திற்கு வளர்ச்சியடைந்ததும் அவற்றைத் தீர்ப்பதற்குரிய அதியுயர்ந்த போராட்ட வடிவமாகும். தனியுடைமை முறைமையும் வர்க்கங்களும் தோன்றியது முதல், போர் என்பது இருந்து வந்திருக்கிறது எனப் போர் பற்றிய மாக்சிய உலகப் பர்வை எடுத்துரைக்கிறது. இவ்வாறு இடம்பெற்று வந்த போர்களை அநீதியான போர், நீதியான போர் என வகைப்படுத்தக்கூடியனவாகவே அவை அமைந்திருந்தன. தனியுடைமையின் அடிப்படையில் அமைந்த ஏற்றத்தாழ்வான சமூக அமைப்பையும் அதன் பொருளாதார நலன்களையும் இருப்பையும் பாதுகாப்பதற்கான போர்கள் நீடித்து வந்தததை ஒரு புறமாகக் காணலாம். மறுபுறத்தில் தமக்கான புதிய சமூகக் கட்டமைப்பைப் பெற்றுக் கொள்வதற்கான போர்கள் இடம்பெற்று வந்துள்ளதையும் காணலாம். முன்னையதில் ஏற்கனவே சொத்துடைமையும் ஆட்சி அதிகாரத்தையும் கொண்ட வரக்க்த்தினர் மேலும் அவற்றை விரிவுப்படுத்திச் செல்வங்களையும் அவற்றுக்குரிய நிலங்களையும் நாடுகளையும் கைப்பற்றவும் போர்களை முன்னெடுத்தனர். பின்னையதில் அடக்கப்படும் வர்க்கங்களைச் சேர்ந்தோர் தம்மீது திணிக்கப்பட்ட அடிமை விலங்குளை உடைத்தெறிவதற்காகப் போர்களில் ஈடுபட்டனர். அவை மாற்றத்தைக் குறித்து நின்ற புரட்சி எனும் நிலைக்கான போராகவும் இருந்து வந்தன. எனவே நீதியான போர் மக்கள் சார்பானதாகவும் அநீதியான போர் சொத்துடைமை பெற்ற ஆளும் வர்க்கம் சார்பானதாகவும் இருந்து வந்துள்ளதை வரலாறு முழுவதும் காணலாம். இந்த அநீதியான போர் என்பதைப் பழைய புராணங்கள், இதிகாசங்கள், இலக்கியங்கள் வாயிலாகக் காண இயலும். அவை ஒரு தரப்பு நியாயங்களுக்காகத் தத்தமது போர்களை நியாயப்படுத்தி வந்திருக்கின்றன. அத்தகைய போர்களால் அனாவசியமாக மக்கள் அழிவுற்றமை பற்றி அவை அக்கறை செலுத்தியதில்லை. அடிமைகளின் உழைப்பை உறிஞ்சவும் அவர்களை அடக்கிவைக்கவும் இடம்பெற்ற எந்த ஒரு போரும் நீதியான போர் அல்ல. அதே போன்று நிலவுடைமைக் காலத்தில் நில அபகரிப்புகளுக்கும் நாடுகளைக் கைப்பற்றவும் செல்வங்களைப் பறித்துக் கொள்வதற்காகவும் மாமன்னர்கள், மன்னர்கள், தளபதிகள் மட்டுமன்றிக் குறு நில மன்னர்கள் போன்றோரும் நடாத்திய போர்கள் யாவும் அநீதியான ஆத்திரமிகு போர்களாகும். அப் போர்களுக்கு ஆளும் அதிகார வர்க்கமாக இருந்தோர் எத்தனையோ இட்டுக்கட்டுக் கதைகளை கட்டி வீரம் வெற்றி தியாகம் என நியாயப்படுத்த முற்பட்ட போதிலும் அவை யாவும் அநீதியான போர்கள் என்பதில் ஐயமில்லை.

அன்று மட்டுமின்றி, அண்மைய வரலாறுக் காலத்திற் கூட நிலவுடைமை வர்க்கமும் அதனோடிணைந்த கொலனியவாதிகளும் தொடுத்த ஒவ்வொரு போரும் மக்களின் பெரும் அழிவுகளுக்கு உள்ளாக்கிய அநீதியான போர்களே ஆகும். நாடுகளை அடிமைப்படுத்தவும் அவற்றின் வளங்களை சூறையாடிக் கொள்ளவும் அப் போர்கள் முன்னெடுக்கப்பட்டன. இத்தகைய போர்கள் இன்று வரை நீடித்தபடியே உள்ளன. நவீன அறிவியலும் உயர் தொழில்நுட்பமும் பெற்றுத் தந்த அதி நவீன ஆயுதங்கள் சமகாலப் போர்களில் பயன்படுத்தப்பட்டு வருவதனைக் காணலாம். அவை புதிய புதிய போர் முனைகள் திறக்கப்படுவதற்கும் ஆயுத விற்பனை பெருகுவதற்கும் வழிவகை செய்கின்றன. இப் போர்களினாற் பல கோடி மக்கள் அழிந்துள்ளனர். ஏகாதிபத்தியப் போர்ப் பாதிப்பில் இருந்து இன்று வரை மீளாத மக்கள் தலைமுறையினர் பல நாடுகளில் வாழ்ந்து வருகின்றனர் என்பது நோக்கத்தக்கதாகும்.

அதேவேளை, நீதியான போர்கள் ஒடுக்கப்படும் வர்க்கங்கள் இனங்கள் சமூகங்கள் சார்பாக இடம்பெற்று வந்துள்ளன. அன்று அடிமைச் சமுதாய அமைப்பிலே எசமானர்களை எதிர்த்த அடிமைகளின் போராட்டமாக அமைந்தது ஸ்பாட்டகஸ் தலைமையிலான புரட்சிப் போர். நிலவுடைமையாளர்களை எதிர்த்துப் பண்ணையடிமைகளான விவசாயிகள் தொடுத்த போர்கள் எண்ணற்றவைகளாகும். மாபெரும் பிரஞ்சுப் புரட்சியானது தொழிலாளர்களும் விவசாயிகளும் முதலாளிகளும் இணைந்து நிலவுடைமை ஆதிக்கத்தைத் தகர்த்தெறிய வழிவகுத்தது. அதன் பின் அதே பிரன்சின் பாரிஸ் நகரிலே தொழிலாளி வர்க்கத்தின் ஆயுத எழுச்சி இடம்பெற்று அங்கிருந்து முதலாளி வர்க்கம்

> பழைய புராணங்கள், இதிகாசங்கள், இலக்கியங்கள் ஒரு தரப்பு நியாயங்களுக்காகத் தத்தமது போர்களை நியாயப்படுத்தி வந்திருக்கின்றன. அத்தகைய போர்களால் அனாவசியமாக மக்கள் அழிவுற்றமை பற்றி அவை அக்கறை செலுத்தியதில்லை.



தேற்கடிக்கப்பட்டுத் துரத்தப்பட்டது. இரண்டு மாதங்களை தொழிலார்கள் தமது ஆட்சி அதிகார கட்டுப்பாட்டின் கீழ் பாரிஸ் கமியுன் என்ற பெயரில் நிலை நிறுத்தி வைத்திருந்தனர். கொலனித்துவவாதிகளையும் முதலாளி வரக்கத்தினரையும் எதிர்த்து எழுந்த போர்கள் ஏராளமானவை. ஆசிய ஆபிரிக்க இலத்தின் அமெரிக்க நாடுகளிலே அவற்றுக்கான வரலாற்றுத் தடயங்களைக் காணலாம். இவை யாவும் மக்கள் சார்பான நீதியான போர்களாகும்.

மேலும், மாபெரும் ஒக்டோபர் புரட்சியும் அதனைத் தொடர்ந்த சீனப் புரட்சி உட்பட தேசிய விடுதலைப் போராட்டங்களாக வெடித்தெழுந்து போர்கள் யாவுமே முற்போக்கான நீதியான போர்களாகும். அதேபோன்று, ஒவ்வாரு நாட்டிலும் தத்தமது ஆளும் வர்க்கங்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட ஒவ்வொரு சிறிய, பெரிய போராட்டங்களும் நீதியானவையே. இந்திய உபகண்டத்திலும் அதே போன்று ஆசியாவின் பரந்த நிலப்பரப்பெங்கும் மக்களுக்கான நீதியான போர்களைக் காண முடியும். இவற்றிடையே நீதியான போர், அநீதியான போர் என்பதற்குக் கடந்த நூற்றண்டில் இடம்பெற்ற இரண்டாம் உலகப்போர் சிறந்த உதாரணமாகும். ஹிட்லர், முசோலினி, யப்பானிய பிற்போக்காளர்கள் முன்னிற்று முன்னெடுத்த போர் முதலாளித்துவத்தின் உச்சமான பாசிசத்தை நிலை நிறுத்த முன்னின்ற அநீதியான போராகும். அதனை முறியடிக்க சோவியத் யுனியன் தலைமையில் சோவியத் மக்களும் உலக மக்களும் அணிதிரண்டு முன்னெடுத்த பாசிச எதிர்ப்புப் போர் நீதியான போராகும். இறுதியில் அந் நீதியான போரே வெற்றிகொண்டது.

இவ்வாறு மனிதகுல வரலாறு முழுவதும் இருந்து வந்துள்ள போர்களையும் அவற்றின் சமூகப் பின்புலமாக அமைந்த பொருளாதாரக் காரண காரியங்களையும் நோக்கும்போது,



படிப்பகம்

www.padippakam.com

போருக்கும் அரசியலுக்கும் உள்ள உறவுநிலை பற்றி நோக்குவது தேவையாகிறது. எந்தவொரு போரிலும் அரசியலற்ற போரைக் காணவியலாது. மதத்தின் பெயரிலான போரிலும் இனத்தின் காரணமான போரிலும் அல்லது நாடுகளுக்கிடையிலும் நாடுகளுக்குள்ளேயும் இடம்பெறும் எத்தகைய போரிலும் அரசியல் இல்லாத போரென்று எதனையுங் கூறமுடியாது. ஏற்றத் தாழ்வும் சுரண்டலுங்கொண்ட பொருளாதார சமூக அமைப்பில் வர்க்கங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தியே அரசியல் என்பது முன்னெடுக்கப்படுகிறது. எனவே வர்க்க சமூகத்தில் வர்க்கங் கடந்த அரசியல் என்பது வெறும் ஏமாற்றேயாகும். இத்தகைய வர்க்கம் சார்ந்த அரசியலும் வர்க்கம் சார்ந்த போர்களும் ஒன்றுடன் ஒன்று இணைந்தவாறே பயணித்து வந்துள்ளன. அதாவது, அரசியற் சாராம்சம் இல்லாத போர்களை உலகில் எங்கும் காணமுடியாது. ஏனெனில் அரசியற் குறிக்கோள்களை அடைவதற்குப் போர் தேவைப்படுகிறது. அதன் நோக்கம் நிறைவேற்றப்பட்டதும் போர் முடிவுக்குக் கொண்டுவரப்படுகிறது. அப் போருக்கான குறிக்கோள் அல்லது இலக்கு அடையப்படாதவிடத்து போர் தொடர்கிறது. இதனை, நமது நாடு உட்படச், சமகால உலகெங்கும் காணக்கூடியதாக உள்ளது. போருக்கும் அரசியலுக்கும் உள்ள உறவைப் பற்றி எடுத்துரைக்கும்போது "அரசியலின் நீடிப்பே போராகும்" எனத் தோழர் மாஓ சொன்னது இந்த அர்த்தத்தில்தான். போர் அரசியலாகவும் அரசியல் போர் நடவடிக்கையாகவும் விளங்குகின்றன. புராதன காலம் முதல் அரசியற் குணாம்சம் இல்லாத போர் எதுவுமே இருந்ததில்லை. ஆனாற் போருக்கு அதற்கேயுரிய விசேட அம்சங்களுண்டு. இந்த அர்த்தத்தில் போரைப் பொதுவாக அரசியலுடன் சம்பந்தப்படுத்த முடியாது. ஆனால் "விசேட நடவடிக்கைகள் மூலம் அரசியலின் நீடிப்பே போர் என்பதாகும்". எனவே அரசியலை இரத்தம் சிந்தாத போர் என்றும் போரை இரத்தம் சிந்தும் அரசியல் என்றும் கூறலாம்.

இவ்வாறு எடுத்துரைப்பதன் மூலம் வரலாற்றுப் பொருள்முதல்வாதம் என்ற வெளிச்சத்தின் ஊடாகப் போரையும் அரசியலையும் அணுகி ஆராயும் மாக்ஸியவாதிகள் போர்களை ஊக்குவிப்பதாகவும் அரசியலை பலாத்காரம் கொண்டதாக மாற்றுவதாகவும் குற்றம் சாட்டப்படுகின்றனர். இவ்வாறு குற்றம் சாட்டும் ஆளும் வர்க்கச் சக்திகளும் வல்லாதிக்கவாதிகளும் தம்மைப் போருக்கு எதிரான பலாத்காரமற்ற அகிம்சாவாதிகளாகவும் ஜனநாயகவாதிகளாகவும் காட்டிக்கொள்கின்றனர். ஆனால் அவர்களது உண்மையான சுயரூபம் அத்தகையதல்ல. ஏற்கனவே அரச யந்திரம் என்பதன் ஊடாகப் பலாத்காரத்தைக் கொண்டிருப்பவர்கள் தனிச்சொத்துடைமை கொண்ட ஆளும் வர்க்கத்தினரே. உலகில் வல்லாதிக்கம் செலுத்தி நிற்கும் அவர்களே, உலகின் போர்களது ஊற்று மூலமாக விளங்கிய கொடிய போர்களை முன்னெடுத்து வருகின்றனர்.

ஆனால் உலகில் ஒடுக்கப்பட்ட வர்க்கங்களும் இனங்களும் ஏனைய சமூகங்களின் விடுதலைக்காக நின்று வரும் மாக்ஸிஸவாதிகளும் ஒரு நாளைக்குக் கூட போர் நிகழ்வதை ஆதரிக்கவில்லை. ஆனால், ஆளும் வர்க்கங்களினாலும் வல்லாதிக்க சக்திகளினாலும் ஒடுக்கப்பட்ட மக்களின்மீது போர் திணிக்கப்படும்போது அவ் அநீதியான போரை நீதியான போரினால் எதிர்த்து முறியடிக்க முன் நிற்பர். ஒன்று, போரை அவர்கள் விரும்பவில்லை. இரண்டாவது, அவர்கள் அதற்கு அஞ்சவில்லை என்ற தெளிவான வரையறையுடனேயே அவர்கள் போர் பற்றிய கண்ணோட்டத்தைக் கொண்டுள்ளனர். இவ்வாறு போர் பற்றியும் அதற்கும் அரசியலுக்கும் உள்ள தெளிவான உறவையும் வரையறைகளையும் விளங்கிக் கொண்டதாலேயே ஏகாதிபத்தியவாதிகளும் ஹிட்லரின் தலைமையிலான ஃபாசிஸவாதிகள் தொடுத்த போரை சோவியத் மக்களும் அவர்களது பொல்ஷ்விக் கட்சியும் அன்று தோற்கடித்தன. அவ்வாறே யப்பானிய அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் தொடுத்த போரை சீன மக்களும் சீனக் கம்யுனிஸ்ட் கட்சியும் தோற்கடித்தன. எனவே அநீதியையும் ஒடுக்குமுறையையும் ஆக்கிரமிப்பையும் வல்லாதிக்கத்தையும் ஒருவர் எதிர்த்து நிற்கவில்லை என்றால், மக்களோ நாடோ எதிர்த்துப் போர் தொடுக்கவில்லை என்றால் அடிமைத்தனமாக வாழ்வதற்கு மட்டுமே அவர்கள் தகுதியானவர்களாக இருக்க முடியும்.

> போர்கள் பற்றிய தெளிவிற்கு அரசியற் கண்ணோட்டம் தெளிவாக இருத்தல் அவசியமாகும்.

போர் அழிவுக்குக் காரணமானது என்பதில் ஐயமில்லை. அது மக்களை அழித்து சின்னாபின்னப்படுத்தும் என்பது உண்மை. அது மனித இருப்பைக் குலைக்கும் விதமான அச்சுறுத்தும் தன்மையினைக் கொண்டிருக்கிறது என்பதும் உண்மை. அதற்காக அதனை எதிர்த்து நிற்காவிடில் அது மேலும் மேலும் மக்களை விழுங்கவும் மனித இருப்பை நாசஞ்செய்யவுமே செய்யும். ஆனால் அநீதியான போர் ஒவ்வொன்றையும் நீதியான போர்கொண்டு எதிர்த்து முறியடிக்கும்போது மனித இருப்புப் பாதுகாக்கப்படுவதுடன் புதிய சமூக அமைப்பும் புதிய சமாதான சூழலும் தோற்றுவிக்கப்படும். கடந்த காலங்களில் சமூக மாற்றங்கள் ஏற்படவும் மக்கள் ஆட்சிகள் மலரவும் போர்கள் உதவியுள்ளன. இவ்விடத்திலேதான் தீய விடயங்களை நல்ல விடயங்களாக மாற்றமுடியும் என்பது நிரூபணமாகி நிற்பதைக் காணலாம்.

எனவே போர்கள் பற்றிய தெளிவிற்கு அரசியற் கண்ணோட்டம் தெளிவாக இருத்தல் அவசியமாகும். போர் பற்றிய ஒவ்வொரு விடயமும் சரியானதும் தூரநோக்கிலுமான அரசியல் அணுகுமுறை மூலம் கண்டறியப்பட வேண்டும். அப்போதுதான் போரின் ஊற்று மூலங்களைக் கண்டறிய முடியும். அவற்றைக் கண்டறியாது விட்டால் எத்தகைய போரையும் மக்கள் சார்பாக நின்று எதிர்க்கவும் முடியாது, முறியடித்து தோற்கடிக்கவும் முடியாது. ஒரு தேசத்தின் மீதோ ஒரு தேசிய இனத்தின் மீதோ போர் ஒன்று ஏவப்படும் போது அதனை வெறும் உணர்ச்சிவசப்பட்ட குறுகிய நிலை நின்று ஆழமற்ற அரசியல் போக்கைக் கடைப்பிடித்து எதிர் கொள்ள முடியாது. தூர நோக்கமும் ஆழ்ந்தகன்ற அரசியல் பார்வையும் அவசியமாகின்றன. திணிக்கப்படும் அல்லது ஏவப்படும் போரின் பொருளாதார, அரசியல், சமூக, பண்பாட்டு மற்றும் வரலாற்றுரீதியான பின்புலங்களும் யதார்த்த நிலைமைகளும் அடிப்படைக் கவனத்திற்கு உரியனவாகின்றன. இவை ஒடுக்கலுக்கு உள்ளான மக்கள் மத்தியில் அறிவு பூர்வமாகவும் அரசியல் மயப்படுத்தலாலும் புரிதல்களுக்கு உட்படுத்தப்படல் வேண்டும். இல்லாவிடில் திணிக்கப்படும் போரினால் மக்கள் பெரும் அழிவுகளையும் இழப்புகளையும் பெறுவதுடன் தாம் ஆதரித்த வெற்றிபெற இயலாத அரசியலிலும் வெறுப்புற்று விரக்தியடைபவர். இவ்வாறான போக்குக்கள் உலக அரங்கில் நமது நாட்டுச் சூழலிலும் காண முடிந்தவைகளாம். எனவே போர் அரசியல் பற்றிய ஆழமான அறிவும் தெளிவும் அவசியமாகின்றன. அதன் மூலமே மனித நேயத்தின் அடிப்படையிலான மனித இருப்பின் மீது உண்மை அக்கறையைச் செலுத்த முடியும். ■



படிப்பகம்

www.padippakam.com

# வாசலற்ற வாழ்க்கை

கருணாகரன்



"எல்லாப் பக்கமும் வாசலுள்ள கூடு" என்றொரு கவிதையைச் சில ஆண்டுகளுக்கு முன்பு எழுதியிருந்தேன். சுதந்திரத்தின் எல்லையற்ற தன்மையைப் பிரதிபலிக்கும் எண்ணம் அது. ஆனால், பிறகு இதற்கு எதிர்மாறாக, எந்தப் பக்கமும் வாசலே இல்லாத வாழ்க்கையொன்றை வாழ்ந்து கடக்க வேண்டியிருந்தது. அது யுத்தகால வாழ்க்கை. மூடுண்ட ஒரு உலகத்தில் மூச்சைப்பொத்திக் கொண்டு, சாவின் அருகில், அதன் நெடி உயிரை வாட்டியெடுக்க வாட்டியெடுக்க, சாகமுடியாமலும் வாழ முடியாமலும் இருப்பதே அந்த வாழ்க்கை.

யுத்தத்திற்குப் பிறகு - புலிகளின் வீழ்ச்சிக்குப் பிறகு - இப்பொழுதும் இன்னொரு வகையில், வாசல்கள் அடைக்கப்பட்டதொரு நிலையே தமிழ்ச்சூழலிலும் இலங்கை அரசியலிலும் தொடந்து கொண்டிருக்கிறது. இந்த உணர்வு எனக்கு மட்டுமல்ல, இன்று ஈழத்தமிழ்ச் சூழலிலும் அதற்கப்பால், முழு இலங்கையிலும் அதற்குமப்பால் புலம்பெயர் சூழலிலும் பலருக்கும் இருப்பதை அவதானிக்கலாம்.

மழை விட்டாலும் தூவானம் விடவில்லை என்ற நிலை.

ஆகவே, என். நடேசன் எழுதியிருப்பதைப் போல "நீரின் ஆழத்தில் மூக்கைப் பிடித்துக்கொண்டு தொடர்ந்து வாழ்வது போன்ற ஒரு நிலை"தான் மாற்றாளர்களுடையது, ஜனநாயகவாதிகளினுடையது, பன்மைத்துவச் சிந்தனையாளர்களுடையது. ஒத்தோடிகளுக்கு இதில் அதிகமாகப் பிரச்சினைகளில்லை. மறுத்தோடிகளுக்கே கடினமான பாதைகளை வழங்குகிறது வரலாறு.

எனவே, மாற்றுக் கருத்தாளர்கள், பன்மைத்துவ அடிப்படையிற் சிந்திப்பவர்கள் நிச்சயமாக நீரின் ஆழத்தில் மூக்கைப் பிடித்துக்கொண்டுதான் வாழவேண்டும். தமிழ்ச் சூழலின் யதார்த்தமும் இதுதான். அதன் அவலமும் இதுதான்.

இல்லையென்றால், ஒற்றைப் படையான சிந்தனையாளர்களிடம் அல்லது ஏகத்துவ மனப்பாங்காளர்களிடமிருந்து எதிர்ப்பையும் நிராகரிப்பையும் வசைபாடுதல்களையும் துரோகி, மாற்றான் என்ற மாதிரியான குறிசுடுதல்களையும் தாராளமாகவே எதிர்கொள்ளத் தயாராக இருக்க வேணும். இதற்கப்பால் உயிராபத்துகள் வரையில் ஏராளம் அபாயங்களும் உண்டு. அல்லது மௌனம். இதெல்லாம் யதார்த்தம். சுத்தமான நடைமுறை.

இதைத் தவிர, இன்னொரு வகையிலும் மாற்றுச் சிந்தனைப் போக்கையும் பன்மைத்துவ அடிப்படைகளையும் ஒடுக்கும் பொறிமுறையையும் தமிழ்ச் சமூகம் மிக நுட்பமாகத் தன்னுள்ளே வைத்திருக்கிறது.

நடேசனே சொல்வதைப்போல, "நீங்கள் ஏன் ஊரோடு ஒத்து வாழக்கூடாது? பிள்ளைகள், குடும்பம் என உங்களின் பாட்டுக்கு இருந்தால் பிரச்சினை இல்லையே!" "உங்களின் மரணச் சடங்குக்குக்கூட அதிகமானவர்கள் வரமாட்டார்கள்" என்றெல்லாம் அறிவுரையாக, எச்சரிக்கையாக, நட்புடன் எடுத்துரைப்பதாகக் கூறுவதன்மூலம் ஒருவகை உத்தியைக் கையாண்டு, மாற்றுக் கருத்தாளர்களையும் ஜனநாயகவாதிகளையும் தளர்வடையச் செய்து விடுகிறார்கள் பலரும். இத்தகைய அணுகுமுறை தமிழ்ச்சமூகத்தின் பலமானதோர் அடிப்படையாக உள்ளது.

"ஊரோடு சேர்ந்து ஓடு, ஒருவனாக ஓடுகில் கேட்டு ஓடு" என்று ஊர் வழக்கில் சொல்வதும்கூட ஏறக்குறைய இந்த அர்த்தத்தில்தான்.

மேலும் அபிப்பிராயங்களையே பகிர்ந்து கொள்ளக்கூடாது என்பதை இன்னொரு விதமாக, மிக நுட்பமாக தமிழ்ச் சமூகம் வடிவமைத்து வைத்திருக்கிறது.

"அவர் ஒரு சோலிக்கும் போகமாட்டார்".

"அவர் கதைச்சால் வெளியே சத்தமே கேட்காது".

"அந்த ஆள் மிதிச்ச இடத்துப் புல்லே சாகாது (அவ்வளவு மென்மையானவர்)" என்றவகையில் ஒருவரைப் பற்றி முன்னோட்டமாகத் தானாகவே ஒரு இயல்பைப் புனைந்து அந்த இயல்பினுள் அவரைக் கட்டுப்படுத்தி விடும் உத்தி இது.

இதற்கு உறவு, அன்பு, பந்தம், பாசம் போன்ற கயிறுகளையெல்லாம் மிக லாவகமாகவே பயன்படுத்துகிறது தமிழ்ச் சமூகம். இந்தக் கயிறுகளைப் பயன்படுத்திச் சம்மந்தப்பட்டவரைக் கட்டிவைத்துவிடுகிறது அது.

பொதுவெளியில் நியாயமாகச் செயற்படுவோருக்கு உண்மையில் இது ஒரு தீவிரமான நெருக்குவாரமே.



படிப்பகம்

www.padippakam.com

பொதுச் செயற்பாட்டுப் பரப்பிலிருந்து ஒவ்வொருவரையும் தனிமைப்படுத்தி முடக்கி விடும் நோக்கம் கொண்ட செயலாக இது இருப்பதால், சமூகத்தின் விரிவை மேலும் விஸ்தரிப்பதற்குப் பதிலாக அதை ஒடுக்கி விடுகிறது.

இந்த மாதிரியான நுட்பத்தின் அடியில் சுய பாதுகாப்புணர்வொன்றிருப்பது உண்மைதான். "எதற்காக நமக்கு வீண்சோலியெல்லாம்" என்றமாதிரி பிரச்சினைகளில் இருந்து விடுபட்டிருத்தல் அல்லது அவற்றிலிருந்து தள்ளியிருத்தல் இதனால் ஏற்படுத்தப்படுகிறது.

ஆனால், "மரம் சும்மா இருந்தாலும் காற்று அதனை அவ்வாறிருக்க அனுமதிப்பதில்லை". பொதுமையத்தைக் கொண்ட எந்தப் பிரச்சினையும் யாரையும் விலகியிருப்பதற்கு அனுமதிப்பதில்லை. அதையும் கடந்து இவ்வாறு சுய பாதுகாப்புணர்வினால் தற்காத்துக்கொள்ள முனையும் இந்த மனிதர்கள், தங்களின் பொது அபிப்பிராயத்தை வேறு விதமாகவே கட்டமைத்து வைத்துள்ளனர். இதுதான் எரிச்ச லூட்டுவது. சகித்துக்கொள்ள முடியாதது.

மத நம்பிக்கைகளை அடியொற்றுவதைப் போல, சில அரசியல் நம்பிக்கைகளை விடாப்பிடியாகப் பிடித்துக்கொண்டு, நிர்ணயிக்கப்பட்ட கோட்பாட்டுச் சட்டகத்தினுள், விதிமுறைச் சதுரத்தினுள் தங்களை அடைத்துக்கொண்டு அல்லது அதற்குள் தங்களை நிலைப்படுத்திக் கொண்டு, அதற்குள் ஏனையவர்களையும் இழுத்து வைத்துக்கொள்ள முயலும் கட்டமைப்பு இவர்களுடையது.

குறுந்தேசியவாதச் சிந்தனைகளில் இந்த நிலையைத் தாராளமாகக் காணமுடியும். மேலும் இனவாதமாகிலும் சரி, மதவாதமாகினும் சரி, பிரதேசவாதமாகிலும் சரி இதுதான் யதார்த்தம் இதுதான் நிலைமை.

இத்தகைய நிலைப்பாட்டைக் கொள்வோரிற் பலர் தனிப்பட்ட வாழ்க்கையில் மிக எளிய மனிதர்களாக இருக்கிறார்கள். மத ஒழுக்கங்களை விதிமுறைப்படி பின்பற்றுவோராக இருக்கின்றனர். படித்தவர்களாகவும் கல்விப் பீடங்களில் உயர்பதவி வகிப்பவர்களாக உள்ளனர். கலைஞர்களாகவும் இலக்கியப்படிப்பாளிகளாகவும் படைப்பாளர்களாகவும் இருக்கிறார்கள்.

ஆனால், இவர்களுக்குத் தெரிவதில்லை, தங்களின் சிந்தனையும் நம்பிக்கையும் நிலைப்பாடுகளும் மற்றவர்களை நிராகரிக்கின்றன என்பதை. அது பிறரைப் பலவழிகளிலும் நிந்திக்கிறது மற்றவர்களின் இடத்தை மறுக்கிறது. ஏகத்துவச் சிந்தனையை வளர்க்குமிடத்தில் ஜனநாயத்தின் இடம் சுருங்கிப் பலவீனமடைகிறது என்பதையெல்லாம்.

இரண்டாம் உலகப் போர்க்காலத்தில் இத்தகைய ஒரு நிலை ஜேர்மனியில் ஹிட்லரையும் அவருடைய நாஜிகளின் நடவடிக்கைகளையும் ஆதரித்தோரிடம் இருந்துள்ளது. ஹிட்லரின் தலைமையில் நாஜிகள் மனித உலகம் அதிர்ச்சியடையும் விதமாக யூதப் படுகொலைகளை நடத்தினர். இந்தக் கொலைகளை - மனித நாகரீகத்துக்கும் மனச்சாட்சிக்கும் விரோதமான காரியங்களை ஆதரிக்கும் மனநிலை எப்படி அங்கிருந்த மக்களிடம் உருவாகியது என்பதை "பாவ மௌனம்" என்ற கட்டுரையொன்றில் ஜெயமோகன் விளக்குகிறார்.

"சாதாரண மக்கள் எப்படி இந்தக் கொலைகளை ஒத்துக்கொண்டு ஹிட்லரின் அணியில் திரண்டார்கள்? எளிய படைவீரர்கள் எப்படி இந்தப் படுகொலைகளைச் செய்தார்கள்? அதைவிட நாஜிகளை ஆதரித்த எழுத்தாளர்களும் கலைஞர்களும் எப்படி இப்படுகொலைகளை ஏற்றுக்கொண்டார்கள்?"

"நாஜிகளின் படுகொலை அமைப்பில் மருத்துவர்களும் அறிவியலாளர்களும் இணைந்திருந்தார்கள். யூதர்களைக் கொல்லச் சான்றிதழ் வழங்கியது மருத்துவர்களே. அறிவியலாளர்கள் யூதர்களை தங்கள் ஆய்வு கூடங்களில் பரிசோதனை மிருகங்களாகப் பயன்படுத்திக் கொண்டார்கள்" என அவர் மேலும் கேள்விகளை எழுப்பிச் செல்கிறார்.

இந்தக் கட்டுரை இலங்கையின் அரசியல் மற்றும் இலங்கையில் நிலவுகின்ற இனவாதச் சூழலையும் அந்த இனவாதத்துக்குப் பின்னால் தமிழ் சிங்களச் சமூகங்கள் அணிதிரண்டிருப்பதற்கான உளவியற்காரணங்களையும் அறிந்து கொள்ள உதவுகின்றது. அதை இன்னொரு சந்தர்ப்பத்தில் தனியே விரிவாகப் பார்க்கலாம்.

ஆகவே, இத்தகைய ஒடுங்கிய, ஒற்றைப்படையான சிந்தனையை ஆதரிக்கும் பெரும்போக்கின் காரணமாக ஜனநாயத்தின் இடம் சுருங்குகிறது. அப்படி அது சுருங்கும் பொழுது அந்த இடத்தில் அபாயவெளி விரிகிறது. அப்படி விரிந்து கொள்ளும் அபாயவெளியானது, ஒரு கட்டத்தில் எல்லோரையும் பலிகொண்டே விடும். உலகத்தின் பேரழிவுகள் அனைத்தும் இத்தகைய போக்கின் காரணமாகவே நிகழ்கின்றன. (இதைக் குறித்தும் பின்னர் சற்று விரிவாகப் பார்க்கலாம்).

எனவே முன்னர் குறிப்பிட்ட இரண்டு வழிமுறைகளும் பொதுவெளிப்பரப்பில், மாற்றாளர்களாக இருப்போரையும் ஜனநாயகவாதிகளையும் அமுக்கிக் குரல்வளையை நசிக்கின்றன. பன்மைத்துவச் சிந்தனையாளர்களை ஒடுக்கிச் சிதைக்க முயற்சிக்கின்றன. அல்லது சமூகத்திலிருந்து இவர்களைத் தனிமைப்படுத்திவிட எத்தனிக்கின்றன.

இந்த நிலையிலேயே மாற்றாளர்கள் "வாசலற்றதொரு வாழ்க்கை"யை வாழவேண்டியுள்ளது. "வாசலற்ற வாழ்க்கை" மிகக் கடினமானது. சினமும் வலிகளும் நிரம்பியது. மூடுண்டது. அந்த வாழ்க்கையில் எதையும் செய்ய முடியாது. எதையும் சொல்ல முடியாது. எதையும் சிந்திக்க முடியாது. எதைப் பற்றியும் கதைக்க - உரையாட - விவாதிக்க - சிந்திக்க முடியாது. கதைத்தால் அல்லது எதையாவது செய்தால் அல்லது எதையாவது செய்வதற்கு முயன்றால், அது தற்கொலைக்குச் சமம்.

இப்படியிருக்கும் ஒரு சமூகத்தில் எதுவுமே உருப்படாது. உருப்படாத சமூகங்களைத் தன்னுடைய உள்ளடக்கத்திற் கொண்ட நாடு எப்படியிருக்கும் என்று இங்கே அதிகம் விளக்கத்தேவையில்லை.

இந்த இடத்தில் நாம் தமிழ்ச்சமூகத்தின் பண்பாட்டைக்குறித்த நமது கேள்விகளையும் எழுப்பவேண்டும்.

"வாசலற்ற வாழ்க்கை"யை வாழ நிர்ப்பந்திக்கக் கோரும் ஒரு சமூகத்தின் பண்பாடு எவ்வாறு சிறப்பாக இருக்க முடியும்? மிகத் தொன்மையான பண்பாட்டுச் சிறப்பையும் பெருமைகளையும் தமிழ்ப் பண்பாடு தன்னகத்திலே கொண்டிருக்கிறது என்று சொன்னால், அல்லது அவ்வாறான கருத்தினை நாம் ஏற்றுக்கொள்வதாயின், அது எவ்வாறு ஜனநாயகத்துக்கும் சுயவிமர்சனத்துக்கும் மாற்றுச் சிந்தனைக்கும் பன்மைத்துவத்துக்கும் இடமளிக்கும் மரபைக்கொண்டிருக்கவில்லை?

இவை அடிப்படையான கேள்விகள்.

சிந்தனை முறைமையிலும் செயற்படு முறைமைகளிலும் வாசலைத்திறப்பது ஒரு வகை. வாசல்களை மூடுவது இன்னொரு வகை.



படிப்பகம்

www.padippakam.com

பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது. புதிய விரிவுகளை நோக்கி நகர்வது. சுதந்திரத்தின் எல்லைகளை மேலும் விரிவாக்குவது. வாழ்வின் புதிய சாத்தியங்களை மேலும் கண்டடைவது போன்றவை வாசல்களைத் திறப்பதற்கான அடிப்படைகள்.

பிரச்சினைகளை மேலும் தீவிரமாக்குவது அவற்றை சிக்கலாக்குவது. மேலும் பிரச்சினைகளை உருவாக்குவது. பிரச்சினைகள் ஆட்களையே விழுங்கும் அல்லது பலியிடும் நிலைக்கு அவற்றை வளர்ப்பது. பிரச்சினைகளாலேயே சிறைப்பிடிக்கப்படுவது. இந்த மாதிரியான விசயங்கள் எல்லாம் இருக்கின்ற வசால்களையும் அடைத்து விடும் இயல்பைப் பிரதான போக்காகக் கொள்வன. இவை வாச ல்களை மூடுவன.

இலங்கைச் சமூகங்களைப் பொறுத்தவரையில், பெரும்பாலானவர்களின் சிந்தனையிலும் செயற்பாட்டிலும் வாசல்களை மூடும் முறைமையே நடைமுறையிலுள்ளது. இதுவே தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படுகின்றது. ஊடகங்களிலிருந்து நாடாளுமன்றம் வரையில் இந்தக் குணாம்சப் போக்கிலேயே இயங்குகின்றன. இதில் தமிழ், சிங்களச் சமூகங்கள் என்ற வேறுபாடுகள் அதிகமில்லை. அதிலும் தமிழ்ச் சமூகத்தில் இந்த நிலை பல படிகள் உச்சம்.

அது மிக ஒடுங்கிய பரப்பில் தன்னுடைய பயணப்பாதையைத் தனிவழியாகவே வைத்துள்ளது. எனவே அதனால், பல தளங்களிலும் பயணிக்க முடியாதிருக்கிறது. ஆகவே அதற்கு "வாசலற்ற வாழ்க்கை"யே விதிக்கப்பட்டிருக்கிறது.

இந்த இடத்தில் இந்த வாசலற்ற வாழ்க்கை என்பது இரண்டு கிளைகளில் இரண்டு தன்மையில் இயங்குகிறது.

ஒன்று, மாற்றாளர்கள், பன்மைத்துவச் சிந்தனையாளர்கள், ஜனநாயகவாதிகளின் மீது நிர்ப்பந்தங்கள் ஏற்படுத்தப்படுவதால் உருவாகின்ற வாசலற்ற வாழ்க்கை.

இவர்களே கொல்லப்படுகிறார்கள். அல்லது கடத்தப்படுகிறார்கள், காணாமற்போகிறார்கள் அல்லது நாட்டை விட்டுத் தப்பியோடுகிறார்கள். சொந்த இடத்தில் இவர்களுக்கான இடம் மறுக்கப்படுகிறது. பொது வெளியிலும் இவர்கள் இயங்குவதற்கான வெளி அச்சுறுத்தப்படுகிறது. அல்லது அந்த வெளியில் இவர்கள் இயங்க முடியாதவாறு இவர்களின் மீதான வசைகளும் குற்றச் சாட்டுகளும் பரப்பப்படுகின்றன.

இப்போது இதற்கு மிக உச்சவலுவைச் சேர்ப்பனவாக இருப்பவை இணையத்தளங்கள். இந்த இணையச் செயற்பாட்டினை - இவர்களின் இணைய வெளியை - "வசை வெளி" என அடையாளப்படுத்துகிறார் நிலாந்தன்.

மற்றையது, பொதுப் பரப்பைத் தங்களின் நம்பிக்கைகளாலும் வழமைகளாலும் நிரப்பும் தரப்பினர் இறுதியில் பெறுகின்ற முடக்கத்தின் வழியான வாசலற்ற வாழ்க்கை.

இரண்டாவது வாழ்க்கைக்கு உதாரணமாக நாம் முள்ளிவாய்க்காலில் தோல்விகண்ட அரசியலைக் கொள்ள முடியும். அல்லது இன்னமும் வெற்றியடைய முடியாதிருக்கும் இனப்பிரச்சினையை வைத்து அரசியல் நடத்தும் தமிழ் மிதவாதத்தைக் குறிப்பிடலாம்.

முதல்வாழ்க்கை நிச்சயமாக வாசல்களைத் திறக்கும் வாழ்க்கை. ஆனால், அந்த வாசற்திறப்புக்குச் சமூகநிலையில் ஏற்படுகின்ற எதிர்ப்புகளும் பதற்றங்களும் இந்தத் தளத்திற் செயற்படுவோரின் வாசல்களை மூடிவிடுகின்றன. அல்லது மூடிவிட முயல்கின்றன.

ஆகவே, பொதுவாக "வாசலற்ற வாழ்க்கை" என்பதே தமிழ்ச் சூழலிற்கு விதிக்கப்பட்டிருக்கிறது. இந்த விதியை அது தனக்குத் தானே விதித்திருக்கிறது. இந்த விதியின்படி "வாசலற்ற வாழ்க்கை"யாக இருக்கும் நிலையானது மூடப்பட்ட உலகத்தில் வாழ்வதற்கு ஒப்பானது. இது தற்கொலைக்கொப்பானது மட்டுமல்ல அது ஒருவகைத் தண்டனையும் கூடவே.

ஏறக்குறைய இத்தகையதொரு தற்கொலைச் சூழல்தான் கி.மு. 3 ஆம் நூற்றாண்டில் சோக்கிரட்டீஸூக்கு ஏற்பட்டது. அன்றிருந்த சூழலில் பிரதான நம்பிக்கையாகக் கொள்ளப்பட்ட ஒன்றிற்கு அல்லது பெரும்பான்மையோரின் நம்பிக்கையாக இருந்தவற்றிற்கு மாறாகச் சிந்தித்ததே சோக்கிரட்டீஸைச் சாவு அரங்கிற்குக் கொண்டு போனது அவரை மயானத்தில் நிறுத்தியது.

கிறிஸ்துவைச் சிலுவையில் அறைந்ததும் ஏறக்குறைய இத்தகைய ஒரு சூழல்தான். இன்னும் வரலாறு நெடுகவும் இத்தகைய சிலுவைப் பரிசளிப்புகளும் சாவரங்குகளின் திறப்பும் இத்தகைய ஒரு நிலையிற்தான் நிகழ்கின்றன.

இத்தகைய தற்கொலைக்கான - அல்லது கொலைக்கான நெருக்கடிகள் சிந்தனையையும் புதிய செயற்பாட்டு ஊக்கத்தையும் மட்டுப்படுத்தி ஒடுக்கி விடுகின்றன. இவை ஒடுக்குமுறையின் இன்னொரு வடிவமே. இன்னொரு கூறே.

புதிய சிந்தனைகளையும் மாற்றுச் சிந்தனைகளையும் ஏற்றுக்கொள்ள விரும்பாத கடினப்போக்கே இதற்குக் காரணம். இது அதிகாரத்தை விட்டுக்கொடுக்காத, மற்றவர்களுக்கான இடத்தைப் பகிர்ந்து கொள்ள விரும்பாத, ஜனநாயகத்தை எந்த நிலையிலும் ஏற்றுக்கொள்ளாத ஏகமனதின் நிலைப்பாடாகும்.

ஆனால், ஒரு சமூகத்திலும் மனித இயல்பிலும் புதிய சிந்தனைகளும் மாற்று அபிப்பிராயங்களும் இருந்தே தீரும் அவை ஏற்பட்டே தீரும். ஜனநாயகம் வளர்ச்சியடையுந்தோறும் மாற்றுச் சிந்தனைகளுக்கான இடமும் பெறுமதியும் அதிகரித்தே செல்லும்.

முக்கியமாக மீள்பார்வைகளும் விமர்சனங்களும் சுயவிமர்ச னங்களும் அப்போது தாராளமாக - எந்தக் கூச்சமுமின்றி, எத்தகைய அச்சமுமில்லாமல் முன்வைக்கப்படும். அச்ச மூட்டும் எத்தகைய கனத்த திரைகளையும் சுவர்களையும் ஜனநாயகம் உடைத்து விடும். இங்கேதான் புதிய சிந்தனைகள் வீச்சுடன் மேற்கிளம்புகின்றன.

எத்தகைய நிராகரிப்பையும் புறக்கணிப்பையும் கொலைப்படுத்தல்களையும் கடந்தே வரலாற்றுச் சக்கரம் சுழன்று கொண்டிருக்கிறது. அது எல்லா நிர்ப்பந்தங்களின் மத்தியிலும் உண்மையைக் கண்டடைந்து விடுகிறது. தான் கண்டடைந்த உண்மையைச் சார்ந்தும் அறத்தைச் சார்ந்துமே அது நகர்ந்து கொண்டிருக்கிறது. எனவேதான் எல்லா வன்முறைகளும் தோல்வியில் முடிவடைகின்றன. எல்லா அதிகாரங்களும் வீழ்ச்சியைச் சந்திக்கின்றன.

சோக்கிரட்டீசின் உடலையும் விட, கிறிஸ்துவின் உடலையும் விட அவர்கள் வலியுறுத்திய உண்மைக்கே வலிமை அதிகம். புதைக்கப்பட முடியாதிருப்பதும் அதுவே.

இதையெல்லாம் விளங்கிக் கொள்வதற்கு ஏராளம் உதாரணங்கள் வரலாறு நெடுகலும் உண்டு. இன்று ஈழத்தமிழர்கள் இருக்கின்ற நிலையும் இதற்கு மிகச் சிறப்பான உதாரணம். இதற்கெல்லாம் இலகுவிற் திறக்கக்கூடிய - திறக்க வேண்டிய - "மூன்றாவது கண்" என்று கிட்டும்? ■



படிப்பகம்


www.padippakam.com

# Sometimes in April

# (ஏப்பிரலில் சிலவேளையில்) - காட்சியும் கவன ஈர்ப்பும்

**(இது சொல்ல விரும்பாத கதை)**

ஊர்சுற்றி




உலகில் ஏதோ ஒரு மூலையில் நடைபெறும் நிகழ்வுகள் பெரும்பாலும், பொது வெளியில் கவனம் பெறுவதில்லை. ஊடகங்களில் மையமாக அமெரிக்க-ஐரோப்பிய நிகழ்வுகள் அமைந்துவிடுவதால் அவையே பல சமயங்களில் செய்திகளையும், தகவல்களையும், திரைப்படங்களையும் ஆக்கிரமித்து விடுகின்றன. ஆபிரிக்காவிலோ ஆசியாவின் ஒரு மூலையிலோ அல்லது இலத்தின் அமெரிக்கக் காடுகளிலோ நிகழ்ந்தவையும் நிகழ்பவையும் பெரும்போக்கான ஊடகங்களின் பார்வையிற் படுவதில்லை. அதனால், மூன்றாம் உலக நாடுகளில் நிகழ்ந்ததன் காரணமாகப், பல வரலாற்று முக்கியம் வாய்ந்த நிகழ்வுகள் கவனம் பெறாமற் போய்விட்டன. இவ்வாறு நடந்து கொண்டிருக்கும் போதோ, நடைபெற்று பத்து ஆண்டுகள் கழிந்த பின்போ, சராசரி மனிதரின் செவிகளை எட்டாத செய்தியாக, நிகழ்வாக இருந்தது ருவண்டாவில் 1994 ஏப்பிரல் தொட்டு நூறு நாட்களுக்கு அரங்கேறிய எட்டு இலட்சத்திற்கும் அதிகமான டுட்சி இனக்குழு மக்கள் கொல்லப்பட்ட நிகழ்வாகும்.

2004 இல் "ஹோட்டல் ருவாண்டா" (Hotel Rwanda) என்ற திரைப்படம் ஒஸ்கர் விருதுகளுக்குப் பரிந்துரைக்கப்பட்ட பின்னரே ருவாண்டாவில் நடந்த இனப்படுகொலைகள் பற்றிப் பலரும் கவனஞ் செலுத்தத் தொடங்கினர். அவ்வகையில் ருவாண்டா இனப் படுகொலையை, மேற்கின் பெரும்போக்கான ஊடகங்களிடையே கொண்டு வந்த பெருமை இப் படத்தைச் சாரும். ஆனால் இப்படம், ருவாண்டாவில் அரங்கேறிய நிகழ்வுகளின் கோரத்தைக் கவனமாகத் தவிர்த்துப் பல டுட்சி மக்களைக் காப்பாற்றிய ஒரு ஹோட்டல் ஊழியனது திறமையை மையப்படுத்திய ஒரு கதையாக அமைக்கப்பட்டது.

2005இல் வெளியான "சம்டைம்ஸ் இன் ஏப்ரல்" (Sometimes in April) திரைப்படம் தான் ருவாண்டாவின் கோர நினைவுகளைக் காட்சி வழி எடுத்துரைத்து, பொதுவெளியில் அதிர்ச்சியையும், அளவு கடந்த கோபத்தையும் ஏற்படுத்தியது.

ருவாண்டாவின் நிகழ்வுகளை மக்களுக்கு காட்சிப்படுத்தலின் ஊடாக, துயரத்தைச் சுமந்து சென்ற திரைப்படங்களில் இப்படம் முன்னோடியானது. இப் படத்தின் இன்றைய காலப்பொருத்தத்தை இத் திரைப்படத்தில் இடம்பெற்ற இரண்டு செய்திகள் மூலம் புரிந்து கொள்ள இயலும்.

திரைப்படம், "இறுதியில் நாங்கள் நினைவில் வைத்திருப்பவை எதிரிகளது சொற்களை அல்ல, நம்



படிப்பகம்

www.padippakam.com

**அமெரிக்கா, ஐக்கிய நாடுகள் சபை, சர்வதேச சமூகம் என யார் யாரோ மீதெல்லாம் நம்பிக்கை வைக்கச் சொல்வதன் ஆபத்தை, அதன் அபத்தத்தை முகத்தில் முகத்தில் அறைந்தாற் போல் சொல்லிச் செல்கிறது இத் திரைப்படம்.**

நண்பர்களின் மௌனத்தையே" (In the end, we will remember not the words of our enemies, but the silence of our friends) என்ற மார்ட்டின் லூதர் கிங்கின் சொற்களுடன் தொடங்குகிறது.

அதன் முதலாவது காட்சி, முன்னாள் அமெரிக்க அதிபர் பில் கிளின்டன் "இங்கு நடந்தது வெறுமனே ஆபிரிக்காவிற்கு உரியதல்ல. இவ்வாறு இனிமேல் என்றுமே நிகழாதவாறு நாம் பார்த்துக்கொள்வோம்" என்று ருவாண்டாவில் நடந்த படுகொலைபற்றிப் பேசுகிற காணொளியை 2004இல் ருவாண்டாவில் ஒரு பள்ளி வகுப்பறையில் மாணவர்கள் பார்ப்பதை காட்சிப்படுத்தியிருந்தது.

இப் படத்தில் வருகின்ற மார்ட்டின் லூதர் கிங்கின் வரிகளும் பில் கிளின்டனின் பேச்சும், இன்றைய உலக ஒழுங்கில் நிகழ்வுகள் எவ்வாறு கட்டமைக்கப்படுகின்றன, என்பதை விளங்கிக்கொள்ளப் போதுமானவை என்று நினைக்கிறேன்.

அவ் வகையில், அமெரிக்கா, ஐக்கிய நாடுகள் சபை, சர்வதேச சமூகம் என யார் யாரோ மீதெல்லாம் நம்பிக்கை வைக்கச் சொல்வதன் ஆபத்தை, அதன் அபத்தத்தை முகத்தில் முகத்தில் அறைந்தாற் போல் சொல்லிச் செல்கிறது இத் திரைப்படம்.

ருவாண்டாவின் நிகழ்வுகளை அறிவதற்கு Shooting Dogs' என்ற திரைப்படமும் 'Ghost of Rwanda' மற்றும் 'Shake Hands with the Devil' ஆகிய ஆவணப்படங்களும் மிக உதவும். அதே வேளை, ஐக்கிய நாடுகள் சபையின் அமைதி காக்கும் படைகள் எவ்வாறு செயற்பட்டன, ஐ.நா. பாதுகாப்புச் சபை எவ்வாறு தீர்மானங்களை எடுத்தது, எவை முக்கியத்துவம் பெற்றன, மக்கள் உயிர்கள் ஏன் முக்கியம் பெறவில்லை என்பன போன்ற வினாக்கட்கான விடையை ருவாண்டாவில் பணியாற்றிய ஐ.நா. அமைதிகாக்கும் படைகளுக்குத் தலைமை வகித்த ரோமியோ டலாயர் (Romeo Dallaire) எழுதிய 'Shake Hands with the Devil: The Failure of Humanity in Rwanda' என்ற நூலிற் பெற்றுக்கொள்ள முடியும்.



ஒரே குடும்பத்தில், இரு சகோதரர்கள் இரு வேறு திசைகளில் இனம் என்ற மையப் பொருளைக் கருத்தாக்கி, எவ்வாறு கொலைகாரனாகவும், கொல்லப்படப் போகிறவராகவும், மாறுகிறார்கள் என்பதை இப் படம் தெளிவான காட்சிப்படுத்தல்களினூடாகச் சொல்லிச் செல்கிறது.

படத்தின் ஒரு காட்சியில் இனப் படுகொலைகள் நடந்துகொண்டிருக்கும்போது தலைநகர் கிகாலியில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தில் பணியாற்றும் ஒரு இளம் அதிகாரி, ஏற்கனவே நிறையப்பேர் கொல்லப்பட்டுவிட்டதாகவும் இன்னும் பல்லாயிரக்கணக்கானோர் கொல்லப்படப் போவதாவும் அதை உடனடியாக நிறுத்த வகைசெய்யுமாறும் வாஷிங்டனில் உள்ள உயரதிகாரியிடம் கேட்கிறார். அதற்கு அவருக்கு இவ்வாறு பதில் அளிக்கப்படுகிறது: "இன்னொரு மொகடிஷுவை (Mogadishu) நாங்கள் விரும்பவில்லை. செய்வதற்கு அதிகம் இல்லை".

இத் திரைப்படத்தை, இன்றைய காலச் சூழலோடு பொருத்தி மீட்டுருவாக்கம் செய்து, புதிய வியாக்கியானங்களை அளிக்க முடியும். அதனிலும் மேலாக, நாம் ருவாண்டா நிகழ்வுகளிருந்து கற்றுக்கொள்ள வேண்டியன பற்றிய ஒரு தெளிவையும் பெற இயலும். ஒரு வகையில் இத் திரைப்படம் வேண்டி நிற்பதும் அதையே. ■



படிப்பகம்

# உலக முதாளித்துவ முனைப்புகளால் உயிர்ப் பல்வகைமைக்கு ஏற்பட்டு வரும் அச்சுறுத்தல்

ஜெ.சற்குருநாதன்



இன்று உலக ஏக உரிமை கொண்டாடும் முதாளித்துவ நாடுகளின் அரசியல் பொருளாதார சமூகரீதியில் தாக்கத்தினை ஏற்படுத்தி வருவதுபோல் இயற்கையை அச்சுறுத்திப் பாரிய நெருக்கடிகளை ஏற்படுத்தியுள்ளன. அண்மையில் உலக உயரியில் நிலையம் (o.s.s) நடத்திய ஆய்வுவில் புவியில் நமக்கு வழங்கக் கூடிய வளங்களைவிட 50 சதவீதத்திற்கு மேலதிகமாக முதாளித்துவநாடுகள நுகர்கின்றன என்ற அதிர்ச்சிகரமான தகவல்களை வெளியிட்டுள்ளன. அத்துடன் ஒரு புறம் கடுமையான வரட்சி மறுபுறம் வரலாறுகாணாத மழை, சூறாவளி, சுனாமி. புவி நடுக்கம், காட்டுத் தீ இவையெல்லம் மனித குலத்திற்கு அச்சுறுத்தலாக மாறிவருகின்றன. அதைவிட உலக சமநிலயை பேணி வரும் உயிர் பல்வமைக்கு (biological diversity) ஏற்பட்டு வரும் நெருக்கடியாகும்.அண்மையில் அமெரிக்க அறிவியல் தேசிய அமைப்பு பின்வரும் தகல்வகளை வெளியிட்டுள்ளது.

1) வட துருவப் பனிப் பாறைகள் உருகி கடல் நீர்மட்டம் உயர்ந்து வருகின்றது.
2) உலகின் பருவமழை வீழ்ச்சி மாறி வருகின்றது.
3) உலகின் மிகப்பெரிய காடுகளும் சோலைகளும் அழிந்து வருகின்றன.
4) புவியின் வெப்பநிலை மாற்றத்தால் சமுத்திர நீரோட்டங்களில் மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன.

இவை ஏன் இன்று மனித வாழ்வுக்கு அச்சுறுதலுத்தலாக உள்ளன? தன் வாழ்வுக்காய் உச்சச் சுரண்டலை மேற்கொண்டுள்ள முதாளித்துவபொருளாதாரச் செயற்பாடுகளே மனித வாழ்வுக்கு ஆபத்துகளைக் கொண்டுவந்துள்ளதுடன் மட்டுமன்றி உலகின் சமநிலைக்கு உந்து சக்தியாக விளங்கும் உயிர்ப் பல்வகைமைத் தன்மைக்கும் ஆபத்தைக் கொண்டுவந்துள்ளது.

புல்வெளிகள், மலைகள், மலைக் காடுகள், கழிமுகங்கள், கடற்கரைகள், பாலைநிலங்கள், காட்டாறு, நீரூற்றுக்கள், சதுப்பு நிலங்கள், பவளப் புற்றுக்கள், ஆழ்கடல் என்பன சுழல் கட்டமைப்புகளாக விளங்குகின்ற. அதனைப் போலவே அதில் வாழ்கின்ற விலங்குகளும் தாவரங்களும் நுண்ணங்கிகளும் சூழற்கட்டமைப்பைச் சார்தே வாழ்கின்றன. இவ்வாறன பௌதிகச் சூழலும் உயிரினச் சூழலும் ஒன்றுடன் ஒன்று இணைந்து வாழ்கின்றன. மனிதனும் இதனைச் சார்ந்தே வாழ்கின்றான். தாவரங்களும் உயிரினங்களும், “தக்கன வாழும்” என்ற அடிப்படையில் தம் வாழிடத்தை தீர்மானிக்கின்றன.

உயிர் பல்வகையானது உயிரியற் பல்வகைமை (biological diversity) உயிரினங்களின் பல்வகைமை (species diversity) சூழற் கட்டமைப்புப் பல்வகைமை (Ecosystem diversity) ஆகிய மூன்று கூறுகளின் தொகுப்பாக உள்ளது. இவை இயற்கையின் ஒழுங்கமைந்த ஒரு பகுதியாகவும். உயிரினங்களின் வாழ்வினை நீடிக்கும் வகையிலான பல்லுயிர் வளங்களைப் பேணுவதாகவும் பௌதிக நிலத்தோற்றக் கட்டமைப்பை உயிரியற் பன்மையத்தின் தொழிற்பாடகவும் விளங்கிக்கொள்ளப்படுகின்றது. இத்தகைய உயிரியற் பல்வகைத் தன்மையான புவியியல் வேகமாக அழிந்து வருகின்றது. 2010ம் ஆண்டினை ஐக்கிய நாடுகள் சபையின் சுற்றுச் சூழல் அமைப்பானது உயிர்ப்பல்வகை ஆண்டாகப் பிரகடனப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



படிப்பகம்

www.padippakam.com



உயிர்ப் பல்வகைக்கான ஆபத்துக்கள் எவை? ஆய்வாளர்கள் அதனை உறுப்படுத்தியுள்ளனர். உலக அளவில் 125 இலட்சம் உயினங்கள் வாழ்வதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. அவற்றுள் 17 இலட்சம் விலங்கினங்களே உள்ளன. உலகில் கடல்வாழ் உயிரினங்கள் வாழும் இடங்களில் மன்னார் வளைகுடாவும் ஒன்று. இக் கடற் பரப்பில் 18000 வகை உயினங்கள் காணப்படுகின்றன. பாசியினங்கள் 1300, கடற்தாவர இனங்கள் 3, கடற் கோரைகள் 14, முதுகு நாணற்வை 14200. இவை தவிர 2456 மீனங்கள், 36 ஆமையினங்கள், 25 பாலூட்டி இனங்கள் எனக் கணிப்பிடப்பட்டுள்து. இவை அண்மைக் காலமாக மிக வேகமாக அழிந்து வருகின்கின்றன. தவிர, ஆண்டொன்றுக்கு15000 கோடி ருபாய் மதிப்புள்ள வனங்கள் அழிக்கப்படுகின்றன. 2050ம் ஆண்டுக்குள் 40 ஆறுகள் வற்றிவிடப் போகின்றன. இதன் விளைவாக உலக உணவு உற்பத்தியில் சுயசார்பை இழக்க வேண்டிய நிலை ஏற்படப்படப் போவதை அண்மைகால நிகழ்வுகள் எதிர்வுகூறுகின்றன. தொழிற் சாலைக் கழிவுகளால் வளிமண்டலம் மாச டைகின்றது. திடக்கழிவுகளும் கடற் பகுதியிலும் எண்ணைக் கழிவுகள் போன்றனவும் உயிர்ப்பல்வகைமைத் தன்மைக்கு அச்சுறுத்தலாகமாறியுள்ளன.

இவை ஏன் என்ற கேள்வியினை எழுப்பினால், அவை முதலாளித்துவ உலகமயகமாக்கலின் விளைவாகவே என தவிர்க்க முடியாத விடை வரும். சமனான உற்பத்தியும் சமனான நுகாவும் என்பதற்குப் பதிலாகத் தனிமனித சுரண்டலைக் கொண்ட பொருளாதார முறையே இதற்கான அடிப்படைக் காரணமாகும். அபிவிருத்தி எனற பெயரில் உலக முழுவதிலுமுள்ள இயற்கை வளங்கள் சுரண்டப் படுகின்றன. விதை நெல் உற்பத்தியானது முறைதவறிப் பயன்படுத்தப்படுகின்றது. மனிதகுல வாழ்வுக்காக பயன்படுத்தப்படும் வளங்கள் முதலாளித்துவ உச்ச சுரண்டலுக்கு உட்பட்டு அழிந்துவருகிறன. சேது கால்வாய்த் திட்டம் கூடங் குளம் அணுமின்நிலையம், இலங்கையில் மேற்கொண்டுள்ள நுரைச்சோலை மின்திட்டம் மேல் கொத்மலைத் திட்டம் என்பன எல்லாம் உயிர்ப் பல்வகைமைக்கு அசசுறுத்தலாக உள்ளதைச் சூழல் விஞ்ஞானிகள் எடுத்துக் காட்டியுள்ளனர். இதில் வேடிக்கை என்னவெனில் வளர்ச்சி அடைந்த நாடுகளை விட வளர்முக நாடுகளில் அதிக வளங்கள் சுரண்டப்படுகின்றன. வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளின் வளங்களைச் சுரண்டுவது வளர்ச்சியடைந்த நாடுகளில் காணப்படும் இராட்சத பல்தேசிய கம்பனிகள் என்பது குறிப்பிடத்தக்கது.

கட்டற்ற வர்த்தகக் கொள்கையானது இயற்கை மீது திணிக்கப்படும்போது, அது மக்கள் வாழ்வுக்கு எதிராக வந்துவிடுகின்றது. யப்பானில் அணுஉலைக் கசிவானது, கடல், நிலவாழ் விலங்கினங்களையும் தாவரங்களையும் விட்டுவைக்கவல்லை. ஆயுதப்போட்டியில் முதன்மையான பங்காளியாக இருக்கும் அமெரிக்கா, உயிபல்வகைமைத் தன்மைக்கு எதிரான ஆயுதங்களை உற்பத்தி செய்து வருகின்றது. அணுப் பரிசேதனை கடலுக்கு அடியிற் செய்யப்பட்டாலும் பாலைவனத்திற் செய்யப்பட்டாலும் அதனால் ஏற்படும் பாதிப்புக் குறைவடையாது. அண்டவெளியில் உலா வருகின்ற செய்மதிகளும் வேறு சாதனங்களும் புவிச்சூழலுக்கு வேண்டாத விளைவுகளை ஏற்படுத்தி வருகின்றன. ஏகாதிபத்திய நாடுகளின போட்டியும் செயன்முறைகளும் உலகமயமாக்கலில் காட்டும் முனைப்பும் புவியின் உயிரியற் சூழலுக்கு அச்சுறுத்தலை உண்டாக்கியுள்ளன.

உலகில் வெப்பம் அதிகரிப்பதற்குக் காடழிப்பு, தொழிற்சாலைகளின் பெருக்கம், காட்டுத் தீ என்பன முதலாளித்துவ பொருளாதார கொள்கையின் நிமித்தம் செய்யப்படுகின்கின்றன. இந்தியாவில் பழங்குடி மக்களின் வாழ்விடங்களைத் தொழிற்சாலை என்ற பெயரில் பல்தேசியக் கம்பனிகள் எவ்வாறு கொள்ளையடிக்கின்றன என்பதை அருந்ததி ராய் போன்றவர்கள் எடுத்துக்காட்டியுள்ளனர். இவ்வாறு இயற்கை வளம் கொள்ளையடிக்கப்படுகின்ற போது மனிதனுக்கு நன்மை செய்கின்ற உயிர் வகைகளும் அழிந்து வருகின்றன.

வறுமை, ஏற்றத்தாழ்வு, தேசிய போராட்டங்கள் என உலகை வியாபித்திருக்கின்ற வேளையில் உயிர்ப் பல்வகைமைக்கு விடுக்கப்பட்டிருக்கும் அச்சுறுத்தலானது மனித வாழ்வைக் கேள்விக்குறியாக மாற்றிவிடக்கூடிய நிலை வந்துள்ளது. இதனை மாற்றுவதற்குகான வழி ஏகாதிபத்தியத்திற்கும் முதலாளி வர்க்கத்திற்கும் எதிராக ஈவிரக்கமற்ற முறையில் வர்க்கப் போராட்டத்தை நடத்துவதே. ■

முதாளித்துவபொருளாதாரச் செயற்பாடுகளே மனித வாழ்வுக்கு ஆபத்துகளைக் கொண்டுவந்துள்ளதுடன் மட்டுமன்றி உலகின் சமநிலைக்கு உந்து சக்தியாக விளங்கும் உயிர்ப் பல்வகைமைத் தன்மைக்கும் ஆபத்தைக் கொண்டுவந்துள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

# மலையகம் மிக நன்றாக உள்ளது, எமது இருப்புக்கு ஒரு குறையும் இல்லை. ஊடகங்களும் மலையக மக்களும் ஒரு நோக்கு

சை. கிங்ஸ்லி கோமஸ்



எந்த ஒரு நாட்டினதும் நாடித்துடிப்பினைக் காட்டக்கூடிய சாதனமாக ஊடகங்கள் காணப்படுவது எழுத்தறிவுள்ளோர் ஏற்றுக் கொண்ட உண்மையாகும். எமது நாட்டிலும் ஊடகங்கள் தனது முகத்தைக் காலத்திற்கு காலம் வேறு வேறு விதமாக காட்டியுள்ளமை வரலாற்றில் பதியப் பட்டுள்ளது.

தமிழ் தேசியவாதம் தலை தூக்கியிருந்த காலக் கட்டத்தில் தமிழ் ஊடகங்களில் எத்தனை எத்தனை ஊடகங்கள் நடு நிலைமையாய் இருந்தன என்பது மாத்திரம் இன்றி சிங்கள இனவாதத்தினைத் தூண்டும் ஊடகங்களுக்குச் சரிசமமாகத் தமிழ் ஊடகங்களும் தமிழ் தேசியவாதத்திற்கு ஊதுகுழலாய் இருந்தமை மறைக்க முடியாத உண்மையாகும். இன்று யுத்தத்தின் கொடூரங்களைப்பற்றி புலம்பிக் கொண்டிருக்கும் தமிழ் ஊடகங்கள் நடந்து முடிந்த மனிதப் படுகொலைகளுக்கும் பொருள் பண்பாட்டு கலாச்சார அழிவுகளுக்கும் தாங்களும் பங்கு தாரர்கள் என்பதனை ஏற்றுக் கொண்டே ஆக வேண்டும்.

ஊடகங்களும் ஊடக நிறுவனங்களும் அவரவர்களுக்கான தனிப்பட்ட நோக்கினையும் கொள்கையினையும் கொண்டிருந்தப் போதும், ஒரு குறிப்பிட்ட சமூகத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தும் ஊடகவியலாளர்கள் தங்கள் சமூகத்தை நேசிக்கின்றனர் என்பதற்கான பல சான்றாதாரங்கள் ஆங்காங்கே காணப்படுகின்றது. ஊடகங்களினூடாகத் தங்களின் சமூக இருப்பிற்காய் உயிர் நீத்த ஊடகவியலாளர்கள் ஏராளம். ஆனாலும் நாங்கள் செய்யும், எழுதும், படைக்கும் அல்லது தொகுத்து வழங்கும் ஒரு விடயம் இரண்டு மனிதர்களுக்கிடையில் பிளவினை ஏற்படுத்துமாக இருந்தால், இரண்டு சமூகங்களுக்கிடையில் விரிசலை ஏற்படுத்துமாக இருந்தால், ஒரு மக்கள் கூட்டத்தின் ஐக்கியத்தினைச் சிதைக்குமாக இருந்தால் அந்தப் படைப்பு ஒரு நச்சுப் படைப்பு என்றே அடையாளப்படும்.

தமிழ்த் தேசியத்திற்கு துணைபோனவர்கள் தாங்கள் என்ன செய்கின்றார்கள் என்று அறியாமலே யுத்தத்திற்கு துணைபோனவர்களாவார்கள். அவர்களின் படைப்புகள் துப்பாக்கியின் தோட்டாக்களுக்கு இணையானவை. அந்தப் படைப்புகளைக் காலத்தின் தேவையறிந்து சற்று தீர்க்கத்தரிச னத்துடன் சர்வதேச ஆயுத வியாபாரிகளினதும் ஆயுத தரகர்களினதும் தேவைக்காய் எழுதாமல் இருந்திருந்தால் இன்று நாம் கண்ட இந்த கோர அனுபவங்களை தவிர்த்து இருக்கலாம்.

மலையகத்தில் கடந்த பொதுத் தேர்தல் காலத்தில் ஊடக நிறுவனங்கள் தங்களின் அரசியலை எவ்வாறு அரங்கேற்றினர் என்பதற்கான பதிலை இன்று பாராளுமன்றத்தில் இருக்கும் ஊடக முகங்கள் எமக்கு காட்டி நிற்கின்றன. இதில் தமிழ் மொழி சார்ந்தவர்கள் மலையகத்தினை ஊன்றுகோலாய் நிறுத்தியே நிமிர்ந்தவர்களாவர். மலையகத்தின் ரொட்டியும் சம்பலும் தேர்தல் பிரச்சாரத்தின் அடையாளமாய் ஆனதுடன் எங்களின் கிழிந்த ஆடைகள் அவர்கள் அணியும் கோட்டும் சூட்டும் ஆகியது. மாவின் விலை ஏற்றம் அவர்களின் வார்த்தைக்கு வண்ணம் ஊட்டியதே ஒழிய அவர்கள் சார்ந்திருக்கும் தலைமைகளுக்கு சிறிய தூண்டலைக்கூடக் கொடுக்கவில்லை. இதில் இன்னும் ஒரு வேடிக்கை, இந்த ஊடக வியாபாரிகளின் பின்னால் சில ஆசிரியப் பெருமக்களும் சுற்றி திரிந்தமையாகும். ஏன் என்று வினவிய போது எவ்வாறாவது குறிப்பிட்ட ஊடகத்தின் பிராந்தியச் செய்தியாளராகி விட வேண்டும் என்று கூறினர். மலையகத்தின் கற்றவர்கள் அனைவரும் வெட்கப்பட வேண்டிய நிலை ஏற்பட்டது.



படிப்பகம்

www.padippakam.com

மலையக மக்களுக்காய் எழுத வந்தேன் மலையக மக்களின் விடுதலை பற்றிப் பேச வந்தேன் என்று வீர முழக்கம் இட்ட இன்னும் சிலர் ஒரே ஒரு சாகித்திய விழாவிற் பரிசைப் பெற்றவுடன், "மலையகம் மிக நன்றாக உள்ளது எமது இருப்புக்கு ஒரு குறையும் இல்லை" என்று மந்திர உச்சாடனம் பண்ணத் துவங்கி விட்டார்கள், ஏனென்றால் விருது வழங்கிய விழாவில் நாயகனின் பேச்சே அது.

மலையக மக்கள் இன்னும் முகவரி இல்லாதவர்களாகவும் 80 சதவீதமானவர்கள் லயங்களிலே வாழ்பவர்களாகவும் இந்த நூற்றாண்டின் மனித வளர்ச்சியினை எட்டாதவர்களாகவும் வாழ்வதனைக் காணக்கூடியதாய் உள்ளது. மலையக மக்கள் பற்றி கதைக்காதவர்கள் யாரும் இல்லை. "ஏமாற்றப்படுகின்றார்கள்" "ஏய்க்கப் படுகின்றார்கள்" "தேர்தல் காலத்தின் போது விற்கப்படுகின்றார்கள்" இவை அனைத்துமே பலரும் பல காலமாகக் கதையாடி வரும் விடயமாகும். எதிர்க் கட்சியாக இருக்கும் போது ஆளும் கட்சிகளின் தலைவர்களும் அரசியல்வாதிகளும் மேடைகளில் மலையக மக்களின் கண்ணீர் துடைக்கத் தங்களால் மாத்திரமே முடியும் என்று முழக்கம் இட்டு விட்டுத் தாங்கள் ஆட்சியை பிடிப்பதற்காக யாரோடு கூட்டு சேர வேண்டும் என்பதனை தீர்மானிப்பதன் மூலம் மீண்டும் மலையக மக்கள் மறக்கப்பட்ட மனிதர்களாகி விடுவார்கள். இதற்குச் சமாந்தரமாக, ஊடகங்களும் ஊடகவியலாளர்களும், ஏமாற்றுபர்கள் அரச யந்திரத்துக்குள் பங்குதாரர்களானதன் காரணத்தினால் மலையக மக்களை மறந்து விட்டு மலையக மக்களை நசுக்கும் பாதங்களின் பயணங்களைப் புகழத் துவங்கி விடுவார்கள். இந்த இடத்தில் சற்று நிதானித்து சிந்திக்கும் போது இந்த ஊடக உலகம், குறைந்தபட்சம், ஒடுக்கும் இந்தக் கால்களை எதிர்க்கும் சிறு சிறு சக்திகளின் குரல்களைக் கூட இருட்டடிப்பு செய்வது அனுபவத்தால் பட்ட பாடங்களாகும். தேர்தல் காலங்களாக இருக்கட்டும், தொழிலாளர் தினங்களாக இருக்கட்டும், மலையக மக்களை நசுக்குபவர்களுக்கு கொடுக்கப் படும் முக்கியத்துவம் மலையக மக்களை ஆண்டாண்டு கால அடிமைத்தனத்தில் இருந்து விடுதலை செய்ய முயல்பவர்கள் ஊடகங்களால் இருட்டடிப்பிற்குள்ளாக்கப் பட்டு விடுவார்கள்.

அண்மைக் காலமாக மலையகப் பிரதேசத்தில் தொலைக்காட்சி கலாச்சாரம் மிகவும் சீரழிந்த கலாச்சாரமாக மாறி வருகின்றது. எமது நாட்டின் தொலைக்காட்சி அலைவரிசைகள் ஒன்றும் மக்கள் நலன் சார்ந்த நிகழ்ச்சிகளை மாத்திரம் வழங்குவதாக பெருமைப்பட முடியாவிட்டாலும் குறைந்தபட்சம் நாட்டின் செய்திகளையாவது நேரம் தவறாமல் பார்க்க உதவுகின்றது. ஆனால் அட்டன், கொட்டகலை, நோர்வுட், பொகவந்தலாவை, தலவாக்கலை, மஸ்கெலியா, பண்டாரவளை, அப்புத்தளை, காவத்தை என எங்கெல்லாம் தமிழ் மக்கள் செறிந்து வாழ்கின்றார்களோ அங்கெல்லாம் தமிழ் மக்களுக்கு இலங்கையில் பூகம்பம் வந்தாலும் தெரிவதில்லை. கேபிள் டீவி மூலமும் டிஷ் அன்டனாக்கள் மூலமும் சினேகாவினதும் பிரசன்னாவினதும் திருமணத்தினை பார்த்து கூப்பாடு போட்டவண்ணம் இருக்கின்றார்கள். மலையகத்தின் மிக முக்கிய தொழிற்சங்கத் தலைவர் ஒருவர் இலங்கை செய்திகளை மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் பார்க்காது இந்திய தொலைக்காட்சிகளை பார்ப்பதற்கு உதவிகளையும் ஒத்துழைப்பினையும் வழங்கி வருவது பலரும் அறிந்த விடயமாகும் இதற்கு காரணம் அவ்வப்போது சில அரசியல்வாதிகளின் முகத்திரைகள் விரும்பியோ விரும்பாமலோ கழட்டப்படுவதாகும். கூரைகளில் பூட்டப்பட்டுள்ள டிஷ் அன்டனாக்களை காட்டி மலையக மக்கள் முன்னேறி விட்டார்கள் என்று கூறும் அரசியல்வாதிகளின் கபடத்தனங்கள் ஊடகங்களின் மூலமே அரங்கேற்றப்படுகின்றது என்பது பொய்யானதல்ல. மலையகத்தில் பல தோட்டங்களில் மலம் கழிப்பதற்கு மலசல கூடம் இல்லாவிட்டாலும் கலாச்சார அசிங்கங்களைக் காட்டும் டிஷ் அன்டனாக்கள் பொருத்தப்பட்டு இருப்பது வெட்கித் தலைகுனிய வைக்கும் விடயமாகும்.

ஊடகங்கள் தொடர்பாக நோக்கும் போது உலக ஊடக வரலாற்றில் அதிகமானவை வியாபார நோக்கத்தினை மையப்படுத்தியவையாகும். ஊடகங்களுக்க மனிதர்களை சரியானப் பாதையில் வழிநடத்த வேண்டிய தலையாய பொறுப்பு காணப்படுகின்றது. ஊடகத்துறையில் கடமையாற்றும் பலருக்கு தங்களின் முகாமைத்துவத்திற்கு விசுவாசமாக வாழ வேண்டியது தொழில் பாதுகாப்பு காரணத்தால் கட்டாயமாகும். மலையக ஊடகவியலாளர்கள் வீடற்ற, நாடற்ற தொழிலாளர்களின் இருப்புத் தொடர்பாகவும் மாற்றம் தொடர்பாகவும் விடுதலை தொடர்பாகவும் பேசக் கடமைப்பட்டுள்ளனர் என்பது சுட்டிக்காட்டப்பட வேண்டிய விடயமாகும்.

முகாமைத்துவத்திற்கும் அரசியல்வாதிகளுக்கும் மாத்திரம் அல்ல, மக்களுக்கும் விசுவாசமாக வாழவேண்டியது அனைவரினதும் தார்மீகப் பொறுப்பாகும். ■






படிப்பகம்

www.padippakam.com

# பகவத் கீதையின் அரசியல்

யாதவன்



"பகவத் கீதை என்ன செய்தது" எனக் கேட்டார் ஆசிரியர்

"ஒரு போரை வெல்ல உதவியது"

"ஒரு போரை தொடக்கி வைத்தது"

"பல இலட்சம் மக்களைக் கொன்றொழித்தது"

"ஒன்றுமே செயவில்லை"

இவ்வாறு வித்தியாசம் வித்தியாசமாகப் பதிலளித்தனர் பிள்ளைகள். எல்லாப் பதில்களும் சரி போலவும் பிழை போலவும் இருந்தன.

பகவத் கீதையை விரும்பியவாறு வியாக்கியானம் செய்து, எதையும் நியாயப்படுத்த முடியும் என்பதற்கு இதைவிட வேறு சான்று தேவையில்லை. இந் நிலையில் வரலாற்றில் பகவத்கீதையின் பாத்திரத்தையும் அதன் அரசியலாக்கத்தையும் அவதானிக்க முடியும். வரலாற்றின் பல்வேறு சம்பவங்களும் பகவத் கீதையின் ஊடாக வேறு வேறான கதையாடல்களையும் அரசியலையும் வெளிப்படுத்துவதை நாம் காணலாம்.

பகவத் கீதையின் தோற்றம் குறித்து பல மாறுபாடான கருத்துக்கள் உண்டு. டி.டி. கோசாம்பி கி.பி. 6ம் நூற்றாண்டுக்கு பின்னரே அது உருவாகியிருக்க வேண்டும் என வாதிடுகிறார். பகவத் கீதை உருவான பின்புலம் முக்கியமானது. எந்தவொரு படைப்பிலும் அதனது காலப் பின்புலத்தின் தாக்கம் நிச்சயம் இருக்கும். அனேகமாக அப் பின்புலமே அந்தப் படைப்பைக் கட்டமைக்கின்றது. அவ்வகையில் சமண மதத்தின் ஆதிக்கமும் புத்த மதத்தின் தாக்கமும் மிகுந்திருந்த காலப்பரப்பில் ஒரு நிலைக் கவிழ்ப்பின் வடிவமாக உருவானது தான் பகவத் கீதை. இதற்கு வாக்கியங்களே சான்று சொல்லும்.

"சதுர் வர்ணயம் மயா ஸ்ருஷ்டம்

குணகர்ம விபாகச"

*(அத்தியாயம் - 4 ஸ்லோகம் - 13)*

"நான்கு வர்ணங்களும் என்னால் உருவாக்கப்பட்டது" என்று அருச்சுனனுக்கு கிருஷ்ணன் சொல்லும் வாக்கியம், புத்த, ஜைன சமயங்கள் சாதி வேறுபாட்டைக் களைந்து எல்லோரும் ஒருவரே என்ற கருத்தியவை வலிமையாக் பரப்பி வந்த நிலையில் ஒரு நிலைக் கவிழ்ப்பாகச் சாதி அடுக்குகளை நிலைநிறுத்த உருவான ஒன்றாகவே கீதை இருக்கின்றது. அன்றைய நிலைமைகளில் அதன் உருவாக்கமும் தேவையும் யாவருக்கும் முக்கியமானதாகவும் அவசியமானதாயும் இருக்கவில்லை என்பதையும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இந் நிலையில் பகவத் கீதையின் தோற்றத்தின் அரசியல் பின்புலமானது மக்களது நலன்கள் என்ற கோஷத்தில் அடிப்படையில் அதிகார வர்க்கம் தமது மேலான்மையை நிலைநாட்டக் கடவுளைத் துணைக்கு இழுத்துக் கொண்டபோது அதற்கு வாய்ப்பாக உருவாக்கப்பட்டதுதான் பகவத்கீதை எனலாம்.

"கடமையைச் செய்

பலனை எதிர்பாராதே"

என்ற வாக்கியத்தின் பின்னால் ஒளித்திருக்கும் சகலவிதமான அரசியல் சிந்தனைகளும் அவற்றை வெற்றிகரமாக மூடி மறைத்து உருவாக்கிய தோற்ற மயக்கங்களும் பகவத் கீதையின் தளத்தையே மாற்றி விடுகின்றன. கிடைநிலையான சமூகத்தளத்தில் மக்களை ஒன்றிணைக்கும் ஒரு கருவியாக பகவத்கீதை வெற்றிகரமாக பயன்படுகின்றது. அது உண்மையில் சமூக வேறுபாடுகளைத் தொடர்ந்து பேணும் நோக்கில் மக்களுக்கான ஒன்றாகக் கூறப்பட்டு வந்திருக்கிறது.

"பலனை எதிர்பாராமல் கடமையைச் செய்ய வேண்டும்" என்கிற போது ஒருவித அடக்குமுறை, ஒழுங்குணர்வு, பணிவு போன்ற அம்சங்கள் அங்கே இயல்பாகவே தலை காட்டும். தன் அடுத்த தளத்தில் அது அடிமைத்தனமும் உழைப்புச் சுரண்டலும் எவ்வித எதிர்ப்பும் இல்லாமல் நடாத்தப்படுவதற்கு பேருதவி புரிவதாக மாறி விடுகின்றது. பலனை எதிர்பாராமல் கடமையைச் செய்ய நாம் உந்தப்படுகின்ற போது எமது அரசியல் இன்னொருவராற் கட்டமைக்கப் படுகின்றது. இந்த அடிமைத்தனம் சாதிப் பாகுபாடு என்பதன் மேல் தளத்தில் நிலை கொள்ளத் தொடங்குகிறது. இந்த இடத்தில் சாதிப் பாகுபாட்டை பற்றிய எவ்வித கேள்விகளுக்கும் இடமின்றி அதை ஏற்றுக் கொண்டு செயல்பட வேண்டும் என்பதற்கான கூற்றாகவும் மேற்சொன்ன கூற்றைக் காணமுடியும்.



படிப்பகம்

www.padippakam.com

*"ப்ராஹ்மண க்ஷத்ரிய விஸாம் ஸூத்ராணம் கபரந்தப கர்மாணி ப்ரவிபக்தாநி ஸ்வாபாவா ப்ரவனவர்குனை"*

*(அத்தியாயம் - 18 சுலோகம் - 41)*

ஒவ்வொருவரது கடமையும் அவரவர் வர்ணங்களின் அடிப்படையில் உருவாக்கப்படுவதாகச் சொல்கிறது கீதை. இதனடிப்படையில் பிறப்பின் அடிபடையிலேயே கடமைகளும் தொழில்களும் பகிர்ந்தளிக்கப்படுகின்றன. ஆண்ட பரம்பரையினரிடம் தொடர்ந்து அந்த மனோபாவம் தலைதூக்குவதால் அவர்கள் தொடர்ந்து ஆளுபவர்களாயும், அடிமைகளாக இருக்க விதிக்கப்பட்டவர்கள் (கீதையின் அடிப்படையில்) தொடர்ந்து அடிமைகளாக இருக்க வேண்டும் என்ற நிலைமையை தவறாமல் கடைப்பிடித்திருக்கின்றது கீதை. சமூகக் கட்டுமானங்களை நிர்ணயித்து அதனை தொடர்ந்து பேணி வருவதற்கும் இது மிகவும் பக்கபலமாகவும், மக்கள் போராட்டங்களையும் உரிமைக் கோரிக்கைகளையும் மழுங்கடிக்க உதவிய வெற்றிகரமான ஆயுதமாகவும் பயன்பட்டிருக்கின்றது, பயன்படுத்தப்பட்டும் வருகிறது.

பகவத் கீதையை பின்பற்றுவதோ பின்பற்றுவதாக சொல்லிக் கொள்ளுவதோ ஒருவகை அரசியல் அடிப்படையின் பாற்பட்டதே. காந்தி பகவத் கீதையை பின்பற்றுபவராக தன்னைச் சொல்லிக் கொண்டார். அதனால் தனது தவறுகளில் இருந்து இலகுவாக விலக்குப் பெற அவரால் முடிந்துள்ளது. ஏனெனில் கீதை பலனை எதிர்பாராமல் கடமையைத் தான் செய்யச் சொல்லியிருக்கின்றது. அவ்வாறே காந்தியை கொலை செய்த நாதுராம் சோட்சே பகவத் கீதையின் மீது சத்தியம் செய்தே காந்தியை கொலை செய்ய முடிவு செய்வததாக நீதிமன்ற ஆவணங்கள் சொல்கின்றன. இரண்டு வேறுபட்ட தேவைகளுக்காக எவ்வாறு கீதை பயன்பட்டிருக்கின்றது என்பதைக் காண இதை விடச் சிறந்த சான்று இருக்க முடியாது. பகவத் கீதையின் வழி நடந்தார் என்பதற்காக காந்தி விட்ட தவறுகள் எல்லாம் மன்னிக்கப்படுகின்ற நிலையில் அதே பகவத்கீதையின் மேல் சத்தியம் செய்து தனக்கான பலனை எதிர்பாராது கடமையைச் செய்த கோட்சே மன்னிக்கப்பட்டிருக்க வேண்டுமல்லவா? அதல்லவா பகவத் கீதையின் அரசியல்.

பலனை எதிர்பாராமல் கடமையை நிறைவேற்றக் கோரும் கீதை மறுபேச்சுக்கோ, கேள்விக்கோ, விவாதத்துக்கோ இடமில்லாமல் கடமை செய்ய ஒருவனை நிர்ப்பந்திக்கின்றது. கடமை தவறுவதைப் பாரிய குற்றமாகக் கருதும் பகவத்கீதையின் அடிப்படையில் கோட்சேயை நிரபராதியாகக் காணக் கூடுமா என்ற கேள்வியும் இங்கு தோற்றம் பெறுகிறது. கடமையைச் செய்விக்க எந்த நிலையையும் அடைய அல்லது எதையும் செய்ய தயராக இருக்கச் சொல்கிறது பகவத் கீதை.

இன்றைய சூழலில் பணிக்கமர்த்தும் நிறுவனங்கள் வேலைக்கு இவ்வளவு சம்பளம், இவ்வளவு மேலதிகம், இன்னென்ன நன்மைகள் கிடைக்கும் என்று ஆசை வார்த்தைகள் மூலம் கடமையைச் செய்வித்து சுரண்டலை நிலைநிறுத்தும் நிலையை இன்று நாம் அறிவோம். இவையொன்றும் புதியவையல்ல. போர் புரிய மறுத்து வில்லைக் கீழே போட்டுவிட்டு நின்ற அருச்சுனனுக்கு கடமையைச் செய் பலனை எதிர்பாராதே என்று சொல்லியும் அவன் போர்புரிய மறுக்க, "உன்னுடைய பாவங்களை நான் கழிக்கிறேன், உனது செயல்களின் பாவங்கள் எனக்கே வந்தடையும் நீ போர்செய்" எனக் கிருஷ்ணன் சொல்லியும் வில்லைத் தொட மறுத்த அருச்சுனனைப் போர் புரிய வைக்க கிருஷ்ணன் சொன்ன நியாயமும் விளக்கமும் மிகவும் முக்கியமானது.

"போரில் வெற்றி தோல்வி பற்றிக் கவலை கொள்ளாதே. எது நடந்தாலும் உனக்கு இலாபமே. வென்றால் அரசாட்சி சுகபோகங்களுடன் மகிழ்வாய் இருக்கலாம். தோற்றால் சுவர்க்கத்தில் சகல இன்பங்களுடனும் சந்தோஷமாக வாழலாம்."

இந்த உத்தரவாதமே போர் செய்ய விரும்பாதவனைப் போருக்கு இழுத்து வந்தது. கடமையைச் செய்வதைப் பற்றி யோசித்தவனை எதுவித விசாரணையும் விமர்சனமுமின்றி கடமையைச் செய்யக் கற்றுக் கொடுத்தது.

"எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கின்றதா அதுவும் நன்றாகவே நடக்கின்றது.
எது நடக்கப் போகிறதோ அதுவும் நன்றாகவே நடக்கும்."

இந்த வரிகள் அரசியல் தந்திரங்கள் உயர்நிலை சிந்தனைகள். சாதிப்பாகுபாட்டை நிலைநிறுத்தவும், ஆண்டவனைத் தொடரவும் எல்லாவற்றையும் கேள்விகளுக்கு அப்பாற்பட்டதாக நிலை நிறுத்தவும் அமைந்த வரிகளே இவை.

"எனக்குச் சரியான வறுமை", "எனக்கு வேலை கிடைக்கவேயில்லை", "முதலாளி எனக்கு சம்பளம் தருகிறார் இல்லை", "எனக்குப் படிக்க வசதி இல்லை". இந்த எல்லாக் குறைபாடுகட்கும் அந்த வரிகளைத் தீர்வாகச் சொல்லிப் பாருங்கள் எமது தேவைகளுக்காக நாம் போராட வேண்டும் என்ற மனநிலையோ மற்ற எல்லோரைப் போலவும் எனக்கும் எல்லா உரிமைகளும் இருக்கின்றன என்ற எண்ணமோ இல்லாமல் நாம் அடிக்கடி சொல்வது போல நடக்கிறதைப் பார்த்துக் கொள்ள வேண்டியதுதான் என்ற மனோநிலை விதைக்கப்படுகிறது. இந்த மனநிலை சமூகத்தில் நிலைபெறும் போது நாம் அடக்கியொடுக்கப்படுகிறோம் என்பதே தெரியாமல் நாம் வாழத் தலைப்படுகிறோம். புரட்சிக்கான அடிப்படைக் காரணிகள் இதனால் முளையிலேயே கிள்ளி வீசப்படுகின்றன.

அன்றாடம் ஆசிரியரால் தண்டிக்கப்படும் ஒரு மாணவன், ஆசிரியரால் தண்டிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் போது அவனிடத்தில் கீதாசாரத்தைச் சொல்லிப் பாருங்கள் அவனது எதிர்வினைகள் பயங்கரமானதாக இருக்கும். எனெனில் தான் தொடர்ந்து தண்டிக்கப்படப் போகிறோம் என்ற உண்மையை அவன் உணருகிறான்.

தொடக்கத்தில் ஆசிரியர் கேட்ட கேள்விக்கே வருகிறேன். "பகவத் கீதை என்ன செய்தது?" இப்போது இதற்கு உங்கள் விடை என்னவாக இருக்கிறது? ■

**பலனை எதிர்பாராமல் கடமையை நிறைவேற்றக் கோரும் கீதை மறுபேச்சுக்கோ, கேள்விக்கோ, விவாதத்துக்கோ இடமில்லாமல் கடமை செய்ய ஒருவனை நிர்ப்பந்திக்கின்றது.**



படிப்பகம்

www.padippakam.com

# சமூகம் – திருமணம் – கலாசாரம்

நித்தி

திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப் படுகின்றன என்று கூறப்படுவதுண்டு.சொர்க்கத்தில் நிச்சயிக்கப் படுகின்றனவோ இல்லையோ, திருமணம் என்ற எண்ணக்கருவே ஏராளமானோருக்கு இன்று நரகவேதனையைத் தருவதாக உள்ளது.

சமூக விலங்குகளான மனிதர்களுக்கு ஆண்-பெண் உறவென்பது உணர்ச்சியாகவும், உடல் ரீதியாகவும் அத்தியாவசியத் தேவையாகும். இந்தத் தேவை எமது சமூகத்தில் கலாசாரம், பண்பாடு என்ற பெயர்களைச் சொல்லி மறுக்கப்பட்டு வருவது உண்மை.

எமது சமூகத்தில் ஏராளமானவர்கள் திருமணமின்றியே தமது வாழ்க்கையை வாழ்ந்து முடிக்கவேண்டிய நிர்ப்பந்த நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இதில் ஆண்களும் பாதிக்கப்பட்டிருப்பினும் கூடிய பாதிப்புக்கு உள்ளாகியிருப்பவர்கள் பெண்களே.

பல்வேறு காரணங்களுக்காக இன்று பெண்களுக்குத் திருமணம் மறுக்கப்படிகிறது. இந்துக்களின் மரபுப்படி முதலில் சாதகப் பொருத்தம் பார்த்தாக வேண்டும். சாதகங்களையும் பொருத்தம் பார்ப்பவரையும் பொறுத்து, இதன் வெற்றி-தோல்வியின் அளவு வேறுபடும். "பிழையான நேரத்தில்" பிறந்தவர்களுக்கோ 75 சதவீதத்துக்கு மேற்பட்ட சாதகங்கள் பொருந்தாமல் போகலாம். கால்வாசி மட்டும் திறந்து விடப்பட்டுள்ள இத் திருமணக் கதவுக்குள் ஒருவாறு தட்டித் தவறி நுழைந்து விட்டாலோ, மேலும் பல தடைகள்.

சீதனம் கேட்பதற்கு கற்பிக்கப்படும் காரணங்களோ பல. "சகோதரியின் திருமணத்துக்கு" என்பதிலிருந்து, "செலவழித்துப் படிப்பித்ததற்கான பிராயச்சித்தம்" என்பது வரை பட்டியல் நீளும். வெளிநாட்டு மாப்பிள்ளைக்கும் வெள்ளவத்தையில் வீடு வேண்டும். இந்தக் காரணங்களையெல்லாம் விட்டுத் தள்ளினாலும், திருமண நாளில் "சீதனம் என்ன?", "சீதனம் என்ன?" என்று பலரும் விசாரிக்கும் போது நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு சொல்லக்கூடிய சீதனம் இல்லாவிடில், குடும்ப கௌரவம் என்னாவது?

சாதகமும், சீதனமும் சரிவந்தால் மட்டும் முடிகிற காரியமல்ல இது. சாதி, குலம், கோத்திரம் பார்க்க வேண்டும். பெண்ணின் அழகைப் பார்க்க வேண்டும். ( இது புகைப்படத்தில் தொடங்கி, நேர்முகக் கண்காட்சியில் முடியும்.) ஆணோ காகமாக இருந்தாலும், பெண் வெண்புறாவாக இருக்கவேண்டும் என்ற அடிமை மனப்பான்மை. கேவலமான இன்றைய சினிமாவுக்குள் மயங்கி, அதில் வருவது போன்ற செயற்கைச் சிலைகளைத் தேடியலையும் பைத்தியம்.

பெண்கள் படித்தவளாக, உலகம் தெரிந்தவளாக இருக்கவேண்டும். அதேவேளையில் குணத்தில் தங்கப் பவுணாக அமைய வேண்டும். அதாவது, கற்புக்கரசியாக, வாய் மூடியவளாக, விரதம் பிடிப்பவளாக, ஆண்கள் எவரையும் நிமிர்ந்து பார்க்காதவளாக, பார்த்தாலும் சீவியத்தில் எவரையும் காதலித்திருக்காதவளாக இருக்க வேண்டும்.

இவ்வளவும் சரிவந்து, சருகிலிருந்து சாறு பிழியப்பட்டால், திருமணம். பெண்கள் மட்டுமன்றி ஆண்களும் கூடத்தான் திருமணம் வாய்க்கப் பெறாமல் அலைந்து திரிவது இன்றைய யதார்த்தம். காரணங்கள் வித்தியாசமானவை. உதாரணமாக, தங்கை திருமணம் செய்யாவிட்டால் அண்ணனுக்கும் திருமணமில்லை. எனினும், எங்கள் திருமணச் சந்தையில் விலைபோகாப் பண்டங்களாக அதிகம் இருப்பவர்கள் பெண்களே.

திருமணமாகாமல் வயதேறிக் கொண்டு போகும் ஆண்களுக்கும் சரி, பெண்களுக்கும் சரி உளத் தேவை நிறைவேற்றப்படாததாலும், உடற் தேவைகள் நிறைவேற்றப்படாததாலும் கடும் பாதிப்புகளுக்கு உள்ளாகின்றனர். அதே வேளை, பெண்கள் சமூகத்தின் பலவகையான சித்திரவதைக்கும் ஆளாக வேண்டி உள்ளது. சுயநலம், தன்முனைப்பும் கொண்ட எங்கள் சமூகம், திருமணமாகாத பெண்களைச் சும்மாவிடத் தயாராக இல்லை. கலாசாரம், பண்பாடு என்று ஒருபக்கத்தில் மணி கிலுக்கிக் கொண்டு, மறுபக்கத்தில் சுத்த மிருகத்தனமான, காட்டு மிராண்டிகளாக நடந்து கொள்வதைப் பற்றி எமது சமூகம் வெட்கப்படக்கூடத் தயாராக இல்லை. மேலைத் தேசங்களில் திருமணமாகாத பெண்கள், எவ் வயதினராயினும் சரி, சுதந்திரமாகப் பறந்து திரிகின்றனர். எமது சமூகத்திலோ அவர்கள் அடக்கி வைக்கப்படுவது மட்டுமன்றி, கழுகுகளின் கோரப் பார்வைக்கும் இலக்காகின்றனர். இதன் காரணமாக, ஆண் உருவம் கொண்ட ஒரு கல்லைக் கூடக் கணவனாக ஏற்றுக்கொள்ள ஏராளமான பெண்கள் தயாராக உள்ளனர்.

"இளம் பெண்களே, காலம் கடக்க முதல் யாரையாவது காதலித்துக் கைப் பிடித்துக் கொள்ளுங்கள்" என்று உரத்துக் கத்த வேண்டும் போல் இல்லையா? ஆனால் ஐயகோ, எங்கள் இதிகாசங்களும் இலக்கியங்களும் மேலான பொருளாகக் கொண்டு போற்றிய காதலுக்கு இன்று நேர்ந்துள்ள கதியைப் பாருங்கள்! காதலித்து, கூடித் திரிந்து, நெருங்கிப் பழகி, கும்மாளமடித்த பின் சீதனம் போதாதென விட்டுப் பிரியும் "காதலர்" தொகை எமது சமூகத்தில் இன்று ஓங்கியிருக்கிறது. இதற்கு என்ன செய்யலாம்? காதலா, சீதனமா எது பெரியது? என்று மேடையில் ஒருவிவாதம் வைத்து ரசிக்கலாமா?


நடந்து முடிந்த கோரமான இறுதி யுத்தமும், முப்பது வருட காலம் நீடித்த யுத்தச் சூழலும் எமது சமூகத்தின் உள ஆரோக்கியத்தையும், அது மதிக்கும் பெறுமானங்களையும் வெகுவாகப் பாதித்துள்ளன. ஏராளமான பெண்கள் விதவைகளாக்கப் பட்டுள்ளனர். வயதேறியும் திருமண வாய்ப்பை இழந்து நிற்கும் பெண்களின் எண்ணிக்கையும் அதிகரித்துக் கொண்டே போகிறது. இவர்களின் உளம் சார்ந்த, உடல் சார்ந்த பிரச்சினைகள் பற்றிய பிரக்ஞை சமூகத்தில் மிகக் குறைந்தே காணப்படுகிறது. விதவையானோரும், விவாகரத்து கண்டோரும் மறுமணம் செய்ய முடியாத அளவுக்கு நாகரீகத்தில் பின்தங்கிய ஒரு சமூகமாக நாம் வாழ்கிறோம்.

"விபச்சாரம் வளர்கிறது, ஒழுக்கம் கெடுகிறது, கலாசாரம் அழிகிறது" எனக் கண்ணீர் விடுபவர்கள் ஒரு புறமும், "எங்களுக்கு வாழ்க்கை எங்கே?" எனக் கதறியழும், நடை பிணங்களாகிவிட்ட பெண்களின் ஓலம் மறுபுறமுமாக, திசை தெரியாது இருளில் நின்று தவிக்கிறது எமது சமூகம்.



படிப்பகம்

www.padippakam.com




படிப்பகம்

www.padippakam.com

# மரங்கள்

- இதயராசன்

எமது வேரின் நுண்துளைகளும்
கிளைகளின் இணைப்புக்களும்
இலைகளின் நரம்புகளும் - எம்மை
உயிர்ப்பூட்டிச் செழிப்பூட்ட,
முகை வெடித்து மொட்டவிழ்ந்து
பூவொடு தேனும்
காயும் கனியும் ஈந்து,
பயனுறு வளமாய் நின்று
இயற்கையின் இயங்குறு நிலைக்களனாய்
பசுஞ்சோலையாய் மிளிரகின்றோம்.

குருவியும் அணிலும்
வெளவாலும் வல்லூறும்
நரியும் கரடியும்
நல்லபாம்பும் மலைப்பாம்பும்
பகலும் இரவுமாய்
பகிரங்கமாயும் பரகசியமாயும்
பயன் பெற்றுப் போகின்றன - எம்
பசும் பட்டைகளையும்கூட
'மரைக்'கூட்டம் காந்திப் போகின்றன,
போதாக்குறைக்கு மரங்கொத்திகள்
தம் பங்கிற்குக் கொத்திப் பார்க்கின்றன.

வெறும் மரமாய்
வாயுப் பரிவர்த்தனைக்கு மட்டுமே
மட்டுப்படுத்தப்பட்ட சுதந்திரத்துடன் -எம்
'கிளைகளும்' 'இலைகளும்'
சலசலத்துச் சங்கேத மொழியில்
உரையாடுகின்றன - எம்
ஆத்மாவின் ஆதங்கம்
எந்தப் பிராணிக்குப் புரியப்போகின்றது.
அந்தக் கொம்பன் யானைகள்
எங்கள் முதுகின்மேல்
தங்கள் முதுகுகளையும் கொம்புகளையும்
சொறிந்து சொறிந்து சுகம்காண்கின்றன - நாம்
சிதைக்கப்படுவதும் இரத்தம் கசிவதும்
வேதனையில் விம்முவதும்
அவைகளின் பார்வைக் கண்களில்
பரவசமாய்த் தெரிவதால் - நாம்
மீண்டும் மீண்டும் சித்திரவதைப் படுகின்றோம்.

வெய்யிலுக்கு நிழலாகவும்
பசிக்குப் பழமாகவும்
சுவைப்பதற்குத் தேனாகவும்
சுவாசிப்பதற்குச் 'சுவாசமாயும்'
குளிர்வந்தால்
குச்சியாய்ப் பற்றவைப்பதற்கும் - எம்
ஆக்கத்திலும் அழிவிலும் இன்பம்காணும்
அரக்கர் கூட்டத்தில்
இரட்சகரைத் தேடி
வரம்கேட்பதை மறுதலிப்போம்.

மரமாய் நின்றபோதும் - எம்
'கிளைகளைக்' கோர்ப்போம்
இலைகளும் இலைகளும் ஒட்டிடச்
சங்கற்பம் செய்வோம்
காற்றினைக் 'கவச வாகன'மாக்கி
வீசியடிப்போம்
உதிரத்தைப் பீய்ச்சிப்
பேய்க்கோலம் கொள்வோம்
தூரத்தில் வைத்தே,
துர்க்குணத்தோடு துவம்சம் செய்வோம்
எம் ஆத்மாவின் குரல் கோலோச்சும்வரை
ஓய்வின்றிப் போர்தொடுப்போம்.

www.padippakam.com

# பயிர்க்கனவு

- கருணாகரன்

இந்தக்காலையில் வந்த கடிதம்
கொண்டு வந்த மகிழ்ச்சி
எனக்கும் உனக்கும்
இந்தப்பூமிக்குமானது

நான் பாடலானேன்
இசை பொங்கியோடும் திசைகளில்
ஆற்றில் நீர் சுழித்தோட
நீயா வருவது


வயல் நிரம்பப் பயிர்
பயிர் நிரம்பக் கனவு

என்னருகில் வா
நமது காலம் ஒளிர
கை கோர்த்துப் பயணம் தொடர.

மகிழ்வின் கனிகளை
ஒவ்வொருவருக்கும் வழங்க
தோப்பாகட்டும் நமது மரங்கள்
அதற்காக
நமது வேர்களை இந்தப் பூமியில்
ஊன்றுவோம்.
உன்னிடமுள்ள அறிவின் விதை
எப்போதும் தரும் மகிழ்வின் கனியை
என்னிடமிருக்கும் அன்பின் ஊற்று
எல்லோருக்குமாகச் சுரக்கும் நட்பின் ஈரம்

'புத்தம் புது உலகம் செய்வோம்'
என்ற சலிப்பூட்டும் சொல்லை விடுவோம்
இன்றே ஒரு விதி படர
நமக்கிடையில் தகராத
பாலங்களை நிர்மாணிப்போம் என்றும்
அவற்றின் கீழே நீரோடட்டும்
மேலே போக்கும் வரவுமான
பயணம் நிகழட்டும்.
யாதும் ஊரெ யாவரும் கேளீர்
என்ற சொல் உயிர்த்து வரட்டும்
எங்கள் வழிகளில்
பூச் செண்டுடன்.

www.padippakam.com



# பிள்ளைக் கண்களின் உலகம்

- கிருஷ்ணபிரியன்

சிரிக்கின்ற
ஒவ்வொரு பிள்ளையின் கண்களிலும்
ஒரு உலகம் இருக்கிறது.

கூட்டாஞ்சோறு விளையாட்டு வீடு
கள்ளன் போலீசு
கதைப் புத்தகங்கள், சித்திரக் கொப்பிகள்
கிரிக்கற், சினிமாப் படங்கள்
செல்போன்களாக
இருக்கலாம் அந்த உலகம்

ஒட்டிய வயிறு, குச்சி போன்ற கால்கள்
வெளிறிப் போன கண்கள், காய்ந்த உதடுகள்
பரட்டைத் தலை, உலர்ந்த சருமம், வடிந்த மூக்கு
கந்தல், ஓட்டை
மிளகாய்த் துவையல் வைத்த ரொட்டி
புளித்த வாடை வீசும் சொதி
ஊற்றிப் பிசைந்த சோறாக
இருக்கலாம் அந்த உலகம்.

கந்தக நெடி, கண்ணி வெடி
பொம்பர் மிக், கிரனைட், கிளைமோர்
துவக்குச் சத்தம், மரண ஓலம்
இரத்த நாற்றம், பிணக் குவியல்
கை கால்கள், தலைகள்
முட்கம்பிகள், முகாம்கள்
அதிகாரத்தின் இரைச்சலாகக் கூட
இருக்கலாம் அந்த உலகம்.

www.padippakam.com

# நூற்றாண்டுகளின் பேச்சுக் குரல்



- கருணாகரன்

தூங்கவில்லை நான் நூற்றாண்டுகளாய்.

போர்வையில்லாத இரவுகளில்
பெயரறியாத வழிகளில்
அழைத்துச் செல்லப்படும்
ஒரு பெண்
பதற்றத்திலும் நிம்மதியின்மையிலும்
தன் நூற்றாண்டுகளை இன்னும் எதுவரையில்
அவ்வாறு கரைப்பது.

இருண்ட பதுங்கு குழிகளில்
நாற்றமெடுக்கும் சவக்குழிகளில்
மரணத்தின் நாற்றமும்
அதன் நிழலும் நிரம்பிய முற்றங்களில்
போர்க்குதிரைகளின் காலடியில் சிக்கி நொருங்குண்ட
சருகுகளினடியில்
ஒரு துளியில் ஆரம்பித்து
திசைகளெல்லாம் பெருகியோடும்
குருதியில்
என் காலத்தை
இன்னும் நான் எவ்வாறு வைத்திருப்பது

எனது கனவுகள்
நூற்றாண்டுகளின் அகாலத்திலா?
ஒரு முள்ளில்
சிக்கிக் கொண்ட வரலாற்றை
எதுவரையில் கொண்டலைவது?

மயானத்தின் நடுவே
ஓயாதொலிக்கும் அழைப்பு மணி
என்னிரவுகளை திறக்கிறது
குருதி பீறிட அதிரடியாய்.
வாய்புலம்பும் குழந்தைகளை என்ன செய்வேன்
அபாயக் குழிகள் நிரம்பிய
வீதிகளைக் கண்டு ஒவ்வொருவரும் அச்சப்படும்போது
வீடு எல்லோரையும் காட்டிக் கொடுக்கும் போது
சனற்புதர்களினடியில் நான் தஞ்சமடைந்தேன்.
காலையில்
வானத்தில் வரவும் அஞ்சுகிற
சூரியனைக் கொண்டாடுவதெப்படி?

இருள்
முடிவற்ற இருள்
பிணவறையின் மணம் நீங்கவேயில்லை
சாவுப்பட்டியல்
என்னைச் சுற்றிவளைக்கிறது

வீரக்கனவுகள்
ஒவ்வொரு வீட்டிற்கும்
மரணத்தைப் பரிசளிக்கும் போது
நான் ஒரு சப்பாத்தினுள் நசிந்து கிடந்தேன்.

பனை மரத்தின் மூச்சு
என்னை உசுப்பியெழுப்புகிறது
இது நள்ளிரவா அதிகாலையா
எதுவும் புரியவில்லை
இன்னும் இந்த இருள்
எவ்வளவு தூரம் என்றும் தெரியாது

நான் தனித்து விடப்பட்டவளா
வஞ்சிக்கப்பட்டவளா
அயற்குரல்களும் எனக்கு ஆதரவளிக்கவில்லை
அழகிய கடற்கரைகளில்
சிதறிக்கிடந்த பாடல்கள்
மீன் வாசம் நிரம்பிய காலத்திலிருந்து
வேறொரு அம்பாக் காலத்துக்குப் போகத்
துடித்துக் கொண்டிருக்கின்றன

வயல்களில் மீந்திருக்கும்
நெல்மணிகளை
இன்னொரு பருவகாலத்துக்குப்
பரிசளிக்க விரும்புகிறேன்

எரியும் இந்தப் பாழ் நெருப்பில்
எல்லாவற்றையும் ஆகுதியாக்கிவிட முடியாது
எவ்விதம் இந்த முடிவுறாத தீயை அணைப்பது
இல்லையெனில்
நேசமிக்க ஒரு குளிர்க்கை
வாரியணைக்கும் வரை
இந்த நூற்றாண்டுத் துயரம் முடிவுறாது
அதுவரையில்
இந்தப் புண்ணிலிருந்து
தானியத்தை எவ்விதம் விளைவிப்பேன்.
இந்த நூற்றாண்டுத் துயரை
திசை முழுதும் தொங்கும் திரையிலிருந்து
எவ்வாறு அகற்றுவேன்.



படிப்பகம்

www.padippakam.com

# தேவதாசி

- ஆதித்தன்



தேவதாசி சுழன்று சுழன்று ஆடினாள்.
பிரபுக்கள் நாக்கைச் சப்புக்கொட்டினர்.

அவள் சுழற்சி அவர்களைச் சுண்டியிழுத்தது.
அவள் சிருங்காரம் அவர்களைக்
கிறங்கவைத்துச் சுரண்டியது.

நூற்றாண்டுகளாக இழந்த
ஒன்றிற்காகவும் பலவிற்காகவும்
அவளது பழிதீர்த்தல் ஆரம்பமாயிற்று.

வஞ்சனையை உடுத்திய விழியசைவில்
பிரபுக்கள் கவிழ்ந்தார்கள்.

காற்றில் தனது விரல்களைக்கொண்டு
கரைந்து போன தன் உலகை அவள் தேடினாள்.

விட்டில்களை தனது விரற்சுவாலைகளால்
தீண்டித் தழுவினாள்.

காலத்தைக் கிழித்தெறியும் கோபத்தின் மேல்
மோகனத்தைச் சூடியபடியும்,
ஒவ்வொரு தலைமுறைகளிலும்
வெடித்துச்சிதறுகிற கனவுத்துண்டுகளைச்
சேர்த்த ஒரு பாடலைப்பாடிக்கொண்டும்
தேவதாசி ஆடினாள்.

படிப்பகம்


.com

# அநிச்சயம்

- தவ சஜிதரன்

காலமெனும் மாயவாள் சுழலும் மூர்க்கக்
கதியிலடி பட்டனைத்தும் மாய்தல் கண்டும்
மூலமென்றும் முழுமையென்றும் நினைவின் ஆழி
மூழ்குதம்மே மனமென்னும் விநோத யாழி
ஞாலவெளி தழுவிநிதம் தோற்றம் கொள்ளும்
ஞாபகமாம் நுரைக்குமிழிச் சிற்பம் கோடி
கோலமழி வெய்திப்பின் கணங்கள் தோறும்
குணம்புதிதாய் வேறொன்றாய் நெகிழ்ந்து மாறும்

வெள்ளமெனப் பிரவகிக்கும் ஒருக ணத்தில்!
வீச்சொழிந்து துளியாகும் மறுக ணத்தில்!
புள்ளியெனக் குறுக்கமுறும்; பின்போர் நேரம்
பூதம்போல் வளர்ந்துருவம் புனைந்து காட்டும்
உள்ளிருக்கும் பிரமைகளின் அந்தம் ஆதி
உசாவுமெந்தன் தேடல்களில் அவ்வப் போதில்
நள்ளிருளாய்த் திரள்திரவக் கருமை மேலே
நழுவிவிழும் பனித்துளிபோல் கவிதை தோன்றும்!





படிப்பகம்

# நிலவை நோக்குவதாரென்ற கேள்வி...

நிலா

வேனிற் கால இரவொன்றின் நெருக்குதலில்
எதிரொலி பரவி மடியும்
முடிச்சுக்களற்ற அரசமரம், அதன் நிரம்பி வழிகின்ற
பசுமையான நேரக் கிளைகளினூடு,
நிலவை நோக்குவதாரென்ற கேள்வியுடன்
உலகின் எல்லாமே நிலையாக இருப்பதைப்பற்றிய எண்ணங்கள்!
வரலாற்றை வலிக்கும் நோக்குடன்
வட்டவடிவச் சட்டகப் படகொன்றின் எதிரெதிர் முனைகளிலே,

நிரம்பி வழிகின்ற,
வெடித்துப் பரவவிருக்கிற,
எண்ணங்களின் உன்னதமான,
ஆரிடமும் முன்பேதும் சொல்லியிருக்காத மகத்துவமான,
அன்பின் விழாக்களைத் தாங்கிக் கொண்டிருக்கும் பரிசுப் பொதிகள்!

இடையூறேதும் நிகழாதென்பதை உறுதிப் படுத்துகிறேன் குழந்தாய்!

முரண்பாடில்லாத உங்கள் கனவுகளை
விநோதமேதுமில்லாமல் நிறைவேற்றிவிட விரும்புகிறேன்.

நீங்கள் பயணிக்கும் பாதையின்
வழிப்போக்கிக் குருவிகளுக்குச் சொல்லி அனுப்பியிருக்கிறேன்,
பாடல் மற்றும் நீங்கள் விரும்பும் ஒரு ஆடலை நிகழ்த்திக் காட்ட.....

அன்பு நீண்டு பெருகும் போது,
நம்மை நாம் மன்னிக்கத் தகுதியற்றவர்களாகி விடுகிறோம்,
நமது பாதையைக் கண்டறிந்து,
எனது பங்கின் வைபவங்களைப் பற்றி
நெடு நாள் வரை கதைப்பதற்கான ஒரு நள்ளிரவை எதிர் பார்ப்போம்.

நிலவை நோக்குவதாரென்ற கேள்விக்கு,
உன்னைக் காத்தல் இயலாதென்கிற பழிப்பும்
திரும்பவும் போகிறீர்களா என்ற கேள்விக்கு,
நம்மை நாம் கைகழுவுவதைப் பற்றியும்
நீதியைப் புறக்கணிக்கும் பொழுதுகளைப் பற்றியும்.......

கனவுகளுக்காக அஞ்ச வேண்டாம்,
முன்னெப்போதும், இனியெப்போதும்,
எத்துனை இக்கட்டிலும்
அளப்பெரிய அருவருப்பிலும்
நிச்சயமற்ற கேள்விகளைக் கேட்கமாட்டேன்

நாம் விரும்பியதைக் கதைக்கும் உரிமை நமக்கிருக்கிறது.
வானை நோக்கி எனது கதவுகளைத் திறந்து விடுவதாகச் சொன்ன
அந்த நாளில்
நீங்கள் அபாயத்துடன் விளையாடுவதை நிறுத்துவீர்களாயின்
எனது அலுப்புத் தட்டும்
முடிவற்ற கோரிக்கைகளை நிறைவேற்றத் தேவையில்லை.

நெடு நாள் வரை கதைப்பதற்கான ஒரு நள்ளிரவை எதிர்பார்ப்போம்,
அன்பு நீண்டு பெருகும் போது, நம்மை நாம் மன்னிக்கத் தேவையில்லை !
அன்பு நீண்டு பெருகும் போது மன்னிப்பதிலும் பயனில்லை.

உன்னதமாகப் பிணையப்பட்ட கதையிலிருந்து
விடுவித்துக்கொள்ளும் மந்திரத்தை நான் சொல்லித் தருகிறேன்.
தூரத்துத் தொங்கலில் இருந்து
கையசைக்க வேண்டுமென்பதை நீங்கள் கனவிலும் மறப்பீர்களென்றால்,
முகர மறுக்கும் ஆலிங்கனத்தைப் பற்றி மூச்சுக் கூட விடமாட்டீர்களானால்.

அன்பு நீண்டு பெருகும் போது,
ஆறுதலைப் பற்றியே நீங்கள் மிரட்டுவதானால்,
அன்பு நீண்டு பெருகும் போது, நம்மை நாம் ஒருபோதும் மன்னிக்கத் தேவையில்லை ...

www.padippakam.com

# நாளை....................

சிங்கள மொழி மூலம் : மகேஸ் முனசிங்க
தமிழில் மொழி பெயர்ப்பு : மார்ஸ் பிரபாஹர்

பூமியில் இயங்கும் மனிதர்களையும்
மௌனிக்க வைத்த அந்த அடரிருள் கணங்களில்
உள்ளொன்றும் புறமொன்றும் வைத்து
இரகசியமாய் நிகழ்ந்தவை அதிபயங்கரமானவை.

துண்டாடுகின்ற இருளுக்கு
அந்த பூமியிலே கொத்துக் கொத்தாக
உயிர் துறந்த சரித்திரம் எனக்கும் உண்டு

உரிமைகளுரைத்த சின்னச்செடி, விருட்சம்
மற்றும் சுற்றியிருந்த புற்பத்தை யாவுமே
விரைவாக இம்முறை பலிகொள்ளப்பட்டது.

சூரிய, சந்திரனை மறைத்து கும்மிருளாக்கி
கீழ்க்கூரையின் கீழ் கொலைகாரர்களின்
தீயுண்ணும் வெளிச்சத்தில்
ஏமாந்த மனிதர்கள்
வழியெங்கிலும் களிகொள்வர் -
தம் உடல் அசைத்து...

ஒளி அணைவதும் அணையாமலிருப்பதும்
அவர்களுக்கே!
இருளானது எந்நாளும் கசப்பானதாய் இருப்பது
பூமியில் நெளிகின்ற எங்களுக்கே!

பூச்சிய நிலையிலிருந்து அகன்று
பதட்டத்தோடு அங்குமிங்கும் அலைகின்ற
இயங்குநிலை மனிதர் எவரேனும் இருப்பின்
நாளை வந்து ஒளியேற்றுங்கள்

அந்த இருள் வடக்குத் தெற்கு இரண்டுக்கும்தான்!



www.padippakam.com

# குற்றமின்மையின் நிரூபணம்

மூலம் : மங்களேஷ் தாப்ரல் (Mangalesh Dabral)
ஹிந்தியிலிருந்து ஆங்கிலத்துக்கு : நிருபமா தத்
ஆங்கிலத்திலிருந்து தமிழில் : சி.சிவசேகரம்



கொடுங்கோலனின் குற்றமின்மைக்கு நிரூபணங்கள் பல
அவனுடைய நகங்கள் கூரிய வளைநகங்களல்ல,அன்றியும்
அவனுடைய பற்கள் பாம்பின் நச்சுப்பற்களுமல்ல
அவனுடைய கண்கள் என்றுமே சிவந்தவையல்ல
உண்மையில் அவன் முறுவலுடனேயே உள்ளான்
உன்னை அவன் பன்முறையும் தன் வீட்டுக்கு அழைப்பான்
தன் மென்மையான கைகளை நீட்டி வரவேற்பான்
மனிதர் தன்னை அஞ்சுவது அவனுக்கு வியப்பூட்டுகிறது

கொடுங்கோலனின் வீட்டுச் சுவரில் தொங்கும்
பழைய வாள்களும் துப்பாக்கிகளும்
வெறும் அலங்காரப் பொருட்களே
கலைப் பொருட்களிற் சீரியவற்றால் அலங்கரிக்கப்பட்டு
இசையில் அதி சிறந்ததன் துணையோடுள்ள
அவனுடைய நிலவறைக் கூடம் இனிதான ஒரு இடம்
வெளியிலிருப்பதினுங் கூடிய பாதுகாப்பை அதனுள் யாரும் உணரலாம்


கொடுங்கோலன் இப்போது மிகப் பிரபலமாகியுள்ளான்
மரித்தோர் சிலர் அவனுடைய வீட்டுக்குப் போய்வருகிறார்கள்



படிப்பகம்

www.padippakam.com

# சரியையும் பிழையையும் மறந்துவிடு




மூன்று வேட்டுக்கள் தீருகிற போது
இருபத்து மூவர் சாகுமளவுக்கு
இப்போது மனிதர்கள் மிகப் பொல்லாதவர்கள்

அதோ பாருங்கள், அந்த அப்பாவிகளை
பரவும் வெண்பனி போலத் தூயவர்கள்
இரக்கத்துக்குரியவர்கள்
பால் மணம் மாறப் பாலகர்கள்
இந்தத் தோட்டாக்கள்
சில பொழுதுகளில் ஆழ்ந்த யோசனையுடன்
தாரகைகளை நோக்கி முறைத்தவாறிருக்கும்
தமது தற்காப்பைவிட அவை வேறெதையும் அறியா

பொலிஸ் நம்முடைய பொலிசாக உள்ளனவும்
தவறேதுஞ் செய்யாது

**மூலம்**
ஷன்கா கோஷ் ( Shanka Ghosh)
**வங்காளியிலிருந்து ஆங்கிலத்துக்கு**
அன்தார தேவ்ஸேன் (Antara Devsen)
**தமிழில்**
சி. சிவசேகரம்



படிப்பகம்

# மனித நேய இதயத்திற்கெதிரான சதி

மூலம்: ஒட்டோ ரெனே கஸ்டிலோ
ஸ்பானிசிலிருந்து ஆங்கிலத்திற்கு: டேவிட் வொல்பென்டெஸ்டா
தமிழில்: மீநிலங்கோ




கேணல்,
உங்களிடம் ஆயதங்களும் அதிகாரமும் உள்ளன:
நீங்கள் எங்கள் மலைகள் மீது
குண்டுவீச ஆணையிடலாம்
அது அவற்றின்
பறவை போன்ற நம்பிக்கை கொண்ட
அமைதியான நெஞ்சங்கள்
வெருண்டு காற்றினுள்
விலகியோடவுங் கூடும்.

கேணல்,
உங்களிடம் ஆயதங்களும் அதிகாரமும் உள்ளன,
நீங்கள் வேண்டுபவர்களைக்
கொல்லுமாறு ஆணையிடவும்
அஞ்சாநெஞ்சினராய்ப் பிரகாசமாய்
மானத்தோடு சிரமுயர்த்தி நிற்கத் துணிபவரைச்
சிறையிலிடுமாறு ஆணையிடவும் முடியும்.

கேணல்,
எந்தவொரு நிறுவனத்தையும் மூட
அனுப்பிவைக்கவும்
உங்கள் சபிக்கப்பட்ட துப்பாக்கிக்குண்டுகளின்
காட்டுமிராண்டித்தனமான
கசப்பான கடியால்
ஒரு நாட்டின் இனிய எதிர்காலத்தைக்
காயப்படுத்தவும்
முதலும் கடைசியுமான குவெற்சலின் மூ
பகிரங்கமான அழகினை ஒருமைப்படுத்தவும்
உங்களிடம்
ஆயதங்களும் அதிகாரமும் உள்ளன.

ஆனால், கேணல்
எல்லாமே வீணாய்ப்போம்
ஏனென்றால், உங்களது
தொன்மையான ஆண்மைக்குறைவினால்,
உங்களால் குண்டுபோடவும் கொல்லவும்
சிறையிலிடவும்
ஆணையிடவோ
உடன்பட மறுக்கும் முழு மக்களையும்
ஒருமைப்படுத்தவோ
முடியாது.

கேணல்,
அதுதான் போராட்டம்,
அப் போராட்டத்தில்
மோசமான பகுதி உங்களுடையது.
ஏனெனில், கேணல், நீங்கள்
மனித இனம் பிற்போக்கானது
எனக் கருதுகிறீர்கள்
மனித இனம் முன்னேறுவதாக
மக்கள் நம்புகிறார்கள்.

இவ்வளவே தான் கேணல்:
மனித இனத்தின் இதயத்திற்கெதிராகச்
சதி செய்யும்
ஏனெனில்
எங்களுக்கெதிரான யுத்தம்
தொடங்கும் முன்பே
நீர் அதைத் தோற்றுவிட்டீர்.

மூ குவெட்சல்:
குவாட்டமாலாவின் நாணயத்தின் பெறுமதி மற்றும்
சுதந்திரத்தை குறிக்கும் ஒரு பறவை



படிப்பகம்


www.padippakam.com

# கலப்பு

மூலம்: லாங்ஸ்டன் ஹியூஸ் - தமிழில்: நிலங்கோ

என் அப்பன் ஒரு வெள்ளையன்
எனது முதிய தாய் கறுப்பி
நான் எப்போதேன் எனது வெள்ளை அப்பனை
சபித்திருந்தால் - அதை நான்
மீளப்பெற்றுக் கொள்கிறேன்
நான் எப்போதேன் என் கரிய முதிய தாயைச்
சபித்திருந்தாலோ - அல்லது
அவள் நரகத்திற்குப் போகவேண்டுமென்று
வேண்டியிருந்தாலோ
அத் தீய எண்ணத்திற்காக வருந்துகிறேன்
அவள் நலமாயிருக்க விரும்புகிறேன் - இன்று
என் அப்பன் ஒரு அழகான மாளிகையில் இறந்தான்
எனது தாயோ குடிசையொன்றில் இறந்தாள்
வெள்ளையனுமல்லாது கறுப்பனுமல்லாததால்
நானெங்கே சாவேனோ?





# எப்படியெனிலும்...

உலக ஒழுங்கின் உச்சந் தன்னில்
விலக ஒண்ணா விலைவாசி ஏற்றத்தால்
நிலவும் இன முரணின் கூர்மை தன்னால்
அடங்க முடியாது எழுந்து மனிதர்
குலங்கள் இனங்கள் குறுகிய தேசியம்
கடந்து இணைந்து ஒருங்கு கூடிடத்
தடங்கல் இன்றிப் மாற்றம் வந்திடும்
புதிய பண்பாட்டுப் மாற்றம் வந்திடும்

ஒருவர் மற்றவர் உரிமை மதித்திட
ஒன்றிய உலகில் சமத்துவம் பெற்றிட
இல்லாமை எவர்க்கும் இல்லையென ஆக்கிட
பொல்லாங்கு யார்க்கும் எவரும் புரிந்திடா
நல்ல மனங்கொண்டோர் இணைவில் இனி
வதியும் மனிதர் யாவரும் ஒன்றெனவே
சாதியம் அகற்றி வேதியல் மாற்றிட
மாறிய புதிய வாழ்வும் வந்திடும்

தப்பது செய்தே தலைவர் ஆனவர் தலையும் பொடிபட
குப்புற வீழா உயர்வது பெறவே உழைப்பவர் உலகு
எப்போதும் இனி உழைப்பவர்க்கே என ஆக்கிடவே
ஒப்புர ஒழுகி ஒன்றுபட்டு நின்றிடவே
புதிய வரலாறு படைத்திடும் முயல்வில்
புதிய ஜனநாயக மாற்றம் வந்திடும்
எப்படியெனிலும் எழிலுறு உலகில் நின்றே
மனிதம் மலர யுகமது மாறும்.

*அழ. பகீரதன்*

படிப்பகம்

www.padippakam.com

# உடைப்புக்கள்


சந்திரலேகா கிங்ஸ்லி



பெண்ணின் உச்சி முதல் பாதம்வரை
கொஞ்சம் கொஞ்சமாய்
உடைத்துச் செதுக்கி
வடிவமைக்கப்படல் வேண்டும்
அவன் தலை முக்காடு
'இன்ஷா அல்லா' கழற்றப்படல் வேண்டும்
அவள் கூந்தல்
அவள் இஷ்டப்படி
எப்படியாவது வெட்டப்படலாம்
கழுத்து நிறைந்த சவடிகள்
கர்த்தாவே!
அவள் கழுத்தைக் காக்க வேண்டும்
தாலியின் பாரமும்
தலைமேல் சுமக்கும் புருஷனின் பாரமும்
அவளுக்கு நெஞ்சை அழுத்தாமல்
இயல்பாய் இஷ்டப்படல் வேண்டும்
மார்பை மொய்க்கும்
காய்ந்த கண்கள்
வெறும் சதைத் துண்டத்தை
பார்க்கும் பார்வையாய்
காமத்தை மறுக்கும் கருணை வேண்டும்
இடுப்புக்கு கீழே
'இராணம்' பார்ப்பதுபோல்...
தொப்புள் சுற்றி
இத்தனை தொந்தரவு ஏன்?
இது பற்றிய
இலக்கியங்களும் சினிமாக்களும்
இல்லாமறப்படல் வேண்டும்
உங்களை விட எங்களுக்கு
கவர்ச்சி அதிகமாம்
பார்வை விசாலப்படல் வேண்டும்!
எத்தியோப்பிய /சோமாலிய பெண்களுக்கு
எதுவுமே இல்லையா?
எல்லாம் வெறும் சதைப் பிண்டத்தின்
அழகும் கவர்ச்சியும்
இத்தனைக்கும் மேல்
அவளுக்குள் அடங்கி,
அடக்கிக் கிடக்கும்
அடைப்புகள்
உடைக்கப்படல் வேண்டும்
உடைப்புக்களாலே
அவள் உயிர்பெற சாத்தியம்
உலகத்திலுண்டு!

படிப்பகம்

www.padippakam.com



# காலம் இப்படி

**மூலம்**
ஷன்கா கோஷ் ( Shanka Ghosh)
**வங்காளியிலிருந்து ஆங்கிலத்துக்கு**
அன்தார தேவ்ஸேன் (Antara Devsen)
**தமிழில்**
சி. சிவசேகரம்

காண இயலாதோர்
தம் வழியை அறிய இயலார்
கால்கள் முடமானோர் எங்கும் போய்ச்சேர இயலார்
காது செவிடானோர்
ஒலியெதையுங் கேட்க இயலார்
வீடற்றோர்
வீடெதுவுங் கட்ட இயலார்
மனம் பித்தானோர்
தாம் வேண்டுவன அறியார்

குருடாய் முடமாய்ச்
செவிடாய் வீடற்றோராய்ப் பித்தராய்
எவருமே மாறக்கூடுமான
காலம் இப்படி

படிப்பகம்

# A/L Chemistry

S.T. Umashankar (BSc (chemistry special), MSc)

**2013, 2014**

Tamil, English Medium

Contact No - 0777709249, 0714680440

# A/L Physics

K.Kokulan (Faculty of Engineering (University of Moratuwa))

**2013, 2014**

Tamil Medium

Contact No - 0771918675, 0723251223

# Combined Mathematics
# இணைந்த கணிதம்

A. Harishan BSc

Tamil & English Medium

**2012, 2013, 2014** களுக்கான

வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

Special Classes நடைபெறுகின்றன.

Contact No - 0715697893

# நாகதாழி

இதயராசன்



கிளிநொச்சி மத்திய கல்லூரி பிரதான மண்டபம் என்றும் இல்லாதவாறு அலங்கரிக்கப்படடிருக்கிறது. ஏ9 வீதிக்கு அருகில் பாடசாலை மண்டபம் மிகவும் விசாலமாகவும் சகல வசதிகளுடனம் அமைந்திருப்பதால் வடக்கின் வசந்தத்தின் பேரில் நடக்கும் அனைத்து நிகழ்வுகளும் மற்றும் ஏனைய விழாக்களும் இம்மண்டபத்திலேயே வழமையாக நடைபெறுவதால் வீதியால் போவோரும் வருவோரும் அதனைச் சாதாரண விடயமாகக் கருதிச்செல்வார்கள். விழாக்கள் மலிந்த மாவட்டம் கிளிநொச்சி என்பது பலரது அபிப்பிராயமாகும். ஆனால் வாய்விட்டுச் சொல்லமாட்டார்கள். ஏன் வாயைக்கொடுத்து புண்ணாக்குவான் என்ற பட்டறிவோ தெரியாது! ஆனால் இன்று நிலைமை வேறு. கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், கல்விச் சமூகத்தினர் என அனைவரும் திருமண வைபவத்திற்கோ, திருவிழாவிற்கோ வருவதுபோல் மிகுந்த சந்தோசத்துடன் வருகைதந்த வண்ணம் உள்ளனர். வீதியில் இருந்து மண்டபத்தின் வெளிப்பகுதி, உட்பக்கம் அனைத்தும் கைதேர்ந்த கலைஞர்களால் சோடனை செய்யப்பட்டு, வல்வெட்டித்துறை இந்திர விழாப்போல் காட்சியளிக்கின்றது.

கடந்த வருடம் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரம் மற்றும் உயர்தரப் பரீட்சைகளில் திறமைச் சித்தி பெற்ற மாணவர்களையும், அதற்குப்பங்காற்றிய ஆசிரியர்களையும் கௌரவிக்கும் விழாதான் இத்தனைக்கும் பிரபல்யம் பெறுவதற்குக் காரணம்.

வண்ண வண்ண உடை அலங்காரங்களுடன் பல்வகை வாத்தியங்கள் இசைத்து இன்னியம் முழங்க, கலாசார முறைப்படி வரவேற்பு நடைபெற்று, அதிதிகள் விழா மண்டபத்திற்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர். இவ்விழாவில் கௌரவம் பெறுபவர்களில் கணித பாடத்தில் 80 வீதம் சித்தியடைய வைத்த கணிதபாட ஆசிரியர் என்பதுடன், என்னிடம் கற்ற சுலோஷனா என்ற மாணவி 9ஏ எடுத்து மாவட்டத்தில் முதலிடம் பெற்றுள்ளார். அந்தச் சிறப்பும் என்னுடையதாகையால் எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி. என்னைவிட மகிழ்ச்சியில் பரிசில்பெற இருக்கும் மாணவர்கள். இம் மாணவர்களின் சாதனையைத் தமக்கான இலட்சியமாகக் கொள்ள இருக்கும் அவர்களின் சகமாணவர்கள் என அனைவரும் உடலும் உள்ளமும் மலர்ந்து காட்சியளித்தனர்.

இவ்வாறான விழாக்களில் நடைபெறும், சம்பிரதாய பூர்வமான அனைத்து விடயங்களும் கச்சிதமாக இடம்பெற்றுச் சிறந்த பெறுபேறுபெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் மிக முக்கியமான கட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. கௌரவம் பெறும் மாணவர்களின் பெயர்களை அறிவிப்பாளர் உரத்த குரலில் அவர்களின் பெயர் பாடசாலை அவர்களின் சாதனை என்று விஸ்தாரமாக எடுத்துக்கூற உரியவர்கள் சென்று கரகோஷத்திற்கு மத்தியில் மரியாதையுடன் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். சுலோஷனாவின் பெயர் அழைக்கப்படுகிறது, மாணவி மேடைக்குச் செல்லவில்லை. அப்பொழுதுதான் சபையைப்பார்க்கின்றேன், அவளைக் காணவில்லை. ஏன் வரவில்லை? என்று சிந்திப்பதற்கு இடையில் ஒரு மாணவன் எனது கைக்குள் ஒரு கடதாசியினைத் திணித்துவிட்டுச் செல்கின்றான். அம் மாணவன் யாரென்று பார்க்க அவகாசமில்லாமல் கடதாசியினை விரித்து வாசிக்கின்றேன்:

> மரியாதைக்குரிய ஆசிரியர்க்கு!
>
> என்னை மன்னிக்கவும். எனது திறமையினைப் பாராட்டுவதற்கு நன்றி. ஆனால் இந்தப்பாராட்டினை ஏற்கும் மனநிலையில் நான் இல்லை. காரணம் என்னை விடவும் புத்திசாலியான எனது சகோதரிக்கு, எனக்குக் கிடைத்த கல்வி கிடைக்காததால் அவள் இந்தப் பரீட்சையில் தோற்றுவிட்டாள். என்னால் எப்படிச் சந்தோஷப்பட முடியும்?!
>
> இப்படிக்கு,
>
> தங்கள் கீழ்ப்படவுள்ள மாணவி
>
> சுலோஷனா.

எனக்குள் ஓர் அதிர்வு. கடிதம் கசங்கியபடி என் கரங்களிற் கிடக்கின்றன. எதுவுமே நடவாததுபோல் பரிசளிப்பு விழா தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. கடிதத்தினை வாசிக்கும் வரை ஏதோ சாதனை செய்துவிட்டதான நினைப்பு எவ்வளவுதூரம் பொய்மையானது என்பதனை உணர்கின்றேன். விழா மண்டபத்தினைவிட்டு எனது கால்கள் தானாகவே நகர்கின்றன. இவ்விழாவிற்கும் எனக்கும் சம்மந்தம் இல்லை என்பதைக் கால்கள் எனக்குச் சொல்கின்றன.

***

“மனிதாபிமான நடவடிக்கையின்” போது மரியாதைக்காக இருதரப்பும் ஷெல்களை வீசிக் கொண்டனர். இதில் யாருடையதோ ஒரு மரியாதைச் ஷெல் எனது குடும்பம் இருந்த வங்கரின் மீது வீழ்ந்து வெடித்ததில் எனது மனைவி,பிளைகள் இருவரும் தப்பாமல் காவுகொளப்பட்டனர். அப்பொழுது நானும் நண்பர்களும் தப்பிப்போவதற்கு வழிபார்க்கப் போயிருந்தோம். விதி எம்மை விட்டுவிட்டு குடும்பத்தை எடுத்துக்கொண்டது. அந்தச் சோகத்தில் அழுதுபுரள்வதைத்தவிர வேறு என்னதான் செய்ய முடியும். யார் யாருக்கு ஆறுதல் சொல்வது. எல்லோர் கதையும் ஒரே விதமானதே. அச் சமயத்தில் மீண்டும் செஷல் வீச்சுத் தொடங்கவே பதறியடித்து

www.padippakam.com

திசைதெரியாமல் ஓடினோம். அப்பொழுது தான் சுலோஷனா, சறோஜா ஆகிய இரட்டைச் சகோதரிகள் இருவரும், தாய்தந்தையரைப் பறிகொடுத்து கூட்டத்தோடு கூட்டமாக அழுதபடி வந்தனர். இருட்டு மடுவில் அவர்களின் சித்தி, அத்தை குடும்பத்துடன் சேர்ந்து கொண்டனர். விதி மீண்டும் விளையாடத் தொடங்கியது. கிபீர் விச்சினுக்குப் பயந்து ஓடியபோது அத்தையுடன் சேர்ந்து வழியினை மாறவிட்ட சறோ மீண்டும் சுலோசனாவைச் சந்திக்கவே இல்லை. இடையில் அத்தையின் பிள்ளைகள் இருவரும் பலியாக அத்தைக்குத் துணையாக சறோ மட்டுமே.

அகதி முகாமில் சந்தித்த போதிலும் சறோவால் அத்தையைவிட்டு வரமுடியவில்லை. அத்தையின் பொருளாதார நிலை சுலோவையும் சேர்த்துக் கவனிக்க முடியாத நிலை. இதனால் இருவரும், இரு குடும்பத்தில் வாழவேண்டிய நிர்ப்பந்தம். மீள் குடியேற்றத்தின்போது அத்தையின் கிராமத்திற்கே சறோ சென்றாள். அப் பள்ளிக்கூடத்திலேயே கல்வி கற்றாள். மாணவர்கள் அதிகமாக இருந்த போதிலும் ஆசிரியர்கள் அங்கே செல்ல விரும்பாததால் அவர்களின் கல்வி படுமோசமாகப் பாதிப்படைந்தது.

இதே வேளை சித்தியின் குடும்பம் கிளிநொச்சி நகரில் அமைந்திருந்தமையால் சுலோவால் சிறந்த கல்வியைப் பெறமுடிந்தது. இச் செய்திகள் யாவும் இப்பொழுது தான் எனக்குத் தெரியும் என்றில்லை. ஆனால் எதோ செய்தியாக அறிந்து வைத்திருந்தேன் என்றே சொல்லவேண்டும். சுலோவின் கடிதம் எனது கண்களைத் திறந்துவிட்டன.

தொடர்ந்தும் நகரப் பாடசாலையில் சகல வசதிகளும் உள்ள பிள்ளைகளுக்குக் கற்பித்து, நாம் ஏதோ சாதனை செய்துவிட்டோம் என்று தற்பெருமை கொள்வதில் எந்த அர்த்தமும் இல்லை என்பதனை அறிந்த பின்பும் நகரத்துப் பாடசாலையில் சேவையாற்றுகின்றேன் என்பதில் என்ன இருக்கிறது. சறோ படிக்கும் கிராமத்துப் பாடசாலைக்குச் சுயவிருப்பின் பேரில் இடமாற்றம் கோரி விண்ணப்பிக் கின்றேன்.

கடற்கரையோரக் கிராமம். விவசாயமும் கடற்தொழிலும் அவர்களின் ஜீவனோபாயம். பெரிய அளவில் தொழில் செய்ய முதல் இல்லை. அடுத்தது பெரிய அளவில் கல்வியில் முன்னேறாத சமூகம். ஆனால் நகரத்தைவிட மனிதாபிமானப் பண்புகள் நிறைந்த, உழைப்பை நம்பும் உண்மையான மக்கள். என்னை மிகவும் கவர்ந்துவிட்டது. கணிதபாட ஆசிரியரான என்னால் அப் பாடத்தினை மட்டும் கற்பித்து, மாணவர்களைச் சித்தியடையச் செய்யமுடியாது என்ற உண்மை இப்பொழுது புரியத் தொடங்கிவிட்டது. காரணம் கணிதத்தில் முன்னேற்றம் கண்ட மாணவர்களால் விஞ்ஞானம், தமிழ்ப் பாடங்களில் முடியவில்லை. ஆசிரியர்கள் இருந்தால்தானே. மாலை நேரங்களில் அப் பாடங்களை கற்பிக்கின்றேன்.

கடுமையான யத்தம் நடைபெற்ற வேளைகளில் நகரத்தினை அண்டிய பிரதேசங்களி வசிப்பது, உயிருக்கு உத்தரவாதம் இல்லை என்பதால் நான் இப்பொழுது கற்பிக்கும் பிரதேசம் போன்றவற்றுக்கு இடம்பெயர்ந்த மக்களில் கணிசமான ஆசிரியர்களும் இருந்தனர். கிராமப் பாடசாலையின் தேவைக்கு அதிகமாக முக்கியமான பாடங்களிற்கு முண்டியடித்து இடம்பிடித்தனர். மேலிடத்துச் சிபார்சினையும் பெற்றனர். யுத்தப் பஞ்சகாலத்தில் உயிர்காத்தும் உணவும் உறையுளும் வழங்கிய பட்டிக்காடு போக்குவரத்துவசதி இல்லாத இல்லாத இடமாக அவர்களுக்குத் தெரியவில்லை. நுளம்பு, பாம்பு, வெய்யில், மழை, வெள்ளம் எதுவுமே அவர்களுக்குப் பொருட்டாகத் தெரியவில்லை. ஆனால், யுத்தம் முடித்துவைக்கப்பட்டு ஆனையிறவுப்பாதை திறக்கப்பட்ட பின்பு யாழ்ப்பாணம் மட்டுமே சொர்க்கபுரியாகி விட்டது. வன்னி பட்டிக்காடாகி விட்டது. இங்குள்ள மக்கள் மனிதப்பூச்சிகளாய், பண்பாடு, கலை, கலாசாரம் அனைத்தையும் இழந்து, அனுதாபத்துக்கு மட்டும் உரியவர்களாகி, இவர்களை வைத்து பிழைப்பு நடத்தும் ஒரு கூட்டத்திற்கு மட்டுமே அக்ஷயபாத்திரமாகி விட்டனர்.

புகலிடம் தேடிவந்த ஆசிரியர்கள் கல்விமான்கள் நோய், வாழ்க்கைத்துணை, பெற்றோர்கள், பிள்ளையின் படிப்பு எனத் தமது குடும்பத்தினை மடடுமே கவனிக்கும் சுயநலமிகளாகிவிட்டனர். வன்னியின் மக்களில் செத்தவர்கள் போக மீதிப்பேர் காட்டில் விலங்குகள் போல வாழ்வதும் ஆண்டொன்று போனால் வயதொன்றுபோகும் பிறகு என்ன? சோறு கறி இருக்கு வேறென்ன வேண்டும் என்ற மனப்பாங்கு வந்துவிட்டது.

யாழ் மாவட்டத்தில் உள்ள ஆசிரியர்களில் கஷ்டப் பிரதேசத்தில் சேவையாற்றதவர்கள் கட்டாயம் வன்னிப் பிரதேசத்தில் கடமைபுரிய வேணடும் என்ற கட்டாயம் வந்த வேளையிலும் செல்வாக்குள்ளவர்கள் சுற்றுநிருபத்தில் உள்ள ஒட்டைகளைப் பயன்படுத்தி தம்மைத் தக்கவைத்துக்கொள்ள, அது முடியாதவர்கள் பொறியில் மாட்டிய எலிகளாய் அல்லாடுகின்றனர். அதிலும் சிலர் மருத்துவச் சான்றிதழிற்காய்த் தவம் கிடக்கின்றனர். எவ்வித வசதியும் இல்லாத வேளையில் குடும்பத்துடன் வசித்தவர்கள், குழந்தை பெற்று, வயதான தாய்தந்தையுடன் வாழ்ந்தவர்களுக்கு, வசதிகள் அதிகரித்துக் கொண்டிருக்கும் காலகட்டத்தில் ஒரு வாரம் தங்கக் கூட லாயக்கற்ற இடமாகிப்போய்விட்டது. இந் நிலையில், இம்மக்கள் யார்? தமிழ் இனம் இல்லையா? வேறு எதாவத வெளிநாட்டவர்கள் வந்துதான் உதவிசெய்ய வேண்டுமா? அல்லது இவர்கள் படித்து முன்னேறிவிட்டால், யாழ்ப்பாணத்து தொழில் வங்கி இல்லாமல் போய்விடும் என்ற பயமோ தெரியவில்லை? ஒவ்வொருவரும் தம்மைத் தவிர்த்துவிட்டு அடுத்தவர்களை நோக்கிச் சுட்டுவிரலை நீட்டுகின்றார்கள். நாங்கள் எல்லோரும் தமிழர்கள் என்ற கோஷம் எவ்வளவுதூரம் பொய்மையானது என்பது பட்டவர்தனமாகிவிட்டது.

வாடும் பயிகளுக்குத்தானே உடனடியாக நீரூற்றவேண்டும். நான் கடமைபுரியும் கிரமத்து மக்கள் எழ்மையில் வாடினாலும் கல்விக்காக எதனையும் செய்யத்தயாராய் இருக்கின்றனர். மாதா பிதா குரு தெய்வம் என்பதை இன்னமும் பேணுகின்றனர். ஒவ்வொரு விடயத்தினையும் கற்கக்கற்க அவர்களின் ஆவலும் அதிகரித்த வண்ணமே உள்ளது. நகரத்தில் சோம்பியிருந்த எனக்கு இப்பொழுது புதிதாகக் கற்கும் பாடப்புத்தகமாய் மாணவர்களும் மக்களும்.


சுலோசனாவின் கடிதத்தினால் விழிப்படைந்து இப் பாடசாலைக்கு வந்ததில் இருந்து மனநிறைவுடன் எனது கவலைகள் என்பது என்னவென்றே தெரியாமல் மாணவர்களுடன் ஒன்றித்துவிட்டேன். கட்டிட வசதி காணமையினால் எனது வகுப்பினை ஆலமர நிழலில் நடத்திக்கொண்டிருந்தேன். பாடசாலை வேலிக்கு அடுத்த காணியில் முதிய விவசாயி ஒருவர் செழித்து வளர்ந்திருந்த நாகதாழிச் செடிகளை வெட்டுக்கத்தியால் வெட்டி, அதனை வேருடன் பிடுங்கிக்குவிக்கின்றார். இவரின் செயல் எனக்கு விளங்கவில்லை. மாணவர்க்குக் கணக்குசெய்யக் கொடுத்துவிட்டு, முதியவரை நோக்கிச் செல்கின்றேன்.

"என்ன பெரியவர் இந்தச் செடிகள் செழித்துவளர்ந்து கூட்டமாக நிற்கும்பொழுது பார்க்க நல்ல அழகாகத்தானே இருக்கின்றன? நான் எத்தனை நாட்கள் பார்த்து ரசித்திருக்கின்றேன். ஏன் இதனை வெட்டி அழிக்கின்றீர்கள்?"



படிப்பகம்

www.padippakam.com



என்று கேட்டுவிட்டு, எனது மேதாவித்தனத்தை நானேமெச்சிக்கொள்கின்றேன்.

முதியவர் என்னைப் பார்த்து ஒரு நமட்டுச்சிரிப்புச் சிரித்துவிட்டு தனது தொட்டையைச் செருமிச் சரிசெய்து இருமிலை காறித் தனக்கு எதிர்ப்பக்கமாத் திரும்பித் துப்பிவிட்டுச்சொல்கிறார்.

"தம்பி இங்கபாரும் இந்த இடம் செழிப்பான நிலம். கத்தரி, வெண்டி, தென்னை என்டு எத்தனையோ பயனுள்ள பயிர்கள் வளர்ந்தால் எல்லோருக்கும் பயன்கிடைக்கும். ஆனால் இந்தச் செடி பச்சைப்பசேலென்று செழிப்பாக வளர்ந்திருக்கு. இந்தச் செடியைத் தவிர வேறுயாருக்கு என்ன பயன்? இந்த இடத்தில வேறு எந்தப் பயிரையும் வளரவிடாமல் தாம்மட்டுமே வளர்கின்றன. அழகாக இருந்தால் மட்டும் போதுமா? பயன்கொடுக்க வேண்டாமா?"

பழுத்த அவருடைய வார்த்தைகளுக்கு முன்னால் எனது புத்தகப்படிப்பு எம்மட்டு? இருப்பினும் இலேசில் விட்டுக்கொடுத்தால் எனது பட்டம் பதவிக்கு என்ன மதிப்பு? எனது எதிர்க் கேள்வியினைக் கேட்கின்றேன்.

"பெரியவர் கள்ளிச்செடியைத் தானே நாவுறு கழிக்க வீட்டுக்கு முன்னால் வைத்திருப்பார்கள். மருந்துத் தேவைக்குக் கள்ளிப்பாலும் பயன்படும்தானே?"

இந்தக் கேள்விக்கு என்னபதில் சொல்லுவார் என ஆவலுடன் அவரைப் பார்க்கின்றேன்.

அவர் எவ்வித பதட்டமும் இல்லாமல் மிக நிதானமாகத் தனது பதிலைச் சொல்கின்ருர்.

"தம்பி, கள்ளிச்செடி வரண்ட நிலத்தில வளர்கிறது. நீரில்லாத காலத்தில் இலையிலை சேமித்து வைத்த நீரினைப் பயன்படுத்திக்கொள்கின்றது. தான் வாழுகிற சூழ்நிலையால அப்படிச் செய்யுது. வேறு எந்தக் கெடுதலும் செய்யிறேல்லை. அதாலதான் மருந்தாகவும் இருக்குது. ஆனால் இது நாகதாழி. வளமான எல்லாவற்றினையும் தனக்கும் தனது குடும்பத்துக்கு மட்டுமே எடுத்துக்கொள்ளும். தன்னை அண்டி எதனையும் வாழவிடாது."

தனது முதிர்ந்த அறிவினை மிக இலகுவாக வெளிப்படுத்துகிறார். நாகதாழிக்கும் கள்ளிச்செடிக்கும் பேதம் தெரியாத எனது படிப்பறிவை நினைந்து, வெட்கப்படுகின்றேன்.

இதில் நாகதாழி யார்? கள்ளிச்செடி யார்?

முருங்கை மரத்தினில் மீண்டும் ஏறும் முயற்சியில் வேதாளம் கேட்ட கேள்வி. யாருக்குப் பதில் தெரியும்? ■



படிப்பகம்

www.padippakam.com

# அருவிக்குச் செம்புலன் கணினி கொடுத்த அரசியற் கதை.

*மு. மயூரன்*


*[1997ம் ஆண்டு ரிச்சர்சுட் ஸ்டால்மன் அவரசுகளால் எழுதப்பட்ட இந்தப் புனைகதை எதிர்வுகூறும் அச்சங்களிற் பெரும்பாலானவை இன்று, 2012 ஆவதற்கிடையிலேயே நடைமுறைக்கு வந்துவிட்டன. உலக மக்கள் அனைவருக்கும் பொதுவான இயற்கை வளங்கள் தனியரசு உடைமையாகி விற்பனைச்சரக்குகளாக மாற்றமடைந்தமையானது எவ்வாறு மக்கள் மீதான ஒடுக்குமுறைக்கும் சுரண்டலுக்கும் வழிவகுத்து வெகுமக்களது நல்வாழ்வுக்குத் தடையாக அமைந்து வருகிறதோ, அதேபோன்று புலமைச்சொத்து என்ற பெயரில் மனித குலத்தின் அறிவு வணிகப்பண்டமாக்கப்பட்டிருக்கும் இந்த நிகழ்கால நிலையானது மனிதகுலத்தின் வளர்ச்சிக்குப் பெருந்தடையாக மாறி வருகிறது.*

*இந்த அபாயம் பற்றியும் அதி நவீனக் கண்டுபிடிப்புகளினூடாக மக்கள் மீதான கண்காணிப்பினை அரசுகள் இறுக்கமாக்கிக்கொண்டுவரும் நிலையானது அதிகாரம் பொருந்திய வரசுகள் மேலும் மேலும் மக்களிடமிருந்து அதிகாரத்தைப்பறித்துத் தமது இருப்பினை மேன்மேலும் வலுப்படுத்த உதவிடும் நிலையைப் பற்றியும் இக் கதை தொட்டுக்காட்டுகிறது.*

*ஸ்டால்மன் எழுதிய கதையின் ஆங்கில மூலத்தினை ** என்ற தொடுப்பில் படிக்கலாம். இத் தமிழாக்கம் மூலத்தின் அச்சொட்டான மொழிபெயர்பல்ல. மூலத்தை மிக நெருங்கியதாக எழுதப்பட்டுள்ள ஒரு தழுவலே.]*

*குறிப்பு 0: தைக்கோ என்பது நிலவில் காணப்படும் கிண்ணக்குழிகளில் பரப்பால் பெரிதான ஒன்று.*

*[நிலவுப் புரட்சிக் காலத்தில் நிகழ்ந்த சம்பவங்களின் தொகுப்பாக வெளிவந்த "தைக்கோவுக்கான பாதை" என்ற நூலிலிருந்து இப் பகுதி எடுக்கப்பட்டுள்ளது. மேற்படி நூல் 2096ம் ஆண்டு நிலவில் வைத்து வெளியிடப்பட்டிருந்தது.]*






படிப்பகம்

www.padippakam.com

செம்புலனைப் பொறுத்தவரைக்கும் "தைக்கோவுக்கான" அவனது பாதை ஆரம்பித்த இடம் கல்லூரிதான். நல்ல வடிவாக ஆராய்ந்துபாரசுத்தால் அருவி வந்து அவனுடைய கணினியை இரவல் கேட்டாள் பாருங்கள், அந்தக் கணத்திலிருந்துதான் அவனது வாழ்க்கையே மாறிப்போனது.

அருவிக்கு இடைத் தவணைத் தேர்வு. அந்த நேரம்பார்த்து அவளது கணினி (Computer) பழுதாகித் தொலைத்தது. இப்பொழுது அவசரமாகக் கணினி ஒன்று வேண்டும். எங்காவது யாரிடமாவது இரவல்தான் வாங்க வேண்டும். வாங்காது போனால் தேர்வில் தோல்வி நிச்சயம் என்பது அவளுக்கு நன்றாகவே புரிந்தது.

துணிந்து ஒரு கணினியை இரவல் கேட்பதற்கு இப்போதைக்குச் செம்புலனைத் தவிர அவளுக்கு வேறு யாரும் இல்லை.

செம்புலனின் நிலை இக்கட்டுக்குள் மாட்டிக்கொண்டுவிட்டது. அவனுக்கென்னவோ அவளுக்கு உதவ விருப்பம்தான். ஆனால் கணினியில் தன்னுடைய பாடப் புத்தகங்களை வேறு சேமித்து வைத்திருக்கிறான். இரவல் கொடுத்தால் அவனுடைய புத்தகங்களை அவள் படித்துவிடக்கூடுமே?

உங்கள் பாடப்புத்தகங்களை வேறொருவர் படிக்க அனுமதித்த குற்றத்துக்காகப் பல ஆண்டுகள் சிறைவாழ்க்கைக்கு போக வேண்டி வரும் என்ற உண்மை ஒருபுறமிருக்க, அவள் தனது புத்தகங்களைப் படித்துவிடக் கூடும் என்ற நினைப்பே அவனை ஒரு முறை உலுப்பிப் போட்டது.

எல்லோரையும் போலச் சின்னச் செம்புலனுக்கும் அவனது ஆரம்பப்பள்ளிக் காலத்திலிருந்தே ஒழுக்கங்களும் சட்டங்களும் காலத்துக்குக் காலம் போதிக்கப்பட்டிருந்தது.

புத்தகங்களை மற்றவரோடு பகிர்ந்துகொள்ளுதல் தவறு, கெட்ட பிள்ளைகள் செய்வது. அது கொள்ளைக்காரர்களின் வேலை. பொலிஸ் மாமாவுக்கும் கடவுளுக்கும் அது பிடிக்காது என்று ஆரம்பப் பள்ளிப் பாடத்திட்டங்கள் சொல்லிக்கொடுத்த எல்லாமே அவன் மனதில் ஆழப்பதிந்திருந்தன.

அரசாங்கம் அவனைக் கையும் களவுமாகப் பிடிக்கத் தவறுவதற்கு வாய்ப்புக்களும் அதிகம் இருக்கவில்லை.


அவன் "படித்த" பையன்.

ஒவ்வொரு புத்தகமும் தன்னுள்ளே ஒரு "கண்காணி" (Monitor) யைக் கொண்டிருக்கும் என்று அவனுக்குத் தெரியும். அந்தக் கண்காணியின் பெயர் "காப்புரிமைக் கண்காணி (Copyright Monitor)" என்ற அளவுக்கு மட்டுமல்ல, குறித்த புத்தகம் யாரால், எப்பொழுது, எங்கே படிக்கப்படுகிறது என்ற தகவலை அது கணந்தோறும் அரசாங்கத்துக்கு அறிவித்தவண்ணமிருக்கும் என்ற தொழிநுட்பத்தையும் புரிந்துகொண்டிருக்கும் அளவுக்கு அவன் "படித்திருக்கிறான்".

அரசாங்கத்தின் "உரிமைப்படுத்தல் நடுவம்" என்கிற அமைப்பு இந்தக் கண்காணிப்புக்களைச் செய்துவந்தது.

(படிக்கும் கொள்ளைக்காரர்களைப் பிடிப்பதற்காக மட்டுமல்லாது ஒவ்வொருவரினதும் தனிப்பட்ட விருப்புவெறுப்புக்கள் பற்றிய தகவல்களைச் சில்லறை வர்த்தகர்களுக்கு விற்கவும் இந்த வசதியை "நடுவம்" பயன்படுத்தியது)

அடுத்த தடவை அவனது கணினி இணைய (Internet) வலையில் இணைக்கப்பட்ட கையோடு "நடுவம்" இதனைக் கண்டுபிடித்துவிடும்.



பிறகென்ன, அடுக்கடுக்காகக் குற்றங்கள். எதிலிருந்து தப்பினாலும் நடந்த குற்றசெயலைத் தடுக்க முயலாமைக்கான குற்றம் அவனைச் சனிபோல் துரத்தி வந்து சிறையிலடைத்துப் பூட்டும்.

ஆமா இவருக்கு நினைப்புத்தான்!

அருவிக்கு அவனது கணினியில் சேமிக்கப்பட்டுள்ள புத்தகங்களை தோண்டியெடுத்துப் படிப்பதுதான் இப்போ ரொம்ப முக்கியம் பாருங்க. அதொன்றும் அவளுக்கு அவசரமாயிருக்கவில்லை. என்ன, தனது இடைத் தவணைத் தேர்வுக்கு ஆயத்தப்படுத்த வேண்டும். ஒப்படைகள் கொஞ்சம் எழுதவேண்டும். அதற்குத்தான் இப்போது அவசரமாகக் கணினி தேவைப்படுகிறது அவளுக்கு.

ஆனால் அருவி நடுத்தர வர்க்கக் குடும்பத்துப் பெண். பாடக்கட்டணங்களைச் செலுத்தவே அவள் மிகுந்த சிரமப்படுகிறாள் என்பது செம்புலனுக்குத் தெரியும்.

போதாக்குறைக்கு புத்தகம் வாசிப்பதற்கான மேலதிகக் கட்டணங்கள்....

அவள் பகுதிநேரமாகச் செய்யும் வேலையும் அதற்கான கூலியும் மட்டுமட்டுத்தானே?

அவனது பாடப்புத்தகங்களைப் படிப்பது மட்டுமே அவள் பட்டம் பெறுவதற்கான ஒரே வழியாகவும் சிலவேளை இருக்கக்கூடும்.

அவனால் அருவியையும், அவளது சூழ்நிலையையும் நன்கு புரிந்துகொள்ள முடிந்தது.

செம்புலனுக்கே அவன் வாசித்த ஆய்வுக் கட்டுரைகளுக்கான பணத்தினைச் செலுத்துவதற்குக் கடன்பட வேண்டியிருந்தது.

*குறிப்பு 1:* இவ்வாறு செலுத்தப்படும் பணத்தின் 10% அக் கட்டுரைகளை எழுதிய ஆய்வாளரசுகளுக்குப் போய்ச்சேரும். செம்புலன் கொஞ்சம் படிப்பு, ஆய்வு, எழுத்து என்று கவனம் செலுத்துவதால் அவனது கட்டுரைகளும் கூட எவராலும் பார்க்கப்படக்கூடும். அப்படி அவனது கட்டுரைகளை ஆட்கள்



படிப்பகம்

www.padippakam.com

அடிக்கடி வாசிப்பார்களாக இருந்தால் அதிலிருந்து கொஞ்சம் பணம் அவனுக்குக் கிடைக்கும். அதை வைத்துக் கடன்களை ஒருவாறு அடைத்துவிடலாம்.

முன்பெல்லாம் யார் வேண்டுமானாலும் நூலகங்களுக்கு போய்வரக்கூடிய நிலை இருந்தது என்பதைச் செம்புலன் பின்னாட்களில் அறிந்துகொண்டான்.

நூலகத்துக்குப் போய்க் கட்டுரைகளை, ஏன் புத்தகங்களைக்கூடக் காசெதுவும் கொடுக்காமல் உட்கார்ந்திருந்து திறந்து வாசிக்கக்கூடிய காலமொன்று இருந்தது.

அரசாங்கத்தின் நூலக மானியம் இல்லாமலே நூலகங்களில் ஆயிரக்கணக்கான பக்கங்களை, ஆய்வுக் கட்டுரைகளைப் படித்துத் தமது ஆய்வுகளைச்செய்த சுயாதீனமான அறிஞர்கள் பலர் இருந்திருக்கிறார்கள்.

ஆனால் 2010களில், வர்த்தக ரீதியான மற்றும் இலாபநோக்கற்ற வெளியீட்டாளர்கள், படிப்பதற்கான கட்டணங்களை அறவிட ஆரம்பித்துவிட்டார்கள்.

2047ம் ஆண்டுவாக்கில் புலமை இலக்கியங்களை இலவசமாக பொதுமக்களின் உசாவலுக்கு வழங்கிய நூலகங்கள் எல்லாம் கனவாய்ப் பழங்கதையாய்ப் போயின.

ஆனால் இந்த மாதிரி ''கண்காணிகளையும்'' அரசாங்கத்தையும் ஏய்ப்பதற்கான வழிகளும் அப்போது இருக்கத்தான் செய்தன.

அவை சட்டத்துக்குப் புறம்பானவை.

செம்புலனோடு மென்பொருள் வகுப்பில் கூடப்படித்த ''ஈழா'' என்றொரு மாணவி இவ்வாறான சட்டத்துக்குப்புறம்பான மென்பொருள் ஒன்றினை வைத்திருந்தாள். அடிப்படையில் அது ஒரு வழுத்திருத்தி (Debugger) மென்பொருள்தான். கொஞ்ச காலத்துக்கு முன்பு ஆணைத்தொடர்களை (Codeகளை) சரிபாரக்க, திருத்த என்று இந்த வழுத்திருத்தி மாணவர்களுக்குப் பயன்பட்டு வந்தது, இப்போது தடை செய்யப்பட்டுவிட்டது. ஆனால் இவ்வாறான ஏய்ப்பு வேலைகளுக்கு அதனைப் பயன்படுத்தக்கூடிய வழிகளை அவள் கண்டுபிடித்து வைத்திருந்தாள்.

புத்தகம் ஒன்றில் பொதியப்பட்டுள்ள கண்காணிக்கும் கட்டகங்களை (கட்டகம்-System) இதனைப்பயன்படுத்தி ஈழா ஏய்த்துவந்தாள்.

ஈழாவுக்கோ ஓட்டை வாய் :-)

யாரையும் விட்டு வைக்கவில்லை. இந்த ஏய்ப்பு வேலை பற்றி ஒவ்வொரு மாணவருக்கும் பொறுப்பாக சொல்லி முடித்துவிட்டுத்தான் அவள் மூச்சே விட்டாள் என்றால் பா.......ருங்களேன்.

அவளின் நண்பர்களில் ஒருத்தன் மென்பொருள் பாதுகாப்பு அதிகாரசபைக்கு அவளைப் ''போட்டுக் கொடுத்து'' விட்டான். மாணவர்களுக்கு நிறையக் கடன் பிரச்சினைகள். போட்டுக்கொடுத்தால் அரசாங்கம் கொஞ்சம் பணம் கொடுக்கும் வழக்கத்தை வேறு வைத்திருந்தது.

2047 இல் ஈழா சிறையிலடைக்கப்பட்டாள். ஈழாவின் அப்பா ஒரு வழக்கறிஞராக இருந்தபடியால் களவாகப் புத்தகம் படித்த குற்றத்திலிருந்து அவளை மீட்க முடிந்தபோதும், குறித்த வழுத்திருத்தி மென்பொருளை வைத்திருந்த குற்றத்திற்கு யாராலும் எந்த மன்னிப்பையும் பெற்றுக்கொடுக்க முடியவில்லை.

குறிப்பு 2: யார் வேண்டுமானாலும் வழுத்திருத்திக் கருவிகளை வைத்திருக்கக்கூடிய காலம் ஒன்று முன்பு இருந்தது என்பதைச் செம்புலனால் பின்னாட்களில் அறிந்துகொள்ள முடிந்தது.

இறுவட்டில் (Compact Diskஇல்) பெற்றுக்கொள்ளக்கூடியதாக, இணையத்தில் பெறக்கூடியதாக, ஏன் இலவசமாகத் தரவிறக்கிப் (Download பண்ணி) பயன்படுத்தக்கூடியதாகக்கூட வழுத்திருத்தி மென்பொருட்கள் ஒரு காலத்தில் கிடைத்தன. காலப்போக்கில் இத்தகைய வழுத்திருத்திகள் பலராலும் ''காப்புரிமைக் கண்காணிகளை'' ஏய்ப்பதற்குப் பயன்படுத்தப்படலாயின.

ஒருமுறை வழக்கொன்றில் தீர்ப்பளிக்கும்போது நீதிபதி ஒருவர், இக் கருவிகளின் முதன்மைப்பயன்பாடே கண்காணிகளை ஏய்ப்பதுதான் என்று தீர்ப்பளித்துத் தொலைத்தார். இச் சம்பவம் வழுத்திருத்திகள் சட்ட விரோதமாகக் காரணமானது. வழுத்திருத்திகளை எழுதி வெளியிட்ட மென்பொருளாளர்கள் பலர் இதனைத் தொடர்ந்து சிறைக்குப் போயினர்.

செம்புலன் ஒரு கணிநிரலாளன் (Programmer) என்ற வகையில் வழுத்திருத்திகளின் பயன்பாட்டினை நன்கறிவான். இப்பொழுதும் அவனைப்போன்ற நிரலாளர்களுக்குப் படிப்புக்கும் தொழிலுக்கும் வழுத்திருத்திகள் அத்தியாவசியமானவையாக இருக்கின்றன. அரசாங்கத்தில் பதிவு செய்த நிரலாளர்களுக்கு மட்டும் மிகக் கடுமையான சட்டவிதிகளின் கீழ் வழுத்திருத்தி மென்பொருட்கள் தனித்தனியாக உற்பத்தி செய்யப்பட்டு அதிக விலைக்கு வழங்கப்பட்டுவந்தது. வகுப்பில் செம்புலன் பயன்படுத்திய வழுத்திருத்தி சிறப்பான தீயரண்கட்கு (Firewallகட்கு) நடுவே மிக மிகப் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்தது. வகுப்பறைப் பயிற்சிகளுக்கு மட்டுமே அதனைப் பயன்படுத்த முடியும்.

கதையின் மிச்சத்துக்கு வருவதற்கு முன் இன்னும் சில தகவல்களை இந்த இடத்தில் சொன்னால் பயன்மிக்கதாயிருக்கும்.

இந்தக் கண்காணி இருக்கெல்லோ, காப்புரிமைக் கண்காணி, இதனை ஏய்ப்பதற்கு இன்னொரு வழியும் இருந்தது.

உங்கள் கணினியின் அடிப்படை மென்பொருளானகளுக்கு ''கருனியை'' (Kernelஐ) மாற்றிக்கொள்வதன் மூலம் கண்காணிகளின் கண்ணில் மண்ணைத் தூவலாம்.

குறிப்பு 3: இந்த நூற்றாண்டின் ஆரம்பகாலத்தில் இவ்வாறன கருனிகள் பல இருந்தன. கட்டற்ற திறந்த கருனிகள் கூட இருந்தன. லினக்ஸ், ஓப்பன் சோலாரிஸ் என்று பல.

ஆனால் அவை எல்லாம் செத்துப்போய் கனநாளாகிப்போனது. கட்டற்ற இயங்குதளங்கள் போன்றவை தடைசெய்யப்படுவிட்டன. அவற்றின் நகல்களை இப்போ எங்கேயாவது பெற்றாலும் கூட கணினியில் அதையெல்லாம் நிறுவ முடியாது. அதற்கு கணினியின் மூலக் கடவுச்சொல் வேண்டும்.

மூலக் கடவுச்சொல்லைத் (Passwordஐத்) தான்இப்போதெல்லாம் எந்த நிறுவனமும் கணினி வாங்குபவர்களுக்குக் கொடுப்பதில்லையே. உளவுத்துறையோ மைக்ரோசொஃப்ட் நிறுவனமோ அந்தக் கடவுச்சொல்லை உங்களுக்கு தந்துவிடுமா என்ன?

சரி எங்கள் கதைக்கு என்ன நடந்தது?

அருவிக்குக் கணினியை இரவல் கொடுப்பது அவ்வளவு லேசுப்பட்ட காரியமாக இருக்கப்போவதில்லை என்ற முடிவுக்கு செம்புலன் இவ்வளவு நேரத்துக்குள் வந்துவிட்டிருந்தான்.



படிப்பகம்

ஆனாலும் அவனால் அவளுக்கு உதவ மறுத்துவிட முடியுமா?

கொஞ்ச நாளாகவே அருவியைப் பார்க்கும்போதெல்லாம் சிறு சிறு மின்னருவிகள் நெஞ்சுக்குள் ஈரமாய் ஊற்றெடுப்பதையும், உதட்டோரங்கள் பூப்பூப்பதையும் ... தா...ண்டி. அவளுக்கு உதவவாவது செம்புலன் மறுப்பதாவது..

அந்தப் பெண்ணோடு பேசக் கிடைக்கும் ஒவ்வொரு வாய்ப்பும், ஒவ்வொரு மணித்தியாலமும் மனசை நிரப்பி மெல்லிசைக்குள் மிதக்கவைப்பதையும், தன்னையும் தாண்டி அவள் மீது இயல்பாகவே எழும் நேசத்தையும் அவன் இனங்காணத்தொடங்கியிருந்தான்.

இக்கட்டான இந்த நிலையிலும் உதவி கேட்பதற்கு அவள் ஏன் அவனைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டும்? அருவிக்குள்ளும் மழை பொழியத் தொடங்கிற்று என்ற முடிவுக்கு நாம் வரலாமா?

எல்லாத்தையும் யோசித்துக் கடைசியில் நினைத்துக்கூடப்பார்க்க முடியாத ஒரு வேலையைச் செய்து செம்புலன் இந்த இக்கட்டுக்குத் தீர்வினைக் கண்டான்.

அவளுக்குக் கணினியை இரவல் கொடுத்ததோடு தன்னுடைய கடவுச்சொல்லையும் சொல்லிவிட்டான்.

இது ஒரு குற்றமாக இருந்தபோதும் அரசாங்கத்தாலோ, அதன் துணை நிறுவனங்களாலோ தன்னியக்கமாக இதனைக் கண்டுபிடிக்க முடியாது.

அருவியே போய் இவனை "மாட்டி" விட்டால்தான் உண்டு.

தனது சொந்தக் கடவுச்சொல்லை இவன் அருவிக்குக் கொடுத்தான் என்பதைக் கல்லூரி நிர்வாகம் கண்டுபிடித்தது என்று வைத்துக்கொள்வோம், எதற்குப் பயன்படுத்தினார்கள், என்ன செய்தார்கள் என்றெல்லாம் எவரும் கேட்கப்போவதில்லை. தொலைந்தார்கள் இருவரும்!

குறிப்பு 4: மாணவர்கள் கணினிகளில் என்ன செய்கிறார்கள் என்பதைக் கண்காணிக்கும் கல்லூரியின் நடைமுறைகளில் ஏதாவது தலையீடு செய்தால் தகுந்த ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பது கல்லூரியின் சட்டம்.

பாரதூரமான வேலைகள் எதுவும் நீங்கள் செய்தீர்களா இல்லையா என்பது பற்றியெல்லாம் யாரும் கவலைப்படப்போவதில்லை. நிர்வாகிகள் உங்களைக் கண்காணிப்பதை சிரமமாக்கினீர்கள் என்பதுதான் குற்றம்.

அவர்களைப் பொறுத்தவரை நீங்கள் ஏதோ கள்ளம் செய்ய எத்தனித்திருக்கிறீர்கள் என்பதாகத்தான் அர்த்தப்படும். அந்தக் கள்ளம் என்ன என்பதைத் தெரிந்துகொள்ளும் தேவை கூட அவர்களுக்கு இல்லை. ஆனால் வழக்கத்தில் இந்தக் குற்றத்துக்காக மாணவர்கள் கல்லூரியிலிருந்து வெளியேற்றப்படுவதில்லை. கல்லூரியின் கணினி வலையமைப்பிலிருந்து அவர்கள் விலக்கப்படுவர்.

அவ்வளவுதான். பிறகென்ன, அவர்களால் தேர்வுகளில் வெல்லவா முடியும்?

பெரும் எண்ணிக்கையான பல்கலைக்கழக மாணவர்கள் கணினியைப் பயன்படுத்த ஆரம்பித்தபோது, 1980களிலேயே இம்மாதிரியான பல்கலைக்கழக கொள்கைகள் ஆரம்பித்தன என்பதைப் பின்னர் செம்புலன் அறிந்துகொண்டான்.

நல்லவேளையாக அருவி செம்புலனை மாட்டிவிடவில்லை.



"செம்புலப் பெயல் நீர் போல அன்புடை நெஞ்சம் தான் கலந்தனவே" (நன்றி: குறுந்தொகை)

செம்புலன் அருவிக்கு உதவுவதாக எடுத்த முடிவு அவர்களிருவரும் சேர்ந்து வாழத் தொடங்குமளவுக்குக் கதையைக் கொண்டுபோய் விட்டது.

சிறுவர்களாக இருந்தபோது "கொள்ளை" அடிப்பது பற்றித் தமக்குக் கற்பிக்கப்பட்டவை மீதான கேள்விகளோடு அவர்களின் ஆய்வுப்பயணம் தொடங்கியது.

காப்புரிமையின் வரலாற்றினைப்பற்றியும், சோவியத் யுனியனைப்பற்றியும் அதன் "நகலெடுத்தல்" மீதான கட்டுப்பாடுகள் பற்றியும், ஐக்கிய அமெரிக்க நாடுகளின் மூல அரசியல் யாப்பினையும் கூட அந்தக் காதற் சோடி தேடிப்படிக்க ஆரம்பித்தது. (பிறகு? தொழில் நேரம் போக, வீட்டிலிருக்கும் மிச்ச நேரங்களில், இரவில் காதலர்களுக்கு வேறு என்ன வேலைதான் இருக்க முடியும்?))

தம்மைப்போலவே மென்பொருள் பாதுகாப்பு அதிகார சபையின் நீள் கரங்களைத்தாண்டிப் பறந்து சென்ற மற்றவர்கள் குடியிருந்த நிலவிற்கு அவர்களும் குடிபெயர்ந்தனர். தைக்கோ எழுச்சி 2062 இல் ஆரம்பமானபோது, அண்டந்தழுவிய "படிப்பதற்கான உரிமை" அதன் அடிப்படை நோக்கங்களில் ஒன்றாக ஆகியது.

www.padippakam.com

# டூரிட்டோவும் நவதாராளவாதமும் பற்றிய கதை

மூலம்: துணைத்தளபதி மார்க்கோஸ்
ஆங்கில வழி தமிழில்: தமிழ்மகன்

*[இக் கதை "துணைத்தளபதி மார்க்கோஸ்" எழுதிய "டூரிட்டோவுடனான உரையாடல்கள்" என்ற நூலிலிருந்து பெறப்பட்டதாகும். மரியானா மொகுவெல் என்ற பத்து வயதுச் சிறுவனுடனான தனது முதலாவது உரையாடலின் போது ஒரு கதையை துணைத்தளபதி மார்க்கோஸ் பகிர்ந்து கொள்கிறார். இதுவே அவர்களிடையிலான உரையாடற் தொடரின் தொடக்கமாகும். இத் தகவல்கள் பிரசுரமான காலத்தில 1994இல் தொடங்கிய சண்டை ஓய்ந்து பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. தமது தளப்பகுதிக்கு மீண்டிருந்த ஸப்பட்டிஸ்ற்றாக்கள் அரசாங்கத்தின் அமைதிப் பிரேரணைகளை அலசிக்கொண்டிருந்தனர்.]*

*ஏப்ரல் 10, 1994*
மரியானா மொகுவெலுக்கு
துணைத்தளபதி மார்க்கோஸிடமிருந்து

துணைத்தளபதி மரியானா மொகுவெல்,

நீங்கள் வரைந்த ஒவியத்துக்காக உங்களுக்கு கிடைத்த புதிய பதவிக்கு எனது மரியாதைகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன். உங்களுக்கு ஒரு கதை சொல்ல என்னை அனுமதியுங்கள். என்றாவது ஒருநாள் இக் கதையை நீங்கள் விளங்கிக்கொள்ளக்கூடும்.

## டூரிட்டோ

நான் சொல்லப்போகிற கதை அன்றைக்குத்தான் மனதுக்கு வந்தது. அது கண்ணாடி அணிகிற, சுங்கானைப் புகைக்கிற ஒரு சிறிய வண்டின் கதை. என்னிடமிருந்து காணாமற்போன, என் புகைப்பதற்கான புகையிலையைத் தேடிக்கொண்டிருக்கையில் அதனைச் சந்தித்தேன். இருந்தாற்போல எனது தூங்குமஞ்சத்தின் ஒரு பக்கத்தில் சிந்திக்கிடந்த கொஞ்சம் புகையிலை ஒரு சிறு தடமாக உருவாகியிருக்கக் கண்டேன். என்னுடைய புகையிலையைத் தேடுவதற்காகவும் யார் அதை எடுத்துச் சிந்தியிருந்தார் எனவும் அறிய, நான் அச் சுவட்டைத் தொடர்ந்தேன். சில மீற்றர்கள் தள்ளி ஒரு பாறையின் பின்னே வண்டொன்று சிறிய மேசையோரம் அமர்ந்து சில தாள்களை வாசித்தபடி சின்னஞ்சிறிய சுங்கான் ஒன்றைப் புகைத்துக் கொண்டிருப்பதைக் கண்டேன்.

என்னுடைய இருப்பை வண்டு கவனிக்குமாறு "ஹ்ம், ஹ்ம்" என்றேன். ஆனால் வண்டு என்னைக் கண்டுகொள்ளவில்லை.

பின்னர் நான், "கேள், அந்தப் புகையிலை என்னுடயது" என்றேன். வண்டு, கண்ணாடியைக் கழற்றி என்னை ஏற இறங்கப் பார்த்துவிட்டுக் கோபத்தடன் என்னிடம் "தயவுசெய்து, கப்டன், நான் உம்மைக் கெஞ்சிக்கேட்கிறேன். என்னைக் குழப்பாதீர்கள். நான் படித்துக்கொண்டிருக்கிறேன் என நீங்கள் உணரவில்லையா?" என்றது.

எனக்குச் சற்று ஆச்சரியமாக இருந்தது. அதற்கு நல்ல ஒரு உதை கொடுக்கப்போனேன். ஆனால் நான் என்னை அமைதிப்படுத்தி அது படித்து முடியும்வரை காத்திருக்குமாறு ஒரு பக்கமாக அமர்ந்தேன். சொற்ப நேரத்தில் பின்னர் அது தனது தாள்களைச் சேர்த்தெடுத்து மேசைக்குள் வைத்துவிட்டுத் தனது சுங்கானைச் சப்பியபடி என்னிடம், "சரி, கப்டன், உங்களுக்காக நான் என்ன செய்யவேண்டும்?" எனக் கேட்டது.

"எனது புகையிலை" என்று பதிலளித்தேன்.



"என்ன. உங்களது புகையிலையா? உங்களுக்கு நான் கொஞ்சம் தர வேண்டுகிறீர்களா?" என்று சொன்னது.

எனக்கு சினம் வரத் தொடங்கியது. ஆனால் அந்தச் சிறிய வண்டு தனது சிறிய காலால் புகையிலைப் பையை என்னிடம் நீட்டி விட்டுக், "கோபிக்காதீர்கள் கப்டன், இங்கே புகையிலையைப் பெற இயலாது, அதனால் நான் உங்களுடையதில் கொஞ்சத்தை எடுத்தேன்".

நான் அமைதியானேன். வண்டு என்னைப் பற்றத் தொடங்கியது. "அதையிட்டுக் கவலைப்படாதே. என்னிடம் எங்கேயோ இன்னும் கொஞ்சம் இருக்கிறது" என்று அதனிடம் சொன்னேன்.

"ம்ம்" என்று அது பதிலளித்தது.

"உம்முடைய பெயரென்ன?" என்று கேட்டேன்.

"நெபுக்கட்நெஸார்" என்றுவிட்டு "ஆனால் என் நண்பர்கள் என்னை டூரிட்டோ என்று அழைப்பார்கள். நீங்கள் என்னை டூரிட்டோ என்று அழைக்கலாம் கப்டன்."

அதனது மரியாதைக்கு நன்றி தெரிவித்துவிட்டு எதைப் பற்றி வாசித்துக்கொண்டிருந்தது என்று கேட்டேன்.



படிப்பகம்

"நான் நவதாராளவாதத்தையும் லத்தின் அமெரிக்கா மீதான ஆதிக்கத்திற்கான அதன் மூலோபாயங்களையும் பற்றிப் படித்துக் கொண்டிருக்கிறேன்" என்றது.

"அதனால் ஒரு வண்டுக்கு என்ன நன்மை?" என்று அதைக் கேட்டேன்.

"அதனால் என்ன நன்மை?! உங்களது போராட்டம் இன்னும் எவ்வளவு காலத்துக்குத் தொடரும் எனவும் நீங்கள் வெல்லப் போகிறீர்களா இல்லையா எனவும் நான் தெரிந்து கொள்ளவேண்டும். அதைவிடத், தான் வாழும் உலகின் நிலவரத்தைப்பற்றி அறிய ஒரு வண்டு போதிய அக்கறை கொண்டிருக்கவேண்டும் என்று நீங்கள் நினைக்கவில்லையா கப்டன்?" என்று மிக எரிச்சலுடன் பதிலளித்தது.

"எனக்குத் தெரியாது. ஆனால் இன்னும் எவ்வளவு காலத்திற்கு எங்களது போராட்டம் தொடரும் எனவோ அதில் நாம் வெற்றிபெறப் போகிறோமா இல்லையா எனவோ உமக்கேன் தெரியவேண்டும்?"

"ஆ, நீங்கள் ஒன்றையுமே புரிந்து கொள்ளவில்லை" என்று கண்ணாடியை அணிந்து சுங்கானைப் பற்றவைத்தபடி வண்டு சொன்னது. புகையை ஊதியபின்பு "வண்டுகளாகிய நாம் இன்னும் எவ்வளவு காலத்துக்கு உங்கள் பெரிய சப்பாத்துக் கால்களால் நீங்கள் நம்மை நசியாமலிருக்கும்படி நாம் கவனமாக இருக்கவேண்டும் என்பதை தெரிந்துகொள்ளத்தான்" என்று வண்டு தொடர்ந்தது.

"ஆ!" என்றேன் நான்.

"ம்ம்" என்றது அது.

"உங்கள் ஆய்வில் என்ன முடிவுக்கு வந்துள்ளீர்கள்?" என அதைக் கேட்டேன்.

அது தனது தாள்களை மேசையுள்ளிருந்து எடுத்து அவற்றைப் புரட்டத் தொடங்கியது.

அவற்றை மீளாய்ந்த ஒவ்வொரு முறையும் "ம்ம். ம்ம்" என்று அடிக்கடி சொன்னது. முடித்த பின்பு "நீங்கள் வெற்றிபெறப் போகிறீர்கள்" என்று என் கண்களை உற்றுநோக்கிச் சொன்னது.

"அது எனக்கு ஏலவே தெரியும்" என்றுவிட்டு, "ஆனால் அது எவ்வளவு காலம் எடுக்கும்?" என்று கேட்டேன்.

"நீண்ட காலம்" என்று விரக்திப் பெருமூச்சுடன் சொன்னது.

"அதுவும் எனக்கு ஏலவே தெரியும்.... ஆனால், திட்டவட்டமாக எவ்வளவு காலம் என்று உமக்குத் தெரியாதா?" என வினவினேன்.

"திட்டவட்டமாகச் அறிய முடியாது. பல விடயங்களைக் கணக்கில் எடுக்க வேண்டும். புறவய நிலைமைகள், அகச்சார்பான நிலைமைகளின் முதிர்வு, சக்திகளின் உறவுநிலை, ஏகாதிபத்தியத்தின் நெருக்கடி, சோசலிசத்தின் நெருக்கடி, இன்னபிற, இன்னபிற".

"ம்ம்" என்றேன்.

"எதைப்பற்றி யோசிக்கிறீர்கள் கப்டன்?"

"ஒன்றுமில்லை. சரி, நான் இனிப் போகவேண்டும் திரு. டூரிட்டோ. உங்களைச் சந்தித்ததில் மிக்க மகிழ்ச்சி. உங்களுக்குத் தேவையான எல்லாப் புகையிலையையும் உங்களுக்கு வேண்டியபோது எடுத்துக்கொள்ளுங்கள்".

"நன்றி கப்டன், நீங்கள் விரும்பினால் என்னோடு நீங்கள் சாதாரணமாக உரையாடலாம்".

"நன்றி டூரிட்டோ. வண்டுகளை மிதிப்பது தடை செய்யப்பட்டுள்ளதாக நான் எனது தோழர்களுக்கு ஆணையிடப்போகிறேன். அது உதவியாக இருக்கும் என நம்புகிறேன்."

"நன்றி கப்டன். உங்கள் கட்டளை நிச்சயம் எங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்".

"இருந்தாலும் கவனமாக இருங்கள், எனது தோழர்கள் மிகவும் கவனப்பிசகாக இருக்கிறார்கள். தாம் போகும் பாதையை அவர்கள் எல்லா வேளைகளிலும் கவனிப்பதில்லை".

"அப்படியே செய்வேன் கப்டன்".



"மீண்டும் சந்திப்போம்".

"மீண்டும் சந்திப்போம். நீங்கள் விரும்பியபோது வாருங்கள், நாங்கள் பேசலாம்".

"நிச்சயமாக" என்று சொல்லிவிட்டு, நான் தலைமை அலுவலகத்துக்குத் திரும்பினேன்.

அவ்வளவுதான் மரியானா, என்றாவது ஒரு நாள் உங்களை நேரிற் கண்டறிய இயலும் என நம்புகிறேன். அப்போது எங்களால் ஓவியங்களையும் பனிச்சறுக்கல் முகமூடிகளையும் பரிமாறிக்கொள்ள இயலும்.

சரி. வாழ்த்துக்களும் மேலும் வண்ணந் தீட்டிகளும். ஏனெனில் நீங்கள் பாவித்தவை இப்போதைக்கு வண்ணம் தீர்ந்து போயிருக்க வேண்டும்.

மெக்சிகோவின் தென்கிழக்கு மலைகளிலிருந்து

துணைத்தளபதி மார்க்கோஸ்

www.padippakam.com

# ஆ யு ஓல்ரைட்? (Are you all right?)

மூலம்: ஜயத்திலக்க கம்மல்லவீர
தமிழாக்கம்: திக்குவலை கமால்

*நான்கு முறை தனது சிறு கதைத் தொகுதிகளுக்ககாகவும், ஒரு தடவை நாவலுக்காகவும் அரச விருதுகளையும், டீ.ஆர். விஜேவர்தன விருது உட்பட தேசியமட்டத்திலான பல விருதுகளையும் வென்றெடுத்த பிரபல சிங்கள எழுத்தாளர் ஜயத்திலக்க கம்மல்லவீர இதுவரை 10 சிறுகதைத் தொகுதிகளையும், 6 நாவல்களையும், சிறுகதையாக்கம் பற்றிய ஒரு நூலையும், இளைஞர் சிறுவர் பற்றிய கதைகளையும் சிங்களத்தில் எழுதியுள்ளார்.*

*இலங்கையின் தேசிய இனப் பிரச்சினையைப் பற்றி அவர் அண்மையில் எழுதிய சிறுகதையின் தமிழாக்கத்தை இங்கு வெளியிடுகின்றோம். அதைப் பிரபல தமிழ் எழுத்தாளர் திக்குவலைக் கமால் அவர்கள் தமிழில் மொழிபெயர்த்துள்ளார்.*



இலங்கையில் பிறந்து வளர்ந்த லோகநாதன் தனது ஊர் நோக்கிச் செல்வதற்காக, முதற்தடவையாக விண்வெளிக்குச் செல்லும் விண்வெளி வீரனைப் போல, லண்டன் ஹீத்ரோ விமான நிலையத்திலிருந்து, விமானத்தில் ஏறினான். இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பின்னர் தான் காணச் செல்லும் தனது கிராமம் எப்படி இருக்குமென்று அனுமானிக்கக் கூட அவனால் முடியவில்லை. அவனுக்குள் பயப்பீதியும் மகிழ்ச்சியும் நிச்சயமின்மையும் இன்னும் என்னவென்று பகுத்துப் பிரித்துக்கொள்ள முடியாத ஏதேதோவெல்லாம் ஒன்றுய்ச் சிக்கி உணர்வு குழம்பிப் போயிருந்தது. அன்று தான் ஓடியாடிச் சுற்றித் திரிந்த ஊர் இன்று அதே நிலையில் இல்லையென்பது அவனுக்குத் தெரியும். இருபத்தைந்து வருட காலத்தில் கண்டிப்பாக ஏற்படுத்தப்பட வேண்டியிருந்த மாற்றங்கள் காரணமாகவன்றி, யுத்தத்தினால் இரண்டு மூன்று தடவை தலைகீழாகப் புரட்டியெடுக்கப்பட்டதனால் அந்த மண், வேறொரு நிலமாக மாறிப் போயிருப்பதை அவனறிவான். இந்த ஊர்களில் வாழ்ந்த மனிதர்களும், பெண்களும் அகப்பட்டதைக் கைகளில் சுமந்துகொண்டு விழுந்து விழுந்து மைல் கணக்கில் நடந்து செல்லும் காட்சிகளைப் பலவருடங்களாக அவன் தொலைக்காட்சித் திரையில் பார்த்திருக்கிறான். தான் பிறந்து வளர்ந்த ஊர் தனது ஞாபகத்திலிருந்தாலும் அதே தோற்றத்தில் அதனைத் தேடிக் கண்டுபிடிப்பது லோகநாதனுக்கு இலகுவான காரியமல்ல. இருபத்தைந்து ஆண்டுகளுக்குள் பிறந்த மண்ணிலிருந்து பல்லாயிரக்கணக்கான மைல்களுக்கப்பால் வெளிநாடொன்றிலிருந்து தொலைக்காட்சியில் கண்ட காட்சிகளால் அவனது நினைவுச் சித்திரம் இரத்தம், புழுதி, புகைத்துகளால் தோய்ந்து கிழித்து வெட்டித் தகர்ந்து நிர்மூலமாக்கப் பட்டிருந்தது. இருந்தும் தான் இளமையில் வாழ்ந்த சுந்தர பூமியின் பனந்தோப்பு... பற்றைக்காடு... துலாக் கிணறுகளை லோகநாதன் அவ்வப்போது கனவில் காண்கிறானென்றால், ஒருவரின் பிள்ளைப்பருவ ஞாபகங்களை நகரங்களையும் கிராமங்களையும் நாசமாக்குபவர்களால் இல்லாதொழிக்க முடியாதென்பதை நிருபித்தது.

பன்னிரண்டு மணிநேர விமானப் பயணத்தின் பின்னர் பிறந்த மண்ணில் கால் பதிக்கும் தான் எந்த உறவினரின், எந்த நண்பனின் வீட்டுக்குப் போகிறேனென்ற ஞாபகம் இல்லாது போனாலும் கூட, லோகநாதனின் மனம் தனது பிறந்த நாட்டைக் கண்டுகொள்ளப் பொறுமையின்றித் தவித்தது. அதனால், அவனுக்கு அந்த விமானத்தின் சொகுசு ஆசனத்தில் தூக்கம் போகவில்லை. அம்மா, அப்பா, அக்கா மட்டுமன்றி, அவர்களோடு தான் வாலிபனாகும் வரை வாழ்ந்த வீடும் இன்று அங்கில்லை என்பதை அவனறிவான். அந்த மூன்று ஜீவன்களோடும் வீட்டுக் கூரையும் சுவர்களும் இடிந்து நாசமாகியிருப்பது பற்றி அவனுக்கு அறியக் கிடைத்து இருபது வருடங்களுக்கு மேலாகிவிட்டது. எந்தெந்த உறவினர்கள் உயிர்வாழ்கிறார்களென்று தெரியாதபோதும் அவனது காலடியிலிருக்கும் சிறிய பயணப்பொதி லண்டன் நகரத்தில் விலைக்கு வாங்கிய பரிசுப் பொருட்களால் நிறைந்திருந்தது. இருபது வருடங்களின் பின்பு ஊருக்குப் போகும் போது பரிசுப் பொருட்களின்றிப் போகமுடியுமா என்ன? அவனது உள்மனம் அவ்வாறு சொல்லியிருக்கவேண்டும். அதனுள் சிக்கியிருக்கும் 'யூ ஆ லக்கி. ஐ லவ் யூ' (You are lucky. I love you) என்று பெட்ரியினால் கதைக்கும் சிவப்பு தலைமயிர் பொம்மை யாரைச் சந்திக்கத்தான் செல்கிறது...?

லோகநாதனோடு இந்தப் பயணத்தில் இணைந்து கொண்ட ஆங்கிலேய நண்பன் பொப் (Bob), அருகிலுள்ள ஆசனத்தில் ஆழ்ந்த நித்திரையிலிருந்தான். அழிவுகளைக் காண்பதில் சில மனிதருக்குள்ள உள்ளார்ந்த ஆசையினால் அவன் இப் பிரயாணத்தில் இணையவில்லையென்பது லோகநாதனுக்குத் தெரியும். அவன் இயந்திரமயச் சமூகத்தில் வாழும் மனம் கொதிக்கும் மனிதன். விமானப் பயணம் நன்கு பரிச்சயமான அவனுக்கு, விமானத்தையண்டி உருவாகும் வெண்முகில் திரட்சியான மேகத்தின் அழகு புதுமையானதல்ல. அதனால் 'இதோ எனது நாடு' என்று சொல்லி உயர இருந்து தெரியும் தென்னங் குருத்துக்களைக் காணும்வரை அவன் தூங்குவானென்று, நித்திரைச் சுகம் காணாத லோகநாதன் நினைத்தான். அநீதியைக் காணும்போது நாகம்போல் படமெடுக்கும், அன்பை வெளிப்படுத்தக் கஞ்சத்தனமின்றிக் கட்டியணைக்கும் இந்த மனிதன், எல்லா நடவடிக்கைகளும் இயந்திரமயமாகிவிட்ட சமூகத்திற்கு பொருத்தப்பாடுடையவனல்ல என்று தூங்கிக் கொண்டிருக்கும்




படிப்பகம்

www.padippakam.com

நண்பனின் முகத்தைப் பார்த்த லோகநாதன் மீண்டுமொரு முறை நினைத்தான். கூடவே தான் எத்தகைய சமூகத்தைச் சார்ந்தவன் என்ற பிரச்சினையும் அவன் மனதில் எழுந்தது. இருபத்தைந்தாண்டுகள் லண்டன் மாநகரில் வாழ்ந்தபோதும் இன்னும் அவன் அந்த சமுதாயத்திற்குப் புதியவன்தான். சனம் நிரம்பிய சுரங்கப் புகையிரத மேடையை நெருங்கும்போதே தான் புதியவன் என்பது அவனுக்கு விளங்க ஆரம்பித்துவிட்டது. எப்போதாவது ஒரு கிண்ணம் பியர் அருந்துவதற்காக பப்(Pub)பில் நுழையும்போது அந்த உணர்வு அவனைச் சூழ்ந்து கொள்ளும். ஆடையொன்றைத் தெரிவுசெய்வதற்காகக் கடைத்தொகுதியில் அங்குமிங்கும் போகும்போது தான் புதியவன் என்ற உணர்வு அவனுக்கு ஏற்படும். பிரித்தானிய பிரஜா உரிமை பெற்றிருந்தபோதும் இன்னும் அவனது கால்கள் லண்டன் மண்ணில் நிச்சயமற்றனவாகவே வைக்கப்படுகின்றன. எவ்வளவுதான் மனதை ஈர்த்தாலும் லண்டன் பூங்காவில் மலரும் பூவொன்றைத் தொட்டுப் பார்க்கவோ நெருங்கி முகரவோ அவனுக்குப் பயமாகவிருக்கும்.

தாய் மண்ணில் தடம் பதித்ததும் யாரைச் சந்திக்கவேண்டுமென்பது பற்றி திரும்பவும் லோகநாதன் சிந்திக்கத் தொடங்கினான். இருபத்தைந்து வருடங்களுக்கு முன்பு, தனது இனத்தவர்களாலேயே தன்னைக் கொலை செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளதை அறிய நேர்ந்தபோது, உயிரைக் காப்பாற்றிக் கொண்டு இங்கிலாந்துக்குத் தப்பியோடத் தனக்குதவிய மதபோதகரின் பெயர் காணாமல் போனவர்களின் பட்டியலில் பதிவாகியிருப்பதை லண்டனில் வாழத் தொடங்கிய ஐந்தாம் வருடத்திலேயே கண்டான். இரு பக்கமும் மரண அச்சுறுத்தல் இருக்கும்போதுதான் அவர், தனது உயிரைக் காப்பாற்றிக் கொள்ள உதவினார் என்பது ஞாபகம் வந்தபோது லோகநாதனின் இதயம் தொய்வடைந்தது. தான் இள வயதில் எழுதிய கவிதைகளைப் பிரசுரித்த பத்திரிகை ஆசிரியர் யுத்தம் முடிந்த பின்னரும் இராணுவக் கைதியாகவே இருப்பதை அறிந்த அவன், அடுத்ததாக உயிர்வாழ்வதாகக் கருதக்கூடிய உறவினர் பற்றி யோசிக்கத் தொடங்கினான். விமானத்தினுள்ளே பதினோராவது மணித்தியாலத்தின் துளிகள் கழிந்து கொண்டிருக்கையில் கொழும்பு செட்டியார் தெரு நகைக்கடையொன்றில் வேலை செய்யும் தூரத்து உறவனர் ஒருவர் பற்றி விடிகாலைக் கனவுபோல் அவனுக்கு ஞாபகம் வந்தது. வாலிப வயதிலேயே வேலைக்கென்று கொழும்புக்கு வந்து கல்யாணம் செய்து கொண்ட அவன் கொழும்பிலேயே வாழ்ந்தபோதும், அவனது குடும்பத்தவர் அனைவரும் ஊரிலேயே வாழ்ந்தது லோகநாதனுக்கு ஞாபகம். அந்த உறவினர் உயிர்வாழ்வாராயின் அவர் எழுபது கடந்த முதியவர் என்பதால், அவரைச் சந்திப்பதாயின் செட்டியார் தெருவுக்கல்ல, கொட்டாஞ்சேனை நகரசபை வீட்டுத் திட்டத்திற்கே செல்ல வேண்டும். முதல் முயற்சியாக கொட்டாஞ்சேனைக்குச் செல்ல உறுதிபுண்டபடி லோகநாதன் விமானத்திலிருந்து இறங்கினான்.

கொட்டாஞ்சேனையென்றால் பெரிதாக மாற்றங்கள் எதுவுமின்றி இருந்த இடத்தில் அப்படியே இருந்தது. மனித வாழ்வுக்குப் பொருத்தமற்ற விதமாக மோசமடைந்திருந்தாலும், இளமையில் ஒரேயொரு தடவை மட்டுமே கால்பதித்த அந்த வீட்டு வரிசையைத் தேடித் துழாவிச் செல்ல லோகநாதன் முனைந்தான். ஒழுங்கற்ற விதமாக வெட்டப்பட்ட வெண்மயிர்களால் மறைக்கப்பட்ட போதும், தனது தூரத்து உறவினரின் பயத்தால் சுருண்ட முகத்தை அவன் அடையாளங் கண்டுகொண்டான். இருந்தும் வயதுபோன உறவினருக்கென்றால் திடீரென்று வாசற்படியில் தோன்றிய புதுமுகத்தை விளங்கிக் கொள்ள நீண்டநேரம் தலையைச் சொறிந்து தாடியைத் தடவவேண்டியிருந்தது. கழுத்தில் தொங்கும் பெரிய பயணப் பையை, வயிற்றோடு சேர்த்து அணைத்துக் கொண்டு, அன்பாகச் சிரித்தபடி நிற்கும் 'வெள்ளைக்காரன்' மாத்திரம் இல்லாவிட்டால், வந்திருப்பது ரகசிய பொலிஸ்காரன் ஒருவன் என்ற எண்ணத்தை அந்த முதியவரின் மனதிலிருந்து வெளியேற்ற லோகநாதனால் எவ்வகையிலும் முடியாது போயிருக்கும்.



பயம் கலைந்து அடையாளம் கணடபின் அவர்களை வீட்டினுள் அழைத்து அமரச் செய்த முதியவர், இடைவிடாது பேச ஆரம்பித்தார். அவரிடம் இருபத்தெட்டு வருடத் தகவல்கள் இருந்தன. கொழும்பில் குண்டுவெடிப்பது போன்றே தங்களது இனத்தவர்களில் ஒருவரைத் துரோகியாகக் கருதிக் கொலை செய்துவிடும்போது ஒரேவிதமாக, ஒரே சீராக உணர்ந்த மரணபயம், இரவில் வீட்டுத் தொகுதிக்க வந்து பாய்ந்து குடும்பத்தோடு பொலிஸுக்கும் ராணுவ முகாம்களுக்கும் இட்டுச் செல்லல், வெள்ளைவான்களில் கடத்திச்சென்று விசாரணையின்பின் இடைவழியில் தள்ளிவிட்டுச் செல்லல், போன்றவற்றால் நிரம்பிய செய்திகளை ஓயாமல் சொல்லும் போது அவரது மனைவி, உள்ளறைக் கதவுச் சீலைக்குள் மறைந்து நின்று கைகளால், கண்களால், தொண்டை செருமுவதால், இருமுவதால் அவரைத் தடுக்க முயன்ற விதத்தை, அங்கு பேசப்பட்ட தமிழைப் புரியாத பொப் நன்கு அவதானித்துக் கொண்டிருந்தான்.

"வை டஸ் ஹீ டோக் டூ மச்?" (Why does he talk too much?) அவன் இக் கேள்வியைக் கேட்க வீட்டிலிருந்து வெளியேறும் வரை பொறுமையின்றிக் காத்திருந்தான்.



படிப்பகம்

www.padippakam.com

"எனக்கு கிட்டடியில கிட்டிய தகவலின்படி இதுவரைக்கும் முன்பிருந்த குடும்பங்களைச் சேர்ந்த சிலர் திரும்பவும் குடியிருக்க வந்திருக்காங்களாம். எங்கட ஆக்களென்றால் இன்னுமே முகாம்களில்தான். உங்கட வீட்டுப் பக்கமிருந்த யேசுதாஸனை ஞாபகமா? அவனது மகளும் பிள்ளைகளோட வந்திருக்காவாம்"

"ஓம். தேடுவதும் அதைப்பற்றி சொல்வதும்தான் இவருடைய வேலை. இப்போ அதைப் பற்றி யோசித்து என்ன பயன்?" சைகைகளால் அவரைத் தடுக்க முடியாமல்போன மனைவி, கதவுச்சீலையை விட்டுவிட்டு வீட்டுக்குள் சென்றபடி சத்தமாகச் சொன்னாள். அவ்வாறு சென்ற அவள் தும்புத்தடியோடு வந்து விருந்தினர்களைப் பொருட்படுத்தாமல் நிலத்தைக் கூட்டத் தொடங்கினாள்.

உறவினர் மௌனமானார். லோகநாதன் கதிரையில் நன்கு சாய்ந்திருந்து, கண்களை மூடியபடி சற்றுநேரம் மகிழ்ச்சியை அனுபவித்தான். அவனுக்குக் கிடைத்த அந்த தகவல்கள், மாதக் கணக்காக முப்பது நாற்பதடி நிலத்தின் கீழ் அகழ்ந்து கொண்டிருக்கும் ஒருவனுக்கு நீலமாணிக்கக்கல் கிடைத்ததுபோலிருந்தது. அவன் அந்த மாணிக்கத்தைக் கழுவி இரு கைகளிலுமெடுத்து அதனைப் பலபக்கமும் புரட்டிப் பார்க்கத் தொடங்கினான். ரெயில்வே காப்பாளர் ஒருவராகத் தொழில் பார்த்த ஜேசுதாஸனுக்கு ஒரேயொரு மகளிருந்தாள் என்பதும் மூன்று வயதிலிருந்து நடனத் திறமை காட்டிய அவளது பெயர் சியாமா என்பதும் அவனுக்கு ஞாபகம் வந்தது. அங்கே இருப்பதாகச் சொல்வது, தான் பாடசாலை செல்லும் காலத்தில் பாடம் சொல்லிக் கொடுத்த துடிதுடிப்பான.... வாயாடியான.... அழகிய சியாமாதான். அப்பாவின் கறுப்புநிற மொரிஸ் மைனர் காரின் பொனட்டில் அமர்ந்து கொண்டு பாட்டுப் பாடும் சியாமா தங்கைதான்.

மூத்த உறவினரின் உதவியால் வாடகை வாகனமொன்றைத் தேடிக்கொண்ட அவன் பேரம் பேசாமல் சாரதியின் கணக்கிற்கிணங்கி ஊர் செல்லும் பயணத்தை மேற்கொண்டான்

யுத்தம் நிகழ்ந்த பூமிக்கூடாகச் செல்கையில் வாகன ஜன்னலுக்கூடாகத் தெரிந்த, அழிவின் அளவு லோகநாதனுக்கு மட்டுமல்ல, பொப்பிற்கும் புதிய காட்சியல்ல. பத்திரிகைகளிலும் தொலைக்காட்சிகளிலும் அவர்கள் இவற்றைப் போதுமானளவு பார்த்திருந்தனர். யுத்தம் முடிந்ததன் பின்னர் பாதையின் இரு மருங்கிலும் ஒரே சீராக அமைக்கப்பட்டிருந்த, புதிய ஓட்டுக்கூரையும் புற்பாளங்கள் பதித்தும் ஒரேபாணியில் அமைந்த இராணுவ பங்கர் வரிசை கண்கொள்ளாக் காட்சியாக அமைந்தாலும் கூட அவர்களது கண்களுக்கு புதுமையானதாக இருக்கவில்லை.

பிறந்த இடம் இருந்த திக்கைத் தேடிக் கொள்வது இலேசானதல்ல. டோஸர் மூலமாக மேடுபள்ளங்களைத் தகர்த்து மட்டப்படுத்திய நிலத்தில் ஆங்காங்கே புல்வளர்ந்திருந்தது. பரந்தன் நகர் தொடங்குவதைக் காட்ட புதிதாக நாட்டப்பட்டிருந்த பெயர்ப்பலகையை கண்டபோது, ஊரைத் தாண்டி ஆறு கிலோமீற்றர் அளவு வந்துவிட்டதை அறிந்த லோகநாதன் வாகனத்தை மீண்டும் திருப்பிக் கொண்டு, முடிந்தளவு மெல்லச் செலுத்துமாறு சாரதிக்கு அறிவுறுத்தல் கொடுத்துவிட்டு கடும் கண்காணிப்பில் இறங்கினான். அப்பொழுது அவனுக்குத் தான் தேடிக்கொண்டு வந்த, அருகருகே நின்ற புளியமரத்திற்கும் ஆலமரத்திற்கும் பதிலாக, அவற்றை வெட்டி வீழ்த்தி எஞ்சிய வேர்ப் பகுதிகள் இரண்டையும் கண்டுகொள்ள முடிந்தது. அனுமானத்தோடும் சந்தேகத்தோடும் வாகனத்திலிருந்து இறங்கிய அவன், அந்த மர வேர்களிரண்டிற்குமருகாக ஆரம்பித்து ஊரை ஊடறுத்துச் செல்லும் மண்பாதையைத் தேடிக்கொண்டான்.

அவன் பிறந்த மண் அங்கிருந்தது. ஆனால் ஊர் அங்கிருக்கவில்லை. ஊர் அங்கில்லையென்பதைத் தெரிந்து கொண்டு வந்த பயணமென்பதால் லோகநாதன் ஆச்சரியப்படவில்லை. சாகாமல் பிழைத்த இரு மாமரங்களும் தலையற்ற பனைமரங்களின் வரிசையும், மேகங்களற்ற வெறும் வானைப் பார்த்துக் கொண்டிருந்தன. ஒரு காலத்தில் வெண்சுவர்களால் பிரகாசித்த வீடுகள் நிறைந்த பழைய ஊர், இப்பொழுது உடைந்த சிதைந்த நிலத்தில் பாதையோரமாக அரைப் பகுதி களிமண்ணால் கட்டப்பட்ட, பாதித்தகட்டுக் கூரைகளோடு சிறிய குடில்கள் நாலைந்து மட்டுமே காணப்பட்டன. அவன் வாகனத்திலிருந்து இறங்கிப் பயணப்பொதியை வாகனத்திலேயே வைத்துவிட்டு ஒரு குடிலை நோக்கிச் சென்றான். அந்தக் குடில் சிறிய கடையாக அவனுக்குத் தெரிந்தது. அதன் கதவில் தொங்கவிடப்பட்டிருந்த பிஸ்கட் பக்கட்டுகள், வெய்யிலில் காய்ந்து நிறம்மாறிப் போயிருந்தன. சிறிய மேசையொன்றின் மீது இனிப்புப் பானப் போத்தல்கள் நாலைந்து கிடந்தன. இரண்டே சீப்புகள் கொண்ட வெய்யிலில் வெந்த வாழைக் குலையொன்று கூரைத் தடியொன்றில் தொடங்கியது.

தூசுத் தரையுடன் கூடிய குடிசை. தகவலறிய யாராவது இருக்கிறார்களாவென்று குடிசையினுள்ளே எட்டிப் பார்த்த லோகநாதன் சிறிய வாங்கொன்றின் மீது வைத்திருந்த வாய் திறந்து கொண்டிருக்கும் பழைய சூட்கேஸ் இரண்டையும் கயிறொன்றின்மீது தொங்கும் சில ஆடைகளையும் கண்டான். தூசி படிந்த உடம்பின் நிறத்திலேயே காற்சட்டைத் துண்டொன்று அணிந்த சிறுபிள்ளையொன்று சூட்கேஸ் அருகே ஒன்றின் மேலோன்றாக வைக்கப்பட்டிருந்த சீமெந்து மூட்டைமேல் அமர்ந்தபடி, அரைவாசி திறந்த பின்பக்கத் தகட்டுக் கதவைப் பார்த்துக் கொண்டிருந்தது. அந்தக் கதவின் வெளியே நின்ற இன்னொரு பிள்ளை சிறு கயிற்றொன்றால் கட்டிய நாய்க் குட்டியொன்றைக் குடிசைக்கு வெளியே இழுத்துக் கொண்டிருந்தது. தொண்டை இறுகிய நாய்க்குட்டி ஈனக்குரலில் கத்தியது.

"அது செத்துப்போகும்" என்று கூறிய பெண்குரல் லோகநாதனுக்குக் கேட்டது. அந்தக் குரல் குடிசையின் பின்பக்கமிருந்தே ஒலித்தது.

"கடயில யாரு?" என்று அவன் கேட்டபோது, குடிசையின் பின்பக்கமாக நின்ற மெலிந்த பெண்ணொருத்தி நொண்டியபடி சுற்றிவந்தாள்.

எவ்வளவுதான் குழம்பிப் போயிருந்தபோதும் அவனது ஞாபகம் சரியானது. "சியாமா???"

..............................

"நீங்க சியாமா அல்லவா?" ஒருவரையொருவர் முகம் பார்த்தபடி நீண்டநேரம் சிலையாக நின்றபின்பே அவனது நாவிலிருந்து இந்த மூன்று சொற்களும் வெளிவந்தன.

அவள் எதுவுமே பேசாமல் அவனது முகத்தையே பார்த்துக் கொண்டே நின்றாள். அந்தக் கண்களும் எதுவும் பேசவில்லை. நீளக் கடலின் அடிவானத்து எல்லையைப் பார்த்துக் கொண்டிருப்பது போல. அந்த முகத்தில் வியப்பு, சந்தேகம், மகிழ்ச்சி எதுவுமில்லை. பயம்? இல்லை, பயம்கூட அதில் இல்லை. எதுவுமே இல்லை.

"என்னை ஞாபகமா?"



படிப்பகம்

www.padippakam.com

"நான் லோகநாதன். இங்கிலாந்துக்கு ஓடித்தப்பிய லோகநாதன்"

"எனக்கு ஞாபகம் சின்னக் காலத்தில் நீங்கள் நன்றாக நடனமாடினீங்கள்" அவன் அவ்வாறு சொல்லவில்லை.

"உங்க கணவர் எங்கே?" அவன் அவ்வாறு கேட்கவில்லை.

"இப்பொழுது உண்பது குடிப்பதெல்லாம் எப்படி?" அவன் அந்தக் கேள்வியையும் வினவவில்லை.

"இந்த பிஸ்கட்டுகள், இந்த இனிப்பு, இந்தச் சாமான்கள் விற்பனையாகுமா?" இந்தக் கேள்வியையும் கேட்கவில்லை.

திடீரென்று ஏதோ ஞாபகம் வந்து வாகனத்திற்குச் செல்லத் திரும்பிய லோகநாதன், கெமராவை கையில் எடுத்துக் கொண்டு தன் பின்னால் நிற்கும் தனது நண்பனைக் கண்டான்.

"டோன்ட் டேக் ஃபோட்டோகிராஃப்ஸ்" (Don't take photographs)

வாகனத்திற்குச் சென்ற லோகநாதன் பயணப் பையின் சிப்பை இழுத்துத் திறந்து அதனுள்ளிருந்த டெனிம் காற்சட்டை, பலவர்ண டீசேட்டுகள், தலையில் சுற்றும் துண்டுத்துணி இப்படி ஒவ்வொன்றாக வெளியே எடுத்தான். சிவப்பு முடியுடைய பொம்மையை வெளியே எடுக்காமலிருப்பதில் அவன் கவனமாகவிருந்தான். பையிலிருந்து வெளியே எடுத்த லண்டன் நறுமணம் தோய்த்த துணித்துண்டுகளை சற்றுநேரம் பார்த்துக் கொண்டிருந்த அவன் அவற்றை மீண்டும் பையில் திணித்தான். வாகனத்திலிருந்து இறங்கி தனது பணப்பையை வெளியே எடுத்த அவன், அதை கையில் வைத்தபடி சற்றுநேரம் யோசிக்கலானான். திரும்பவும் அதனை சேப்பில் வைத்துக் கொண்டான்.



"லோகநாதன் மீண்டும் குடிசையை நோக்கி மெல்ல நடந்தான்"

"நாங்க போறம்" அவன் கேட்டும் கேட்காததுமான குரலில் சியாமாவிடம் சொன்னான்.

அவள் எதுவும் பேசாமல் அவனது முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அந்தக் கண்கள் அப்போதும் பேச வில்லை. தூரக் கடலில் அடிவானின் எல்லையைப் பார்த்துக் கொண்டிருப்பது போல. அந்த முகத்தில் வியப்பு, சந்தேகம், மகிழ்ச்சி இல்லை. பயமும் இல்லை. அதில் எதுவும் இல்லை.

***

வாடகை வாகனம் குன்றும் குழியுமான பாதை வழியே மீண்டும் கொழும்பு நோக்கி விரையத் தொடங்கியது. நீண்ட தூரம் வந்த பின் ஆங்கிலேய நண்பன் தனதருகே அமர்ந்திருப்பதைக் கண்ணுற்று வியப்புக்கு உள்ளான லோகநாதன் கண்களை விரித்து, கெட்ட கனவு கண்டு பயந்தெழுந்தது போல் அவனைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

நண்பன் அவனது முதுகை மெல்லத் தட்டினான்.

"லோகா, ஆ யு ஓல் ரைட்?" (Loga, Are you all right?)



படிப்பகம்

www.padippakam.com

# தனிமையில் காட்டில்

ராஜராஜி



வழமைபோல் பாடசாலை முடிந்து தனது வீட்டுக்கு வரும் ஒற்றையடிப் பாதையூடாக வருகிறான் பாதுசன். பகல் வேளை என்பதால் வெய்யிலில் இருந்து விடுபட இரு மரநிழல்களுக்கிடையில் தனது பாதங்களை வேகமாக வைப்பதுடன் ஒவ்வொரு காலடியையும் எண்ணியபடி நடப்பது பாதுசனின் வழமையான பொழுதுபோக்கு. அன்றும் கொன்றை மரநிழலில் இருந்து வாகை மரநிழலுக்கு வர இருந்த அந்த நீண்ட தூரத்தை ஓடி ஓடி வேகமாகக் கடந்து கொண்டிருக்கும் பொழுது நண்பர்களுடன் சேர்ந்து நடந்து வரும் நினைவு வந்தது. பாதை ஓரத்தில் இருக்கும் தாமரைக் குளத்தில் இருந்து ஒரு தாமரைப்பூவினை அவனது நண்பி பறித்து அவனது பிறந்தநாளிற்கு பரிசளித்து வாழ்த்தியதும், பசிக்கும் போது ஓடி ஓடி பாலைப்பழம் பொறுக்கி உண்பதும் நினைவுவர வேகம் மெல்லவாகக் குறைந்தது.

இன்று நண்பர்கள் யாரும் பாடசாலை வரவில்லை. அழுகையே வந்துவிட்டது பாதுசனுக்கு. தனித்து நின்ற பாதுசனுக்கு கொஞ்சம் பயமாக இருந்தது. அழகான ஒற்றையடிப்பாதை தனிமைப்படுத்தப்பட்ட காட்டுப்பாதை போல் தெரிந்தது.

அன்றொரு நாள் இரவு உணவின் பின் எல்லோரும் கூடத்தில் அமர்ந்து உரையாடிக் கொண்டிருக்கும்போது, பாட்டி, “நீ பள்ளியால வாற பாதையை சிலநேரம் யானைகளும் கடந்து போகுதாம்... கவனம் பிள்ளை” என்று கூறியதும் அப்பப்பா, “ஓம்... ஓம் கரும்பு உண்ண வரும் யானைகள் அந்த வீதியாலதான் போகுது போல...” என்றதும் அதற்கு அம்மா “ஏன் தாமரை குளத்தில முதலையும் இருக்குதாமே.” என்று, ஒருவர் மாறி ஒருவர் எச்சரித்ததும் வேறு நினைவுவந்தது.

பாடசாலை உதைபந்துப் பயிற்சிக்கு நின்றுவிட்டுக் கொஞ்சம் இருள் சூழ்ந்த மாலைப் பொழுதில் அந்தப் பாதைவழியே தனியே நடந்து சென்று இருந்தாலும் அன்று ஏனோ மனம் பட படத்தது. அம்மம்மா சொல்லித் தந்த காயத்திரி மந்திரத்தை சொல்லியபடி நடக்கின்றான்.

இன்று காலை பாடசாலையில் முதலாம் பாடவேளை நினைவு வந்தது ஆங்கில இலக்கிய ஆசிரியர் வகுப்புக்குள் நுழையும் போதே “மாணவர்களே நீங்கள் தளிர்வலய நாட்டிற்கு சென்றீர்களா?” என்ற பாடஅறிமுகத்துடன் வகுப்பை ஆரம்பித்தார். ஒரு மாணவன் மட்டும் எழுந்து நின்று “ஓம் ரீச்சர் என்றான்” ஆசிரியர் அவன் கூறியதை வரவேற்றபடி இந்த வருட பாடப்புத்தகம் “பாட்டி சொன்ன கதைகள்” என்று மூலபாட போதினியை அறிமுகப்படுதினார். “ஆ...” என மாணவர்கள் குதூகலித்தனர்.

“இன்று நான் காட்டினைப் பார்வையிடச் சென்ற மூன்று நண்பர்களைப் பற்றி உங்களுக்கு ஒரு கதை சொல்லப்போகிறேன்.” என பாடவிடயத்தை ஆசிரியர் ஆரம்பிக்கின்றார்.

ஒரு மாணவி எழுந்து “ரீச்சர் நான் சிங்கராஜவனம் போயிருக்கிறேன்” என்றாள்.

“உஸ்.... அவதானியுங்கோ பிள்ளையள்” பாடப்புத்தகத்தை வாசித்தபடி கதையினைக் கூற ஆரம்பிக்கின்றார்.

பீற்றர், ஜேன், பற் என்ற மூன்று பிள்ளைகட்குப் பீற்றரின் பாட்டி சொன்ன கதையாகக் கதை ஆரம்பிக்கின்றது.

நண்பர்கள் மூவரும் காட்டுப்பாதை வழியாக நடந்து செல்கிறார்கள். இலையுதிர்கால முடிவு என்பதால் வீதியின் இரு ஓரங்களிலும் ஓரளவு பனிபடர்ந்து காணப்படுகிறது. மஞ்சட் பூக்கள் செறிந்து காணப்படுகின்றது. அப்பிள் மரத்தடியில் இருந்த அப்பிள் பழங்களை உண்டபடி நடந்து கொண்டிருகிறார்கள். வீதியோரத்தில் பனிபடர்ந்த புல் நிலத்தில் ஓர் அழகான முயற் குட்டி அமர்ந்து அப்பிள் பழத்தைக் கொறித்துக் கொண்டிருக்கிறது. பீற்றர் முயற் குட்டியைத் தூக்கி விளையாட ஆரம்பிக்கின்றான். நண்பர்களும் இணைந்து கொள்கின்றனர். வீடு போக நினைக்கும்போது முயற் குட்டியைப் பிரியமுடியவில்லை.

பீற்றர் “இதனை வீட்ட கொண்டே வளர்ப்போமா?” என ஆலோசனை கேட்கின்றான் நண்பர்களிடம்.

“நான் கொண்டுபோகிறேன்” என்றாள் ஜேன் சந்தோசத்துடன்.

“என்னிடம் அழகான லவ்பேட்ஸ் இருக்கிறது. இதனை நீ கொண்டு செல்” என்று பற் ஜேனிடம் கொடுத்தான்.

“என்னிடம் பூனைக்குட்டி இருக்கின்றது” என்றான் பீற்றர். மூன்று நண்பர்களும் சந்தோசமாக வீடு திரும்புகின்றனர்.

சிந்தித்தபடியே வீடு வந்து சேர்ந்தான். அவனை அவனது செல்லப்பிராணி வசி தான் வரவேற்றது ஒரே சந்தோசம். கைகால் கழுவிட்டு சந்தோசமாக அம்மா தந்த உணவை உண்ண ஆரம்பிக்கிறான். அவன் உண்பதையே அவனது நாய்க்குட்டி வசி பார்த்து கொண்டு இருந்தது. தனது உணவில் ஒரு பகுதியை வசிக்கு வைத்தான். அது சந்தோசமாக உண்ண ஆரம்பித்தது.

அப்போதுதான் யோசித்தான் ஏன் ரீச்சர் பீற்றர், பற், ஜேன், பனி, அப்பிள்பழம், இலையுதிர்காலம், முயலின் சௌகரியம் என கற்பிக்கின்றார்? அட்சயா, ஆதித்தன், பாதுசன், வெய்யில், தாமரைப்பூ, பாலைப்பழம், காட்டின் பாதுகாப்பு, நாய்க்குட்டியின் பசி என்பன பற்றி கதை சொல்லலாமே. என நாளைய வகுப்பில் ஆசிரியரிடம் கேட்கவேண்டும் என நினைத்தபடி பந்தினை எடுத்தபடி விளையாடச் செல்கிறான்.



படிப்பகம்

www.padippakam.com

# நல்லுறவு

தணிகையன்

அந்த மருத்துவ மனையின் நான்காவது மாடிப்படியை ஏறும் போது எனது முதுமையின் அவலம் தெரிந்தது, முழங்காலிலும் இடுப்பிலும் வலி ஏற்பட்டதுடன் தொடர்ச்சியாக ஏறியதால் மூச்சுவாங்கலும் ஏற்பட்டது.. அவற்றையும் பொருட்படுத்தாமல் இருபத்து மூன்றாம் வாட்டை நோக்கிச் சிரமத்துடன் விரைவாக நடக்க முயல்கிறேன். என்னைவிட இரண்டு வயது அதிகமான எனது மூத்த சகோதரி கிணற்றடியில் சறுக்கி வீழ்ந்ததால் முதுகுத்தண்டில் வெடிப்பு ஏற்பட்டு நேற்று மாலைதான் மருத்துவமனைக்குக் கொண்டு சென்றிருந்தனர். கட்டில் படுக்கையோடுதான் அவளது காலம் கழியப்போகிறது என்று எண்ணும் போது எனக்குள் ஏற்பட்ட வேதனை உணர்வுடன் அந்த வாட்டுக்கான நடைபாதையில் திரும்புகிறேன்.

"ஐயா எங்கை போறீங்க? நேரமாச்சுது, இனிப் பாக்கேலாது. போங்கோ, போங்கோ!"

அப்பொழுதுதான் தனது ஆட்களைக் கலைக்கும் கடமையை ஆரம்பித்த மருத்துவமனைக் காவலாளி முகத்தை அந்தக் காலை நேரத்திலும் மிக இறுக்கமாக வைத்துக்கொண்டு வழியை மறித்தபடி கரங்களால் சைகைகாட்டி உரக்கக் கத்துகிறார்.

"தம்பி என்ரை வயதான சகோதரி நாரி எலும்பு முறிஞ்சு கிடக்கிறா"

கெஞ்சும் பாவனையை வெளிப்படுத்திய எனது முகமும் குரலும் கூட அவனது மனதில் ஈரத்தை ஏற்படுத்தவில்லை.

"இது பாக்கிற நேரமில்லை மத்தியானம் வந்து பாருங்கோ. நடவுங்கோ, நடவுங்கோ!"

ஒரு வயதான மாட்டைக் கலைக்கின்ற பாவனையோடு கரங்களை அசைத்து அவன் உரத்துக் கூற நானும் அதுபோல அவனுக்கு முன்னால் ஏமாற்றத்துடன் எதுவும் பேசமுடியாது தலைகுனிந்து நடக்கிறேன்.

இறங்குவதற்கான படியை நான் நெருங்கும் வரை, அவனது கலைப்புத் தொடர்கிறது. படியில் இறங்குவதற்காகக் கால் வைத்தபோது படியின் கீழ் இருந்து நிறையப் பார்வையாளர்கள் படிகளை நிறைத்தபடி ஏறி வருகிறுர்கள். அவர்களைக் கண்டதும் அந்தக் காவலாளி என்னைப் பாரபட்சமாக நடத்துகிறுர் என்ற எண்ணம் என்னுள் எழுகிறது.

இறங்குவதற்கு காலடி எடுத்து வைத்த நான் அப்படியே நின்றபடி படிமுனையில் வந்து நின்ற காவலாளியின் முகத்தை திரும்பிப் பர்க்கிறேன். இவர்களெல்லாம் போகிறார்கள் என்னைமட்டும் ஏன் கலைக்கிறாய் என்ற வினா எனது முகபாவத்தில் வெளிப்படுகிறது.

"என்னையா பாக்கறியள்? போங்கோ, போங்கோ. அவையள் சாப்பாடு கொண்டு போகினம். நீங்கள் வெறுங்கையோடை வந்து நிண்டுகொண்டு."

காலைச் சாப்பாட்டுடன் மனைவியை பஸ்ஸில் ஏற்றிவிட்டு நான் சயிக்கிளில் வந்ததால் வெறுங்கையுடன்தான் நிற்கிறேன். அவள் பிரச்சினையில்லாமல் சென்றிருப்பாள். ஒரு "சொப்பிங் பாக்கை"யாவது நான் போலித்தனமாக கையிலே வைத்திருக்க வேண்டுமென்று அவன் கருதுகிறானா? உண்மைத் தன்மைக்கு மதிப்பே இல்லையா? அவன் அந்த வார்த்தையைச் சொல்லும்



போதே என்னைப்போல சிலர் வெறுங்கையுடன் என்னைத் தாண்டி ஏறிச் செல்வதை நான் காண்கிறேன். அவனும் காண்கிறான். எனக்கான நியாயத்தை நான் கேட்கலாம். ஒப்பீட்டு நியாயத்தை கேட்க முனைந்தால் அது மற்றவர்களது நலனைப் பாதித்து விடும் என்பதற்காக அதை விட்டுவிடு



படிப்பகம்

www.padippakam.com

கிறேன். ஆனாலும் சகோதரியின் உடல் நிலையை பார்க்க இருந்த ஆவல் அவனால் நசுக்கப்பட்டதால் எனக்கு அவன் மீது கோபம் ஏற்படுகிறது. எனது கோபத்தை ஒரு வார்த்தையிலாவது வெளிப்படுத்த வேண்டும் போலிருந்தது.

"என்னை மட்டும் இப்பிடித் துரத்திறியே, உனக்கு மனச் சாட்சியே இல்லையா?"

எனது கேள்வி அவனது மனச்சாட்சியைத் தொட்டதா அல்லது என்மீதான தனது கலைப்புப் பணி முடிந்தது என்று எண்ணினானா தெரியவில்லை. எதுவும் பேசாமல் இதுவரை இருந்த இறுக்கமான பார்வையத் தளர்த்தியபடி அந்த இடத்தை விட்டு நகர்ந்தான். அவன் நான் செல்ல வேண்டிய வாட்டின் எதிர்த்திசையை நோக்கிச் சென்றதால் திரும்பவும் அங்கு போய்க் கொண்டிருப்பவர்களுடன் நானும் இணைந்து அந்த வாட்டுக்குச் சென்று பார்ப்பதற்கான வாய்ப்பு எனக்கு இருந்தது. ஆனாலும் இதுவரை நடந்த சம்பவத்தால்



மனதில் ஏற்பட்ட பாதிப்பும் ஏமாற்றமும் வெறுப்பும் என்னை கீழ்ப்படியை நோக்கி இறங்க வைக்கிறது. படியின் கீழுள்ள நடைபாதைக்குச் சென்று சகோதரியின் உடல் நிலையை அறியும் ஆவலுடன் மனைவியின் வருகைக்காகப் படிகளை இடையிடையே பார்த்தபடி காத்து நிற்கிறேன். எனது கைத்தொலைபேசியில் சில இளம் மருத்துவர்கள, தாதிகள் சிலரின் இலக்கங்கள் இருப்பது நினைவில் வருகிறது. எனது சொந்தத் தேவைக்காக அவர்களது வேலை நேரத்தைக் குழப்ப நான் விரும்பவில்லை.

எனக்கருகே ஒரு இளைஞரும் வயதானவரும் வந்து நிற்கின்றனர். தாடியும், உடைகளும், அவர்கள் தங்களுக்குட் செய்த உரையாடல்களும் அவர்கள் முஸ்லிம்கள் என்பதை வெளிப்படுத்தி நின்றது. அவர்கள் வேறு ஏதோ அலுவலாக நிற்கிறார்கள் என்ற எண்ணத்துடன் காலையில் நடந்து முடிந்தவை பற்றி மனதில் எடைபோட்டேன்.

காலை நேரங்களில் சிறிது நேரம்தான் உணவு உடை போன்ற அத்தியாவசியத் தேவைகளை நோயாளிகளுக்கு வழங்க அனுமதிப்பார்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்ததுதான். நேரத்துக்கு வரவேண்டும் என்பதற்காகவே அதிகாலை நன்கு மணிக்கு முன் எழுந்து பலகாரம் செய்வதில் மனைவிக்கு உதவி செய்து, சயிக்கிளில் ஏற்றிச் சென்று பஸ்ஸிலும் ஏற்றிவிட்டேன். நானும் மனைவியுடன் பஸ்ஸில் வந்திருந்தால் எல்லாம் சரியாக நடந்திருக்கும். காலையில் வீசத் தொடங்கிய சோழகக் காற்றுக்கு எதிராக எனது வயது உடல் நிலையைப் பொருட்படுத்தாமல் சயிக்கிளில் வந்தது தவறாகிவிட்டது. காற்று என்னை பின்தள்ளி எனது பாதி நேரத்தை வீணடித்து விட்டது. இருந்தாலும் உடற் களைப்பையும் பொருட்படுத்தாமல் வேகமாக இயங்கி அவர்கள் அனுமதிக்கும் நேரத்துக்குள் வந்து சேர்ந்துவிட்டேன்.

அப்படி இருந்தும் என்னை ஏன் காவலாளி தடுத்திருக்க வேண்டும். எனது வயதான தோற்றம் என்னைக் கலைக்க வேண்டும் என்ற ஒரு மனநிலையை அவனுக்கு ஏற்படுத்தி இருக்குமா?

"ஐயா நீங்களும் பாக்கவா வந்திங்க?"

பக்கத்தில் நின்ற முஸ்லிம் பெரியவர் என்னைப் பார்த்துக் அப்படிக் கேட்டபோதுதான் அவர்களும் நோயாளியைப் பார்க்கச் சென்று என்னைப்போல கலைக்கப்பட்டு வந்திருக்கிறார்கள் என்பது தெரிந்தது.

"ஓம், என்ரை மனைவி சாப்பாடு தண்ணி கொண்டு போட்டா. என்னை வெறுங்கையோடை போனதெண்டுதான் விடேல்லை"

"உங்கை கனபேர் சும்மா போறது நாங்க கண்டதுதானே. நாங்க கையிலை சாப்பாடு வைச்சிருந்தும் விடேல்லை"

எனது முதுமைத் தோற்றந்தான் என்னைக் கலைப்பதற்கு காரணமாக இருக்கலாம் என எண்ணிய எனக்கு அவர்களைக் கலைத்தமை எனக்குள் ஒரு அதிர்ச்சியைத் ஏற்படுத்தியது.

என்னைப் போலவே அவர்களும் காரணத்தை தேட முற்பட்டால் வந்தடையும் இடம் சகஇனத்தவர் மீதான பாரபட்ச மாக அல்லவா இருக்கப் போகிறது. அவர்களைக் கலைக்கும் போது அவர்களும் நியாயம் கேட்டு முரண்பட்டிருந்தால் நிலைமை எவ்வளவு மோசமானதாக இருந்திருக்கும்.

****

ஒரு வார்த்தை அல்லது ஒரு செயல் அதைச் சொல்பவனதோ செய்பவதோ மனநிலைக்கு அப்பாலும் மற்றவர்களின் மனங்களில் பல்வேறு அர்த்தப் பரிமாணங்களை ஏற்படுத்தும் என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டுமல்லவா? அதுவும் பொது மக்களுடனான உறவில் அதிகாரிகள், ஊழியர்களின் நடத்தைகள் எவ்வளவு கவனமாக மேற்கொள்ளப்பட வேண்டும். இதுதானே நாடு முழுவதையும் எங்கோ கொண்டு சென்று விட்டிருக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

எனது பிரச்சனையிலிருந்து மனம் அவர்களது பாதிப்பை நோக்கி நகர்கிறது. சட்டம் ஒழுங்குக்கு முன் எல்லோரும் சமம் என்பது சரியாகப் பட்டாலும் ஏற்றத்தாழ்வுகளும் பாரபட்ச ங்களும் நிறைந்த சமுகத்தில் அது மனச்சாட்சியின் விரிவாகவும் மாற்றமடைய வேண்டும் போலத் தெரிகிறது.

"எல்லாரும் இப்பிடி நடந்து கொள்ளிறேல்லை. ஒரு சிலர் இப்பிடித்தான். போகிற சனங்களும் அந்த நேரத்துக்கை அலுவல்களை முடிச்சுக்கொண்டு திரும்பிறேல்லை. கலைக்கும் வரைக்கும் நிண்டுதான் வருங்கள்"

இதுவரை எனது பாதிப்புக்குள் மட்டும் நின்ற நான் பிரச்சினையை பொதுவாகப் பார்க்க முயல்கிறேன். அவர்கள் இந்தப் பிரச்சினையை எப்படி உணர்ந்து கொண்டார்கள் என்பது எனக்கு தெரியாவிட்டாலும் அப்படிச் சொல்லி அவர்களை அடுத்த பக்கத்துக்கு நகராமல் இருக்க உதவுவதாக எண்ணி அந்த வார்த்தைகளைச் சொல்கிறேன்.

"ஓ.. இது கவர்மென்ற் ஹொஸ்பிட்டல்தானே, நிறையச் சனங்கள் வாற எடம் சமாளிக்கிறது கஷ்டம் தான். ஆனா பொதுமக்களோடை நல்லுறவைப் பேணவேணும்தானே!"

நான் நினைத்தது போலவே அந்தப் பெரியவர் நிதானமாப் பேசினாலும், தாக்கத்தின் வலியும் அவரது வார்த்தைகளில் வெளிப்பட்டது,

"என்ன இதிலை நிக்கிறீங்கள்"

எங்கள் மூவரையும் ஒரு முறை குறிப்பாக நின்று பார்த்த அந்த நடைபாதை வழியாகவந்த மருத்துவமனை ஊழியர் ஒருவர் முஸ்லிம் பெரியவரைப் பார்த்துக் கேட்டார்.

"நோயளியை பாக்க விடுறுங்கள் இல்லே?"

"நேரமாகுதுதான், பத்துப் பன்னிரண்டு நிமிசத்துக்கை கெதியாப்போனால் பாக்கலாம்"

தனது கைமணிக்கூட்டைக் குறிப்பாக பார்த்தபடி கூறிவிட்டுச் செல்கிருர் அந்த ஊழியர்.

"ஐயா நீங்களும் வாங்கோ"

அந்த முஸ்லிம் பெரியவரின் அழைப்பால் மீண்டும் உசாரடைந்த நான் அவர்களுடன் சேர்ந்து மாடிப்படியில் விரைவாக ஏறுகிறேன்"

"அந்த ஊழியரை உங்களுக்குத் தெரியுமா?"

"இல்லே"

படியில் ஏறியபடி நான் கேட்ட கேள்விக்கு பெரியவர் தந்த அந்தப் பதில் எனக்கு நம்பிக்கையை அளிக்கிறது.

"ஐயா நாங்க வாறம்"

"உங்களுக்கு நன்றி சொல்ல வேண்டும்"

"இதுக்கெல்லாம்"

மேல்தளத்தை அடைந்ததும் அந்தப் பெரியவரும் இளைஞரும் பிரிந்து செல்கின்றனர்.

வாட்டுக்குள் நுழைந்த நான் எனது சகோதரியைப் பார்க் கிறேன். எழுந்திருக்க முடியாத நிலையில் நீட்டி நிமிர்ந்து படுத்திருக்கிறுள். எனனைப் பார்த்ததும் கணகலங்கி கண்ணீர் வடிக்கிருள்.

"கவலைப்படாதேங்கோ. இஞ்சை நல்ல சிகிச்சை கிடைக்கும்.. எப்பிடியும் குணப்படுத்திப் போடுவினம். நம்பிக்கையோடை இருங்கோ"

எனது வார்த்தைகளைக் கேட்டதும் தனது கன்னங்களில் வழிந்த கண்ணீரைத் துடைக்கிறாள். அது மனதுக்கு ஆறுதலாக இருக்கிறது.

"தம்பி நேரமாகுது. கலைக்கப்போகினம் மத்தியானம் வெய்யிலுக்கை வராமைப் பின்னேரமா வாங்கோ"

எனது சகோதரிதான் கூறுகிறாள்.

மூன்று நிமிடங்களாவது அவளைப் பார்த்த திருப்தியுடன் கலைப்புக்குக் காத்திராமல் மனைவியையும் அழைத்துக் கொண்டு வாட்டை விட்டு வெளியேறுகிறேன்.

முதலில் வரும்போது கலைத்த அந்தக் காவலாளி எதிரே வருகிறான். தனது சொல்லை மீறி வந்தமைக்காக மீண்டும் என்னைப் பேசப்போகிறானோ என்ற அச்சம் மனதில் எழுகிறது, இருந்தாலும் எனது பக்க நியாயத்தை எண்ணி துணிவடைந்து எதிரே வந்த அவனது முகத்தைப் பார்க் கிறேன். மெல்லிய புன்சிரிப்புடன் என்னைப் பார்த்தபடி அவன் கடந்து செல்கிறான்.

அவனது மனச்சாட்சி விழித்திருக்க வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com





# AkAsh GRAPHICS

## digital printing

**BANNER & STICKER**

**#111, New Bus Stand Complex, Vavuniya.**

**Tel:024 2224965**

**Email: akashgraphics.lk@gmail.com**


படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

